கல்கி

KALKI 13-4-80 90 காசு



ரெக்ஸோனு உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...





மென்மையோடு மெருகுமிளிர வைத்திருக்கிறது.

நாலு இயற்கைத்
தைலங்கள் இணைந்துள்ளன
ரெக்ஸோனுவிலே—ஹபுஷா
(தேவதாரம்), கருவா, கிராம்பு,
சரளம். ரெக்ஸோனுவினுல்
குளித்தெழுவீர்—அது உங்கள்
சருமத்தை மென்மையோடு
மெருகு மிளிர வைத்திருக்கிறது.
நெஞ்சம் கவரும் நறுமணமுடன்
நேரமெல்லாம் உங்கள் மீது
மணக்கும் ரெக்ஸோனு, உங்கள்
மேனி அழகைப் பேண
இயற்கையான வழி.



ரெக்ஸோனு உங்கள் சருமத்திற்கு நல்லது.


இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-RX.77-2014 TM

Kalki Shopping Page


கைத்தறிக்
கண்காட்சி '80
26 வது அகில இந்திய
கைத்தறிக் கண்காட்சி
பாந்தியன் சாலை, சென்னை
4-4-80 முதல்
சிறப்புத் தள்ளுபடி
20%
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT

1980 ஏப்ரல் 13
ரௌத்திரி சித்திரை 1
மலர்: 38 இதழ்: 37



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மதுரா மானபங்க வழக்கு

சரித்திரம் கண்டிராத வகையில் பாரத தேசத்தின் மாதர்கள் பொங்கி எழுந்துள்ளார்கள். தலைநகரில் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது. காரணம் ஓர் உண்மைக் கதை:

மகாராஷ்டிரத்தில் மதுரா என்ற 15 வயது ஹரிஜனப் பெண் அசோக்கைக் காதலித்தாள். இருவரும் கல்யாணம் செய்து கொள்ள நினைத்தனர். மதுராவின் சகோதரனுக்கு இது பிடிக்கவில்லை. 'மைனர் பெண்ணைக் கடத்திச் செல்ல முயற்சி' என்று போலீஸில் புகார் கொடுத்தான். போலீஸ் மதுராவையும் வேறு சிலரையும் காவலில் வைத்து விசாரணை நடத்தியது. வழக்குப் பதிவு செய்து கொண்டு விட்டு விட்டது. அவர்கள் ஸ்டேஷனை விட்டு வெளியேற நினைத்தபோது மதுராவை மட்டும் கண்பத் என்ற ஒரு போலீஸ்காரர் தனியே கழிவிடத்துக்கு அழைத்துப் போய்ப் பலவந்தப்படுத்தினார். அதன் பிறகு அதே அரக்கச் செயலில் ஈடுபட நினைத்த துகாராம் என்ற இன்னொரு போலீஸ்காரர் அளவுக்கு மீறிக் குடித்திருந்ததால் மதுராவைத் தீண்டித் துன்புறுத்தியதுடன் விட்டார்.

செஷன்ஸ் வழக்கில், 'கண்பத் மீது குற்றம் ருசுவாகவில்லை' என்றார் நீதிபதி 'கண்பத் அவளுடன் உடலுறவு கொண்டிருக்கலாம் ஆனால் பலவந்தப் படுத்தினான் என்பதற்கு ஆதாரமில்லை' என்பது தீர்ப்பு. ஹைகோர்ட் இந்த முடிவு தவறு என்று சொல்லி, 'கண்பத் குற்றவாளியே' என்று கண்டு, அவனுக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது. 'மதுரா எதிர்ப்புக் காட்டாமல் பணிந்திருக்கலாம்; அதனால் அவள் உடலுறவுக்கு உடன்பட்டாள் என்று கொள்ள முடியாது; எனவே இது பலவந்தமே' என்றது ஹைகோர்ட். வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றது.

ஆயிரமாயிரம் பேருக்கு அதிர்ச்சி தரும் விதமாக சுப்ரீம் கோர்ட், கண்பத், துக்காராம் இருவரையும் குற்றமற்றவர்கள் என்று கூறி விடுவித்து விட்டது! 'மதுரா எதிர்ப்புக் காட்டியிருந்தால் அவள் உடலில் காயங்கள் இருக்க வேண்டும். எதுவுமே இல்லை. பயத்தினால் மதுரா எதிர்ப்பு காட்டாமல் பணிந்து போனாள் என்று கூறலாம். ஆனால் அப்படி அவள் அச்சமடைந்திருந்தாள் என்பதற்கு ஆதாரமில்லை. மேலும் மதுரா ஸ்டேஷனிலேயே இருந்த தன் சகோதரனை உதவிக்கு அழைத்திருக்கலாம். அப்படி செய்யாது போலீஸ்காரர் அழைத்த இடத்துக்கு அவரைப் பின்பற்றிச் சென்றது அவள் இதற்கு உடன்பட்டாள் என்று எண்ணவே வைக்கிறது' என்று நீதிபதிகள் காரணம் கூறியுள்ளனர்.

இந்தத் தீர்ப்புத்தான் பாரதப் பெண்குலத்தை உசுப்பி விட்டிருக்கிறது. 'சுப்ரீம் கோர்ட் செய்தது மாபெரும் தவறு' என்று தலைநகரில் பெண்மணிகள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். 'தீர்ப்பு மறு பரிசிலனை செய்யப்பட வேண்டும்' என்ற வலுவான கோரிக்கை எழுந்துள்ளது.

'சுப்ரீம் கோர்ட் இந்தத் தேசத்தின் தலையாய நீதிமன்றம்; நீதிபதிகள் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்கள். அவர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து பணிய வைக்கப் பார்ப்பதை அனுமதிக்க முடியாது' என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

இதற்கு மறுபுறமாக, 'சட்டம் என்ன சொல்கிறது என்று எழுத்தளவில் பார்த்தால் போதாது, அதன் ஆன்மாவைப் புரிந்து கொண்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்' என்பது மாதர் சங்கங்கள் பலவற்றின் வாதம்.

இரண்டிலும் நியாயம் இருக்கிறது.

அமெரிக்காவில் தான் குற்றவாளியல்ல என்று நிரூபிக்க வேண்டியது குற்றம் சுமத்தப்பட்டிருப்பவரின் பொறுப்பு. பிரிட்டனிலோ சந்தேகமற 'குற்றவாளிதான் என்று யார் குற்றம் சுமத்துகிறாரோ அவர் நிரூபித்தாக வேண்டும்! தாம் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றுகிறவர்கள். உண்மைக் குற்றவாளி ஒரு

வேலை தண்டனை பெறாமல் தப்பினாலும் பாதகமில்லை; யாரும் அநியாயமான விதத்தில் தவறிப்போயும் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இத்தனை பாதுகாப்பு.

'கற்பழிப்பு, பலவந்தம், பெண்களை இழிவுபடுத்துதல், மானபங்கம் செய்தல் போன்ற குற்றப் பிரிவு சட்டங்கள் தெளிவாக இல்லை; அவற்றைத் திருத்தியமைத்துத் தண்டனைகளையும் கடுமையாக்க வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறைய இதுவே வழி' என்று மாதர் சங்கங்கள் கோரிக்கை எழுப்பினால் அதற்கு நம் ஆதரவு நிச்சயம் உண்டு. இதற்கு மாதர் சங்கங்கள் நாடாளுமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமே யல்லாது நீதி மன்றத்தின் முன் அல்ல.

செய்திகள், வாசிப்பது 'செம்பியன்'

ஏப்ரல் ஃபூல்!

ஏப்ரல் முதல் தேதி என்றாலே ஏதாவது வேடிக்கை, செய்தித் தாள்களில் இருக்கும். பாதாளச் சாக்கடையில் ஒரு சிறுவன் விழுந்து விட்டான் என்று ஃபோன் கால் கிடைத்ததும் அதிகாரிகளும் ஊழியர்களும் ஓட்டமாக ஓடி வந்து தேடி இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு ''ஏப்ரல் ஃபூல் ஆனோம்'' என்று புரிந்து கொண்டார்கள். பால்கிவாலா சொற்பொழிவு நிகழ்த்துகிறார் என்று கேள்விப்பட்டு விரைந்து வந்த பத்திரிகை நிருபர்கள் ஏப்ரல் முட்டாள்களானார்கள்!

நமது பிரதமரும் தேச மக்களை யெல்லாம் இப்போது ஏப்ரல் ஃபூல் ஆக்க முயன்று கொண்டிருக்கிறார். மாநிலத் தேர்தல்கள் தள்ளிப் போடப்படலாம் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது! நேற்றுவரை குறித்த காலத்தில் தேர்தல் நடத்தே தீரும் என்றும் அதனால் வீட்டுக்கு வீடு போய் வாக்காளர் பட்டியல் தயாரிக்க நேரமில்லை என்றும் கூறி வந்த தேர்தல் பிரதம கமிஷனர், இப்போது கருத்து மாறி, 'தேர்தல் எப்போது என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும்' என்கிறார்! தாம் அரசுக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தேவையற்ற சுதந்திரமான அமைப்பின் தலைவர் என்பதை மறந்து பேசுகிறார்! தாங்கள் ஏப்ரல் ஃபூல்கள் அல்ல என்பதை மக்கள் வன்மையாகச் சந்தர்ப்பம் வாய்க்கும் போது காண்பிக்க வேண்டும்.


• • •


தமிழ் நாட்டின் கார்ட்டர்!

ஜனாதிபதி கார்ட்டரின் ஆற்றலின்மையைக் குறித்து அமெரிக்கப் பத்திரிகைகள் அலறிக் கொண்டிருக்கின்றன. அவர் பதவிக்கு வந்த பிறகு பண வீக்கம் ஏகமாக அதிகரித்து விலைவாசிகள் ஏகத்தாறாக உயர்ந்து விட்டன; நேற்று ஒன்று சொல்வதும், இன்று வேறுவிதமாக நடந்து கொள்வதும் அவருக்கு வழக்கமாகிவிட்டன; நல்ல மனிதர் ஆனால் சாணக்கியம் போதவில்லை; அதிகாரத்துக்கு வந்து விட்டார். ஆனால் அதிகாரங்களைப் பயன்படுத்தத் தெரியவில்லை; பிரச்னைகளைச் சந்தித்துத் தீர்வு காண முடியாமல் எல்லாம் எப்படியாவது சரியாகி விடும் என்று எண்ணுகிறார்; ஆட்சிப் பொறுப்பில் அவர் அடைந்த வெற்றிகளைவிடத் தோல்விகளே அதிகம் என்றெல்லாம் கூறி ஒவ்வொன்றுக்கும் பல உதாரணங்களை அடுக்குகிறது டைம் பத்திரிகை.

இதைப் படிக்கும்போது நேற்று வரை தமிழகத்தில் முதல்வராக இருந்தவர்தான் நம் நினைவுக்கு வருகிறார். எம். ஜி. ஆர். கார்ட்டர் ஆகிவிடமாட்டார், தமிழகமும் அமெரிக்காவாகி விடாது. ஆயினும் திறமையின்மை என்று காரணம் காட்டி கார்ட்டர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று அமெரிக்காவில் யாரும் கோரிக்கை எழுப்பவில்லை என்பதைக் கவனித்தால் போதும். ஜனநாயகத்தில் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் குறிப்பிட்ட கால கட்டத்துக்கு அவர்களால் பதவியில் அமர்த்தப்பட்ட பின் ஒருவரை ஆற்றலின்மை என்ற காரணம் காட்டிப் பதவி நீக்கம் செய்ய முடியாது; கூடாது.




மத்திய அரசுடன் ஒத்துப் போகிற கட்சிகள் தான் மாநிலங்களில் பதவிக்கு வரணும்!
ஜனதா, லோக் தளம் எல்லாத்தையும் ஒரு வழியாக்கிப்புட்டு, பாதி மனுஷன்.. நம்மை வேறு வந்து பாக்கறதா சொல்லித் தொலைச்சிருக்காரே!...
எமக்குள்ளே ஆளுக்கு 50 சதவிகித தொகுதிகள் பங்கு போட்டுக் 'கொண்டோம்! முழுமையான மனநிறைவு எங்களுக்கு!
நமக்கு ஒதுக்கப்பட்ட 50 சதவிகித தொகுதிகளில் நாம் ஜெயிக்கறது ரொம்ப முக்கியம்! அதை விட முக்கியம், நம்ம பிரதம கூட்டாளி பெரும்பாலான தொகுதிகளில் தோற்கும்படியா பண்றது...
புரிகிறதா தம்பி?
நமக்கு ஒதுக்கப்பட்ட 50 சதவிகித தொகுதிகளில் நாம் ஜெயிக்கறது ரொம்ப முக்கியம்! அதை விட முக்கியம், நம்ம பிரதம கூட்டாளி பெரும்பாலான தொகுதிகளில் தோற்கும்படியா பண்றது!...
புரியுதா தொண்டரே?



ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்

நமக்கு என்னதான் கெட்டிக்காரத்தனம் இருந்தாலும் பகவத் ஸங்கல்பத்தை மாற்ற முடியாது.

எண்ணூறு வருஷங்களுக்கு முன் பாஸ்கராசாரியார் என்ற பெரிய கணித ஸித்தாந்தி இருந்தார். அவர் வாழ்க்கையில் இதற்கு த்ருஷ்டாந்தமாக ஒன்று நடந்தது.

அவருடைய பெண்ணுக்கு லீலாவதி என்று பெயர். ஜாதகப்படி அவளுக்கு ரொம்பவும் மாங்கல்ய தோஷம் இருப்பதை ஜ்யோதிஷப் புலியான பாஸ்கராசாரியார் அறிந்திருந்தார். ஆனாலும் தமது கெட்டிக்காரத்தனத்தினால் ஸகல க்ரஹங்களும் தீர்க்க ஸௌமங்கல்யத்தைத் தரும்படியான ஒரு லக்னத்தைக் கண்டுபிடித்து அதிலே புத்திரிக்கு விவாஹம் செய்து விட்டால் அவளை தீர்க்க ஸுமங்கலியாக இருக்கச் செய்துவிடலாம் என்று நினைத்தார். அதே மாதிரி முஹூர்த்தம் வைத்தும் விட்டார்.

அந்தக் காலத்தில் இப்போது போல் கடிகாரம் கிடையாது. வாஸ்தவத்தில் அந்தக் காலத்தில் இருந்ததுதான் அசல் கடிகா. கடம், கடிகா, கடிகை என்பதெல்லாம் பானை மாதிரியான நீர்த்த பாத்திரத்தைக் குறிக்கும். இப்படிப்பட்ட ஜல பாத்திரமொன்றுதான் பூர்வ காலத்தில் கடிகா, அல்லது கடிகாரம். அதிலே மேல் பாகம், கீழ்ப் பாகம் என்று பிரித்திருக்கும். மேல் பாகத்தில் விட்ட ஜலம் ஒரு துவாரம் வழியாகக் கீழ்ப் பாகத்தில் துளித் துளியாக விழும். மருந்து பாட்டிலில் டோஸ் மார்க் பண்ணியிருக்கிற மாதிரி கீழ் பாகத்தில் அளவுக் கோடுகள் போட்டிருக்கும். துளித் துளியாய் விழும் ஜலம் இன்ன கோடு வரை வந்தால் இத்தனை நாழிகை என்று கணக்குப் பண்ணி விடுவார்கள். அதிலுள்ள 'டோஸ் மார்க்' ஒரு நாளில் அறுபதில் ஒரு பங்காகும். 'நாழிகை' என்று தமிழில் சொல்லப்படும் இந்தக் கால அளவுக்கு ஸம்ஸ்கிருதத்தில் 'நாடிகா' என்பதோடு 'கடிகா' என்றே இன்னொரு பேர் உண்டு. அது இருபத்து நாலு நிமிஷம் கொண்டது. (water clock, water glass என்று இங்கிலீஷிலும் சொல்வார்கள். ஜலம் சீதோஷ்ணத்தைப் பொறுத்து 'எவாபரேட்' (ஆவி) ஆவதால் இதில் ஏதாவது கணக்கு தப்பு வரும் என்று ஜலத் துளிக்குப் பதில் 'எவாபரேட்' ஆகாத மண் துகள் விழுகிற மாதிரிச் செய்த கடிகாரத்துக்கு hour glass என்று பெயர்.)

அந்த நாள் வழக்கப்படி லீலாவதியை விளையாட்டுப் பெண்ணாக இருந்த சின்ன வயசிலேயே கல்யாணம் நிச்சயித்தார்கள். அந்தக் குழந்தை மேலே சொன்ன மாதிரியான ஜல கடிகாரத்திடம் வந்து குனிந்து பார்த்து ஏதோ சேஷ்டை பண்ணிற்று. அப்போது அதன் மூக்குத்தியிலிருந்த ஒரு முத்து கடிகாரத்துள் விழுந்து, மேல் பாகத்துக்கும் கீழ் பாகத்துக்கும் நடுவே உள்ள துவாரத்தில் மாட்டிக் கொண்டு விட்டது.

இதனால் விழுகிற துளி சின்னதாகிவிட்டது. இப்படி, இருக்க வேண்டியதை விடச் சின்னத் துளிகளாக விழுந்ததால், முஹூர்த்த லக்னக் கோட்டுக்கு ஜலம் வந்தபோது, வாஸ்தவமான சுப நேரம் தப்பி, அடுத்த லக்னம் வந்து விட்டது.

அது கெட்ட லக்னம்.

அந்த லக்னத்தில் விவாஹமானதால் லீலாவதி ஜாதகப்படியே ரொம்பவும் பிஞ்சு வயசில் பதியை இழந்து விட்டாள்.

முத்து விழுந்ததை ஒருத்தரும் முதலில் கவனிக்காததால் இத்தனை பெரிய விபரீதம் நடந்து விட்டது. அப்புறம் விஷயம் தெரிய வந்தபோது விதியை யாரும் மாற்ற முடியாது என்று தெரிந்து கொண்டார்கள்.

பிற்காலத்தில் பாஸ்கராசாரியார் கணித சாஸ்திரப் புஸ்தகம் ஒன்று எழுதியபோது அதற்குத் தம் புத்திரியின் பெயராகிய லீலாவதி என்பதையே வைத்தார். சின்ன வயசிலேயே விதவையாகித் தம்மிடம் வந்து விட்ட புத்திரியைக் கணிதத்தில் பண்டிதை ஆக்கி, அவள் பெயரிலேயே தம் புஸ்தகத்தை எழுதினார். ஸாதாரணமாக, ஒருத்தரின் பின் பரம்பரைக்காரர்கள் பாட்டி, முப்பாட்டி பெயரை வைத்துக் கொண்டு அவர்கள் நினைவை நீடிக்கிற மாதிரி, குழந்தையே பெறாத லீலாவதியைப் பண்டிதப் பரம்பரைக்குப் பூர்வீகமாக்கி, அவள் பெயரைப் பண்டிதக் குழந்தைகள் எந்நாளும் மறக்காதபடி செய்தார்.

மொத்தப் பரிசுத் தொகையை ரூ. 2000லிருந்து இந்த ஆண்டு ரூ. 2500 ஆக உயர்த்தியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதனை ஐந்தாகப் பிரித்து ஐந்து விதமான சிறு கதைகளுக்கு ஐந்து பரிசுகளை வழங்குகிறோம். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த சிறுகதைக்கு ரூ. 500 பரிசு:

- சமூகச் சிறுகதை
- ஹாஸ்யச் சிறுகதை
- சரித்திரச் சிறுகதை
- விஞ்ஞானச் சிறுகதை
- மர்மச் சிறுகதை

என்று ஐந்து தலைப்புக்களில் சிறுகதைகளை வரவேற்கிறோம்.

பரிசு பெறும் கதைகள் தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 100 சன்மானம் பெறும். இவற்றில் அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எழுதியது இல்லை என்றும், போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தரவேண்டும்.

- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

- முடிவு தேதி மே 31உ.

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளை மட்டும் இணைப்பதிலோ அல்லது பின்னால் தனியே அனுப்புவதிலோ பயனில்லை.

- கதைகள் கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- அமரர் கல்கி அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகமாகக் கலந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை–32

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1980



பாலசந்தரைச்

தமிழ் நாட்டின் ஆல்பர்ட் ஹிட்ச்காக் என்று அந்தக் காலத்திலேயே பெயர் எடுத்தவர் எஸ். பாலசந்தர். பல திகில் படங்களை எடுத்த அவர், கடைசியாக ''நடு இரவில்'' படத்தை எடுத்து வெளியிட்டார். வீணை வித்தகருமாவார். கொலை, திகில் படமாலை சிவப்பு ரோஜாவை எடுத்து வெற்றி பெற்றவர் இயக்குனர் பாரதி ராஜா. இருவரும் பாலசந்தரின் வீட்டில் சந்திக்கிறார்கள்.

பாரதி: திகில் படங்களை நிறைய எடுத்து நீங்கள் பேரெடுத்திருக்கிறீர்கள். நீங்கள் ஏன் சினிமாத்துறையிலிருந்து விலகித் தனித்து நிற்கிறீர்கள்?

பால: ரிடையர்ட் அன் ஹர்ட் என்றுதான் சொல்லியிருக்கேன், ரிஸைன்ட் என்று சொல்லலே. இப்பவர்ற படங்களிலே செக்ஸும் கொடூரமும் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது, உங்கள் கருத்து?

பாரதி: சமீப காலமாகக் கொஞ்சம் அதிகம்தான்.

பால: உதாரணமாகக் கற்பழிப்புக் காட்சிகள்.

பாரதி: கற்பழிப்பு என்றாலே எல்லோருக்கும் வெறுப்புத் தட்டிவிட்டது. யாராவது படத்தில் காண்பித்தாலே இவனுக்கு வேறு வேலை இல்லை என்று திட்ட ஆரம்பித்து விட்டார்கள்!

பால: அப்படி யென்றால் டிரெண்ட் மாறியிருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

பாரதி: கண்டிப்பாக, முன்பெல்லாம் கதையும் வசனமும் கட்டுக்கடங்காமல் இருக்கும். ஆனால் இப்பொழுது அப்படி அல்ல. அளவான கதை, அடக்கமான வசனம் ஆகியவற்றுடன் கூடிப் பல்வேறு தொழில் நுட்பங்களில் சிறந்துள்ள படங்களை மக்கள் பாராட்டத் தொடங்கி விட்டார்கள்.

பால: உங்களுடைய 'சிவப்பு ரோஜாக்கள்' சிறப்பாக வெற்றி பெற்றதற்குத் தெரிந்த முகங்களான கமலஹாசனும் ஸ்ரீதேவியும் நடித்ததுதான் என்று நினைக்கிறேன்.

பாரதி: நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். முதல் படத்தில் (16 வயதினிலே) கமலஹாசன், ஸ்ரீதேவி நடித்தார்கள். இரண்டாவது படத்தில் (கிழக்கே போகும் ரயில்) எல்லாமே புது முகங்கள். மூன்றாவது படத்தில் கதைக்கு ஏற்ப கமலஹாசன் ஸ்ரீதேவியை ஒப்பந்தம் செய்தேன்.

பால: நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள கதை வலுவானதாக இருந்தால் யாரைவேண்டுமானாலும் போடலாம் என்று நாம் முடிவெடுக்கலாமில்லையா? உங்கள் அடுத்த படம் அப்படித்தானா?

பாரதி: எனது அடுத்த படத்தின் பெயர் ''நிழல்கள்''. எல்லாமே புதிய முகங்கள். கதை என்று சொல்ல வந்தால் நடுத்தரக் குடும்பத்தின் இளம் வாலிபர்கள், அவர்களது பிரச்னைகள். திகில்களோ கொலைகளோ கிடையாது.

பால: கொலைகளும், திகில்களும் நிறைந்த படங்களின் எதிர்காலம் எப்படி இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

பாரதி: கொலை, திகில் படங்களை உருவாக்க இந்த நாடு ஏற்றதல்ல. இங்கே ரொம்பபேருக்கு துப்பாக்கி லைசென்ஸுன்னா என்னன்னு கூடத்தெரியாது. நீங்க எப்படி முதன் முதலாகக்கொலை, திகில் படங்களை எடுக்க ஆரம்பிச்சீங்க?

பால: அந்தக் காலத்தில் ஓர் ஆங்கிலப் படம் வந்தது. இரு சகோதரர்களைப் பற்றிய கதை. ஒரு சகோதரர் கொல்லப்படுகிறார். அவர் ஆவி மற்றொரு சகோதரனின் உடம்புக்குள் புகுந்துகொள்ள அதனால் ஏற்படும்



✖ நடு இரவில் திரைப்படத்தில் ஒரு காட்சி





✖ சிவப்பு ரோஜாக்கள் திரைப்படத்தில் கமல்



சந்தித்த பாரதிராஜா

விளைவுகளை அந்த ஆங்கிலப் படத்தில் பார்த்தோம். அதைத் தழுவி நான் ''இது. நிஜமா'' என்ற தமிழ்ப் படத்தை எடுத்தேன். மிகச் சிறப்பாக ஓடிற்று. அதில் நான் தான் துணை டைரக்டர். கிருஷ்ண கோபால் இயக்குனர். அப்பொழுது எனக்கு இருபது வயதிருக்கும். நான் அப்பொழுதே ஆல்பர்ட் ஹிட்சாக் படங்கள் நிறையப் பார்ப்பேன். கொலை, திகில் புத்தகங்களும் நிறையப் படிப்பேன். கொலை திகில் படங்களில் தனிக் கவனம் செலுத்திச் சிறப்புப் பெறலாமே என ஏனோ எண்ணம் தோன்றிற்று. சின்ன வயசிலேயே ஆர்ட் டைரக்டர் சேகர், ஸ்டில் ராம்நாத், வி. சாந்தாராம் போன்றவர்களுடன் பழக வாய்ப்பு ஏற்பட்டது. காமிராவை இயக்கும் முறை, எந்த ஆங்கிளில் படம் எடுக்க வேண்டும், காம்போஸிஷன் என்றால் என்ன என்றெல்லாம் கற்றுக் கொண்டேன். இதன் விளைவாக சினிமாத் தொழில் நுட்பக் கலைஞர்கள் சங்கத்தின் தலைவராகக் கூட சில ஆண்டுகள் இருந்திருக்கிறேன். ஏன் கூறுகிறேன் என்றால் கொலை, திகில் படங்களுக்குத் தொழில் நுட்பத் திறன் அதிகம் தேவை. சாதாரண சமூகப் படங்களில் அதிகமாகத் தொழில் நுட்பத் திறனைக் காட்ட முடியாது. அப்படிப் புகுத்தினால் கதை கெட்டுவிடும். அந்தக் காலத்திலேயே எடிட்டிங் என்றால் என்ன என்று எங்கள் படத்தில்தான் நிரூபித்தோம். டிராலி, கிரேன், காட்சிகள் அதிகம் இருந்தன.

பாரதி: நீங்க பட உலகுக்குத் திரும்பினால் திகில், கொலை படங்கள் தான் எடுப்பீர்களா?

பால: ஒரு தயாரிப்பாளர் வந்தார். பேச்சு வார்த்தை எல்லாம் நடந்தது. கதை தேர்ந்தெடுத்து வசனம் கூட எழுதித் தயாராக வைத்திருந்தேன். நாளை வந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம் என்று சொன்னார். இதுவரைக்கும் வரவில்லை. அந்தப் படத்தின் கதையில் சஸ்பென்ஸ்தான் பிரதானம். நீங்கள் 'சிவப்பு ரோஜாக்கள்' மாதிரி கொலை திகில் படம் தயாரிப்பதாக இருக்கிறீர்களா?

பாரதி: இப்போதைக்கு அந்த மாதிரி எண்ணம் இல்லை. கொலை திகில் படங்கள் என்று யோசிக்கும்போது சென்சார் பற்றி ரொம்ப சிந்திக்க வேண்டுமில்லையா?

பால: கண்டிப்பாக. ஆனால் நான் சென்சார் அங்கத்தினர்; இல்லை. ராஜினாமாச் செய்து விட்டேன்.

பாரதி: பட விழாக்கள் என்று நடத்துகிறார்கள். 350 நாளும் பத்தினியாக இருந்து விட்டு மீதி 5 நாட்கள் மட்டும் கெட்டுப் போனால் தவறில்லை என்று சொல்வது போல் பட விழாப் படங்கள் அமைகின்றனவே?

பால: உங்கள் கூற்றை நான் நூற்றுக்கு நூறு ஆமோதிக்கிறேன். இதே கேள்வியை அமைச்சர் அத்வானியிடம் கேட்டேன். இந்த டபுள் ஸ்டாண்டர்ட் பிடிக்காததால்தான் நான் ராஜினாமாவே செய்தேன். பட விழாக்களை நடத்தித்தான் தீர வேண்டுமென்றால் நல்ல படங்களைப் போட வேண்டும். இல்லை சென்ஸார் செய்து போட வேண்டும். இந்த இரண்டுமே முடியாதென்றால் நம் நாட்டில் சென்சாரையே தூக்கிவிட வேண்டும். நீங்களும் உங்களைப் போன்ற இளம் கலைஞர்களும் பட உலகில் பெரிய மாற்றத்தை உண்டாக்கி வருகிறீர்கள். மேலும் பல வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

வணங்கி விடை பெற்றார் பாரதி ராஜா.

உரையாடல், தொகுப்பு: கலன்
சந்திப்புப் புகைப்படங்கள்: ரவி

மலை ஏறும் போட்டி
மறக்க முடியாத காட்சி



"மலை ஏறும் கலையைத் தமிழகத்தில் பிரபலப்படுத்த விரும்புகிறோம். உங்கள் ஒத்துழைப்புத் தேவை" என்று கல்கி சார்பில் கேட்டதும், உடனேயே, "ஓ யெஸ்! நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!" என்றார் என்ஃபீல்டு மானேஜிங் டைரக்டர் விசுவநாதன். நுண் கலைகளின் போஷகரான அவர், விளையாட்டுக் கலைகளையும் சாகசச் செயல்களையும் உற்சாகப்படுத்துவதில் என்றுமே முன் நிற்பவர்.

"மலை ஏறும் ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு கொடுங்கள்" என்றோம்.

மனிதர் உடனே "சரி" என்று சொல்லி விட்டதைப் பார்த்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே கேட்டிருக்கலாமோ என்று தோன்றியது. எண்ணத்தைப் படித்தவர் போல, "அது போதுமா? போட்டியில் பங்கேற்பவருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்க வேண்டாமா?" என்றார். கேட்டதுடன் நில்லாது, ஆயிரம் ரூபாய் செக், ஆறுதல் பரிசுகளாக பிரீஃப் கேஸ்கள் எல்லாவற்றையும் கல்கி காரியாலயத்துக்கு அனுப்பி வைத்துவிட்டார். அதுமட்டுமின்றி விசுவநாதன் போட்டி வைத்தன்று சிரமம் பாராமல் கிசலம்குண்டுக்கு நேரில் வந்திருந்து பங்கேற்றவர்களைப் பாராட்டிப் பரிசுகளைத் தம் கைப்பட வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த மலை ஏறும் போட்டி யோசனையை சென்னை கிரி விஹாரி மண்டல் (Mountain Trekking Club of Madras) ஆர்வத்துடன் வரவேற்றுப் போட்டியை நடத்தித் தரும் பொறுப்பை ஏற்றது. சங்கர்லால் தலைவராகவும் ஜெ. ரமணனைக் காரிய தரிசியாகவும் கொண்டது இந்தச் சங்கம். இருவரும் மலை ஏறுவதில் நிபுணர்கள். ரமணன் ஜவாஹர்லால் நேரு இன்ஸ்டிடியூட் ஆஃப் மவுண்டனீரிங்கில் பயின்றவர்.

கல்கி வாசகர்களில் எழுபத்தைந்து பேர் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்திருந்தனர். (முடிவு தேதிக்குப் பின் வந்த விண்ணப்பங்கள் நீங்கலாக) இவற்றை ரமணன், என்ஃபீல்டு பி. ஆர். ஓ. வெங்கடராமன், கல்கி ஆசிரியர் ஆகியோர் ஆராய்ந்து ஒன்பது பேர்களைத் தேர்ந்தெடுத்தனர். இவர்களில் மூவர் பெண்கள். ஆண்களில் இருவர் வெளியூர் வாசிகள்.



⌘ இடமிருந்து வலமாக: பரிசு பெற்ற ரங்கநாதன், என்ஃபீல்டு விசுவநாதன், கல்கி ஆசிரியர், ரமணன், பரிசு பெற்ற ஐயம்பெருமாள்.


⌘ ரமணன் மேலே இருந்து கண்காணிக்கச் செங்குத்தான பாறையில் ஏறுகிறார் மைத்ரேயி

போட்டியானது மலை ஏறும் கலை சம்பந்தப்பட்ட Trekking, Rock Climbing, Rapelling, River Crossing போன்ற பல அம்சங்களிலும் திறமையைச் சோதிப்பதாய் இருந்தது. கிரி விஹாரி மண்டலைச் சேர்ந்த ஜோஷி, மணி, பாலையாம் ஆகியோர் முன்கூட்டியே உபரிபேடு என்னுமிடத்துக்குச் சென்று ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

போட்டியில் பங்கேற்ற சித்ரபானு, உஷா, மைத்ரேயி, திருமூர்த்தி, ஐயம்பெருமாள், ரங்கநாதன், ஆறுமுகம் (கோயம்புத்தூர்), விஸ்வநாதன் (தஞ்சை), நரேந்திரபாபு ஆகியோரிடம் அளவிட முடியாத உற்சாகம்.







✠ மலை ஏறுவதில் முதிர்ந்த நிலையை ஸ்ரீமதி ஆஷா செய்து காட்டுகிறார். ✠ செங்குத்தான பாறையில் இறங்குகிறார் சித்ரபானு. ✠ பற்றி தொற்றி பாறையில் ஏறுகிறார் நரேந்திரபாபு (இடம்)

உடரி மேட்டில் வெங்கடய்யா செய்து கொடுத்த டிபனை உண்டதும் போட்டி தொடங்கியது.

முதலில் ஆற்றைக் கயிற்றின் உதவியால் தாண்டும் River Crossing போட்டி. சுமார் பதினைந்தடி ஆழத்துக்கு நீர்வீழ்ச்சியில் இருந்து வரும் ஆறு ஓடிக் கொண்டிருக்க ஒரு கரையில் இருந்து இன்னொரு கரையை அடைய உதவிக்காக மரத்தில் கயிறு கட்டப் பட்டது. நரேந்திர பாபு தொடங்கி வைக்கப் போட்டி ஆரம்பமாகியது. கால்களாலும் கைகளாலும் கயிற்றைப் பிடித்துக் கொண்டு தலை கீழாகத் தொங்கியபடியே ஆற்றைக் கடக்க வேண்டும். உஷா பாதி ஆற்றைத் தாண்டி இருந்த சமயத்தில் சோர்வு அடைந்து கைப் பிடியை விட்டார். ஆற்றில் விழுந்தார்! தமக்கு நீச்சல் தெரியும் என்று அவர் முன்பே சொல்லியிருந்ததால் நீந்தி வருவார் என்று எல்லோரும் எதிர்பார்த்த வேளையில் உஷா நீச்சலடிக்காமல் ஆற்றின் அடிக்குப் போய்த் தண்ணீரைக் குடிப்பது புலப் பட்டதும் எல்லோரது உள்ளத்திலும் கலவரம். போட்டியாளர்களில் ஒருவரான ரங்கநாதன் இத்தருணம் அபாரமான ஒரு சாதனை செய்தார். ஆளுக்கு ஒருவராக நீரில் உஷாவை நோக்கிப் பாய்ந்த சமயம் ரங்கநாதன் மின்னல் போல் பாய்ந்து தண்ணீருக்கு அடியில் சென்று உஷாவின் தலை மயிரைப் பிடித்து வேகமாக இழுத்து வந்து தரையில் உஷாவைக் கிடத்தினார். முதலுதவி அளிக்கப்பட்ட சிறிது நேரத்தில் உஷா பழைய நிலையை அடைந்தார். ''தண்ணீரில் விழுந்ததும் எனக்கு எதுவுமே தோன்றவில்லை. நீச்சல் கூட மறந்துவிட்டது போன்ற உணர்வு மரத்த நிலை. அதனால்தான் தண்ணீரின் கீழ் சென்று விட்டேன்'' என்றார்

✠ தஞ்சை விசுவநாதனின் ஆற்றைக் கடக்கும் ஆற்றல்



உஷா. ''இதனை எனது வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன். என் தாயார் இம்மாதிரி ஒரு பெண்ணை நான் காப்பாற்றியது தெரிந்தால் மிக மிக சந்தோஷப்படுவார்'' என்றார் ரங்கநாதன். River Crossing போட்டியில் தஞ்சாவூர் திருக்காட்டுப்பள்ளியைச் சேர்ந்த விஸ்வநாதன சிறப்பான தமது தேர்ச்சியை வெளிப்படுத்தினார். ஐயம்பெருமாளும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். முன் அனுபவம் இல்லாவிடினும் மைத்ரேயி துணிச்சலுடன் சிறப்பாகத் தாண்டியது குறிப்பிடத் தக்கது.

அடர்த்தியான காட்டுப் பிரதேசம். சிறிது சிறிதாக ஏற வேண்டிய மலைப் பிரதேசம். இடையில் ஓடிவரும் ஆறு. முட்கள் நிறைந்த புதர்கள். இத்தகைய சூழலில் சுமார் ஐந்து மைல்கள் மூட்டை முடிச்சோடு நடந்து செல்ல வேண்டிய போட்டி அடுத்ததாக நடந்தது. Trekking and Load Carrying. எல்லோருமே சற்றும் தளர்வோ, சோர்வோ இன்றி நடந்தனர்.

பிற்பகல் ஒரு மணி. போட்டியாளர்கள் மூட்டையாகச் சுமந்து வந்த புளிச் சாதம், தயிர் சாதம், பழங்கள் போன்றவை மாயமாய் மறையத் தொடங்கின! மூன்று பெண்களும் பரிமாறுவதிலும் போட்டியிட்டனர்!

✕ 1500 அடி உயரமுள்ள சேலம் குண்டு மலையின் மேல் பகுதி. படத்தில் இடது புறம்-கீழே உற்றுக் கவனித்தால் போட்டியாளர்கள் எறும்பு போல ஊர்ந்து மலை ஏறுவதைக் காணலாம். இம் மலை உச்சியில் தான் முழுநிலவில் போட்டியாளர்களும் மேற்பார்வையாளர்களும் இரவினைக் கழித்தனர்!



'வெட்டி வா என்றால் கட்டி வர'த் தயாராக இருந்த கிரி விஹாரி மண்டலின் அங்கத்தினர் பாலையம், மணி ஆகியோரின் சுறுசுறுப்பை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. போட்டியாளர்களுக்குச் சோர்வே ஏற்படாத விதமாக வாசுதேவன் அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டே வந்ததும் குறிப்பிடத் தக்கது.

வரும் வழியில் ஒரு கொம்பேறி மூக்கன் பாம்பு தலையைக் காட்ட, கொல்லப்பட்டது.

அடித்தள முகாமை அடைந்தபோது மணி நாலரை. லேசாக வயிற்றுக்கு ஆகாரம்.

அடுத்து சறுக்கும் பாறை ஏறும் போட்டி. (Rock climbing test)

பயங்கரமாகச் சறுக்கும் பாறையில் சுமார் ஐம்பது அடிகள் ஏற வேண்டும். எவ்வித உதவியும் இன்றி ஏற வேண்டும். தவறிக் கீழே விழுந்தால் பிடித்திழுக்க இடுப்பில் கயிறு கட்டப்பட்டது.

எல்லோரும் இப் போட்டியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றாலும், ஐயம்பெருமாள் மிகச் சிறப்பாக ஏறினார். இப்போட்டி முடியும் போது மாலை மணி ஏழு.

உடனடியாக எல்லோரும் உபரி மேட்டுக்கு விடை கொடுத்துவிட்டு நாலு கிலோ மீட்டர் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸை நோக்கி நடக்கலாயினர்.

போட்டியின் அடுத்த இலக்கான சேலம் குண்டை நோக்கி பஸ் இரவு சுமார் எட்டரை மணிக்குப் புறப்பட்டது.

சேலம்குண்டு திருத்தணியிலிருந்து பொதத் தூர்ப்பேட்டைக்குச் செல்லும் வழியில் உள்ளது. சுமார் 1500 அடி உயரமும் உச்சியில் சுமார் இருநூறு அடி வழுக்கும் பாறையும் கொண்டது சேலம் குண்டு. சேலம் குண்டில் அடித்தள முகாம் திரு கோவிந்த பிள்ளை வீட்டில் அமைக்கப்பட்டிருந்தது. கிரி விஹாரி மண்டலின் அங்கத்தினர்களான, ஆஷா ஜோஷி, லிங்கப்பா, நாகேந்திர ராவ் ஆகியோர் முன் தினமே சென்று எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

ஊத்துக் கோட்டையில் இரவு உணவை முடித்துக் கொண்டு பஸ், சேலம் குண்டு அடித்தள முகாமை அடைந்தபோது இரவு மணி பதினொன்றரை. கால் மணி நேரம் அங்கு தங்கிய பிறகு சேலம்குண்டு சிகரத்தை நோக்கி எல்லோரும் நடக்கலாயினர். ஆம், நள்ளிரவில்தான்!

பூரண சந்திரன் தண்ணென்று ஒளி பரப்ப நடந்து மலை ஏறிச் சிகரத்தைக் குழு அடைந்தபோது இரவு மணி ஒன்றரை. அங்கேயே குகையில் பாக்கி இரவு முழுவதும் தங்கி, உறங்கி, விடியற்காலை குழு அடித்தள முகாமை மீண்டும் வந்தடைந்தது. போட்டியாளர்களின் Trekking Capacity, Aptitude for adventure போன்ற பல அம்சங்கள், இரவு மலை ஏறும்போதும், அதிகாலையில் இறங்கும்போதும் சோதிக்கப்பட்டன.

வயற்காட்டு பம்ப் செட்டில் குளித்ததும் சூடான இட்லி சாம்பார். போட்டியாளரிடையே புதுத் தெம்பு.

மறுபடியும் சேலம் குண்டு மலையேற்றம்! இந்தத் தடவை சில அபாயகரமான சோதனைகள் நடத்தப்பட்டன.



நிற்பவர் இடமிருந்து வலம்: நாயகன், சித்ரபானு, அய்யம் பெருமாள், (Prize Winner), உஷா, ரங்கநாதன் (Prize Winner.) திருமூர்த்தி, ரமணன்
உட்கார்ந்திருப்பவர் இடமிருந்து வலம்: விஸ்வநாதன், நரேந்திரபாபு, மைத்ரேயி, ஆறுமுகம்

சறுக்கும் பாறைகளில் ஏறுவது, கயிற்றின் உதவி கொண்டு வழுக்குப் பாறைகளில் இறங்குவது (Rapelling) சோர்வடையாது விரைவாகச் செங்குத்தான பகுதியில் மலை ஏறுவது ஆகிய சோதனைகள்.

சற்றேனும் சோர்வோ, தயக்கமோ காட்டவில்லை ஒன்பது போட்டியாளர்களும். ஒருவருடன் மற்றவர் போட்டி யிடுகிறோம், பரிசு பெற வேண்டும் என்ற நோக்கமே இன்றி ஒரு குடும்பம் போல் போட்டியில் பங்கேற்றனர். மெய் சிலிர்க்க வைப்பதாக இருந்தது இந்தச் சகோதரத்துவம்.

மாலை சுமார் நாலரை மணிக்கு எல்லாப் போட்டியாளர்களும் சேலம்குண்டின் உச்சிப் பாறையைக் கயிற்றின் உதவியுடன் அடைந்தது போட்டியின் இறுதிக் கட்டம்.

லிங்கப்பாவும், திருமதி ஆஷா ஜோஷியும் மலையேறும் பயிற்சியின் முதிர்ந்த நிலைகளைச் செயல் முறையில் போட்டியாளர்களுக்குச் செய்து காட்டினர்.

போட்டியாளர்களுக்கு விதி முறைகளை விளக்கித் தகுந்த சமயத்தில் உபயோகமான யோசனைகள் கூறி, அவர்களின் உற்சாகத்தைக் கடைசிக் கட்டம் வரையில் குறையாமல் பார்த்துக் கொண்ட பெருமை ரமணனைச் சேர்கிறது.

'மலை ஏறும் பயிற்சி என்பது ஒரு கூட்டு முயற்சி. இதில் சுயநலமே இருக்க முடியாது. போட்டி என்று ஏற்படுத்தியது இந்த 'டீம் ஸ்பிரிட்'டை வளர்க்கத்தான். இப்போட்டியில் அனைவருமே மிக மிக சிறப்பாக ஒத்துழைத்துத் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். ஆனாலும் திறமையாளருள் அதிக ஆற்றல் பெற்றிருந்தவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்' என்று ரமணன் கூறினார்.

போட்டியாளர்களும், நிர்வாகிகளும் அடித்தள முகாமை அடைந்தபோது மாலை மணி ஐந்து. கோவிந்த பிள்ளையின் வீட்டில் தயார் செய்திருந்த உணவை அவ்வீட்டுப் பெண்கள் பரிமாற அனைவரும் வயிறார உண்டனர்.

என்ஃபீல்டு விஸ்வநாதனும், கல்கி ஆசிரியரும் தங்கள் குடும்பங்களுடன் வந்திருந்து வாழ்த்தினார்.

மதிப்பெண்கள் கூட்டப்பட்டு, என். அய்யம்பெருமாளும், ஆர். ரங்கநாதனும் சம மதிப்பெண்கள் பெற்றிருப்பதால் இருவரும் பரிசுக்குரியவர்களே என்றும் பரிசுத் தொகையை இருவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும் ரமணன் கிரி விஹாரி மண்டல் சார்பாக அறிவித்தார்.

அய்யம்பெருமாள் Best & Crompton னில் ஜூனியர் என்ஜினீயராகப் பணி புரிகிறார். ரங்கநாதன் சென்னை மிருக வைத்தியக் கல்லூரியில் நான்காவது ஆண்டு பயிலும் மாணவர்.

என்ஃபீல்ட் அதிபர் நகைச் சுவை ததும்பப் பேசினார்:

''எதற்காக எவரெஸ்ட் மீது ஏறுவது?'' என்று குதர்க்கமாக ஒருவர் கேட்டபோது, எட்மண்ட் ஹிலரி, ''எவரெஸ்ட் சிகரம் என்று ஒன்று இருக்கிறதே அதற்காகத்தான்'' என்று பதிலளித்ததை நினைவூட்டிய விசுவநாதன் பெண்களும் போட்டியில் பங்கேற்கிறார்கள் என ` அறிந்ததும் அவர்களுக்கு விசேஷப் பரிசு வழங்க வேண்டாமா என்று தாம் ஒரு விநாடி யோசித்ததாகவும் பிறகு ஆண்களுடன் சரிநிகர் சமானமாகவே கருதப்பட விரும்புவார்கள் என்று முடிவுக்கு வந்ததாகவும் கூறினார். இதனைப் பெண்மணிகள் உற்சாகமாகக் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

இரவு, சென்னையை நோக்கி பஸ் கிளம்பியதும் ஓர் இனிமையான அனுபவம் முற்றுப்பெறுகிறதே என்றதோர் ஆதங்கம் எல்லோர் உள்ளங்களிலும்!

—**நாயகன்**

புகைப்படங்கள்: **கிரி விஹாரி மண்டல் அங்கத்தினர்கள்; சரஸ்வதி சத்தியமூர்த்தி**

உங்கள் நண்பர்களில்
ஒருவரும் இதுநாள் வரை
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் எடுத்துக்
கொள்ள வேண்டியதின்
அவசியத்தை உங்களுக்குச்
சொல்லவில்லை யென்றால்,

நீங்கள் உங்கள் நண்பர்
குழாத்தை விரிவுபடுத்து-
வதைப் பற்றி யோசிக்கத்
தருணம் வந்து விட்டது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

மழை. பெங்களூர் சிக்பேட்டை போலீஸ் நிலையத்துக்கு அருகில் சிக்கலான சந்துகளில் ஒரு 'லாட்ஜ்'. அதில் ஒரு வாலிபர் வருகிறார். ரூம் எடுக்கிறார். தம்மைப் பார்க்கச் சொந்தக்காரர் ஒருவர் வருவார் என்று சொல்கிறார். மாலை மழையில் தொப்பலாக நனைந்து கொண்டு அந்தச் சொந்தக்காரர் வருகிறார். பழைய பாண்ட், பழைய செருப்பு, கொஞ்சம் தள்ளாட்டம். ஹோட்டல்காரர்கள் அனுதாபத்துடன் அவருக்கு ரூம் காட்டுகிறார்கள்.

இரவு பத்து மணி வரை சொந்தக்காரர் இருக்கிறார். பத்து மணிக்கு அப்புறம் அந்த ஹோட்டலின் இரண்டாவது மாடி சுறுசுறுப்பாகிறது. நிழலான ஆசாமிகள் வருகிறார்கள். கூடுகிறார்கள். கதவைச் சாத்திக்கொள்கிறார்கள். சூதாடுகிறார்கள். எப்படிப்பட்ட ஆட்டம்? நாற்பதாயிரம் ரூபாய் ரொக்கம்; லட்ச ரூபாய் டோக்கன்கள்; முப்பதாயிரம் பெறுமான பொருள்கள். சீமைச் சாராயம் தண்ணீர் போல் ஓடுகிறது. கோழி, மீன் என்று அஞ்சு நட்சத்திர அசோகா ஹோட்டலிலிருந்து காரில் எடுத்து வருபவனுக்கு 500 ரூபாய் ஊதியம். பெரிய கைகள். சதாசிவ நகரில் பங்களா வைத்திருக்கும் பம்பாய்க்காரர்கள். சீமான்களை ஓவர்நைட் ஓட்டாண்டிகளாக்க அந்தச் சிறிய அறையில் அந்தர் — பாஹர் ஆட்டம். போலீஸ் வருகிறதா என்று கண்காணிக்க ரகசிய ஒற்றர் படை.

அந்தச் சொந்தக்காரரைக் கவனிப்போம். அவர் தள்ளாடிக் கொண்டு தன் நண்பர் மேல் ஏறக்குறைய சாய்ந்து கொண்டு அந்த 'ஒற்றர்களின் ஊடே நடக்கிறார். வெளியில் இன்னும் மழை. நனைந்து கொண்டே செல்கிறார். 'பாவம், கிராமத்தான் காணாதது கண்ட மாதிரி குடித்திருக்கிறான்' என்று அனுதாபக் குரல் கேட்கிறது.

குடித்திருந்தவர் சந்து திரும்பியதும் ஜரூர் என்று செயல்படுகிறார். உடனே ஒரு டெலிபோனை நாடி போன் செய்கிறார். காமிரா, சாட்சிகளுடன் பத்து நிமிஷங்களில் அந்த ஹோட்டலைச் சுற்றிலும் போலீஸ் படை வளைக்கிறது. மாடிக்குப் போய்க் கதவைத் தட்டுகிறார். திறந்ததும் 'பளிச்' என்று போட்டோ ஃப்ளாஷ். துப்பாக்கியைக் காட்டுகிறார். பதின்மூன்று பேரும் பிடிபடுகிறார்கள். சினிமா இல்லை. நிஜம்.

அந்தக் கிராமத்து ஆசாமியின் பெயர் கார்த்திகேயன். பெங்களூர் போலீசின் உதவிக் கமிஷனர்.

அடுத்த காட்சி ஒரு காபரே நடனம். இருண்ட சூழ்நிலையில் நடுவே ஒரே ஒரு ஒளி வட்டம். அதில் நடனமாடும் அந்தப் பெண் தன் கார்பின் துணியைத் தளர்த்தி விளிம்பில் வீற்றிருக்கும் இளம் ரசிகர் மேல் முத்த



கார்த்திகேயன்

சுஜாதா


மிட்டு எறிகிறாள். இடுப்பில் இருக்கும் கால் கெஜத்தையும் உருவுகிறாள். அட! இதென்ன உள்ளுக்குள் உடல் நிறத்தில் இன்னும் அரைக்கால் கெஜம் பாக்கியிருக்கிறதே! கண்ணடித்துச் சிரிக்கிறாள். ஆர்க்கெஸ்ட்ரா துடிக்கத் துடிக்கச் சுற்றிலும் உள்ள ஜனங்களின் கண்கள் சாஸர் அளவுக்கு விரிய விரிய அந்தப் பெண் தன் கடைசி வஸ்திரத்தையும் உதறிப் போட்டுவிட்டுப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் தான் பிறந்ததை நினைவுபடுத்துகிறாள்.

பளிச்சென்று ஃபிளாஷ் அடிக்கிறது. அந்த இளம் ரசிகர் சட்டென்று துப்பாக்கியை உருவி வாயிற் பக்கம் நகர்ந்து வழியை அடைத்து அந்தப் பெண்ணையும் காபரே கோஷ்டியையும் கைது செய்கிறார். பெயர்? கார்த்திகேயன்.

பெங்களூர் பல விதங்களில் ஓர் உல்லாச நகரம். அங்கு ரேஸ் இருக்கிறது. குடி இருக்கிறது. போதைப் பொருள்கள், மட்கா மன்னர்கள், சினிமா ஏராளம். குளிர்பதனப்படுத்தப்பட்ட வானிலை. எக்கச்சக்க தொழில் முன்னேற்றம். ஏராளமான பணம். வாய்ப்புகள், பாவங்கள் செய்யப் பல்வேறு சந்தர்ப்பச் சந்துகள்.

இந்த நகரத்தில் போலீஸ் உதவிக் கமிஷனர் இம்மாதிரி பல தடாலடி வேலைகள் செய்ய வேண்டி விருப்பதில் ஆச்சரியமில்லை. அஞ்சாத ஆசாமி கார்த்திகேயன். கஞ்சா கடத்தல் நடக்கிறதா? கார்த்திகேயன் பெட்டியைப் பிடுங்க வந்து விடுவார். போலீஸ் உடையில் இல்லை. வியாபாரம் செய்ய வரும் 'சேட்' போல். அசோகா ஹோட்டலில் 'ப்ளூ பிலிம்ஸ்' விற்கிறார்களாமே? படத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்க மஃப்டியில் வந்துவிடுவார்.

பதினோராம் நூற்றாண்டு பஞ்சலோக விக்கிரகங்கள் மாநிலத்திலிருந்து கடத்தப்பட்டு வெளிநாட்டுக்கு எடுத்துப் போகும் தருவாயாமே? அவைகளை இருபதாயிரத்துக்கு விலை பேச ஹோட்டல் அறையில் கார்த்திகேயன் காத்திருப்பார். குரல் வளையைப் பிடித்து அழைத்துச் செல்வார்.



ஸ்ரீநகர் கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்களா? கார்த்திகேயன் வருவார். ஹோட்டல்களில் தேட்டை போடும் இளைஞர்கள் பருவப் பெண்களின் ஆசையில் சர்வத்தையும் இழந்து சரண் அடைவது கார்த்திகேயனிடம்.

போதைப் பொருள்களிலும் கடத்தலிலும் தேர்ந்தவர்களைப் பிடிக்க இரண்டு லட்சம் ரூபாயை ப்ரீஃப் கேஸில் தனியாக எடுத்துச் செல்வார்....

கார்த்திகேயனின் ஒரு நாள் மாலை நிகழ்ச்சியைச் சற்று விஸ்தாரமாகப் பார்ப்போம். ஓர் ஆசாமி ஆயிரம் ரூபாய்க்குக் கஞ்சாவுடன் வருகிறான். அவனைத் தொடர்ந்து பிராட்வேக்குச் செல்கிறார். ''பணம் இருக்கிறதா, காட்டு!'' என்கிறான். ஆயிரம் ரூபாயைக் காட்டுகிறார். ''இரு'' என்று சொல்லிவிட்டுச் சந்துக்குள் மறைகிறான். காத்திருக்கிறார். அவன் சற்று நேரத்தில் ஐந்து வெற்றுக் குண்டர்களை அழைத்து வருகிறான். கார்த்திகேயனைச் சற்று தூரத்தில் மஃப்டியில் தொடர்ந்து வந்த போலீஸ் ஆபீசர்கள் கவலைப்படுகிறார்கள். அந்த ஐவரில் ஒருவன் பழைய கேடி. கொலைக் குற்றத்துக்குத் தேடப்படுபவன். ஒரு கத்தியை எடுத்துக் காட்டிக் கார்த்திகேயனை ஒரு காரில் திணிக்கிறார்கள். ''பயப்படாதே! போலீஸ்காரர்களைப் பற்றிக் கவலைப்படாதே. இது நம்ப பேட்டை. கிழித்து விடுகிறேன்'' என்கிறான். ''டி.வி. ஒருத்தன் ரோந்து சுற்றுகிறானாம். நம்மைத் தேடிக்கிட்டு! நீ அஞ்சாதே வாத்தியாரே! நான் இருக்கேன்!''

கார்த்திகேயனின் கை தம் உடலுக்குள் மறைந்திருக்கும் துப்பாக்கியை நெருடுகிறது. வேண்டாம். ஆபத்து என்கிறது அவர் உள்ளுணர்வு. ஆனால் அவருக்குக் கவலை மஃப்டியில் தொடரும் ஆபீசர்கள் அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துவிடப் போகிறார்களே என்பதுதான்.

நினைத்தாற்போல் அவர்கள் டி.வி.க்கு உயிருக்கு ஆபத்து என்று ஓடி வருகிறார்கள். டிரைவரிடம் ''ஓட்டு ஓட்டு! — போலீஸ் வராது தப்பிக்கலாம்'' என்று கத்துகிறார் கார்த்திகேயன். கார்—நகரச் சமாளிக்கிறார். ''நான் பெரிய ஆள். என்னைப் போலீஸ் ஒன்றும் செய்ய முடியாது! தப்பித்தோம். ஆனால் இன்று நான் நன்றாக இல்லை. இன்னொரு சமயம் வருகிறேன்'' என்று தப்பிக்கிறார்.


அடுத்த முறை கார்த்திகேயன் அவர்களிடம் தொடர்பு கொள்கையில் அவர் 'அரெஸ்ட்' செய்யப்படுகிறார். போலீஸிடம், ''ஐயா! நான் இதற்கெல்லாம் புதுசு! என்னை விட்டுடுங்க'' என்று கெஞ்சிக் கூத்தாடி விடுதலை பெறுகிறார்.

மூன்றாம் முறை சந்திக்கும்போது கஞ்சாக்காரர்கள் 'இவன் நம்ப ஆள் வாத்தியாரே' என்று தம் இடங்களுக்கு அழைத்துச் செல்ல அத்தனை பேரையும் சரக்குடன் வளைத்துப் பிடிக்கிறார்.

எத்தனையோ வேடங்கள்; எத்தனையோ ஆபத்துச் சூழ்நிலையில் நடிக்கும் கார்த்தி

ஆட்டிப் படைக்கும் ஆவி வடிவம்

மோகினிப் பிசாசு



ஜபல்பூரிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் கமாரியாவில் உள்ள தொழிலகத்தில் என் தகப்பனார் வேலையாக இருந்தார். ஒரு சமயம் நாங்கள் எல்லோரும் எங்கள் தாயாருடன் பூனா போயிருந்தோம். அப்பா தனியாக இருந்தார். அவருடைய தெய்வ பக்தி வெளியில் தெரியாது.

ஒரு நாள் இரவு வழக்கம் போல் அவர் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார். நடு இரவில் யாரோ கதவைத் தடதடவென்று தட்டும் சப்தம் கேட்டதாம். மேலும், ''நான் இங்கிருக்கிறேன், வா வா'' என்று ரொம்ப அருமையாக யாரோ அழைக்கும் குரல்.

'இந்த அகால வேளையில் யார் வருவார்கள்? அதுவும் பெண் குரலாக இருக்கிறதே' என்று யோசிக்கும்போது டிரஸ்ஸிங் ரூம் ஜன்னல் பக்கத்தில் ஓர் அழகான ஸ்திரீ! அவள் அழகை வர்ணிக்கவே முடியாதாம்! அவள் ''நான்தான் கதவைத் தட்டினேன். நீ என்னுடன் வாயேன், எவ்வளவு நேரமாகக் கூப்பிடுகிறேன். முத்து கூட ஊரில் இல்லையே'' (முத்து என் தாயார் பெயர்.) என்று ரொம்ப வேண்டியவள் போல் அன்புடன் பேசினாளாம். ஒரு நிமிடம் இவள் அழகு வசீகரத்தில் மயங்கிக் கொல்லைக் கதவைத் திறக்க என் தகப்பனார் கிளம்பின சமயத்தில் இவர் கட்டிலுக்கு அடியில் படுக்கும்போது கழற்றி வைத்த தோல் செருப்புகள் காலைத் தடுக்கவே, இவருக்கு ஏதோ பயம், சந்தேகம் எல்லாம் ஏற்பட்டன. ஒரு செருப்பைக் கையில் எடுத்துச் ''சீ, நாயே, உன்னை என்ன செய்கிறேன், பார்!'' என்று வைது ஜன்னல் வழியே செருப்பைத் தூக்கி எறிந்துவிட்டுப் படுக்கையில் உட்கார்ந்து நாமஸ்மரணை செய்தாராம். கொஞ்ச நேரத்தில் அவ்வுருவம் என்னவெல்லாமோ திட்டிவிட்டுப் போய்விட்டது. எப்போ உறங்கினாரோ காலை எழுந்தபோது கனவு போல் இருந்ததாம். கட்டிலுக்கு அடியில் பார்த்தால் ஒரு செருப்பு. மற்றது ஜன்னலுக்கு வெளியில்!

நண்பர் ஒருவரிடம் நடந்த விவரம் சொல்ல அவர், ''நீ தப்பினது தெய்வச் செயல். வந்தது மோகினிப் பிசாசு. முன்பு இப்படித்தான் ஒருவரை வெளியே அழைத்து ஆளை அடித்துவிட்டது. மனைவி இல்லாத நேரத்தில்தான் அவர் வீட்டுக்கும் போயிருக்கிறது!'' என்று சொன்னார். விளக்குமாறு, தோல் செருப்பு இதையெல்லாம் கண்டால் பிசாசுகளுக்குப் பயமாம்!

தற்சமயம் கூட என் தகப்பனார் பேரன் பேத்திகளுக்கு இதைக் கூறிக் கடவுள் பக்தியின் அவசியத்தையும் நாம ஜபத்தின் மகிமையையும் சொல்வார்.

-ஜெயலட்சுமி வெங்கட்ராமன்

கேயனை நிஜ ரூபத்தில் நேரில் சந்திப்போம். துடிப்பான போலீஸ் உடையில் இளமையான முகம். சினிமாக்காரர்கள் பார்த்தால் அழைத்துச் சென்று விடுவார்கள். கண்களில் சிரிப்பு. ஒன்று சேர நினைக்கும் புருவங்கள். சிக்கனமான புன்னகை. சிக்கனமான கை குலுக்கல். கமிஷனர் ஆபீஸின் பரபரப்பான சூழ்நிலையில் ஓர் எளிய அறை. அருகே போலீஸ் கண்ட்ரோல் ரூமின் ராட்சச ஆண்டெனா. மேஜை முன் மூன்று டெலிபோன்கள். வி. எச். எஃப். இப்போதுதான் குளித்தவர் போல் எப்போதும் புதுசாக இருக்கிறார்.

கார்த்திகேயன் 1939ல் பிறந்த தமிழர். கோயமுத்தூர் தேவராயபுரம் கிராமத்து விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அண்ணாமலையில் பி.எஸ்.ஸி. அப்புறம் சென்னையில் பி. எல். கோயமுத்தூரில் இரண்டு வருஷங்கள் வழக்கறிஞர். 1964ல் ஐ.பி.எஸ். பரீட்சை பாஸ் செய்து கர்நாடக மாநிலத்தைத் தேர்ந்தெடுத்தவர். கன்னடம் எழுதப் படிக்கப் பேச வல்லவர். பெங்களூரில் இருப்பதால் மற்ற மொழிகளிலும் வல்லவர். உடன் ரஷ்ய மொழி. மவுண்ட் அபு, மைசூர் பயிற்சிகளுக்குப் பிறகு கர்நாடக மாநிலத்தில் கடினமான பிரதேசங்களான கும்பர்கா, தார்வார், பெல்காம் பகுதிகளில் தொடர்ந்து எஸ்.பி. ஆக அனுபவம். அதன் பின் மாஸ்கோவில் எம்பஸியில் மூன்று வருஷம். அப்புறம் பெங்களூர்.

கார்த்திகேயனிடம் சில கேள்விகள் கேட்டேன். ''உங்கள் போலீஸ் அனுபவத்தில் கொலைக் குற்றங்களை நிறையச் சந்தித்திருப்பீர்கள். நம் இந்தியச் சூழ்நிலையில் கொலைக்கு ஆதாரமான காரணங்கள் என்ன என்று சொல்ல முடியுமா?''

''முடியும்'' என்றார் அழுத்தமாக. ''சொத்து, பெண்ணாசை! இவ்விரண்டும் ஆதாரமான விஷயங்களில் வரும். விரோதங்கள், பழைய விரோதங்கள்.''

''ஜனங்களின் அறிவும் கல்வியும் வளர வளர குற்றங்கள் குறையும் என்று நம்புகிறீர்களா?''

''இல்லை! பண்பாடு அதிகமாவதால்தான் குறையும். படிப்பும் அறிவும் வளர, குற்றங்கள் அதிகமாகிக் கொண்டுதான் வருகின்றன. இது ஒரு முரண்பாடு! குற்றத்தின் நளினம் (Sophistication) தான் அதிகமாகிக் கொண்டு வருகிறது. குற்றம் அதிகமாவதற்குக் காரணம் கடும் வறுமை. சோவியத் ரஷ்யாவில் ஜனத்தொகையுடன் ஒப்பிட்டால் குற்றம் என்பது மிக மிகக் குறைவு. பொதுவாகக் கம்யூனிஸ்ட் நாடுகளிலேயே குற்றம் குறைவுதான். காரணம் அங்கே இல்லாமை இல்லாமையால். ஆதாரத் தேவைகள் அத்தனையும் கிடைத்து விடுகின்றன. அந்த அமைப்பில் அதிகம் சம்பாதித்துச் சொத்து சேர்த்து வைக்க முடியாது. இங்கே அதிகமான ஏழைமை, அதீதமான செல்வம் இரண்டுமே குற்றத்துக்குக் காரணமானவை. செல்வத்தால் எதையும் வாங்கிவிட முடிகிறது. புகழ், பதவி, சட்டம், -மௌனம்-எதையும்!''

''நம் இந்தியப் போலீஸ் முறைகளில் குறைபாடுகள் உண்டா? Criminologyயின் சம்பிரதாய சித்தாந்தங்கள் நவீன மனோதத்துவ முறைப்படி தகர்ப்பட்டிருக்கின்றனவே?''

''இந்தியப் போலீஸ் முறைகளில் நிறைய குறைபாடுகள் உள்ளன. போலீஸ் கமிஷனின் ரிப்போர்ட் ஒன்று வரவிருக்கிறது. அதில் சில சீர்திருத்தங்களை எதிர்பார்க்கிறோம். சரித்திரம் போலீசுக்கு எப்போதும் எதிரி. எய்தவன் இருக்க அனாவசியமாக வெறுக்கப்படும் அம்புகள் நாங்கள். அரசாங்கமோ மற்றவர்

களோ எடுக்கும் தவறான முடிவுகளின் விளைவு களை நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது. போலீஸ் பற்றிய அபிப்பிராயங்கள் சந்தர்ப் பத்துக்கு ஏற்ப மாறுபடும். நம்மை மற்ற வர்களிடமிருந்து காப்பாற்றும் போது போலீஸ் பிரமாதமானவர்கள். மற்றவர்களை நம்மிடமிருந்து காப்பாற்றும்போது அவர்கள் கெட்டவர்கள்! தொழிற்சாலை மறியலில் சற்று காட்டமாக இருந்தால் தொழிலாளிக்கு விரோதி. சற்று விட்டுக் கொடுத்தால் முதலாளி, 'போச்சு! பாதுகாப்பே இல்லாத அராஜகம்' என்பார். அதே போல் மாண வர்கள்! கல்லூரித் தலைவர்கள்! பத்தாயிரம் பேர் மறியல் செய்யும் கூட்டத்தில் முன் நிற்கும் ஒரு போலீஸ் ஆபீஸரை நினைக்கப் பாருங்க! ஒரு செகண்டில் அவன் தீர்மா னிக்க வேண்டும்! கூட்டால் உடனே குய்யோ முறையோ என்று கத்தி ஜுடிஷியல் என்க் வைரி. கூடாவிட்டால் அவன் செத்தான்!

''எல்லோரும் நல்லபடி நடந்து விட்டால் போலீஸே தேவையில்லைதான். ஆனால் அது ஆதர்ச உலகம்... நிஜ வாழ்க்கையில் போலீஸ் தேவையாகத்தான் இருக்கிறது. ராஜு வக்காத விட்டால் கட்டுப் பொசுக்கிடுவாங்க!

''நான் சொல்வது ஒன்றுதான். போலீஸ் அக்கிரமம் செய்து லஞ்சம் வாங்கினா விடா தீங்க! கடுமையாகத் தாக்குங்க. புகார் செய் யுங்க. அதே சமயம் ஒருவன் செய்த தப்புக் காக நிர்வாகத்தையே சாடாதீங்க. அங் கங்கே கொஞ்சம் நல்ல காரியமும் செய்ய றோம். சின்னதா ஒரு பாராட்டு... ஒரு சபாஷ் உண்டா?....''

''விஞ்ஞானம் எந்த அளவுக்குப் போலீசுக்கு உதவுது?''

''முக்கியமா விரல் ரேகை பரிசோதனையில் ரொம்ப உதவுது. அப்புறம் கம்யூனிகேஷன்ல. தமிழ்நாடு போல அவ்வளவு முன்னேற்றம் இல்லைன்னாலும் நாங்களும் செய்தித் தொடர் பில் கமாரா முன்னேறி யிருக்கோம். கம்ப் யூட்டர் ஒன்றை இப்பத்தான் வாங்கி அதுக்கு உண்டான தகவல் தினி போட்டுக்கிட் டிருக்கோம்.''

''நம் தண்டனை முறைகளில் குற்றம் குறை கிறதா? திரும்பத் திரும்பச் சிறைக்குப் போறவங்க அதிகமா இருக்காங்களே!''

''தண்டனை, ஆரம்ப காலத்தில் சமூகம் குற்றவாளி மேலே பழி தீர்த்துக்கிற சித்தாந் தத்தில்தான் துவங்கியது. அப்படியே குற்ற

உங்கள் ஐக்யூ எவ்வளவு?

உங்கள் புத்திசாலித்தனத்தை அளவிடும் எண்ணுக்கு ஐக் யூ என்று பெயர். இந்த எண் சராசரி மனிதனுக்கு 100க்கு அருகில் இருக் கும். 85க்குக் கீழ் இருந்தால் மந்த புத்தி. 150க்கு மேல் இருந்தால் அதி மேதாவி. ஏராளமான கணக்கெடுப்புக்களின் விளைவாகக் கண்டறிந்த விஷயம் இது.

உங்கள் ஐக் யூ எவ்வளவு? தெரிய வேண் டுமா? சுலபம். கீழ்க்காணும் ஒன்பது கேள்வி களுக்குப் பதில் தெரிகிறதா பாருங்கள். பக்கத்தில் விடையுடன் ஒப்பிடுங்கள். சரி யான விடை ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப் பெண் கொடுத்துக் கொள்ளுங்கள். உங்க ளுக்குக் கிடைத்த மொத்த மதிப்பெண்ணி லிருந்து உங்கள் ஐக் யூவை அறிந்துகொள்ளும் பட்டியலும் அந்தப் பக்கத்தில் உள்ளது.

சோதனையை ஆரம்பிப்பதற்கு முன் சில குறிப்புக்கள்.

(1) மொத்தம் பத்து நிமிஷம்தான் எடுத்துக் கொள்ளலாம்.

(2) உங்கள் ஐக் யூ குறைவாக இருந்தால் கவலைப்படாதீர்கள். அதிகரிக்க வழிகள் உண்டு.

(3) நிதானமாக யோசித்து விடை யளியுங்கள் ஆனால் பத்து நிமிஷம்.

(4) ஐக் யுவில் ஆண் பெண் தாரதரங்கள் இல்லை.
(ஒரு சின்ன விவரம்: கணேஷின் ஐக்யூ 130)

கேள்விகள்


(1) பட்டியலில் ஒரு வர்ணம் சேராது. அது எது?
பழுப்பு, சிவப்பு, ஆரஞ்ச், பச்சை மஞ் சள், நீலம்.

(2) முதல் வார்த்தையை முடித்து அடுத்த வார்த்தையைத் துவக்கும் நடுவார்த்தை எது?
பல் (......) மட்டை

(3) பட்டியலில் விட்டுப்போன ஒரு எழுத்து எது?

செங்கல்	வரம்
காஞ்சி	மலை
லால்	படு
அண்ணா	புரம்
பல்லா	குடி

4) விட்டுப்போன வார்த்தை என்ன?



(5) அடுத்த எண் என்ன?
0, 5, 87, 110, 87, 5...?

வாளியைச் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கிற சிறைத் தண்டனை, அப்புறம் அவனைச் சீர்திருத்தற நோக்கத்தோட சிறை. நீங்க சொல்ற மாதிரி பல பேர் திரும்பிச் சிறைக்குப் போறதும் பல பேர் திருந்தவும் செய்யறாங்க. ஆனா தண்டனை கொடுக்கறதே முதல்லே கஷ்டமா இருக்குதே! சட்டம் இதிலே ரொம்ப வீக்குங்க. உதாரணத்துக்கு ஒருடன் கஞ்சாவோட-பதிமூணு லட்ச ரூபாய் பெறுமானம் — ஒரு ஆளைப் பிடிச்சேன். அடுத்த நாள் அவன் சுதந்திரமாத் திரியறான். காரணம்? The law is weak. கஞ்சாவினால் நம்ம இளைஞர்களுக்கு ஏற்படற சேதம் தெரியுமா உங்களுக்கு? இந்தக் கடிதத்தைப் படிங்க. ஒரு தந்தை எனக்கு எழுதினது!''

(கடிதத்தைப் படித்து அயர்ந்து போனேன். கார்த்திகேயன் தமக்கு வரும் ஏராளமான கடிதங்கள் சிலவற்றை எனக்குக் காட்டினார். அவைகளிலிருந்து சில பகுதிகள் தனியாகத் தந்திருக்கிறேன்.)


நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பல முறை போன் ஒலிக்கிறது. பார்வையாளர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். அடிக்கடி வி. எச். எஃப் போனில் Law - West to Control what is the position of the Procession என்று நகரில் திரண்டு வந்து கொண்டிருக்கும் ஒரு தொழிற் சங்க ஊர்வலத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

கார்த்திகேயனின் போலீஸ் அனுபவங்கள் மிகவும் விஸ்தாரமானவை. குல்பர்காவில் கொள்ளைக்காரர்கள், கொலைகள், தார்வாரில் இந்து-முஸ்லிம் அடிதடிகள், மாணவர் கிளர்ச்சி, பெல்காமில் கன்னட—மராட்டிய மோதல்கள். பத்தாயிரம் முஸ்லிம்கள் கோபத்துடன் செல்லும் ஊர்வலங்கள். அணை கட்டியதால் நிரம்பிய தண்ணீரில் மூழ்கிப் போக இருந்த, பிடிவாதமாக நகர மறுத்த நாற்பதாயிரம் கிராம ஜனங்கள். இந்திரா காந்தியின் பிரதமர், பிரதமர் அல்லாத விஜயங்கள்; ஹேமமாலினியின் நடனங்கள், கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச்... ரஷ்யாவின் ப்ரோட்டோகால் சம்பிரதாயங்கள், கிழக்கு ஜெர்மனியின் பிரதமருக்குப் பாதுகாப்பு.... மதத் கானு என்னும் ஒப்பியம் கிடங்குகள்... வேலை நிறுத்தம், தொழிலாளிகள், மாணவர்கள்... தற்கொலை செய்ய நினைத்து டெலிபோன் செய்யும் பெண்கள்.... கண்ணடிக்கும் இளைஞர்கள்...

(6) விட்டுப்போன எழுத்து என்ன?

அக	ரமு	லீ
மூத்	தெல்	லாமா
திப	கவ	ன்மு
தற்	றேக	லகு

(7) விட்டுப்போன எண் என்ன?



(8) 2½-க்கு ஐந்து மடங்கு, 3க்கு?

(9) கடைசிப் பெட்டிக்குள் விட்டுப்போன எண் என்ன?

17	35	3	21
26	19	?	

விடைகள்

(1) பழுப்பு. அது ஒன்றுதான் கலப்பு நிறம். மற்றவை தனி நிறங்கள்.

(2) பல்(பொடி)மட்டை.

(3) ட். (எல்லாம் பிரிக்கப்பட்ட ஊர்ப் பெயர்கள். செங்கல் பட்டுவில் 'ட்' எழுத்து விட்டுப் போயிருக்கிறது.)

(4) அ.தி.மு.க.; (மற்ற வார்த்தைகளுக்கு எதிர் வார்த்தைகள் வட்டத்தில் உள்ளன. தி.மு.க.வுக்கு மட்டும் இல்லை.)

(5) 0. (வரிசை மேலே ஏறி இறங்குகிறது.)

(6) த — (அகர முதல எழுத்தெல்லாம்... என்கிற குறளின் வரிகள். 'த' மட்டும் விட்டுப் போயிருக்கிறது.)

(7) 6 — (வெளி வடிவத்துக்கு எத்தனை பக்கங்கள் இருக்கின்றனவோ அந்த எண்ணிக்கையுடன் இரண்டைக் கூட்டினால் உள்ளே இருக்கும் எண் வருகிறது.)

(8) நான்கு மடங்கு.

(9) 12 — (மேலிரண்டு எண்களைக் கூட்டிப் பாதியாக்கினால் கீழே இருக்கும் எண் வருகிறது.)

மதிப்பெண்

(எத்தனை சரியான விடைகள்?)	ஐ.க்யூ
0	82—
1	89
2	97
3	105
4	113
5	122
6	130
7	138
8	148
9	155+

— சுஜாதா

கற்பழிக்கும் ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள்... சிமெண்ட் பதுக்கும் சீமான்கள்...

எத்தனை வகைகள்!

'ஒருபரிவு வார்த்தை ஒரு சின்ன' ஷொட்டு அது போதும் எங்களுக்கு' என்கிறார்.

கமிஷனருக்குக் கடிதங்கள்

(கார்த்திகேயனுக்கு வந்த சில கடிதங்களிலிருந்து சில பகுதிகள். பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.)

● என் மகன் உதய் சக்ரா 24 வயது. ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ., ஆஸ்த்மா 5' 10'' உயரம். ஆரம்பத்தில் மிகக் கெட்டிக்காரனாக இருந்தவன் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி, எதிலும் சுவாரஸ்யம் இழந்து, அம்மாவை அடிப்பது, புத்தகங்கள், துணி, செருப்பு எல்லாவற்றையும் கஞ்சாவுக்காக விற்பது... என்று ஆரம்பித்துவிட்டான். அவன் தங்கையை ஹாஸ்டலுக்கு மாற்ற வேண்டியதாகிவிட்டது... கஞ்சா, ஓபியம், ஹஷீஸ், சரஸ் புகைக்கிறான். பல இடங்களில் இவை அவனுக்குக் கிடைக்கிறது.

(ஒரு வருஷம் கழித்து இந்தப் பையன் மாறிவிட்டான்.)

● ''மன்னித்துவிடுங்கள் ஸார். நான் உங்களிடம் வாக்குறுதி அளித்ததை நிறைவேற்ற முடியவில்லை. உங்களுக்கு என் சொந்த விஷயங்கள் தெரியும். நான் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்லுவேன்! எனக்கு வாழ்வு வெறுத்துப் போய் விட்டது. உங்களிடம் நான் வாழ்கிறேன் என்று சத்தியம் பண்ணிக் கொடுத்தாலும் இறப்பதில் எனக்கு அதிக சந்தோஷம் இருப்பதாகப் படுகிறது. ஆனால் உங்கள் மேல் என் அன்பையும் மரியாதையையும் காக அடிக்க முடியாது...... என்று முடிக்கிறேன். என் தற்கொலைக்கு யாரும் காரணமில்லை. அன்புடன் ராணி!

(இந்தப் பெண்ணை Save பண்ணி விட்டோம்.)

● ஐயா, அடுத்த வீட்டுப் பையன் என் பெண்ணைக் கடந்த ஆறு மாதங்களாகத் தொந்தரவு செய்கிறான். அதுவும் பலவங் குடி. பெண்கள் காலேஜுக்குச் செல்லும் போது மணிக் கணக்கில் எங்கள் வீட்டுக் கருகில் பதின்மூன்றாவது மெயின் ரோடு போர்டின் நிழலில் நிற்கிறான். என் பெண்ணுக்கு ஒரு கடிதமும் எழுதியிருக்கிறான். இளைத்த கறுப்பான பையன். கருட்டை மயிர். ஐந்தே கால் அடி உயரம். ஏதாவது செய்யுங்களேன்.

● ஐயா, நான் ஷாலன். என் சகோதரி சார்லட் இருவரையும் எப்படியாவது இந்த இடத்திலிருந்து விடுதலை செய்து என் அருமை அப்பா அம்மாவிடம் கொண்டு சேர்ப்பிக்கவும்.

(ரொம்ப விநோதமான கதை! சொன்னா நம்பமாட்டீங்க.)


● ஸார்!.... கடைசியாக உங்களிடம் வேண்டுவது என்னை என் அப்பாவிடமிருந்தும் அண்ணனிடமிருந்தும் அவர்கள் பொய்ப் புகார்களிலிருந்தும் காப்பாற்றி என் புதிய கணவருடன் சுகமாக வாழ ஏற்பாடு செய்வீர்களா?... (இது அதைவிட விநோதம்!)

● கார்த்திகேயன் நீங்கள் எங்கள் பேட்டையில் அஹமத் என்பவருடன் சிநேகமாக இருப்பதாக அறிகிறேன். நீங்கள் ஒரு போலீஸ் ஆபீஸர். இது— அவனைப் பற்றி நான் சொல்ல வேண்டியது என் கடமை...

(இப்படியும் நிறைய வரும்)

● பார்புகழும் பெங்களூர் நகரம் தன்னில்
பாதுகாக்கும் சட்டத்தின் காவல்தெய்வம்
யார் என்று ஊர் கேட்டால் உரத்த குரலில்
யான் சொல்வேன் கார்த்திகேயன் என்று!
ஊர்போற்ற பேர் எடுக்கும் உமது புகழ்
உலகுள்ளளவும் நிலைக்கும், உண்மை
நேர்கொண்ட பார்வையே உம்மைக் காண
நெடுநாளாய்க் காத்திருந்தேன் வரவா
உன்னே.

(பார்வையாளர் சீட்டில் இந்தக் கவிதையை எழுதி அனுப்பிச்சாருங்க மணிமாறன்னு ஒரு கவிஞர்.)



கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை

பழைய கதை

கனி நாகலாபுரத்தில் மூன்று எலும்புக் கூடுகள், ஒரு டெலஸ் கோப், ஒரு உலோக பாட்டு ஆகியவை கிடைக்கின்றன.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட மல்லிக் உஷாராகிறான்.

140 வருடங்களுக்கு முன் ஏராள தங்க, வெள்ளிப் பாளங்களை ஏற்றி வந்த எச். எம். எஸ். ஜூலி காலன்ட் என்ற கப்பலுக்கும் அந்த எலும்புக் கூடுகளுக்கும் தொடர்பு உண்டு என்று நம்புகிறான்.

ஏற்கெனவே அந்தக் கப்பலைத் தேடி வொய்ட் என்ற ஆங்கிலேயரும் வந்து அவனிடம் பேசியது நினைவுக்கு வருகிறது.

தனது நண்பன் கோபியை அழைத்துக் கனி நாகலாபுரத்தை ஆராய, சம்பந்தசாமி என்ற பழம் பொருள் சேகரிப்பாளர் வழியே சில துப்புகள் வெளியாகின்றன.

மல்லிக்கிற்குக் கிராமத்தில் உதவி புரிபவள் சம்பகா என்ற பெண். கோவில் அர்ச்சகர் மகள்.

கப்பல் மூழ்கிய இடத்தைப் பற்றிய சார்ட்டைத் தேடி, மல்லிக் அலைய சம்பகா அவனுக்கு உதவி புரிகிறாள்.

சம்பந்தசாமியின் வளர்ப்புப் பெண் ரீடாவும் சிற்சில உதவிகள் செய்கிறாள்.

இதே நேரத்தில் வொய்ட் தமது சகாக்களுடன் நெப்ட்யூன் என்ற கப்பலில் வந்து நாகப்பட்டினத்தின் கிழக்கே உள்ள கடலுக்குள் ஜூலியைத் தேடுகிறான்.

பழைய பழைய கதை

எச். எம். எஸ். ஜூலி காலன்ட் கப்பல் இலங்கை தாண்டிச் சென்னையைக் குறியாக வைத்து வர, புயலில் சிக்குண்டு மெதுவாகத் தண்ணீரில் அமிழ்கிறது. மாலுமிகளும் அதன் காப்டன் பால்மர்ஸனும் கடைசி நேர யத்தனங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

*　　　*　　　*

I am wind,
Flaming, rivering firmaments-
My enraged alphabets of Thrills
Wombing billion, trillion worlds
In fractured universe.....
....
In Tamil Nad....
My unleashed storms
....rehearse Destruction-

'விண்ட்ஸ்'ஸில் டாக்டர் கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

15

பொழுது விடியும்போது ஜூலி கடலுள் பாதி போயிருந்தாள்.

ஆச்சரியமான முறையில் சில காற்று மண்டலங்கள் உள்ளே அகப்பட்டு, அதன் மூழ்கலைப் படிப்படியாக்கிக் கொண்டிருந்தன.

பூதாகார மேகங்கள் இன்னும் வானில் சஞ்சரித்தன.

கரையும் தெரியவில்லை. வானும் தெரியவில்லை. எங்கும் இருண்டிருந்தது.

மாலுமிகளில் பலர் பாலன்ஸ் இல்லாமல் தண்ணீரில் விழுந்து மறைந்தார்கள்.

பலர் கிராதிகளைப் பிடித்து மேலே வர எம்பிக் கொண்டிருந்தார்கள்.

பலர் கப்பல் மேல் தளத்தில் உள்ள படகுகளை அவிழ்த்து மிதக்க விட யத்தனங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே பல படகுகளில் மாலு மிகள் இறங்கத் தண்ணீரின் சுழற்சியில் அவை இரண்டே நொடிகள் அகப்பட்டு மாயமாய் மறைந்துவிட்டன.

காப்டன் பால்மர்ஸன் தமது மனைவி எலிஸாவைக் காபின் கூரை மேல் ஏற்றி இருந்தார்.

அவன் கப்பலின் மூழ்கும் காட்சியைப் பார்த்து உயிர்வரை உறைந்து கொண்டிருந்தான்.

பால்மர்ஸன் தமது சரிந்து போன காபினிலிருந்து இரண்டு பெட்டிகளை வெளியே கொணரப் போயிருந்தார்.

ஒன்று அவரது ஏழு வயது மகனின் சவப்பெட்டி. பிரயாணத்தின்போதுதான் அவன் இறந்திருந்தான். அவனுக்கு ஒரு பூமிப்



புதையலை அளிக்க வேண்டும் என்று பால்மர்ஸன் தம்பதிகள் விரும்பியிருந்தார்கள்.

இரண்டாவது, சில உபகரணங்களும், தஸ்தாவே ஜுகளும், டெலஸ்கோப்பும் வைத்துள்ள பெட்டி.

உள்ளே விழுந்து கிடந்த இடிபாடுகளுக்கு இடையே இரு பெட்டிகளையும் நகர்த்தி, முக்கி, முனகி வெளிவந்து, காபினின் தற்போதைய கூரை மேல் அவைகளைத் தள்ளிச் சுற்றும் பார்த்த போது கப்பல் மூழ்குவதற்கு இன்னும் ஐந்தடிகள் தான் இருந்தன.

விரிந்த கடலைப் பார்த்தார். காற்று இன்னும் ஒரு புயலாக இருந்தது. எலிஸபெத் ரீக் கயிற்றைப் பிடித்து அழுது கொண்டிருந்தாள். அவள் கண்ணும் தலையும் நனைந்து உடலோடு ஒட்டியிருந்தன.

பால்மர்ஸன் தடுமாறி உட்கார்ந்து நாற்புறமும் பார்த்தார். அநேகமாக எல்லா மாலுமிகளும் போய்விட்டார்கள். படகிலோ, கடலுக்கு அடியிலோ!

மீதி இருப்பவர்கள் அவர்கள் மூவர்தான்.

பால்மர்ஸன் தனது மகனை இறந்தவனாகக் கருதவில்லை. - என் அருமை மகனே! உன்னை எப்படியும் பூமிக்கு அழைத்துச் செல்வேன் என்றார் அவர்.

ஒரு அலை அவர்களை மூடியது.

சம்பகா நிறையப் பேசினாள். துப்புரவான கிராமக் கொச்சை! வார்த்தை ஓரங்களில் தெம்மாங்கு கொஞ்சம்! நாட்டுப்புறக் காற்றின் சுத்தம் அவள் எண்ணங்களில்.

தினமும் தோண்டும் வேலையை முடித்து மல்லிக்கும் அவளும் கோயிலண்டை உட்காருவார்கள். கிராம இருட்டு அதிகமாக ஒட்டிக் கொள்ளும்.

மல்லிக் ஒற்றை முழங்காலில் கை கோத்து ஈஸிச் சேர் ஆடுவான்.

பாவாடையும் தாவணியும் படிகளில் ஒழுக, அவள் ஒரு உள்ளங் கையால் முக வாயைத் தாங்கி இருப்பாள்.

பேசுவார்கள். சின்னச் சின்ன விஷயங்கள், சராசரி வாழ்க்கையில் சாதாரணமாக ஒதுக்கி விடக் கூடியவை. ஆனால் அவர்களுக்கு அவை என்ன முக்கியமாகத் தோன்றின!

ஒவ்வொருவர் பேச்சும் மற்றவர்க்கு ஒரு புதுக் கண்டுபிடிப்பு. ஆச்சரியமாகி விடு வார்கள். மேலும் மேலும் அதைப் பற்றியே பேச ஆசை கொள்வார்கள்.

இந்த சுவாரஸ்யமான நாட்களில் தான் அவள் தனது விருத்தாந்தங்களைக் கூறினாள். சொல்வதற்குக் கூட எதுவும் இல்லை. அவ்வளவு எளிமையாக இருந்தாள். அவளது குடும்பக் கிளைகள் அநேகமாக அங்கங்கே பட்டுவிட்டன. தந்தை தான் மிஞ்சி யிருந்தார். தந்தையின் மரணத்துக் குப் பிறகு அவள் அநேகமாக ஒரு அனாதை! கல்கத்தாவில் அவளது சித்தப்பா பிள்ளைகள் வேலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஆளுக்கு நூறு அனுப்பக் குடும்பம் ஓடுகிறது.

தோண்டல் வேலைகள் அநேகமாக நிறுத்த வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது மல் லிக்கிற்குப் பெரிய தவிப்பு வந்தது. சம் பகாவை எப்படி இனிமேல் சந்திக்க முடியும்? என்ன காரணத்தைக் கூற முடியும்?

தோண்டல் நிறுத்திய முதல் நாள் பல்லைக் கடித்துப் பூந்தளத்தில் இருந்துவிட்டான்.

இரண்டாம் நாள் முடியவில்லை. சம்பகா அவனைச் சுற்றி வந்து சிரித்தாள். தாவணி யைத் திருகிக் கொண்டு பேசினாள். கிட்டத் தட்ட அவள் குரலைக் கூட அந்த அறையில் கேட்க முடிந்தது.

மனம் ஏன் இப்படிப் பிரமிக்கிறது? என்று நினைத்தான் அவன். அவள் அவனை ஊடுருவி நிற்பது போல் ஒரு கற்பனை. அது உண்மையா என்று தன்னையே சந்தேகப் பட்டுக் கேட்டுக் கொண்டான்.

இரண்டாம் நாள் மாலை, அந்தக் கிரா மத்தில் போய் இறங்கி, கடற் கரை மணலில் நடக்கும்போது மனம் அவளை நிச்சயம் பார்க்க வேண்டும் என்று சொல்லியது.

தெருப் பக்கம் திரும்பலாமா என்று யோசித்தபோது கைத்தட்டல் அவனை இழுத் தது. திரும்பிப் பார்த்தால், மணலில் கால்கள் புதைய ரீடா ஓடி வந்துகொண் டிருந்தாள். அவள் கையில் நைலான் பை இறக்கை போல் அடித்தது. பாப் முடிகள், துள்ளித் துள்ளிக் குதித்தன.

—சௌக்கியமா ரீடா? என்று அவன் குழற ஆரம்பிக்கு முன், சிணுக்கென்று நோட்டை உருவி, —சனிக் கிழமை வரேன் என்று சொன்னீர்கள்! என்று எழுதிக் காட்டினாள்.

—வேலை இருந்தது ரீடா!

(நம்ப மாட்டேன்.)

—நிஜம்மா! சிநேகிதனோட வெளியிலே போயிட்டேன்.

(ரெண்டு சனிக் கிழமை போயிடுத்து.)

—ஸாரி.

(ஏதாவது கண்டு பிடித்தீர்களா?)

—இல்லை.

(சார்ட்?)

—இல்லை.

(நான் ஒரு ரகசியம் வைச்சிருக்கேன்.)

—என்னது ரீடா!

ஓரக் கண்ணால் பார்த்தாள். குறும்பும் குழந்தையும் அதில் இருந்தன.

—என்ன வச்சிருக்கே சொல்லு ரீடா!

பிகு பண்ணினாள்.

—சொல்லு ரீடா!

(சார்ட்).

அந்த வார்த்தையைப் படித்ததும் யூனிவர் ஸலின் பெரிய டைட்டில் மியூசிக்குடன் ஒரு குளோப் அவன் முன்னால் சுழன்றது. இந்து சமுத்திரம் பிரம்மாண்டமாக விரிந் தது. அதன் கொந்தளிக்கும் அலைகளில் பழைய கிழக்கிந்தியக் கப்பல் பாய்மரங்கள் பரக்க ஆடுவது கண்ணில் பட்டது. அதன் தலைப்புப் பகுதியில் எச். எம். எஸ். ஜூலி காலண்ட் என்ற பழைய எழுத்துக்கள் ஜாலமாக மின்னுவது தெரிந்தது.

—ரீசசசடா! என்ன சொல்றே நீ? ஆவலை மூட முடியாமல் பொங்கிக் கேட்டான் அவன்.

(சார்ட்! பழைய கப்பலின் சார்ட்)

தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. உற்சாகம் தீபாவளி பாணங்கள் போல் கண்ட திசைகளில் சிதற,

மெய் மறந்து கைநீட்டி அவள் வலது கையைத் தேடி எடுத்துக் குலுக்கினான்.

—ரீடா! பெரிய விஷயம் இது! ரொம்பப் பெரிய சமாசாரம்! உன்னை மறக்கவே மாட்டேன்! ரொம்பப் பெரிய உதவி எனக்குப் பண்ணிட்டே!



ரீடா அந்தக் கைகுலுக்கலின் நினைவில் இருக்க வேண்டும். கண்கள் குழைந்து மெல்லிய ஒளிகள் அதற்குள் ஆனந்தமாய் நீந்தின.

இருவரும் இருட்டும் வரை காத்திருந்தார்கள். பிறகு அவன் மல்லிக்கை அழைத்து பங்களாவை நோக்கிப் போனான்.

பங்களாவுக்கு விலாப்புற வயலில் பம்பு செட் பக்கம் திக் திக்கென்று அவன் காத்துக் கொண்டிருக்க, ரீடா பங்களாவுக்குள் போய்ச் சிறிது நாழிகைக்குப் பின்னரே திரும்பி வந்தாள்.

அருகில் வந்து பிரவுன் அட்டையை எடுப்பதற்குள் அவன் மூச்சு நின்றுவிட்டது.

—இதுதானா?

(ஆமாம்.)

மல்லிக் வானத்தைப் பார்த்தான். வெளிச்சம் இல்லை. சற்று எட்டத்தில் குடியானத் தெருவின் வெளிச்சக் கம்பம் ஒன்று குப்பை மேட்டில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தது.

அதை நோக்கி அவசரமாய்ப் போய் அவன் அந்த அட்டையைப் பிரித்துப் பார்க்க,

மீண்டும் சுவர்க்க கீதங்கள் எங்கும் முழக்கமிட்டன. மிஸ்டிக் அழகுடன் ஒரு இந்து சமுத்திரக் காட்சி விரிந்து அதில் ஜுவலி வீங்கி இறங்கி, அலைகளில் நர்த்தமிடும் காட்சி தெரிந்தது.

கண்களில் நீர் துளிர்த்துக் கீழே சொட்டியது. —ரீடா, என்றான் குரல் மழமழக்க. கண்களில் பார்வையில் அவள் ஒரு ஜல பிம்பமாகத் தெரிந்தாள். —என்ன கைம்மாறு செய்வேன், ரீடா! இதுதான் நான் தேடியது! என்னாலே உணர்ச்சியை நிறுத்த முடியலையே!

இலைகள் நிறையக் கீழே விழ, அவை ஆனந்தங்கள் என்பதை ரீடா உணர்ந்தாள்.

பீரங்கியைப் பார்த்ததும்வொய்ட் அகலக் காலை வைத்து, —ஸ்மாஷர்! என்று கத்தினார். மற்றவர்கள் ஓடி வந்தார்கள். டார்வின் மெதுவாக வந்து எட்ட நின்று தமது 555 ஓரத்தைப் பல்லால் அரைத்தார்.

'ஸ்மாஷர்' 19ம் நூற்றுண்டின் பீரங்கி. 68 பவுண்டு குண்டுகளைத் தூக்கி எறிவது.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்த ஸ்மாஷர் வர்க்கங்களைப் பெரும்பாலும் உபயோகித்தது அவருக்குத் தெரியும்.

—நிச்சயம். மூழ்கிக் கிடப்பது கிழக்கிந்தியக் கப்பல்! மேலும் ஆராய வேண்டியது தான்! என்றார்.

இரண்டாவது டைவர் தண்ணீருக்குள் மூழ்கினார். முக்கால் மணிக்குப் பிறகு அவரிடமிருந்து சமிக்ஞை வர மேலே உள்ள மூன்றாவது லைன் இழுக்கப்பட்டது.

அந்த லைனில் கட்டப்பட்டிருந்த கான்வஸ் பையை வெளியே இழுத்துப் பார்த்ததும் விக்டோரியா கால பவுன் நாணயங்கள் கலகல என்று உதிர்ந்தன. மட்கிப் போய்க் களிம்பு பிடித்திருந்தாலும் அவற்றின் உள் வெளிச்சத்தை அடையாளம் காண முடிந்தது.

வொய்ட்டுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. - ஹுர்ரா என்று சொல்லி லாரென்ஸைக் கட்டிக் கொண்டார்.

மூவரும் ஆலோசனை நடத்தினார்கள். டைவர்களை மேலே வரும்படி சமிக்ஞை கொடுத்தார்கள்.

ஒரு மணி நேரம் பொறுமையாக இருந்து, டைவர்கள் மேலே வந்ததும் காபினில் கூடினார்கள். —ராப்ஸன், கப்பல்தானே அது? என்று கேட்டார் வொய்ட்.

—நிச்சயமாகப் பழைய கப்பல்! என்றார் ராப்ஸன்.

—பெயர் தெரிந்ததா? என்றார் லாரென்ஸ்.

—தெரியவில்லை.

—கப்பல் எப்படிக் கிடக்கிறது?

—தலை கீழா.

வொய்ட் திடுக்கிட்டார். அதை அவர் எதிர்பார்க்கவில்லை.

—சாய்மானம் உண்டா?

—இல்லை மிஸ்டர் வொய்ட்! ஒரு கவிழ்த்திய பாத்திரம் போல் தலை கீழாக இருக்கிறது. கப்பல் மூழ்கியபோது துவஜங்கள் உடைந்து போயிருக்க வேண்டும். கப்பலின் அடி முதுகு தான் ஒரு திமிங்கில முதுகு போல் மேலே இருக்கிறது.

—அடிப்புறத்தில் இடைவெளி தெரிகிறதா?

—இல்லை, மிஸ்டர் வொய்ட்! கொஞ்சம் கூடக் கிடையாது. கப்பலின் விளிம்பு மணலுக்குள் பூத்துக் கொண்டிருக்கிறது.

—தோண்ட முடியுமா?

—யந்திரம் வேண்டும். கையால் முடியாது.

—ஸ்டர்னைச் சுற்றி வரப் பார்த்தியா? பெயர் தெரியணுமே!

—ஊஹும். கப்பலைப் பாசியும், கடற் செடியும், பவளக் கூடும் மூடியிருக்கின்றன.

யோசித்தார்கள்.

—மிஸ்டர் லாரென்ஸ்! இந்தக் கப்பல் ஜூலியாக இருக்க வேணும். காரணம், இதிலே தங்கம் இருந்ததினாலேதான் கப்பல் விழுந்த நிலையிலே இன்னமும் இருக்கு என்றார் வொய்ட்.

—தங்கம் இருந்தால்தான் அப்படி இருக்குமா? என்றார் டார்வின்.

—தங்கம் என்று சொல்லவில்லை. கனமான எது இருந்தாலும் அது ஒரு நங்கூரம் போலக் கப்பலை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும்.

வொய்ட்டின் ஆராய்ச்சி மற்றவர்களுக்கு வலுவாகத் தோன்றியது.

ஹாயி அந்தப் பிரயத்தனத்திற்கு டெக்னிகல் அட்வைஸராக வந்திருந்தார்.

—கப்பலைத் தூக்கணும். அல்லது ஹல்லை உடைக்கணும் என்றார்.

—தூக்க முடியுமா? என்றார் லாரென்ஸ்.

—கப்பல் ஹல் மட்டும் உடையாம முழுசா இருந்தா, கீழே கப்பலின் விளிம்பு வழியா ஹோஸ் பைப்பைத் திருத்தி அது வழியாகக் காற்று அடிச்சு, கப்பல் முழுசையும் ஒரு பலூன் போல ஆக்கி மேலே தூக்கலாம். ஆபத்து அதிகம். நினைச்சபடி முடியாமக் கூடப் போகும்.

—அப்போ ஏன் அதைச் சொல்றீங்க! என்றார் டார்வின்.

—எனக்கு அதிலே ஒரு குறுகிய லட்சியம்! ரெண்டு மூணு அடி தூக்கிட்டாக் கூட, கப்பல் உள்ளே இருக்கிற பொருள் பக்க வாட்டிலே சரிஞ்சு சிதறும். அதிலே தங்கப் பாளம் ஒண்ணு கிடைச்சாலும் இது ஜூலி. இதுக்குள்ளே தங்கம் இருக்குன்னு நிச்சயிக்கலாம்.

லாரென்ஸ் கொஞ்சம் விஷயம் தெரிஞ்சவர்.

—அதிலே நிறைய ஆபத்து, மிஸ்டர் ஹாயி!

—ஆபத்தை நான் ஒத்துக்கறேன்! என்னோட ரெண்டாவது திட்டம் ஹல்லிலே ஓட்டை போட்டு உள்ளே இறங்கணும். அதிலேயும் நிறைய ஆபத்து. தங்கம் கனத்திலே கீழே போயிருக்கும். கப்பல் துவாரத்திலேயிருந்து முப்பதடி நாற்பதடி ஆள் இறங்கணும்.

—இந்த ரெண்டாவதைச் சோதிச்சுப் பார்ப்பமே! அதிகச் செலவு இல்லே! என்றார் வொய்ட்.

—துவாரம் போடுவோம். உள்ளே ஆளை இறக்க வேண்டாம். ஹூக் போட்டுத் தூண்டிலை அனுப்புவோம். கிடைச்சதை மேலே இழுத்துப் பார்ப்போம். தங்கம் கிடைச்சா அதிர்ஷ்டம்....


—துவாரம் வேண்டாம். டைனமைட் வைத்து ஹல்லைத் தகர்த்து விடுவோம். என்றார் ஹாயி.

கடைசியில் டைனமைட் வெடிக்கும் தீர்மானமுடன் டைவர்கள் கடலுக்குள் இறக்கப்பட்டார்கள்.

(தொடரும்)









திகில் சிரிப்பு! -1







ஆயிற்று: இன்றோடு சரியாக ஆறு மாதம் ஆயிற்று.

அந்த இருபத்தைந்து வயதுப் பெண்ணை— அவள் கணவன் ஊரில் இல்லாத அந்த இரவின் பின்னேரத்தில் — இயற்கையின் அழைப்புக்காக வெளியே வந்தவளை மடக்கி — அவள் கழுத்திலிருந்த நகையைக் கேட்டு — அவள் முரட்டுத்தனமாக மறுக்க — மேலிட்ட ஆத்திரத்தில் அவளுடைய இளம் வயிற்றில் சரேலெனக் கத்தியைப் பாய்ச்ச—அவள் துடித்துத் துடித்து மூச்சை விடுகையில் —சங்கிலியைப் பறித்துக் கொண்டு சாவகாசமாய்ச் சுவரேறி வெளியே குதித்து — இருளில் கலந்து —

இன்றைக்குச் சரியாய் ஒரு மாதமாகிறது.

போலீஸாரின் கழுகுக் கண்கள் நாலாபுறமும் பார்வைகளைப் பாய்ச்ச — அதன் ஒளிப் புள்ளிகளுக்குத் தட்டுப்படாமல் — தலையை மொட்டையடித்து — கொஞ்சம் தாடி வளர்த்து — மீசையை மழித்துக் கொண்டு ஊர் ஊராய்ச் சுற்றி வருகிறேன்.

இப்போது கோயமுத்தூரில் கைவரிசையைக் காட்ட வேண்டிய அவசியம் எனக்கு.

பகல் பூராவும் சிதம்பரம் பூங்கா நேரு ஸ்டேடியத்தின் கீழே — பசி இன்னும் வயிற்றோடு தூங்கிவிட்டு — சூரியன் தூங்கப் போன அந்தச் சாயங்கால வேளையில் எழுந்துகொண்டேன்.

வயிற்றில் பசிப் புலி உறும ஆரம்பித்து ஊர்வலம் வந்தது. போட்டிருந்த பேண்ட் பையில் கையை நுழைத்தேன். இரண்டு பத்துப் பைசா ஒரு மூணு பைசா கெக்கே கெக்கே என்று இளித்தது. ஒரு கட்டு பீடிக்கு இது தாக்குப்பிடிக்கும்.

சிதம்பரம் பூங்காவை விட்டு வெளியே வந்தேன்.

தயங்கித் தயங்கி இருட்டிக் கொண்டிருந்த அந்தச் சாயங்காலப் பொழுதில் — பிளாட்பாரத்தின் ஓரத்தில் நடை போட்டுக் கொண்டிருந்த என்னை அந்தக் குரல் ஈர்த்தது.

''வளையலு ரொம்பத் 'தொள தொள'னு இருக்கம்மா....''

நான் திரும்பினேன்.

பஸ் ஸ்டாப்பில் மூட்டை. முடிச்சுகளோடு நின்றிருந்த அந்தக் கிராமப்புறத்துப் பெண்கள் என் பார்வைக்குத் தட்டுப்பட்டார்கள்.

வளையலைத் தொட்டுக் காட்டிப் பேசிய வண்ணம், சாம்பல் கறுப்பாக — அழுந்த வாரிய வேப்பெண்ணெய் மின்னும் தலையோடு அதில் சூட்டிய சாமந்திப் பூவோடு — மிட்டாய் ரோஸ் கலர் தாவணியில் — அபரிமிதமாய்ப் பொங்கிய மார்புகளோடு — பதினாறு வயதில் ஒரு கிராமத்தேவதை நின்றிருந்தாள். கைகளில் பகும் பொன்னுய் நாலு வளையல்கள். அவள் சொல்லிய மாதிரி — அவளுடைய கைகளுக்குப் பொருத்தமில்லாத வளையல்கள்.

அம்மாக்காரி வாயில் அடக்கி வைத்திருந்த புகையிலையைச் 'சொத்'தென்று உமிழ்ந்து விட்டுத் திட்டத் தொடங்கினாள்.

''பாளாப் போவ ஆச்சாரிப் பய... பொண்ணோட கைக்கு ஏத்த மாதிரி வளையலு பண்ணிக் குடுக்கச் சொன்னு.... வண்டிச் சக்கரமாட்டம் 'தொள தொள'ன்னு பண்ணிட்டான்.... ஊரு போய்ச் சேர்ந்ததும் முதக் காரியமா. வளையலை மாத்திச் செய்யணும்.:.. அதுவரிக்கும் வளையலு பத்திரம் புள்ளே... வள்ளிசா மூணு பவுன்... தொலச்சியோ உங்கப்பன் உன்னையத் தொலச்சிடுவான்....''

அந்தப் பெண் மருண்ட பார்வையோடு வளையல்களை முழங்கைவரை சர்ரென்று ஏற்றிக் கொண்டாள்.

என்னுடைய வேட்டைக்கேற்ற இரை இதுதான். தீர்மானித்துக் கொண்டேன். அங்கேயே நின்று கொண்டேன்.

ஏதோ சிடி பஸ் ஒன்று வந்து நின்றது.

''ரயில்வே ஸ்டேசனு போகுங்களா...?''— அம்மாக்காரி உரத்த குரலில் கண்டக்டரிடம் கேட்டாள்.

''ம்... போகும். சீக்கிரமா ஏறு. மூட்டையை ஓரமா வை.''

அந்தப் பெண்ணும் அம்மாக்காரியும் மூட்டை முடிச்சுகளோடு பஸ் ஏறினர். நானும் பீடிக்காக 'ரிசர்வ்' செய்து வைத்திருந்த என் ஆஸ்தி இருபது பைஸாவைக் கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டேன்.

அந்தப் பெண்ணின் கையில் தொள தொளத்துக் கொண்டிருந்த வளையல்களின் மேல் என் பார்வை வசமாய்ச் சிக்கியது.

கோவை ஜங்ஷன் பளீரென்று குழல் விளக்குகளின் வெளிச்சத்தில் திவ்வியமாய்க் குளித்துக் கொண்டிருந்தது. முதல் பிளாட்பாரத்தில் சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ் 'புஸ் புஸ்' என்று மூச்சிரைத்தபடி நின்று கொண்டிருந்தது. காலில் சுஞ்சியைக் கொட்டிக் கொண்ட மாதிரி ஜனக் கூட்டம் பரபரப்புடன் கசகசத்தது.

இரண்டாவது பிளாட்பாரத்தில் நின்றிருந்த கோயமுத்தூர் — மேட்டுப்பாளையம் லோகல் பாசஞ்சரில் ஜன்னல் பக்கமாக அந்தக் கிராமத்துப் பெண் உட்கார்ந்திருந்தாள். ஜன்னலுக்கு வெளியே இடது கையைத் தொங்க விட்டபடி. 'ஙே' என்று பராக்குப் பார்த்தபடி கடைவாயில் நிறைய முறுக்கை மென்று கொண்டிருந்தாள். ஜன்னலுக்கு வெளியே தெரிந்த கையில் வளையல்கள் மின்னின.

பிளாட்பாரத்தின் ஒலிபெருக்கி கரகரத்தது. 'பயணிகள் கவனிக்க! கோயமுத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரை செல்லும் பாசஞ்சர் இன்னும் சில நிமிடங்களில் இரண்டாவது பிளாட்பாரத்தை விட்டுப் புறப்படும்.''

அந்த அறிவிப்பு இரண்டு முறை திரும்பத் திரும்ப ஒலித்ததும் ரயில் புறப்பட முதல் மணி அடித்தார்கள்.

நான் உஷாரானேன். பதற்றப்படாமல் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்தேன். இன்னும் அந்தப் பெண்ணின் வளையல் கை ஜன்னலுக்கு வெளியே தெரிந்தது.

பாசஞ்சர் தொண்டை கம்மிப்போன குரலில் கூவிவிட்டு இரண்டாவது மணி அடிக்க— பிளாட்பாரத்தை விட்டுக் கிளம்பியது.

இரண்டே எட்டில் அந்தப் பெண் இருந்த கம்பார்ட்மெண்டை நெருங்கினேன். ரயில் நகரும் உற்சாகத்தில் அந்தக் கிராமப்புறம் எங்கோ வியந்து பார்க்க — நான் கொஞ்சம் தள்ளியே கம்பார்ட்மெண்டோடு நடந்தேன். என் பார்வை முழுக்க முழுக்க அந்த வளையல்களின் மேல் அழுத்தமாய் பதிய ஆரம்பித்தது.

ரயிலின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க — நான் அந்த விநாடிக்காகக் காத்திருந்தேன். பாசஞ்சரின் வேகம் மெல்ல மெல்ல அதிகரித்தது. — என் நடையைத் துரிதப்படுத்த—

நான் கழுகாய்ப் பாய்ந்தேன்.

அந்தப் பெண்ணின் கையை வளையல்களோடு சேர்த்துப் பற்றினேன். உருவினேன். ரயில் போகும் எதிர் வேகத்தில் சில விநாடிகளுக்குள் அந்த நான்கு வளையல்களும் என் கையில் ஐக்கியமாகியது.

அடுத்த விநாடி அந்தப் பெண் கிரீச்சிட்டுக் கத்த—

நான் ரயில்வே லைனின் கரி இருட்டில் தாவினேன். தண்டவாளங்களைப் பிசாசு வேகத்தில் தாண்டி கூட்ஸ் ஷெட்டின் பக்கமாய்த் தலை தெறிக்க ஓடினேன். ஓடின சமயத்தில் ஒரு விநாடி திரும்பிப் பிளாட்பாரத்தைப் பார்த்தேன்.

பிளாட்பாரத்தில் சலசலப்பு உருவாகியிருந்தது. ஒரு சிறிய கூட்டம் நான் ஓடின பக்கம் கையைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தது. இரண்டொருவர் என்னைப் பிடிக்க



ரயில்வே லைனைத் தாண்டிக் கொண்டிருந்தார்கள்.

நான் அசுரத்தனமாக ஓடினேன். இருட்டு இப்போது என் கண்களுக்குப் பழக்கமாகத் துவங்கியது. சரளைக் கல் குவியல், இரும்புக் கிராதிகள், கரி மேடுகள், ஆயில் டின்கள், வெங்காய மூட்டைகள் — எல்லாவற்றையும் தாவித் தாவி... வாயில் மூச்சிரைக்க ஓடினேன்.


பின்னால் யாரோ ஓடிவருகிற மாதிரி ஒரு பிரமை.


பின்னங் கழுத்தில் வியர்வை வழிந்து முதுகில் பரவ — கையில் வளையல்களோடு வேகமாய் ஓடினேன்.


அதோ! அந்த லூப் லைனைத் தாண்டிவிட்டால் ரோடு வந்துவிடும்.

எதிரே குறுக்கிட்ட பஞ்சு மூட்டைகளைத் தாண்டி லூப் லைனில் நுழைந்து மறுமுனைக்குத் தாவ முயல — கால் இடறி விழுந்தேன்.

''ப்ப்ப்ப்பட்ட்ட்க்...'' — என்ன சத்தம்? யோசிப்பதற்குள் என் வலது கால் பாதத்தை







ஏதோ ஒன்று கவ்விப் பிடிக்க — நான் இழுத்தேன்.

முடியவில்லை. வலது கால் பாதம் இப்போது அழுத்தமாய்ப் பிசைகிற மாதிரி சிக்கிக் கொண்டது. பதை பதைப்போடு குனிந்து பார்த்தபோது என் ரத்தம் உறைந்து இதயம் சில்லிட்டது.

லூப் லைனும், மெயின் லைனும் இணைவதற்கான இணைப்பு அது. பிரிந்த தண்டவாளப் பகுதிகள் இப்போது இணைந்து மெயின் லைனுக்கு வழியமைத்துக் கொடுத்திருந்தன.

அப்படியானால் இந்த வழியாக இப்போது ஏதாவது ரயில் போகவேண்டும். பாயிண்ட்ஸ் மேன் அடித்த அடியில் என் வலது கால் பாதம் வசமாய்ச் சிக்கியிருக்கிறது.

நான் காலை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தேன்.

காலைக் கொஞ்சம் அசைத்தாலும் வலி உயிர் போவது போல் இருந்தது.

காலே போனாலும் பரவாயில்லை, வலியைப் பொறுத்துக் கொண்டு காலை இழுத்தேன். ஊஹூம்! பாதம் எக்கச்சக்கமாய்ச் சிக்கியிருந்தது. கால் வர மறுத்தது.

தூரத்தே டீசல் என்ஜினின் அசுர சைரன் 'ப்ராண்ங்ங்ங்' என்றது.

இனி முடியாது.

கத்தலாமா? —கத்த வேண்டியதுதான்!

கத்த ஆரம்பித்தேன்.

நான் கத்திய அதே வினாடி டீசல் எஞ்சினும் கத்தியது. என்னுடைய கத்தல் வெளிப்படும் போதெல்லாம் அதனுடைய கத்தலும் சேர்ந்து கொண்டது.

அந்த ரயில்வே லைனின் இருட்டுப் பிராந்தியத்தில் ஆள் அரவமற்ற 'ஓஹோ'வென்ற அமைதியின் பின்னணியில் — தன்னந் தனியாய்க் கால் மாட்டிக் கொண்ட நிலையில்...

கையிலிருந்த வளையல்களை ஆவேசமாய் வீசி எறிந்தேன். இரண்டு கைகளாலும் வலது காலைப் பற்றி வெறியோடு இழுத்தேன்.

கால் இம்மியளவுகூட மேல் எழும்ப மறுத்தது.

தூரத்தே டீசல் என்ஜினின் பிரகாசமான ஹெட் லைட் கொள்ளி வாய்ப் பிசாசின் வாயாய்த் தெரிந்தது.

''அம்....மா....ஆ....!'' — நேரப்போகும் பயங்கரத்தில் உடம்பின் ஒவ்வொரு அணுவும் சிலிர்த்தது.

போன மாதம்—

இதே தேதியில் சங்கிலியைத் தர மறுத்த அந்த இளம் பெண்ணின் வயிற்றில் கத்தியைச் செருகி.... அவள் துடித்துத் துடித்து உயிரை விடுகையில் — சங்கிலியை அவள் கழுத்திலிருந்தும் அலட்சியமாய்ப் பறித்துக் கொண்டு வந்த சம்பவம் — என் மனத்தில் நிழலாட—

நான் நின்றேன் — அசையாமல் நின்றேன்.

இன்னும் சில விநாடிகளுக்குள் ரத்தமும் சதையுமாய்ச் சிதறப் போகிற நான் ஜடமாய் நின்றேன்.

டீசல் என்ஜினின் ஹெட் லைட் என்னை அங்குலம் அங்குலமாய்—

நெருங்கிக் கொண்டிருந்தது.

கருணைநிறைந்து அகம்புறமும் துளும்பிவழிந்து
உயிர்க்குஎல்லாம் களைகண் ஆகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்உடையோய் சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறைஅமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்யனேன் தன்
மருள்நிறைந்த மனக்கருங்கல் பாறையும்உள்
கசிந்துஉருக்கும் வடிவத் தோயே

— திருஅருட்பா

• 30-3-80 தேதி இதழில் கற்பனை கேள்வி பதிலுக்குத்தான் முதல் மார்க். அற்புதமாக இருந்தது. இரண்டாவது மார்க் செம்பியனின் செய்திகளுக்கு.

மதுரை — இரா. நாராயணன்

• செம்பியனின் நண்பனுக்காவது 'அடித்த கையே அணைக்கும்' என்பது போல 'போலீஸாரின் உதவியாவது கிடைத்தது. அடித்துப் போடப்பட்ட என் தம்பியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல ஆளில்லாமல் அனாதையாக ஓடி வந்திருக்கிறான் குருதி வழிய! என் அம்மாவின் அழுகையைச் சமாளிக்க எங்க மாமா பட்ட பாடு சென்னையிலிருந்து வந்த உறவினர் கூறி அறிந்தேன்.

போடிநாயக்கனூர் — ரவிராஜ்

• என் கவிதை நூல் பற்றிய குறிப்பில் ''தை' என்பதை நான் மறந்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளது சரியல்ல.

''நல்ல விதைக்கருவும் வெல்லும்
கதைச் சுவையும்
சொல்லழகும் தைத்தால்
துளிர்க்கும் ஒரு கவிதை''

என்று அதே ''எது கவிதை''யில் நான் விளக்கமாகவே 'தைத்'திருக்கிறேன்.

சென்னை-18 — புத்தனேரி சுப்பிரமணியம்

• 'போதும்' என்ற மனத்திருப்தியை குமாரி சுவர்ணலதா பெற்றிருப்பதை கல்கி மூலம் அறிந்து வியக்கிறேன். கல்கியின் நற்தொண்டு வாழ்க, வளர்க!


மதுரை — ஆர். கண்ணன்

• ஸ்வர்ணலதாவின் படிப்புக்கு கல்கியும் கல்கி நேயர்களும் உதவியவிதத்தைத் தெரிந்து கொண்டேன்.

ஸ்வர்ணலதா போன்ற ஆயிரமாயிரம் மாணவ மாணவிகள் நம் நாட்டில் இருக்கின்றனர். தனி நபர்களின் சிறு தொகைகளைக் கல்கி ஒன்று திரட்டி, வாசகர் டிரஸ்ட் ஒன்று ஸ்தாபித்து, திரட்டிய தொகையை ஏதாவதொரு வங்கியில் வைப்புநிதியில் போட்டு, வரும் வட்டித் தொகையில் ஸ்வர்ணலதா போன்ற தகுதியும் தேவையுமுள்ள மாணவர்க்கு உதவ வேண்டும். இப்பணிக்கு என்னாலான சிறு தொகையாக ரூ. 101க்கு எனது காசோலை கல்கியின் முடிவறிந்தவுடன் அனுப்பி வைக்கிறேன்.

பூனா — கே. ஜெயராமன்

[திரு ஜெயராமனின் யோசனையைக் கல்கி நேயர்கள் முன் சமர்ப்பித்துள்ளோம். நேயர்கள் கருத்தறிய ஆவலாயுள்ளோம். —ஆசிரியர்]



• அட்டைப்பட விளக்கத்தில் பிளஸ் டூ பரீட்சைகள் முடிந்தன எனக் கூறியிருக்கிறீர்கள். பிளஸ் டூவிற்கு இன்னும் தேர்வுகள் தொடங்கவேயில்லை.

சீர்காழி — எம். ஜெயலக்ஷ்மி

[அட்டைப்பட விளக்கம் எழுதப்பட்ட போது ஐ.எஸ்.ஸி. வகுப்பு பிளஸ் டூ பரீட்சைகள் முடிந்து விட்டிருந்தன. —ஆர்.]

• அஃறிணைக் கவிதைகள் அறிவுரைக் கவிதைகளாகவும் உள்ளன. ''உங்கள் வீட்டை அழகு படுத்துங்கள், தவறில்லை. என்னை ஏன் அசுத்தப்படுத்துகிறீர்கள்'' என்று குறைப்படுவது அடுத்த வீட்டு வாசல் என்றிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும்.

ஜீயபுரம் — என். பாலசுப்ரமண்யன்

• 'அலையோசை கருத்தரங்கில்' ஆ. கணேசன் தமிழில் முதல் தேசிய நாவல் 'அலை ஓசை' என்கிறாரே! 'தியாகபூமி'யிலேயே தேசிய இயக்கப் பின்னணியை அமைத்திருந்தாரே பேராசிரியர் கல்கி'!

சாலியமங்கலம் — ந. மெய்ப்பொருள்

• விடுதலைக்கு முன்பே காசி வெங்கடரமணியின் தேசபக்தன் கந்தன் — முருகன் ஓர் உழவன் ஆகிய தேசிய நாவல்கள் தமிழில் வெளி வந்துள்ளன. எழுத்துச் சுதந்திரம் அற்ற காலத்தில் ஆட்சியை எதிர்த்து எழுதப் பட்ட தேசிய நாவல்கள் அவை.

சென்னை-35 — இரா. பாலசுப்பிரமணியம்

• இளைய சமுதாயத்தினரது உள்ளங்களைத் தற்போது வெளி வருகின்ற திரைப்படங்களும், பத்திரிகைகளில் வருகின்ற கதைகளும் சஞ்சலப்பட வைத்து விடுகின்றன. எனவே கண்ணியமான முறையில் செக்ஸைப் பாடமாகப் போதிப்பது அவசியம் என்று டாக்டர் சௌரிராஜன் சுட்டிக் காட்டியிருந்த கருத்துக்கள் எல்லோராலும் சிந்தித்துப் பார்க்கும் விதத்தில் அமைந்திருந்தது.

போடிநாயக்கனூர் — எஸ். சையது முகமது

• பள்ளிகளில் செக்ஸ் பாடங்களைப் போதிக்க வேண்டும் என்று டாக்டர் சௌரிராஜன் கூறுவது வேடிக்கை. பள்ளி இறுதியாண்டு genetics இல் மாணவர்களின் சில சந்தேகங்களை நிவர்த்திப்பதற்கே ஆசிரியர்கள் சங்கடப்படுகிறார்கள். இந்த லட்சணத்தில் செக்ஸ் பாடங்களா? டாக்டர் அவர்கள் 'இந்தியா டுடே'யில் 'Sex in Campus' படித்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன்.

சென்னை-33 — ஜி. ரங்கராஜன்


• ஜானகிராமனை அகாதமி பரிசு மட்டும் உயர்த்தி விடப் போவதில்லை. ''அவருக்குப் பரிசு கொடுத்தது எனக்கு உடன்பாடில்லை'' என்று சொன்னதனால் ராஜம் கிருஷ்ணன் தாழ்ந்துவிடப் போவதில்லை.

திருநெல்வேலி — அ. சங்கரன்


PALAYAKAT COY. PVT. LTD. MADRAS.
MADRAS
REGD. TRADE MARK
பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்
CHARI
மதராஸ் பளயகாட் கம்பெனி(பி)லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001

தீர்ப்பு

கல்கி



[இந்தச் சிறப்பிதழின் சிறப்பு அம்சங்களான [illegible] திலும் பொன்னியின் புதல்வருக்குப் பதினெட்டாம் பெருக்கு. இந்த இரண்டையும் 1942 ஆகஸ்ட் போராட்டத்துடன் அவர் இக்கதையில் பின்னிப் புனைந்துள்ளார். அந்தப் போராட்டத்தை அடுத்துச் சுடச் சுட எழுதிய இது. இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும், இடத் தேவை காரணமாய் ஓரளவு சுருக்கிய வடிவிலும், அப்படியே சூடு ஆறாமல் இருக்கிறது. இதற்குக் கல்கி கொடுத்திருந்த தலைப்பு: ''தூக்குத் தண்டனை.'']

அமாவாசை இரவு. திவான் பகதூர் ஜட்ஜ் அஷ்டோத்தரமய்யங்கார் சுகமான பஞ்சு மெத்தைப் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார். என்ன புரண்டாலும் தூக்கம் வருகிற வழியாயில்லை.

பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தது. ''இனிமேல் கட்டாயம் தூங்க வேண்டியது தான்'' என்று ஜட்ஜ் அய்யங்கார் திடசங்கல்பம் செய்து கொண்டு, கண்களை இறுக மூடினார். அப்போது அவருடைய மனக் கண்ணின் முன்பாக ஒரு பயங்கரக் கோரக் காட்சி தென்பட்டது.

தூக்கு மரத்தில் ஓர் உருவம் தொங்கி இலேசாகக் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

சட்டென்று அய்யங்கார் எழுந்து உட்கார்ந்தார். படுக்கையிலிருந்து கீழே குதித்தார். இருட்டில் தடவிக் கொண்டே சென்று, ஸ்விட்ச் இருக்கும் இடம் கண்டு பிடித்து மின்சார விளக்கை ஏற்றினார். அலமாரியைத் திறந்து கையில் அகப்பட்ட புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து ஸோபாவில் அமர்ந்தார். புத்தகத்தைப் பிரித்தார். ஆகா! புத்தகத்திற்குள் ஏதாவது தேள் ஒளிந்திருந்து அவர் கையில் கொட்டிவிட்டதா என்ன? புத்தகத்தை அப்படித் திடீரென்று போட்டுவிட்டுக் குதிக்கிறாரே?

தேளுமில்லை; கீளுமில்லை: அந்தப் புத்தகம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாய் இருந்தது தான் காரணம். திவ்யப் பிரபந்தத்தைப் பார்த்ததும் உபய வேதாந்த ஸார உபந்நியாச சக்கரவர்த்தி சடகோபாச்சாரிய ஸ்வாமிகள், மதகுப்பட்டி கலக வழக்கில் கூறிய சாட்சியம் அய்யங்காருக்கு ஞாபகம் வந்தது. அவர் என்ன சாட்சி சொன்னார்? ''மதகுப்பட்டிக் கலகம் நடந்த அன்றைக்கு முதல் நாள் இரவு நானும் திருமலையும் திருச்சி ஜங்ஷன் வெயிட்டிங் ரூமில் திவ்யப் பிரபந்தத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்!'' என்றார். ''பெரியாழ்வார் பாத சாட்சியாகவும், திருமங்கையாழ்வார் திருவடி சாட்சியாகவும் சத்தியமாய்ச் சொல்கிறேன்'' என்று ஆணையிட்டார். சடகோபாச்சாரிய சுவாமியை அஷ்டோத்தரம் அய்யங்காருக்கு வெகு காலமாகத் தெரியும். பரம பக்தர்; சிறந்த அறிவாளி; உயர்ந்த ஒழுக்கமுள்ளவர். அப்பேர்ப்பட்டவருடைய சாட்சியைப் பொய்ச் சாட்சி என்று தள்ளி விட்டு, போலீஸ் சாட்சியத்தையே உண்மையென்று ஏற்றுக் கொண்டு திருமலைக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டியதாயிற்று! திருமலை நிரபராதிதானோ? குற்றமற்ற பையனையா நாளைப் பொழுது விடிந்ததும் தூக்கில் போடப் போகிறார்கள்? அந்தப் பாதகம் தம்முடைய தலையிலா விடியப் போகிறது?

முந்திய வருஷம் (1942) மகாத்மா காந்தி முதலியவர்கள் கைதான புதிதில் மதகுப்பட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்தில் யாரோ ஒரு தண்டவாளத்தைக் கழற்றி நகர்த்தி யிருந்தார்கள். நல்ல வேளையாக விபத்து ஒன்றும் நேரவில்லை. பொழுது விடியும் சமயத்தில் வந்த முதல் ரயில் வண்டியின் டிரைவர் தண்டவாளம் நகர்த்திருப்பதைப் பார்த்து வண்டியை நிறுத்தி விட்டான். அரை மணிக்குள் பாதை சரிசெய்யப்பட்டு வண்டியும் போய்விட்டது.

பிறகு மதகுப்பட்டி போலீசார் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்கள்;

அநேக வீடுகளைச் சோதனை போட்டனர். ஹைஸ்கூலுக்குப் போய் ஆறு மாணுக்கர்களைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள். அந்த ஆறு பேரைத் தொடர்ந்து பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அவ்வளவு பேரும் கோஷித்துக் கொண்டு வெளிக் கிளம்பினார்கள். வியாபாரிகள் பீதியடைந்து மளமளவென்று கடைகளை அடைத்தார்கள். வீதிகளில் கூட்டம் அதிகமாயிற்று.

போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றியும் கூட்டம் சேர ஆரம்பித்தது. ஸ்டேஷனுக்குள் அடைக்கப்பட்டிருந்த மாணுக்கர்கள் ஜன்னல் வழியாக வெளியில் நின்ற கும்பலைப் பார்த்து விட்டு, ''புரட்சி ஓங்குக!'' என்று கோஷமிட்டார்கள். வெளியில் நின்ற கூட்டத்தார் பதில் கோஷம் செய்தார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே மாணுக்கர்களை அடிக்கிறார்கள் என்ற வதந்தி கிளம்பி, அந்த ஜனக் கூட்டத்தில் அதி வேகமாகப் பரவிற்று. ஜனங்களின் கொதிப்பு அதிகமாயிற்று. சமீபத்தில் ரோடு ரிப்பேர் செய்வதற்காகக் கப்பிக் கற்கள் கொட்டப்பட்டிருந்தன. அந்தக் கற்கள் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தன.

போலீஸ்காரர்கள் கையில் துப்பாக்கியுடன் வெளிவந்து கூட்டத்தை நோக்கிக் குறிபார்த்தார்கள். இதன் பலனாகக் கூட்டத்தின் வெறி அதிகமாயிற்று. ஜனங்கள் ஸ்டேஷனை இன்னும் நெருங்கி வந்தார்கள். போலீஸ் துப்பாக்கிகளிலிருந்து வேட்டுக்கள் கிளம்பின. இரண்டொருவர் காயம் பட்டு விழுந்தனர். கூட்டம் ஒரே பாய்ச்சலாகப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பாய்ந்தது. துப்பாக்கியில் ரவைகள் தீர்ந்து விட்டபடியால், போலீஸ் சேவகர்கள் ஸ்டேஷனுக்குள் ஓடிப் புகுந்து கொண்டார்கள். கூட்டத்தில் ஒரே ஜேய கோஷ ஆரவாரம்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு சில மண்ணெண்ணெய் டிப்போக்கள் இருந்தன. கூட்டத்தில் சிலர் டிப்போவின் கதவை உடைத்து உள்ளே புகுந்து மண்ணெண்ணெய் டின்களை எடுத்து வந்தார்கள். புகை பிடிப்பவர்கள் சிலர் நெருப்புப் பெட்டி கொடுத்து உதவினார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் புகையும் நெருப்பும் எழுந்தன.

இதற்குள்ளாகத் தகவல் தெரிந்து ஜில்லா மாஜிஸ்டிரேட், போலீஸ் ஸூபரின்டெண்ட் முதலியவர்கள் பெரிய போலீஸ் படையுடன் வந்து சேர்ந்தார்கள். இந்தத் தடவை விரிவாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. சிலர் உடனே உயிர் துறந்து விழுந்தார்கள். பலருக்குக் காயம் ஏற்பட்டது. ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் கூட்டம் கலைந்து போயிற்று. தீயும் அணைக்கப்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் கட்டிடம் பாதிக்கு மேல் எரிந்து போயிற்று.

மறுநாள் போலீஸார் வீடு வீடாகப் புகுந்து முதல் நாள் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து 126 பேர் மேல் கேஸ் தாக்கல் செய்தார்கள்.

திவான்பகதூர் ஜட்ஜ் அஷ்டோத்திரம் அய்யங்காரின் கோர்ட்டில் உரிய காலத்தில் மேற்படி கலக வழக்கு விசாரணைக்கு வந்தது.

மதுருப்பட்டிக் கலக வழக்கில் முதலாவது எதிரி திருமலை. இவன் பேரில், தண்டவாளத்தைப் பெயர்த்தது முதற்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீவைத்தது வரையில் பல குற்றங்கள் சுமத்தப்பட்டன.

திருமலை அவனுடைய பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. மதுருப்பட்டிக்கே அவன்



செல்லப்பிள்ளை] நல்ல அறிவாளி; முக வெட்டும், வாக்குச் சாதுரியமும் உள்ளவன்; சிறந்த ஒழுக்கம் படைத்தவன்; பொதுக் காரியங்களில் அளவற்ற ஊக்கமுடையவன். காங்கிரஸ் கமிட்டியானாலும் சரி, சங்கீத சபை யானாலும் சரி, பழைய மாணவர் சங்கம் — கூட்டுறவு பண்டகசாலை — இலவச வாசகசாலை — எதுவானாலும் சரி, திருமலைக்கு ஒரு முக்கி யமான நிர்வாகப் பொறுப்பு இருந்தே தீரும்.

விசாரணையின்போது திருமலையின் சார் பாகச் சொல்லப்பட்ட எதிர் வழக்கு என்ன வென்றால், மதகுப்பட்டியில் கலகம் நடந்த தினம் அவன் ஊரிலேயே இல்லை — அன்று கலகம் நடந்த பிறகுதான் மதகுப்பட்டிக்கு வந்தான் என்பது.

இதற்குத் திருமலையின் தரப்பில் சாட்சி கூறியவர் உபந்நியாச சக்கரவர்த்தி சட கோபாச்சாரிய சுவாமிகள். அன்று சாயங் காலம் அவர் ஸ்ரீரங்கத்தில் உபந்நியாசம் செய்துவிட்டு ரயிலுக்கு வந்ததாகவும், ரயில் தவறிவிட்டபடியால், வெயிட்டிங் ரூமுக்குப் போனதாகவும், தம்மைப் போலவே ரயில் தவறி அங்கே இருந்த திருமலையைப் பார்த்த தாகவும், அந்தப் பிள்ளையாண்டானைத் தமக்கு ஏற்கனவே தெரியும் என்றும் இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் பேசிக்கொண் டிருந்ததாகவும் கூறினார். ''எதைப் பற்றிப் பேசினீர்கள்?'' என்று கேட்டதற்கு ''முக் கியமாகத் திவ்வியப் பிரபந்தப் பாசுரங் களில் உள்ள கவிதைச் சுவையையும் பக்திப் பெருக்கையும் பற்றிப் பேசினோம்'' என்றார்.

''அதைத் தவிர வேறு எந்த விஷயத்தைப் பற்றியாவது பேசினீர்களா?'' என்று திரு மலையின் வக்கீல் கேட்டார்.

''தேசத்தில் அப்போது நடந்து கொண் டிருந்த விபரீதமான காரியங்களைப் பற்றியும் பேசினோம்.''

''விபரீதக் காரியங்கள் என்றால் என்ன?''

''ரயில் தண்டவாளத்தைப் பெயர்ப்பது முதலிய காரியங்கள்.''

''அந்தப் பற்றி என்ன பேசினீர்கள்?''

''ரயில் பிரயாணம் ரொம்பவும் அபாய கரமாகப் போனது பற்றிப் பேசினோம். 'இது லெல்லாம் என்ன பிரயோசனம் ஏற்படப் போகிறது? நம்முடைய ஜனங்கள்தானே கஷ்டப்படுவார்கள்? ஒரு ரயில் வண்டி கவிழ்ந்தால் எத்தனை உயிர்ச் சேதம் ஏற்படும்? எத்தனை குடும்பங்கள் துன்பமடையும்?' என்று நான் சொன்னேன். திருமலை என் னுடைய அபிப்பிராயத்தை முழுவதும் ஆமோதித்தான். தந்தி அறுப்பது, தண்ட வாளம் பெயர்ப்பது முதலியவை பலாத் காரக் காரியங்கள்தான் என்றும், மகாத்மா காந்தி அந்தக் காரியங்களை ஒருநாளும் அனுமதித்திருக்க மாட்டார் என்றும், இந் நாம் படைக்காரர்கள் அவருடைய பெய ரைப் பொய்யாக உபயோகப்படுத்துகிறார்கள் என்றும் சொன்னான்.''

இந்தச் சமயத்தில் கவர்ன்மெண்ட் தரப்பு வக்கீல் ஆட்சேபித்து, மேற்படி அபிப்பி ராயங்கள் எல்லாம் சாட்சியம் ஆகாதென் றும், அவைகளைப் பதிவு செய்யக் கூடா தென்றும் கூறினார். இத்துடன் சடகோபாச் சாரிய ஸ்வாமியின் சாட்சியம் முடிந்தது.

அவருடைய சாட்சியத்துக்கு நேர் மாறாகப் போலீஸ் தரப்புச் சாட்சிகள் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த கூட்டத்தில் திருமலையும் இருந்தான் என்றும், அவன் போலீஸ் காம்பவுண்ட் சுவரில் ஏறி நின்று கொண்டு, மண்ணெண்ணெய் டின்னை வெளி யிலிருந்து வாங்கி உள்ளே இருந்தவர்களிடம் கொடுத்ததைக் கண்ணால் பார்த்ததாகவும் கூறினார்கள்.

பின்னர் நூற்றுக் கணக்கான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். கடைசியில் தீர்ப்புக் கூறும் நாள் வந்தது.

முதல் எதிரி திருமலை சம்பந்தமாகத் தீர் மானம் செய்வதில்தான் ஜட்ஜு அஷ் டோத்திரம் அய்யங்காருக்கு ரொம்பவும் கஷ்டம் ஏற்பட்டது. அவருக்கும் அவ ருடைய மனச்சாட்சிக்கும் பெரிய போராட் டம் நடந்தது. சடகோபாச்சாரிய ஸ்வா மிகளின் சாட்சியம் உண்மையாகவே தோன் றிற்று. ஆனால் போலீஸ் தரப்பின் திட்ட மான சாட்சியத்தை நிராகரித்தால், 'பெரிய இடத்து' அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

ஆட்டிப் படைக்கும் ஆவி வடிவம்

தங்கச் சங்கலி அபேஸ்!


ஒரு பெண்மணியிடம் பக்கத்து வீட்டுக்காரி ''நான் நாளை ஒரு திருமணத்துக்கு வெளியூர் செல்ல வேண்டும். உனது தங்கச் சங்கிலியைக் கொஞ்சம் எனக்கு இரவல் தருவாயா?'' என்று கேட்டிருக் கிறாள். அவளும் சரி என்று சொல்லியிருக்கிறாள். பேச்சுத்தான். பண்டம் கைமாறவில்லை. இதை ஒரு பிசாசு கேட்டுக் கொண்டிருந்திருக்கிறது.

அன்று இரவு கதவு தட்டப்பட்டிருக்கிறது. தூக்கக் கலக்கத்தில் வந்திருந்த பிசாசிடம் சங்கிலியைக் கொடுத்துவிட்டாள், பக்கத்து வீட்டுப் பெண் என்று நினைத்து! அவளுடைய கணவன் வெளியூர் சென்றுவிட்டு இரவில் மாட்டு வண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது சில பிசாசுகள் வட்ட மாக நின்று கொண்டு கும்மியடித்து, பாட்டுப் பாடி தங்கச் சங்கிலியை ஒருவர் மாற்றி ஒருவர் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடிக் கொண்டு இருப் பதைக் கண்டார். உடனே இவரும் தமது உடைகளை அவிழ்த்துப் போட்டு நிர்வாணமாகச் சேர்ந்து அவற்றின் அருகில் சென்று அவை களுடன் சேர்ந்து ஆடியிருக்கிறார்.

அவருடைய அதிர்ஷ்டம், கோழி கூவும்போது தங்கச் சங்கிலி அவர் கையில் வந்து சேர்ந்தது. பிசாசுகள் மறைந்து விட்டன.

அவருக்கு அது தம் மனைவியின் சங்கிலி என்று தெரியாது. வீடு திரும்பினார். வீட்டில் தம் மனைவிக்கும் பக்கத்து வீட்டுப் பெண்மணிக்கும் தங்கச் சங்கிலி குறித்துச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்தார். பிறகுதான், அது தம் மனைவியின் சங்கிலி என்று அவருக்குத் தெரிய வந்தது. வந்திருக்கும் ஆளைப் பார்த்து எதுவும் கொடுக்க வேண்டும் என்று மனைவிக்கு அறிவுரை கூறினார்.

— இ. வசந்தகுமார்



என்ன முகாந்திரத்தைக் கொண்டு ஐந்து போலீஸ்காரர்களின் சாட்சியத்தை நிராகரித்து ஒரு வைஷ்ணவ உபந்நியாசகரின் சாட்சியத்தை ஒப்புக் கொள்வது? இப்படிச் செய்தால் தம் பேரிலேயே ஒருவேளை சந்தேகம் ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? ஏன் லஞ்சம் வாங்கிக் கொண்டு, விடுதலை செய்ததாகச் சொன்னாலும் சொல்லுவார்கள்.

இவ்விதமெல்லாம் அஷ்டோத்திரம் அய்யங்காரின் மனத்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. கடைசியில் போலீஸ் கட்சிதான் ஜெயமடைந்தது!

மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனையும், பன்னிரண்டு பேருக்கு ஆயுள் தண்டனையும் மற்றவர்களுக்கு இரண்டு வருஷம் முதல் பத்து வருஷம் வரையில் சிறைவாசமும் அளிக்கப்பட்டது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரில் திருமலையும் ஒருவன்.

தீர்ப்புச்சொல்லிய நாளிலிருந்து அஷ்டோத்தரம் அய்யங்காரின் மனம் சரியான நிலைமையில் இல்லை. திருமலை விஷயத்தில் அநியாயம் செய்து விட்டோமோ என்ற எண்ணம் அவர் மனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது.

தூக்குத் தண்டனைக் கைதிகளின் சார்பாக கவர்னருக்குக் ''கருணை விண்ணப்பம்'' செய்யப்பட்டிருக்கிறது என்று அறிந்தபோது, அய்யங்காருக்குச் சிறிது திருப்தி ஏற்பட்டது. கவர்னர் கருணை செய்து தூக்குத் தண்டனையை ரத்துச் செய்து விட்டால், தம்முடைய பொறுப்பு நீங்கிவிடும் என்று எண்ணினார்.

ஆனால், கவர்னர் அவ்விதம் கருணை செய்யவில்லை. அய்யங்காரின் மனத்திலிருந்த பாரமும் நீங்கவில்லை....

இரவு ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணியும் ஆயிற்று. அய்யங்கார் இப்போது சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். அவருடைய கண்கள் சில சமயம் தாமே மூடிக் கொள்ளும். அடுத்த நிமிஷம் திடுக்கென்று தூக்கி வாரிப்போட்டுக் கண்களைத் திறந்து பார்ப்பார். 'திருமலையைத் தூக்கில் போட இன்னும் நாலு மணி நேரம்தான் இருக்கிறது.— இன்னும் மூன்று மணி நேரம்தான் பாக்கி...'' என்று மனம் ஒருபுறத்தில் கணக்குப் போட்டுக் கொண்டே இருக்கும்.

தூக்க மயக்கத்தில் அய்யங்காருக்கு ஓர் அதிசயமான யோசனை தோன்றிற்று. சில சமயம் கைதிகள் சிறையிலிருந்து தப்பித்து ஓடிவிடுகிறார்கள் அல்லவா? அதிலும் அரசியல் கைதிகள் — புரட்சிக் கைதிகள் சிறையிலிருந்து தப்புவது சகஜமல்லவா? கபாஷ் போஸ் கூடப் போலீஸாரை ஏமாற்றிவிட்டுக் கம்பி நீட்டிவிடவில்லையா? அந்த மாதிரி திருமலையும் ஏன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிடக் கூடாது?

டிங், டிங், டிங், டிங் — மணி நாலு அடித்தது. ''ஐயோ! நேரம் நெருங்கிவிட்டதே!'' என்று, அய்யங்கார் மனம் திடுக்கிட்டது.

அந்த சமயத்தில் அவருடைய அறையின் கதவு திறந்து, ஜில்லென்று காலைக் காற்று உள்ளே வந்தது.

கதவை மூடலாமென்று அய்யங்கார் எழுந்திருக்கப் பார்த்தார். ஆனால் எழுந்திருக்க வில்லை. அப்படியே திகைத்து உட்கார்ந்து விட்டார்.

ஏனெனில் திறந்த கதவு வழியாக ஒரு மனித உருவம் உள்ளே வந்தது. ஆ! இது யார்? இந்த இளமுகம் யாருடையது? சந்தேகமென்ன? திருமலைதான்—ஆகா! இவன் எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தான்! நாம் எண்ணியது போல் உண்மையாகவே சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்டானா? — அப்படியானால் கெட்டிக்காரன்தான்.

திருமலை நிதானமாக நடந்து வந்து அய்யங்காருக்கு எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

அய்யங்காரின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அவர் பேச ஆரம்பித்தபோது அவருடைய குரலை அவராலேயே அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. ''யார் திருமலைதானே?'' என்றார் அய்யங்கார்.

''ஆமாம்; அடியேன் திருமலைதான்.''

''பொழுதுவிடிந்தால் — ஆறு மணிக்குள்'' என்று அய்யங்கார் தடுமாறினார்.



ஆட்டிப் படைத்த ஆவி அனுபவம்

விஷப்பரீட்சை !

நான் அப்பொழுது கும்பகோணம் கல்லூரியில் பி.எஸ்ஸி. படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு ஹாஸ்டலில் நான்கு மாணவர்களும் சக்கரைப் படித்துறை அருகே பேய் உலாவுவதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

கிருஷ்ணன் சவாலாக ''நான் ஒருநாள் இரவு 12 மணிக்கு அங்கு சென்றுவிட்டு வருகிறேன். நான் ஜெயித்தால் நீங்கள் எனக்கு ரூபாய் நூறு கொடுக்க வேண்டும்'' என்றான். இரு மாணவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். நானோ ''கிருஷ்ணா, இந்த விஷப்பரீட்சை வேண்டாம்'' என்றேன். ஆனால் என்னை அவன் லட்சியம் பண்ணவில்லை.

அடுத்த நாள் இரவு ஹாஸ்டல் சுவரேறிக் குதித்து ஓடி விட்டான். நாங்கள் திகிலுடன் இருந்தோம், வேண்டாத தெய்வமில்லை. எப்பொழுது தூங்கினோமோ தெரியவில்லை.

அடுத்த நாள் காலை கிருஷ்ணன் படுக்கை காலியாக இருந்தது. எங்களுக்கு உதறல் கண்டது.

இரண்டாம் பீரியட் நடக்கும்போது நாங்கள் பயந்தபடியே, சோகச்செய்தி வந்தது. 'கிருஷ்ணன் வாயில் ரத்தத்துடன் சக்கரைபடித்துறை ஸ்மசானம் அருகில் செத்துக் கிடப்பதாக;

எங்களுக்குக் கை கால் ஓடவில்லை. தலைவலி என்று சொல்லி விட்டு அறைக்குள் வந்து குமுறி அழுதோம். வைத்தியக்காரத்தன செயலில் இறங்கி ஓர் உயிரைப் பலி கொடுத்தோமே என்று வருந்தினோம். — சி. ஆர். திருவேங்கடத்தான்

''ஆமாம்; ஆறு மணிக்குள் தண்டனை நிறைவேற வேண்டியதுதான்.''

''நல்ல வேளை... நீ தப்பித்து வந்தது.''

''நல்ல வேளையா?''

''ஆமாம்; நல்ல வேளைதான். உன்னைத் தண்டித்தது பற்றி எனக்கு மனச் சமாதானமே ஏற்படவில்லை. நீ சிறையிலிருந்து ஏன் தப்பித்துக் கொள்ளக் கூடாது என்று நான்கூடச் சற்று முன்பு நினைத்தேன்.''

திருமலையின் முகத்தில் ஆச்சரியம்.

''நீ தப்பித்து வந்தது பற்றிச் சந்தோஷம் தான்; ஆனால் நீ இங்கு வந்ததுதான் பிடிக்கவில்லை. இங்கே என்னத்துக்காக வந்தாய்?''

''உங்களைப் பார்ப்பதற்குத்தான்.''

''என்ன? என்னைப் பார்ப்பதற்கா?''

''ஆமாம்; தூக்குத் தண்டனையைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்கள் பெரிய பக்தர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சடகோபாச்சாரியார் ரொம்பவும் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தாங்கள் என்னைப் பொய்யனென்று நினைத்ததுதான் ரொம்பவும் வருத்தம் அளித்தது. சத்தியமாகச் சொல்கிறேன்; நான் அன்றைக்கு மதகுப்பட்டியில் இல்லை. திருச்சி ஜங்ஷனில்தான் இருந்தேன். சடகோபாச்சாரிய ஸ்வாமிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன்.''

''நீ சொல்வதை முழுவதும் நம்புகிறேன். சடகோபாச்சாரியாரும் நிச்சயமாய்ப் பொய் சொல்லி இருக்க மாட்டார். தீர்ப்பு எப்படியோ பிசகாய்ப் போய்விட்டது. நீ தப்பி வந்ததே நல்லதாயிற்று. ஆனால், இங்கே நீ அதிக நேரம்....''

''இல்லை, இங்கே அதிக நேரம் தாமதிக்கவில்லை. உங்களிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். என் வார்த்தையை இப்போதாவது நம்புகிறீர்களே, ரொம்ப சந்தோஷம். போய் வருகிறேன்.''

திருமலை ஒரு கும்பிடு போட்டுவிட்டு எழுந்திருந்து போனான்.

மறுபடியும் அய்யங்காருக்குத் திடுக்கென்று தூக்கி வாரிப் போட்டது. அவர் எழுந்து, திறந்திருந்த கதவண்டை போய், அப்பாலிருந்த தாழ்வாரத்தைப் பார்த்தார். அங்கே ஒருவரையும் காணவில்லை. வாசற் கதவைப் பார்த்தார். அது உட்புறம் தாளிடப்பட்டிருந்தது!

திருமலை எப்படி உள்ளே வந்தான்? எப்படி வெளியே போனான்?

இரண்டு நாளைக்குப் பிறகு ஜட்ஜ் அஷ்டோத்தரம் அய்யங்கார் தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஒரு மூலையில் சின்ன எழுத்தில் அச்சிட்டிருந்த பின்வரும் செய்தி, அவருடைய கவனத்தைக் கவர்ந்தது:

தூக்குக் கைதியின் மரணம்

''மதகுப்பட்டிக் கலக வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த திருமலை... சிறைச்சாலையில் முந்தாநாள் காலை நாலு மணிக்கு இயற்கை மரணமடைந்தான். எனவே, கைதியைத் தூக்குப் போட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.''

மேற்படி செய்தியைப் படித்ததும் அய்யங்காருக்குத் தலை சுற்றிற்று. அதே நேரத்தில் தான் திருமலை தம்முடைய அறையில் வந்து பேசினான் என்பது நினைவு வந்தது. அய்யங்கார் திடீரென்று கீழே விழுந்தார்.

டாக்டர்கள் வந்து பார்த்து விட்டு, ''மாரடைப்பினால் மரணம்'' என்று தெரிவித்தார்கள்.

(''வீணை பவானி,' என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து. வெளியீடு: வானதி பதிப்பகம், சென்னை-600017. தேர்ந்தெடுத்துச் சுருக்கி அளிப்பவர்: சுந்தா.)

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்


மந்திரம் ஏறிய புடவை!

எங்கள் ஊரில் பாகீரதி என்கிற ஏழை விதவை, தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன், வீட்டுக்கு வீடு வந்து புடவை விற்கும் வியாபாரியிடம் தன் பெண் பானுவுக்கு இரண்டு புடவைகள் கடனில் எடுத்துக் கொண்டாள். இரண்டு மாதங்கள் கழித்து வியாபாரி பணம் கேட்க வந்தபொழுது 'நான் புடவையே எடுத்துக்கொள்ளவில்லை' என்று ஒரேயடியாய்ச் சாதித்தாள். வியாபாரி அவளைக் கண்டபடி பேசிவிட்டுப் போய்விட்டார்.

மூன்று மாதங்கள் கழித்து வியாபாரி திரும்ப வந்தார்.

''கவனக் குறைவால் உங்கள் மனம் நோகச் செய்து விட்டேன். கணக்குப் புத்தகத்தைப் பார்த்தேன். உங்களுக்குப் புடவையே கொடுக்கவில்லை என்று தெரிய வந்தது. நான் பண்ணின தப்புக்குப் பிராயச்சித்தமாக இந்தப் புடவையை உங்கள் பெண் கட்டிக் கொண்டு வந்து எனக்கு நமஸ்காரம் பண்ணினால்தான் என் மனம் நிம்மதி யடையும்'' என்று ஒரு புடவையைக் கொடுத்தார். பானுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அப்புடவையை உடனே பிரித்துக் கட்டிக் கொண்டு வியாபாரிக்கு நமஸ்காரம் பண்ணினாள். அன்று இரவு உடம்பெல்லாம் மண்ணெண்ணெய் விட்டுப் பற்ற வைத்தது போல் திகுதிகுவென்று எரிய ஆரம்பித்தது. பானு அலறினாள். கட்டியிருந்த புதுப் புடவையை அவிழ்த்தெறிந்தாள். அப்படியும் எரிச்சல் குறையவில்லை. எவ்வளவோ வைத்தியம், மாந்திரீகம் எல்லாம் பாகீரதி பண்ணிப் பார்த்தாள். பிரயோசனமில்லை. இதற்கிடையில் பானுவுக்குப் பைத்தியம் பிடித்து, நிர்வாணமாகவே ஓர் உள்ளில் அடைந்து கிடந்தாள். ஒரு வருஷம் கழித்து அவள் இறந்து விட்டாள். வியாபாரி தான் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப் புடவையில் கடும் துர்மந்திரத்தைப் பிரயோகம் பண்ணிக் கொடுத்திருக்கிறார் என்று எல்லோரும் சொன்னார்கள். வியாபாரியைக் காணோம். அப்புறம் அவர் எங்கள் ஊரிப் பக்கமே வரவில்லை.

-வி.எஸ்.கே. மூர்த்தி



பொன் நகையும், புன்னகையும் என்றும் பொலிந்திட

எமது தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

69 ஆண்டுகளாக தங்க, வைர வியாபாரத்தில்
நம்பிக்கைக்குகந்த நிறுவனம் — பாபாலால்

நாணயமான நிகரில்லா வேலைப்பாடு நெஞ்சையள்ளும்
கலைச்சிறப்பு ஆபரண வகைகளில் உங்கள் எந்த தேவையையும்
பூர்த்தி செய்யக் காத்திருக்கிறது — பாபாலால்

வைரம், மாணிக்கம், மரகதம், நீலம், கோமேதகம் வேலைப்பாடு மிக்க தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் இன்னும் அருமையான பரிசு வகைகள் (Cups, Caskets, Trophies, Replicas)

ஒப்பில்லாத வேலைப்பாடுகளைக் காண எமது ஷோ-ரூமுக்கு
ஒருமுறை வருகை தாருங்கள்


பாபாலால் அண்டு கம்பெனி

(ஸ்தாபிதம்: 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்

ராட்டன் பஜார், சென்னை-600 003

தந்தி: "NECKLACE"   போன்: 32396 & 39573



இரக்கமற்ற இரவுகள்

ஹேமா ஆனந்ததீர்த்தன்

1

ஆஞ்சநேயா, கணேசா, முருகா, வெங்கடாசலபதி! — கராக்ரே வசதி லக்ஷ்மீ, கரமத்யே சரஸ்வதி, கரமூலேது கோவிந்த: ப்ரபாதே கர தர்ஸனம்'' என்று கூறி இரு கைகளையும் ஒன்றோடொன்று தேய்த்துவிட்டுக் கொண்டு கண்ணாடியில் முகம் பார்ப்பது போல இரு உள்ளங் கைகளையும் சில விநாடிகள் பார்த்துவிட்டு, சுவரில் மாட்டியிருந்த கடவுளர்களின் படங்களையெல்லாம் நோக்கிக் கும்பிட்டுவிட்டு, படுக்கையிலிருந்து ரவி எழுந்து கொண்டான்.

படுக்கையை அவன் சுருட்டிக் கொண்டிருந்தபோது ஹாலில் கடிகாரம் டங்...டங் என்று அடிக்கத் தொடங்கியது. மணி எவ்வளவு? ஏழா, எட்டா? ஏழுதான். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படி ஏழு மணிக்கெல்லாம் அவனால் எழுந்திருக்க முடிந்தது? ஒருவேளை தான் எண்ணியது தவறாக இருக்குமோ? அல்லது கடிகாரம் தான் சரியாக அடிக்கவில்லையோ?

வெளியே வந்து ரவி கடிகாரத்தைப் பார்த்தான். சந்தேகமில்லை. மணி ஏழுதான். அவன் தகப்பனார் ராகவன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து செய்திப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைச் சாதாரணமாக அவன் கண்டதே இல்லை. ஏனெனில் அவன் வழக்கமாக எழுந்திருந்து தன் அறையை விட்டு வெளியே வரும்போது — அதாவது எட்டு அல்லது எட்டரைக்கு அவர் குளியலை முடித்துக் கொண்டு பூஜை அறையில் ஸ்தோத்திர பாராயணங்களில் ஈடுபட்டிருப்பார்.

காப்பி குடித்துவிட்டு, சமையலறையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த உமா, ரவி எழுந்து வருவதைக் கண்டதும் ஆச்சரியத்தால் கண்கள் மலர, உதடுகளில் புன்னகை தவழ அப்படியே சிலை போல நின்றுவிட்டாள்.

''அண்ணா, இது நிஜம்தானா? என் கண்களை நான் நம்பலாமா? நிஜமாவே நீ எழுந்திட்டியா அல்லது தூக்கத்துலே எழுந்து நடந்து வர்றியா?'' என்று கேட்டாள்.

ரவி பதிலுக்குப் புன்முறுவல் பூத்தான். உமாவின் பேச்சைக் கேட்ட அவர்கள் தகப்பனார் ராகவன் செய்திப் பத்திரிகையைத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டு ஆச்சரியத்துடன் மகனைப் பார்த்தார்.

''ஆபீஸுக்குச் சீக்கிரம் போகணுமா என்ன?'' என்று கேட்டார்.



''இல்லையே.''

''பின்னே?''

''பின்னேன்னு கேட்டா? ஏதாவது காரணம் இருந்தால்தான் நான் சீக்கிரம் எழுந்திருக்கணுமாப்பா?''

''ஆபீசுக்குப் போகாமல் வேறெங்காவது ஊர் சுத்தப் போவான்'' — என்று உமா இடையில் புகுந்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, சும்மாத் தான்'' என்றான் ரவி.

மற்றொரு குரல் சமையற்கட்டிலிருந்து புறப்பட்டு ஹாலுக்குள் நுழைந்தது— ''உமா, அண்ணாவா பேசறான்? எழுந்துட்டானா?''

உமா பதில் சொன்னாள்: ''ஆமா உஷா. வந்து பாரு. அதிசயத்தை!''

உஷா ஓர் அதிசயத்தைப் பார்ப்பதுபோல ஓடிவந்து ரவியின் முன்னால் நின்று கொண்டு உதட்டின் மீது இரு விரல்களை வைத்துக் கொண்டு கண்கள் சிரிக்க ஆச்சரியப்பட்டாள். அடுத்த கணம், ''அம்மா, அம்மா! நீயும் வா. உனக்கும் எனக்கும் இன்னிக்கு ஒரு வேலை குறைஞ்சுட்டது. ஒன்பது தடவை நீயும், பதிமூணு தடவை நானும் உருட்டி உருட்டி எழுப்பிய பின் எழுந்திருக்கும் உன் அருமைப் பிள்ளை இன்னிக்கு யாரும் எழுப்பாமலே தானே எழுந்துட்டான். வா, வா, வந்து திருஷ்டி சுத்திப் போடு'' என்று குரல் கொடுத்தாள்.

''என்னடீது? எல்லாருமாச் சேர்ந்துண்டு அமர்க்களம் பண்றீங்க? ஒரு நாள் சீக்கிரமா எழுந்துட்டதுக்கு? வேணுமானா மறுபடியும் போய்ப் படுத்துண்டுடட்டுமா?'' என்று கேலியாகக் கூறிக் கொண்டே ரவி மீண்டும் தன் அறையை நோக்கித் திரும்பினான்.

''டேய், போய்ப் பல்லைத் தேய்டா சோம்பேறி'' என்று ராகவன் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

ரவி சிரித்துக் கொண்டே புழக்கடைப் பக்கம் சென்றான்.

பல்லைத் தேய்த்துவிட்டு ரவி காப்பி சாப்பிடச் சமையலறைக்கு வந்ததும் உமாவும் உஷாவும் அங்கே தாயார் ஜானகியுடன் இருந்தார்கள். உமா தகப்பனாரின் பூஜைக்காகப் பூத் தொடுத்துக் கொண்டிருந்தாள். உஷா கீரை ஆய்ந்து கொண்டிருந்தாள்.

''அம்மா, அண்ணாவுக்கு இன்னிக்குக் காப்பி கொஞ்சம் ஸ்பெஷலாகவே இருக்கட்டும்'' என்றாள் உமா சிரித்துக்கொண்டே..

''ஏன் தெரியுமாம்மா? இன்னிக்குச் சம்பளத் தேதி. அண்ணா முதல் மாசச் சம்பளம் வாங்கப் போறான்'' என்றாள் உஷா.

ஜானகி வாத்சல்யம் நிரம்பிய பார்வையால் தன் மூன்று மக்களையும் பார்த்து, முகம் மலர, காப்பித் தம்ளரை ரவியின் கையில் கொடுத்தாள்.

''அண்ணா, நான் கேட்டதை மறந்துடாதே'' என்றாள் உமா.

''என்னடி கேட்டிருக்கே, எங்களுக்கெல்லாம் தெரியாமல்? அண்ணா, அதெல்லாம் முடியாது. அவளுக்கு என்ன வாங்கிண்டு வரப்போறியோ அது எனக்கும் வேணும்'' என்றாள் உஷா.

ரவி தன் இரு தங்கைகளையும் பார்த்துப் பெருமையுடன் சிரித்தபடியே காப்பியைப் பருகலானான்.

''உனக்கொண்ணும் வேண்டாமாம்மா?'' என்று தாயாரைப் பார்த்துக் கேட்டான்.

''நான் என்னத்தைப்பா கேட்கப் போறேன்? உன் பிரியத்துக்கு நீயா எதைக் கொண்டு வந்து ஆசையாக் கொடுத்தாலும் வாங்கிக்கிறேன்... உங்கப்பாவுக்கு என்ன வாங்கிண்டு வரப் போறே?''

''பார்த்தியா, பார்த்தியா? அம்மாவுக்கு எப்பவும் அப்பாவைப் பத்தித்தான் அக்கறை!'' என்று உஷா குற்றம் சாட்டினாள். ஜானகியின் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

''சாயங்காலம் நான் ஆபீஸிலிருந்து திரும்பி வர்றதுக்கு நேரமாகும். கவலைப்பட ஆரம்பிச்சுடாதே அம்மா'' என்றான் ரவி.

''ஏன்?''

''எல்லார்க்கும் ஒவ்வொண்ணைப் பார்த்து பிரசண்ட் வாங்கிண்டு வரவேண்டாமா?''

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

விழிப்பூட்டிய அன்னையின் ஆவி!

சுமார் ஒரு வருடத்துக்கு முன் ஒரு தனியார் பஸ் கம்பெனியில் டிரைவராகப் பணியாற்றி வந்தேன்.

அன்று இரவு ரொம்பக் களைப்பாக இருந்தது. பஸ் ஓட்டும்போது தூக்கம் கண்ணைச் சுழற்றியது. மார்க்கம்பட்டி என்ற ஊரில் பஸ்ஸை நிறுத்தி டீக்குடிக்க எண்ணியபோது, கண்டக்டர் மறுத்து ''நிறுத்தக் கூடாது. கலெக்ஷன் கெட்டுவிடும்'' என்று கூறிவிடவே, தூக்கத்தோடு வண்டியை ஓட்டி வந்தேன்.

வண்டியில் சுமார் 25 பிரயாணிகள். வண்டி இறக்கத்தில் வேடசந்தூரை நோக்கி மிகவும் விரைவாகப் போய்க் கொண்டிருந்தது. தூறல் வேறு.

திடீரென நான் தூங்கிப் போய் விட்டேன். 'பளார்' என்று ஓர் அறை என் முதுகில் விழுந்தது. விழிப்புத் தட்டியது. விரைந்து சென்ற வண்டி, ரோட்டின் இடதுபுற விளிம்பைத் தொட முயன்று கொண்டிருப்பதைக் கண்டு கைகள் சுறுசுறுப்பு அடைந்தன. ''ஏன்டா, உன்னை நம்பி எத்தனை பேர்கள் உள்ளார்கள், அவர்களைக் கொல்லப் பார்த்தாயே? இதுதான் நீ வண்டி ஓட்டும் லட்சணமா?'' என என் அருகில் இறந்த என் தாயின் குரல் போலக் கேட்டது.

திடுக்கிட்டுப் பின்புறம் திரும்பி யார் என்னை அடித்தது என்று பார்த்தால் ஒருவரையும் பக்கத்தில் காணவில்லை. அனைவரும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். ஆவி வடிவில் வந்து உயிர் காத்த என் தாயாருக்கு நன்றி செலுத்தினேன். அன்று முதல் எனக்கு வண்டி ஓட்டும்போது தூக்கமே வருவதில்லை. ஆர். செல்வராஜ்





காசு செய்யாத காரியத்தை கொசுவர்த்திச் சுருள் செய்யும்!

டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்



கொசுத் தொல்லையற்ற நிம்மதியான தூக்கத் திட்டத்திற்கு உதவுவது


டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்



கொசுக் கூட்டத்தை அடக்குவதற்கு

டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்

டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்



தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

everest/80/BCL/102-tm

நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



நிர்லான்

நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254—B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு,
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை—600 018

லின்டாஸ்-NIR-12-203 TM

''அதுக்காக நீ கன்னு பின்னுன்னு பணத்தைச் செலவழிக்காதேடாப்பா'' என்றாள் தாய்.

''போம்மா நீ ஒன்னு. குறுக்கே விழுந்து தடுத்துண்டு. அண்ணா, நீ மாத்திரம் கொண்டு வராம இருந்தாத் தெரியும் சேதி'' என்றாள் உமா.

''ஆமா, எனக்கும்தான்'' என்று சேர்ந்து கொண்டாள் உஷா.

''யாருக்கு வாங்கிண்டு வந்தாலும் வரா விட்டாலும் உங்க ரெண்டு பேருக்கு மட்டும் வாங்கிண்டு வராம இருக்க மாட்டேன்.... சரி சரி, நான் குளிக்கப் போறேன். கோவிலுக்குப் போகணும்'' என்று ரவி எழுந்தான்.

''அநுமார் கோயிலுக்கா?'' — உமா.

''ஆமா.''

''இன்னிக்கி என்ன எல்லாமே அதிசயமா இருக்கு! நானைக்குத்தான் அன்னு சனிக்கிழமை'' என்றாள் உஷா.

''நீதான் அப்பவே சொல்லிட்டியே உஷா, இன்னிக்கு எனக்கு எல்லாமே ஸ்பெஷல்னு? அதனாலேதான்'' என்று கூறிவிட்டு ரவி சமையலறையை விட்டு வெளியேறினான்.

குளிக்கும்போதும், டிரெஸ் செய்துகொள்ளும்போதும் எல்லாம் ரவியின் மனம் இனம் தெரியாத ஓர் இன்பத்தால் துள்ளிக் கொண்டிருந்தது. முதல் மாதச் சம்பளம் வாங்கப் போகும் ஆனந்தம். ஐந்நூறு ரூபாய்க்கும் மேலே! முதன் முதலாக அவன் உழைத்துச் சம்பாதித்தது. அவன் மனம் என்னென்னவோ கோட்டைகளைக் கட்டியது.

அப்பா, அம்மா, தாத்தா, உமா, உஷா எல்லாருக்கும் ஏதாவது தன் அன்பளிப்பாக வாங்கிக் கொண்டு வர வேண்டும். பாக்கி சம்பளப் பணம் முழுவதையும் அப்பாவின் கையில் கொடுத்துவிட்டு அவரை வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும். தண்ணித் துறை அநுமாருக்கு வடை மாலை சாற்ற வேண்டும்.... இப்படியாகப் பலப் பல ஆசைகள். ஆனால் தனக்கு என்ன வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அவனுக்கு நினைக்கத் தோன்றவில்லை.

சைக்கிளை எடுத்துக் கொண்டு அவன் வெளியே இறங்கியதும் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த அவன் தாத்தா பலராமன் வியப்போடு அவனை நோக்கினார்.

''ஆபீசுக்கா புறப்பட்டுட்டே? வேட்டி கட்டிண்டிருக்கியே?'' என்று கேட்டார்.

''இல்லே. கோவிலுக்குப் போயிட்டுவரேன்'' என்று கூறி மேலும் அவரது கேள்விகளுக்கு இடம் கொடாமல், சைக்கிளில் ஏறி அமர்ந்து கொண்டு புறப்பட்டு விட்டான்.

புத்திர்பலம் யசோதைர்யம்
நிர்ப்பயத்வம் அரோகதா அஜாட்யம்
வாக்படுத்வம் ச ஹநுமத்
ஸ்மரணாத்பவேத்

என்ற சுலோகத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே. அநுமார் கோவிலையும் ஸ்ரீராமர் கோவிலையும் மூன்று முறை வலம் வந்து ஆஞ்சநேயர் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய
வேதஸே — ரகுநாதாய நாதாய
சீதாயா பதயே நம:

என்ற மந்திரத்தை உச்சரித்து ஸ்ரீராமர் முன்னால் விழுந்து வணங்கி எழுந்திருந்தான்.

''நாளைக்குத்தானே சனிக்கிழமை? நாளை வரமாட்டேனா?'' என்று கேட்டார் தீபாராதனைத் தட்டை அவன் முன்னால் நீட்டிய அர்ச்சகர்.

''வருவேன், வருவேன்'' என்றான் ரவி.

வெளியே வந்து அங்கே விட்டிருந்த செருப்பைக் கால்களில் மாட்டிக் கொண்டிருந்த போது, ''ரவி!'' என்ற பழக்கமான குரல் தேனாக அவன் காதுகளில் பாய்ந்தது. திரும்பிப் பார்த்தான்.

''ராதா!'' — ரவியின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன.

''ரொம்ப எதிர்பாராத சந்திப்பா இருக்கே?'' என்றாள் ராதா.



ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

இங்கு நண்பன், அங்கு யார்?

பள்ளியிலும் சரி. எக்ஸ்கர்ஷன் போகும்போதும் சரி நானும் எனது நண்பன் ஸ்ரீனிவாசனும் ஒருவரை ஒருவர் பிரியவே மாட்டோம்.

தஞ்சையில் பார்க்க வேண்டிய பிருகதீஸ்வரர் கோவில் சரஸ்வதி மகால் போன்ற பல இடங்களைப் பார்த்தாயிற்று. அன்றிரவு பேய் மழை பிடித்துக் கொண்டதால் சத்திரம் ஒன்றில் இரவு தங்கிவிட்டுக் காலையில் புறப்பட ஏற்பாடாயிற்று.

இரவு சாப்பாட்டு சமயம். சத்திரத்து விளக்கெல்லாம் அணைந்து போயின. நெருக்க கொள்ளாத நிலைதான் இருந்தது. ஒரே மையிருட்டு. ஸ்ரீனிவாசா, ஸ்ரீனிவாசா என்று கூவத் தொடங்கினேன். அருகிலிருந்த பையன் ஒருவனின் கைகளைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு, நான் 'ஸ்ரீனிவாசா' என்று கூவ, மின்னல் ஒன்று வெட்டியது. அதன் ஒளியில் சிறிது தூரத்தில் ஸ்ரீனிவாசன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆனால்...ஆனால் என் கைகளைப் பற்றியிருந்த பையனோ ''ஏண்டா பாலு! நான்தான் ஸ்ரீனிவாசன். உன் அருகிலேதானே இருக்கிறேன். என் கைகளைத்தானே பற்றியிருக்கிறாய்?'' என்றான். என்னுள் இருந்த பயம் விசுவரூபம் எடுத்து நான் மயங்கி விழுந்தேன். விளக்குகள் வந்த பிறகு தான் நான் கண் விழித்திருக்கிறேன். தலையில் இனம் புரியாத வலி. ஸ்ரீனிவாசன் என் அருகில்தான் இருந்திருக்கிறான். அப்படியென்றால் மின்னல் வெட்டில் தூரத்தே தெரிந்த ஸ்ரீனிவாசன்....? பத்து வருடங்கள் அந்தத் தலைவலி போகவில்லை. பல மாந்திரீகர்கள், தேவி உபாசகர்கள், கிறிஸ்துவ சமய சாமியார்கள், முஸ்லிம் மௌல்விகள் ஜெபித்துச் சமீபத்தில்தான் அந்தத் தலைவலி போயிற்று.

என். பாலசுப்பிரமணியன்

''என்னமோ தோணித்து இன்னிக்கு வரணும்னு. நீ என்ன இப்படி திடீர்னு?''

''எனக்கும் அப்படியேதான்'' என்று கூறி ராதா கலகலவென்று சிரித்தாள்.

ஒரு கூடை ரோஜாப் பூவைத் தன் மீது கொட்டியது போலிருந்தது ரவிக்கு.

''காலை வேளையிலே நீ பார்க்கறதுக்கு எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா, ராதா?''

''ஸ்ஸ்... இது கோவில். யார் காதிலேயாவது விழப் போறது!''

''இன்னிக்கு நான் உனக்கு ஃபோன் செய்யணும்னு நெனைச்சுண்டிருந்தேன்.''

''ஏதாவது விசேஷமா?''

''ஒண்ணும் இல்லே. சும்மாத்தான்.''

''பொய்.''

''நாளைக்கு ஏதாவது எங்கேஜ்மெண்ட் வெச்சுக்கலாமான்னு கேக்கத்தான்.''

''ஓ.கே. நாளைக்கென்ன, சனிக்கிழமை தானே? ஐ எம் ரெடி. எங்கே போகலாம்?''

''அதை நான் இன்னும் நிச்சயம் பண்ணலே. இன்னிக்கு முடிஞ்சா சாயங்காலமா நான் உனக்கு 'ரிங்-அப்' பண்றேன். இல்லேன்னு, நாளைக்குக் காலையிலே... ஆர், நீ 'ரிங்-அப்' பண்றதுனா சரிதான்.''

''அச்சா! அப்ப நான் வரட்டுமா?''

''சரி. சுவாமி தரிசனம் முடிஞ்சதும் தேவி தரிசனமும் கிடைச்சது என் பாக்கியம் தான்'' என்று ரவி புன்னகைத்தான்.

ராதாவுக்கு உடல் சிலிர்த்தது. மெய்யெல்லாம் ஆசையாக ரவியை ஒருமுறை தலை முதல் கால்வரை பார்த்துப் பெருமூச்சு விட்டபடி ''பை, பை ரவி'' என்றாள்.

''பை, பை'' என்று கூறி ரவியும் விடை பெற்றான்.

ரவி அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மணி ஒன்பதரை அடித்து விட்டது.

''அண்ணா, ராமு வந்தாச்சு'' என்று உமா சொன்னாள்.

''இதோ ஆச்சு. உள்ளே வந்து உட்காரச் சொல் அவனை.... ஆமா, நீ காலேஜுக்குப் போகலையா?''

''இல்லே.''

''ஏன்?''

''வயிறு வலிச்சுண்டே இருக்கு. பார்த்துண்டு, ஒண்ணும் இல்லேன்னா மத்தியானம் போகலாம்னு இருக்கேன்.''

''அப்படி என்ன காலேஜ்? போனால் போறது ஒரு நாள். மட்டம் போட்டுடு. மத்தியானம் வெய்யில்லே ஒண்ணும் போக வேண்டாம்.''

''சரி.''

''அவசியமிருந்தா டாக்டர் வீட்டுக்குப் போயிட்டு வா.''

''ஊம்.''

அலம்பிய கையைத் துடைத்தபடியே ஹாலுக்கு வந்தான் ரவி.

''என்னடா லேட்டு?'' — ராமு.

''லேட்டாப் போச்சுடா.''

''சரி. சீக்கிரம் கிளம்பு.''

''ஒன் மினிட்.''

டார்க் பிரௌன் நிறத்தில் டெரிகாட் பாண்டும், க்ரீம் கலர் டெரினின் ஸ்லாக்கும் போட்டுக் கொண்டு சுருள் சுருளாய், அலையலையாக அமைந்த கூந்தலை அலட்சியமாக வாரிவிட்டபடி ரவி, ராமுவின் எதிரே வந்து நின்றான்.

''ராஜா மாதிரி இருக்கேடா. ஐ என்வி யூ'' என்றான் ராமு.

''நீ சொல்லி என்னடா பிரயோஜனம்? பிரம்மச்சாரி. பெண்ணைப் பெத்து வெச்சிருக்கிறவன் எவனாவது சொன்னாத் தேவலை'' என்று ரவி சிரித்தான்.

இருவரும் பிறகு சைக்கிளில் புறப்பட்டனர். மௌண்ட் ரோட்டிலுள்ள அவர்கள் ஆபீசை நோக்கி.

ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட ஆபீஸ் ஹாலில் கதவைத் திறந்துகொண்டு நுழையும்போதே டெலிஃபோன் ஆபரேட்டர் நளினி ரவியைப் பார்த்து முறுவலித்தாள்.

''குட்மார்னிங் நளினி!''

''குட் மார்னிங் ரவி!''

குட் மார்னிங் கோபால், குட்மார்னிங் வெங்கட், குட்மார்னிங் ஜான்.... என்று எதிர்ப்பட்டவர்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்தியும், பதில் வணக்கம் பெற்றுக் கொண்டும் ரவி தன் மேஜையை அடைந்து

ஆட்டிப் படைக்கும் ஆவி [illegible]

காய்கள் மறைந்த மாயம்!'

அப்பொழுது நான் திருச்சியில் இருந்தேன். தினமும் மாலை வேளையில் என் நண்பர் ஒருவர் வீட்டில் கேரம் விளையாடுவோம். ஆட்டம் இரவு ஒரு மணிவரைகூட நீடிக்கும். அவர் இருந்ததோ ஒரு ஸ்டோரில். பக்கத்துப் போர்ஷன்காரர்களுக்கு ஆட்டமும் சத்தமும் இடைஞ்சலாக இருந்தது. அவர்கள் என் நண்பரிடம் பல தடவை புகார் செய்தனர். எனினும் எங்கள் ஆட்டம் தொடர்ந்தது.

சில நாட்களுக்குப் பிறகு திடீர் திடீரென்று காரம் காய்கள் மறையத் தொடங்கின. எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. ஒரு வாரத்துக்குள் நாலைந்து செட் காய்கள் மறைந்து விட்டன. நாங்களும் சளைக்காமல் புது செட் காய்கள் வாங்கினோம். ஆனால் நண்பர் வீட்டில் அனைவருக்கும் பயம் வந்து விட்டது.

நண்பரின் தமக்கை ஏதோ ஒரு ஸ்வாமிகளிடம் சென்று சொன்னாள். அவர் ''உங்கள் வீட்டில் சத்தம் போட்டு ஆடுவதால் மந்திரம் தெரிந்த ஒருவர் ஒரு துர்த் தேவதையை ஏவி விட்டிருக்கிறார். அரூபமாக அது வந்து காய்களை எடுக்கிறது'' என்றார். அவரிடமிருந்து விபூதி வாங்கி வீட்டில் தெளித்ததும் காய்கள் மறைவது நின்றது.

சில நாட்கள் கழித்துப் பக்கத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மறைந்து போன காய்கள் சிதறிக் கிடந்தன!

டாக்டர் ஆர். வேங்கடாச்சாரி



உட்கார்ந்து கொண்டான். அவன் பின்னாலேயே வந்து கொண்டிருந்த ராமுவை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவனும் யாரையும் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

''குட் மார்னிங் ஸார்!''

குரலைக் கேட்டு ரவி தலை நிமிர்ந்து பார்த்தான். பியூன் திருவேங்கடம் நின்றுகொண்டிருந்தான்.

''என்ன திருவேங்கடம்?''

''ஒண்ணுமில்லே சார்'' என்று தலையைச் சொறிந்தான்.

''அப்ப ஏன் தலையைச் சொறியறே?''

திருவேங்கடம் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

''சார் கோபிச்சுக்கக் கூடாது.''

''விஷயத்தைச் சொல்லு. இந்த ஒரு மாசத்துலெ நான் என்னிக்காவது யாரை யாவது கோபிச்சுண்டு பார்த்திருக்கியோ?''

''சேசே.''

''ஊம். எனக்கு வேலை இருக்கு.''

''சாயங்காலம் ஒரு அம்பது ரூபாய் வேணும் சார்.''

ரவிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''டேய், டேய், என்னடாது இன்னிக்கி உனக்குச் சம்பளம் வராதா?''

''வரும் சார்.''

''பின்னே? சம்பளம் வாங்கறன்னிக்கே கடனையும் வாங்கிவிட்டு எப்போ திருப்பிக் கொடுப்பே?''

''சம்பளம் இருநூத்தி ஏழு ரூபாய்னு பேரு சார் எல்லா டிடக்ஷனும் போக தொண்ணூறு ரூபாய்கூட கைக்கு வரலே சார்... லோன் போட்டிருக்கேன், இந்நூறு ரூபாய். சாங்ஷன் ஆனதும் திருப்பிக் கொடுத்திடறேன் சார்.''

''சரி பார்க்கலாம்.''

''ஐயையோ! அப்படியெல்லாம் காமராஜ் கணக்கா சொல்லாதே சார். நீதான் உதவி செய்யணும். வேறே யாரும் செய்ய மாட்டாங்க. தயவு பண்ணு சார். சரின்னு சொல்லு சார்.'' திருவேங்கடம் கெஞ்சினான்.

''சரி, போ''

திருவேங்கடத்தின் முகம் மலர்ந்தது. ''தாங்க்ஸ் சார்'' என்று கூறி அங்கிருந்து நகர்ந்தான்.


ரவி மேஜை டிராயரைத் திறந்து தன் ஃபைல்களை அணி செய்து கொண்டிருந்த போது, ''அப்பா ரவி'' என்று அழைத்தபடி அக்கவுண்டண்ட் ராவ்ஜி அவனருகே வந்தார்.

''குட் மார்னிங் சார்'' என்று ரவி எழுந்து நின்றான்.

''உட்காரப்பா.... சேவிங்ஸ் பாங்க் பி கௌண்டர் கொஞ்சம் பாத்துக்கறியா? பேபி குட்டி லீவ். இன்னிக்கு ஒரு நாள்.''

''இந்த கரண்ட் அகவுண்ட் பேலன்சிங் முடியலையே சார். கவுண்டர்லே போய் உட்கார்ந்துட்டா இது இப்படியே நின்னுபோயிடுமே?''

''பரவாயில்லே ரவி. நீ இதையும் எடுத்துண்டு கௌண்டருக்குப் போ. கௌண்டர்லே கொஞ்சம் ரெஸ்ட் கிடைக்கறச்சே இதையும் பாரேன்.''



ஆட்டிப் படைத்த ஆவி வாகனம்

ஸ்டூல் சோதிடம்!

மே 1ம் தேதி ''தொழிலாளர் தினம்''. அன்று விடுமுறை விட மறுத்த கம்பெனிக்கு எதிராக நாங்கள் ஒட்டு மொத்தமாகச் சிறு விடுப்பில் (Casual Leave) சென்றோம். இச்செயலுக்குத் தண்டனையாக என்னையும் என்னுடன் மேலும் இருவரையும் வேலையை விட்டு நீக்கியது அந்தக் கம்பெனி. இதை எதிர்த்து நாங்கள் வழக்காடினோம். அக்காலத்தில் இது போன்ற வழக்குகள் முடிய பல ஆண்டுகள் ஆகும். மேலும் எங்களுக்கு வேலை திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை.

ஸ்டூல் அடிப்பை 'வழவழ' என்றுள்ள தரையில் கோல மாவின் மேல் வைத்து இருவர் பிடித்துக் கொள்ள, அது தானாக நகர்ந்து நாம் நினைக்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் முறையை என் மனைவியும் நானும் கடைப்பிடிக்க, அதை இயக்கிய ஆவி எனக்கு அந்த வருடம் சுதந்திர தினத்துக்கு முன்பாகவே வேலை திரும்பக் கிடைக்கும் என்றும் அந்தச் சுதந்திர தினம் எங்கள் போராட்டத்தின் வெற்றி நாளாக அமையும் என்றும் எழுதியது.

இதை என்னுடன் வேலையிழந்த நண்பர்கள் மற்றும் பலருக்கும் நான் தெரிவிக்க, அவர்கள் என்னை விசித்திரமாகப் பார்த்தார்கள். ஆனால் என்ன ஆச்சரியம்! அந்த வருடம் ஆகஸ்ட் 13ம் நாள் நாங்கள் நிரபராதிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மனமகிழ்ந்த நானும் என் மனைவியும் மறுநாள் அந்த ஸ்டூல் ஆவியை மறுபடியும் அழைக்க, அது, ''இனி என்னைக் கூப்பிடாதீர். நான் இல்லாத சமயத்தில் வேறு கெட்ட ஆவிகள் வந்து உங்களைத் தவறான வழியில் நடத்திச் செல்லும். உங்கள் வீட்டிலேயே யாரையாவது பிடித்து ஆட்டும்'' எனக் கூறியது.

அன்று முதல் எங்கள் ஸ்டூல் இந்த ஆவி விவகாரத்துக்காக உபயோகிக்கப்படவே இல்லை.

-என். ஸ்ரீராம்


''சரி சார்'' என்று பாலன்சிங் ரிஜிஸ்தரையும் தூக்கிக் கொண்டு ரவி கௌண்டருக்குப் போனான்.


மணி பன்னிரண்டிருக்கும். ரவி தலை குனிந்தபடி எண்களைக் கூட்டிக் கொண்டிருந்தான்.


''ரவி'' என்ற குரலைக் கேட்டுத் தலை நிமிர்ந்தான். எதிரே அண்ணன் பாலு நிற்பதைக் கண்டு ரவி திடுக்கிட்டான்.

''சம்பளம் வாங்கிட்டியாடா ரவி?'' என்று பாலு வெடி குண்டைத் தூக்கி வீசியதும் ரவிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவன் மனம் குழம்பியது.

(தொடரும்)


1
TV
TV
2
TV






திகில் சிரிப்பு! –2


Our table fan has only one serious rival.

The ceiling Rallifan.



Rallifan Delite

* Special blade contour for wider air distribution
* Efficient, silent performance at 3 working speeds
* Rust-proof plated guard
* A choice of 5 colours



Rallifan Superstar

* Sleek, elegant design results in silent, wobble-free operation
* Unique blade design to spread a wider cone of <u>even</u> breeze
* **Accurately matched blades' and double ball bearings for longer motor life**
* Stove enamel finish keeps it looking new—for years!

Backed by Rallis reliable after sales service.

Rallifan

stands the test of time—beautifully

ULKA-RF-44

மயான மனிதர்கள்

-கணபதி-

பெங்களூர் நவரங் தியேட்டரிலிருந்து நேராக நடந்து வந்தால் தேவய்யா பார்க். சாதாரண சின்னச் சின்ன வீடுகள், மலையாளப் பட போஸ்டர்கள், பாங்குகள், சிகரெட் கடைகள், மிளகாய் பஜ்ஜி ஆலு போண்டா. பக்கத்தில் ஸ்ரீராமபுரம். இங்கு ஒரு மயானம். அங்கே ஒரு மண்டபம். இதை மார்ச் 1ந் தேதி மாலை நான்கு மணிக்குப் போலீஸார் வாரண்டுடன் வந்து திடீர் சோதனை யிட்டனர். அங்கு பாபா லட்சுமணகிரி – 68 வயசு, ஏழரை அடி நீளக் கூந்தல்– அன்றைய பௌர்ணமிக்கு அவர் நடத்தப் போகும் பூஜைக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். உடன் லட்சுமம்மா (50) சண்முகம் (35), கிருஷ்ணய்யா (52). சிஷ்யர்களாம். போலீஸார் இவர்களை வளைத்துப் பிடித்துக் கைது செய்தார்கள். காரணம் போலீஸார் அங்கு கண்டவை; மனித ரத்தம் படிந்த ஒரு சங்கு, விநோத கவடுகள் பதிந்த ஓர் சயத் தட்டு, காளியின் படம், தந்த்ர சாஸ்திரத்தைப் பற்றி ஒரு புத்தகம்.

பாபாவின் காளி பூஜைக்கு முதல் தேவை மனித ரத்தம். மனித ரத்தம் சேகரிக்க இவர்கள் கையாண்ட செய்முறை? – பாபா, சண்முகத்துக்கு ஒரு குழந்தையைக் காட்டிய பின் அக்குழந்தையைத் தனியான இடத்துக்கு அழைத்துச் சென்று கழுத்தில் கத்தியால் ஓர் ஆழ வெட்டு; குபுக்கென்று ரத்தம் பொங்க ஒரு புட்டியில் அதைச் சேகரிப்பார் – சேகரிப்பார் என்ன? சேகரிப்பான். இதற்கு பாபாவிடமிருந்து சண்முகத்துக்குக் கிடைப்பது சிறிது பணம், கொஞ்சம் ஆசிர்வாதம். எதற்கு? நீண்ட ஆயுள் பெற! இந்த விநோத, விபரீதச் செயல்களுக்கு ஆதாரம் தந்திர சாஸ்திரம்.

தந்திரக் கலையைக் கற்றுப் பழகுபவர்களை உயர்வகை, தாழ்வகை என்று இரண்டாகப் பிரிக்கலாம். தாழ்வகைத் தந்திரிகள் நரபலி, புனஸ்காரங்கள் (Rituals, Occultism) போன்றவைகளைச் செய்து, மற்றவர்கள் மீது வசிய சக்தி, நீண்ட ஆயுள் போன்றவைகளைப் பெற முயற்சி செய்வதுண்டு. (பெட்டிக்குள் இன்னும் கொஞ்சம் தந்த்ரம்).

மனம் கலந்த ஆண் பெண் சேர்க்கை(Pyschosexual Union) தந்த்ரத்தில் முக்கியமான அம்சம். இதனால் தானோ என்னவோ பெங்களூரின் தமிழ் நாளிதழ் ''தினமலர்'' லட்சுமம்மாவை பாபாவின் ''காதலி'' என்று கூறியது. மேலும் தினமலருக்கு லட்





17ம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து 19ம் நூற்றாண்டின் முதல்வரை பிரஞ்சு நாட்டவர் ஹாய்டீ என்னும் பசிபிக் தீவில் அடிமைகளைக் குடியேற்றினர். அவ்வடிமைகள் ஆப்பிரிக்காவின் மதங்களிலிருந்து ஆங்காங்கே சிறிது சிறிது எடுத்து வளர்த்த ஒரு மதம் இந்த வூடு. தாஹோமி என்ற நாட்டில் பரவலாகக் காணப்படும் மதத்துக்கும் வூடுவுக்கும் அதிக ஒற்றுமை காணப்படுகிறது. இதில் ஒரு பெரிய அதிசயம் ஹாய்டீயில் வூடு பழகும் மக்கள் மிகவும் பக்தி கொண்ட ரோமன் கத்தோலிக்கர்கள்.

வூடுவை ஒரு மதம் என்று பார்த்தவர்கள் அதைப் பல்வேறாகக் குறிப்பிடுகிறார்கள். கருத்துக்கள் ''மூடநம்பிக்கை''யிலிருந்து ''கடவுள் வடிவங்களில் உண்மையான வெளிப்பாடு'' வரை மாறுபடுகின்றன.

வூடுவின் மத்திய அம்சம், ''லோஆ''க்களை வணங்குதல். ''லோ ஆ'' உபதேவர்கள். தேவர்களாக்கப்பட்ட முன்னோர்களும் லோ ஆவாகலாம். வூடு பழகும் அநேகர் கத்தோலிக்கர்களாதலால் லோ ஆக்களைப் புனித ஆத்மாக்களுடன் ஒப்பிடலாம். ஒவ்வொரு லோஆவிற்கும் ஒரு தனி நிறம் உண்டு. தனியாகக் கூப்பிடும் முறையுண்டு. வாரத்தில் ஒரு நாள் உண்டு. பாடல்கள் உண்டு. விநோதக் கோலங்கள் உண்டு. ஒரு பக்தனை லோஆ பிடிக்கும்போது அதற்கெனத் தனியான அறிகுறிகளும் உண்டு. ஆப்பிரிக்க மதங்களில் ஒருவனது வாழ்நாளில் ஒரே ஒரு சாமிதான் திருப்பித் திருப்பி வரும். ஆனால் வூடுவில் எந்த லோஆ வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து அரை மயக்க நிலை ஏற்படுத்தி, நடனமாட வைத்து அருள் வாக்கும் அளிக்கலாம். சில வேளைகளில் மிருக பலியும் ஏற்கப்படும். ஆயினும் குல தெய்வங்கள் போல் அங்கு குல 'லோஆ'க்களும் உண்டு.

இதை இதுவரையில் படித்துவிட்டு வூடு என்றால் ஏன் எல்லோரும் பயப்படுகிறார்கள், ஒன்றுமில்லையே என்று எண்ணுகிறீர்கள். ஏவிவிடுதல், உயிருடன் இருப்பவர்களைப் பிணமாக ஆக்கிவிடுதல் போன்றவைகளும் உண்டு. இவைகளிலிருந்து தனது பக்தர்களைக் காப்பதும் ஒரு லோஆவின் கடமை.

சாமி பிடித்தல்: ஒருவனது நடத்தையிலிருந்து ஒரு வெளிப்புற சக்தி அவனைக் கொண்டிருக்கிறது, அவனை நடத்தி வைக்கிறது என்று கூறலாம். இதன் அறிகுறிகள் — அர்த்தமற்ற, சம்பந்தமில்லாத வார்த்தைகள், கதறுதல், வன்மையான விபரீதச் செயல்கள், பக்தியுடன் இருப்பவர் திடீரெனத் திட்டத் தொடங்கலாம், புண்ணிய மனிதர்கள் அல்லது பொருட்களைக் கண்டால் பயப்படலாம், வெறுப்பு ஏற்படலாம்.

நூறு வருடங்களுக்கு முன் காக்கை வலிப்பால் தவிப்பவர்களை ''சாமி பிடித்து விட்டது'' என்று பக்தியுடன் துடிக்க விட்டிருப்பார்கள். இப்பொழுது அதற்கு மருத்துவம் 'எபிலெப்ஸி' என்று பெயர் கொடுத்து, குணப்படுத்த முயற்சி செய்கிறது. அதே போல் மற்ற அறிகுறிகளை ஹிஸ்டீரியா, சோம்நாம்புலிஸம், ஸ்கிட்ஸோப்ரீனியா என்று கூறி மருந்தின் மூலமாகவோ அல்லது சமூக சைக்காலஜி யாலோ குணப்படுத்த முயற்சிசெய்கிறது. இந்தச் சிகிச்சையில் இப்பவும் கடக்க வேண்டிய தூரம் அதிகம்.


சும்மா ஜெயிலிலிருந்து ஒரு கடிதம் எழுதினனாம். அதில், பாபாவின் உதவியை நாடிய மற்றொரு பெண்ணுடன் பாபா அந்நியோன்னியமாக இருந்ததாகக் கூறியிருக்கிறான்.

1975ம் ஆண்டு ரகு என்னும் ஐந்து வயதுச் சிறுவனும், மறு ஆண்டு சுதா என்னும் ஆறு வயதுச் சிறுமியும் தாக்கப்பட்ட பொழுது ''அஸால்ட் கேஸ்'' என்று போலீஸார் கேஸை மூடி விட்டார்கள். ரகுவும் சுதாவும் பிழைத்து விட்டதால் அவை கொலைக் குற்றமெனக் கருதப்படவில்லை. (இன்று சுதா கழுத்தில் இருக்கும் நான்கு இன்ச் பித்தளைக் குழாய் மூலம் சுவாசிக்கிறாள்.) மூன்றாவது ஒரு சிறுமி, பெயர்செல்வி, வயது 6. பிழைக்கவில்லை. இது நடந்தது 1977ம் ஆண்டு. இந்தக் கேஸையும் ஏறக்குறையக் கைவிட்டு விட்டார்கள். பிறகு மே 1979ம் ஆண்டு வசந்தா—வயது இரண்டரை- ஹொசஹள்ளியில் ஒரு சாக்கடையில் கழுத்து வெட்டுண்டு கிடந்தாள். அருகில் பூஜை செய்த அடையாளங்கள் இருந்தன.

ஆகஸ்ட்மாதம்பிரபாகர், குமார் என்னும் இரண்டு இளைஞர்கள் ''சிகப்பு ரோஜாக்கள்'' பார்த்து விட்டு ஒரு ஆறு வயதுப் பெண்ணைத் தாக்கி அவர்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொண்டு அவளைக் கொன்றார்கள். பிடிபட்டார்கள். முதலில் முந்திய கொலைகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்குமென நம்பிச் சற்று கேஸ் தடம்புரண்டது. பிற்பாடு பல வித்தியாசங்கள் இருந்ததால் போலீஸார் Blackmagic and Occultism என்ற புதிய கோணத்திலிருந்து பார்த்தார்கள். டிசம்பர் 79ல் உமா என்னும் சிறுமி கொலையுண்டு கிடந்தாள். கிடைத்த துப்பு— 150 அடிகள் தள்ளிப் புதைக்கப்பட்டிருந்த கறுப்பு வளையல்கள் கூடிய மண்பானை. இந்தக் கேஸுடன் மூடப்பட்ட மற்ற கேஸ்களைப் பார்த்தால் மற்றொரு முக்கிய துப்பு கிடைத்தது. கொலைகள் நடந்தவை அனைத்தும் பௌர்ணமி அல்லது

அமாவாசைக்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன், மகாராஷ்டிரத்தில் மன்வாட் என்னுமிடத்தில் புதையல் கிடைக்கவேண்டும் என்று 11 குழந்தைகள் இதே போல் பலி கொடுக்கப்பட்டனர். இதை வைத்து ''சர்வாக்ஷி'' என்று எடுக்கப்பட்ட திரைப் படத்தை போலீஸார் பார்த்தார்கள். மன்வாட் சென்றார்கள். வந்தார்கள். சப் இன்ஸ்பெக்டர் ஷாந்தப்பா மங்களூரிலும், திருச்சூரிலும் தந்த்ரவாதிகளின் உதவியை நாடினார். திருச்சூரில் ஒரு தந்த்ரவாதி கண்ணாடியில் மைதடவி ஒரு குழந்தையை மீடியமாகப் பயன்படுத்தி பெங்களூரில் இரண்டு இடத்தில் மனித இரத்தம் பூஜைக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறினார். ஷாந்தப்பா — மேலும் மற்ற தந்த்ரிகளிடமிருந்து தெரிந்து கொண்டது — பூஜைகள் நடப்பது மயானத்தில், பயன் படுத்தப்படும் ரத்தம் குழந்தைகளுடையது. இவைகளுடன் போலீஸார் கேஸைப் புதுக் கண்ணோட்டத்துடன் கண்டனர். கொலைகள் நடந்தது பெரும் பாலும் ஸ்ரீராமபுரத்தில் அல்லது அருகில் என்பது உறுதியாயிற்று.

ஷாந்தப்பா தந்த்ரத்தை தந்த்ரத்தால் வெல்லப் பார்த்தார். ஆனால் மற்ற தந்த்ரிகள் மறுத்து விட்டார்கள். உமா என்னும் சிறுமியின் கொலைக்குப் பின், போலீஸ்நாய் ஸ்ரீராமபுரத்தின் மயானம் வரைஎல்லோரையும் அழைத்துச் சென்றது. போலீஸார், மயானத்தையும், மினர்வா மில்லின் அருகில் இருக்கும் திறந்த வெளியையும் அதிகம் கண்காணிக்கத் தொடங்கினார்கள். மயானத்தின் வடக்குப்பக்கத்தில் அடர்ந்த செடி கொடிகள் இருந்தமையால் போலீஸார் அப்பகுதியைப் புறக்கணித்து விட்டனர். ஒரு நாள் ஷாந்தப்பா அங்கே ஏதேனும் குறுக்கு வழி இருக்கிறதா என்று பார்க்கையில் அங்கு ஒரு மண்டபம் இருப்பதைக் கண்டார். கண்காணித்தார்கள். பாபாவைப் பார்த்தார்கள். சந்தேகத்தைத்



''தந்த்ரா'' என்னும் வடமொழிச் சொல் வேதகாலத்துக்குப் பின் குறிப்பாக 6ம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய சில நூல்களைக் குறிக்கிறது. புனஸ்காரங்கள் மூலம் மனத்தாலும் உடலாலும் உண்மையை அறிவது பற்றி அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.

சில விநோதமான பழக்கங்கள் தந்த்ரத்தின் முக்கிய அம்சம். யந்த்ரமும் (விநோத வரி வடிவங்கள்), மந்த்ரமும் (விநோத சொற்றொடர்கள் அல்லது சூத்திரங்கள்) மிக முக்கியம். தந்த்ரத்தில் இரு வகைகள் உண்டு. கீழ் வகையில் செயல் முறைகள், வரிய சக்தி போன்றவைகள் அதிகம். மேல் வகையில் தியானம், மனக் கூடல் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம்.

In an attempt to achieve a State of transcendental ecstasy, the highest tantras advocate the methodical use of sexual union as a yogic process, without the orgaistic completion of the sex act. This practice is believed to create a state of bliss leading to the complete arrest of mental process in a mystic sense, of oneness with the reality of the universe.

தந்த்ரத்தில் ஹிந்துபௌத்த, தந்த்ரம் என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. இரண்டிலும் ''ஒருமித்த உண்மை'' என்கிற தத்துவம் பற்றிப் பேசப் படுகிறது. இந்த ஒருமித்த உண்மைக்கு இரண்டு அம்சங்கள் உண்டாம்—சிவம்—துல்லிய உணர்வு மற்றும் காலம் கடக்கும் மௌனத்தைக் குறிக்கும். சக்தி-சக்தியையும் மனச் செயற்பாட்டையும் குறிக்கும். இவைகள் இரண்டும் கூடும்பொழுதுதான் மனித உடம்பில் இந்த ஒருமித்த உண்மை புலப்படுகிறது. உலகளவில் மனித உடல் கடுகளவெனக் கருதப்படுகிறது.

பௌத்த தந்த்ர சாஸ்திரத்தில் சிவப்-சக்தி பற்றிய இந்த அம்சங்கள் தலைகீழாகக் காணப்படுகின்றன.

மனிதனின் முதுகெலும்பின் கீழ்ப்பாகம் மேரு மலையைக் குறிக்கிறது. வலம், இடம், நடு வழியாகச் செல்லும் மூன்று நரம்புகள் கங்கை, யமுனை, சரஸ்வதியைக் குறிக்கின்றன. விடும் மூச்சு காலத்தின் ஓட்டத்தைக் குறிக்கிறது. கீழ்த்தளத்தில் இருக்கும் ''சக்கர''த்தில் சக்தி பாம்பைப் போல் சுருண்டு, மௌனமாகக் கிடக்கிறாள். இதைத்தான் ''குண்டலினி'' எனக் கூறுவார்கள். இந்தக் குண்டலினியை எழுப்பி மேல் இருக்கும் மற்ற சக்கரங்கள் வழியாகத் தலையில் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை போல் இருக்கும் சஹஸ்ர சக்கரத்தில் வசிக்கும் சிவத்திடம் சேர்க்க வேண்டும். சிவ சக்தியின் இந்தக் கூடல் ஒருமித்த உண்மையின் காலம் கடந்த புலப்பாட்டை ஏற்படுத்துகிறதாம் (புரிகிறதா?)

இப்பழக்கங்களைத் தாறுமாறாக உபயோகித்ததால்தான் பௌத்தம் இந்தியாவில் நிலைக்கவில்லை என்பது ஒரு கருத்து. திபெத்தில் பௌத்த தந்த்ரம் மிகவும் பரவலாக காணப்படுகிறது. ஞானத்திற்கு ஒரு குறுக்கு வழி என்றும் கூறப்படுகிறது. தந்த்ரத்தில் ஈடுபட்டிருக்கும் புத்தரை திபத்திய கலையில் காணலாம். பல தலைகளுடன், பல கைகளுடன், கொடிய ஆயுதங்களுடன் புத்தர் ஒரு பெண்ணுடன் தெய்வீகக் கூடலில் காணப்படும் காட்சிக்கு யப்-யும் (yab-yum) என்று திபெத்தில் கூறுவார்கள். யப்-யும் என்றால் தந்தை—தாய்.

புத்தகக் கடைகளில் தந்த்ரத்தைப் பற்றிய புத்தகங்களை ஏனோ வாத்ஸ்யாயனரின் புத்தகங்களுடன் வைத்திருக்கிறார்கள்!

தீர்த்துக்கொள்ள வாரண்டுடன் சோதனை கைது, பேப்பரில் போட்டோ....

பாபாவின் கைதுடன் போலீஸாரின் தலைவலிகள் தீரவில்லை. மூன்று நாட்களுக்குப் பின் விக்டோரியா ஆஸ்பத்திரியில் பாபா காலமானார். மார்பு வலியினால் என்று போலீஸார் கூறினார்கள். ''இதயம் சரியாக இருக்கிறது'' என்று ஆஸ்பத்திரி டியூட்டி ஆபீஸர் குறிப்பிட்டிருந்தார். போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் சந்திர கவுடர் ''மல்டிபில் இன்ஜூரிஸ்'' என்று குறிப்பிட்டார். எதிர்க் கட்சி சட்ட சபையில் கேள்விகள் கேட்டது. வெளிநடப்புச் செய்தது. சிலர் சஸ்பெண்டு செய்யப்பட்டனர். பாபாவின் கல்லறை மீண்டும் தோண்டப்பட்டது. இரண்டாம் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டது. ரிபோர்ட் இன்னும் வரவில்லை.

சில சுவையான அம்சங்கள்: சூரிய கிரஹணத்தன்று பாபா பூஜை செய்கையில் காளியின் படத்தைக் கிழித்து எறிந்து. ''என் சக்தி யெல்லாம் சென்றுவிட்டது'' என்று கூறியதாகக் ''காதலி'' லட்சுமம்மா கூறுகிறாள். பாபா புதைக்கப்பட்ட பின் இந்தியன் எக்ஸ்பிரஸில் வந்த செய்தி - Baba's body missing? இரவு வானில் ஒரு ஜோதியைப் பார்த்தோம். எறும்புப் புற்று வழியாகக் காற்றைச் சுவாசித்து சுரங்கப் பாதை வழியாக பாபா சென்றுவிட்டார் என்று சிலர் கூறினார்கள். இரண்டாம் போஸ்ட் மார்ட்டத்துக்குக் கல்லறையைத் தோண்டியபோதுதான் தெரிந்தது பாபா எங்கும் போகவில்லை. அங்கேயே இருக்கிறார். உடல்தான் சற்று ஊதிப் போய், நாற்றமெடுத்து.... வேண்டாம்.

இதையெல்லாம் வித்தியாசமாகப் பார்த்துக் கொண்டிருந்த என் நண்பனின் பின் குறிப்பு: ''ரத்த சப்ளையை நிறுத்திவிட்டார்கள். இறந்து விட்டார்.''

சண்முகத்தைப் பற்றி சிறிது அதிசயங்கள். பாபா கொண்டுவா என்றார். கொண்டு வந்தான். பணத்துக்காகச் செய்தானா அல்லது மனோவசிய மயக்க நிலையில் செய்தானா? நவம்பர் 1978ல் ஜோன்ஸ் டௌன் கயானாவில், ''நான்தான் கடவுள், நான்தான் லெனின்'' என்று கூறிக் கொண்டு ஜிம் ஜோன்ஸ் என்பவன், அவனது 900 சீடர்களுக்கு ஸயனைட் கொடுத்தான். கலிபோர்னியாவில் சார்ல்ஸ் மேன்ஸன் தன் சீடர்களுடன் ரோமான் பொலான்ஸ்கியின் மனைவி ஷரோன் டேட்டைக் கொன்றான். அப்பொழுது அவள் கர்ப்பம். மேன்ஸனைக் கடவுள் என்று அவன் சீடர்கள் நம்பினார்கள். இந்தச் சீடர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள்? எப்படி ஒரு மனிதனின் அறிவாற்றல், யோசிக்கும் தன்மை இவையெல்லாம் சென்றுவிடுகின்றன? எல்லாம் முடிந்த பின்பு ''என்ன நடந்தது, நான் எங்கு இருக்கிறேன்'' என்றெல்லாம் அவர்கள் கேட்கவில்லை. சண்முகம், ஜோன்ஸின் 900 சீடர்கள், மேன்ஸனின் இளம் நண்பர்கள் இவர்களை யெல்லாம் செலுத்தியது எது? விண்வெளியில் ராக்கெட் விடுகிறோம். மன வெளியில், மன வெளியில் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ஆந்திராவில் சில ஊர்களில் விதவைகள் நடத்தும் உணவகங்களில், உணவில் மந்திரித்துக் கூந்தல் சிறிது கலப்பார்களாம். இதை உண்டவர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுவார்களாம். இவர் என்று இறந்தமையால் இறந்தவர்களுக்குக் குறிப்பிட்டிருந்த மிஞ்சிய ஆயுள் அவ்விதவைகளின் கணவர்களுக்குப் போய்ச் சேருமாம். (இதை அவர்கள் நம்பினால் எதையும் நம்புவார்கள்). ''நீ பெங்காலி'' என்று டாக்டர் ரோமி மித்ராவைக் கல் எறிந்து கொன்றார்கள். அஸ்ஸாமில் என் நண்பர் ஒருவர். "The conflicts in an individual are reflected in Society. So war is a natural process." என்று ஆழம் தெரியாமல் காலை விடுகிறார். பாப் டிலனின் கவிதையின் சில வரிகளைப் படித்துச் சிறிது வருத்தப்படுங்கள்.

''எத்தனை பாதைகள் மனிதன் நடக்க
வேண்டும்
அவனை மனிதன் என்பதற்கு முன்?
எத்தனை கடல்களை வெண் பறவை கடக்க
வேண்டும்
அது வெண்மணலில் உறங்குமுன்.
எத்தனை தடவை பீரங்கிகள் முழங்கவேண்டும்
அவைகளை சதா தடைசெய்யுமுன்...
...எத்தனை கண்ணீர் ஒருத்தன் சிந்தவேண்டும்
அவன் அழுவது மற்றவர்களுக்குக் கேட்குமுன்
எத்தனை சாவுகள் தேவை
இதுபோதும்! அதிகம் என்று உணர்வதற்கு
முன்
இதன் விடை நண்பனே
காற்றில் கலந்திருக்கிறது....

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

கங்குடிப் புடவை!

நண்பகல். சாப்பிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துக் கண்ணயர்ந்திருந்தவன், பன்னிரண்டரை மணிக்குத் தூக்கம் சிறிது கலைந்து லேசாகக் கண் விழித்துப் பார்த்தேன். என் எதிரே கட்டிலுக்கும் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, மஞ்சளும் சிவப்பும் கலந்த கங்குடிப் புடவை அணிந்து நிற்பது தெரிந்தது. எழுந்து உட்கார்ந்தேன். உருவம் சட்டென மறைந்தது.

என் மனைவி அன்று கரும் பச்சைப் புடவை உடுத்தியிருந்தாள். ஆகையால் என் அறைக்குள் வந்தவள் அவள் அல்ல. வீட்டில் வேறு யாரும் இல்லை.

மாலை நான்கு மணிக்குத் தந்தி வந்தது. பம்பாயில் என் மூத்த சகோதரி காலமானாள் என்று. நான் பம்பாய் சென்று விசாரித்ததில் மரணம் ஞாயிறன்று பகல் பன்னிரண்டரை மணிக்குச் சம்பவித்தது தெரிந்தது. அப்போது அவள் அணிந்திருந்த புடவை மஞ்சளும் சிவப்பும் கலந்த கங்குடிப் புடவை! பி. ராமமூர்த்தி



[இந்தச் சிறப்பிதழில் 'லூஸிலி ஃப்லெட்சர் எழுதிய இந்தத் திகில் நாடகம் இடம் பெற வேண்டும் என்று சுஜாதா தேர்ந்தெடுத்துத் தர, தமிழாக்கம் செய்து பிரசுரித்துள்ளோம். எச்சரிக்கை: அரங்கேற்ற விரும்புவோர் Dramatists Play Service Inc, 440, Park Ave South, New York, New York-10016 என்ற விலாசத்துக்கு எழுதி அனுமதி பெற வேண்டும்.]

ஸாரி, ராங் நம்பர்!

(காட்சி: திரை மேலெழும்போது பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட மேடையைக் காண்கிறோம்; மையப் பகுதியில் மட்டும் ஸ்பாட்லைட் ஒளி பாய்கிறது. ஸ்ரீமதி சாந்தாவின் படுக்கை அறை. செல்வச் செழிப்புடையவள் என்பது அறையைப் பார்த்தாலே தெரிகிறது. பெரிய கட்டில். அதில் சாந்தா நைட் கவுன் அணிந்து படுத்திருக்கிறாள். பக்கத்தில் ஒரு சிறு மேஜை. அதில் ஃபோன், டேபிள் லாம்ப், மாத்திரைப் பாட்டில்கள், சுவரில் கடிகாரம். மூடப்பட்டிருக்கும் ஒரு கதவு. பின்புலனில் ஒரு ஜன்னல். டேபிள் லாம்ப் எரிந்து கொண்டிருக்கிறது. இந்த மத்திய அரங்குப் பகுதிக்கு இரு புறமும் இருள் சூழ்ந்திருக்கிறது.

திரை தூக்கும்போது ஸ்ரீமதி சாந்தா, டெலிஃபோனில் எண்களைச் சுழற்றுகிறாள். சற்று நேரம் காதில் வைத்துக் கேட்டுவிட்டு ரிஸீவரைக் கோபத்தோடு 'மடேர்' என்று வைக்கிறாள். 'அதே நேரத்தில் தூரத்தில் ரயில் விரையும் சத்தம் கேட்கிறது. மாத்திரைப் பாட்டிலிலிருந்து ஒரு மாத்திரை எடுத்து விழுங்குகிறாள். மறுபடி ரிஸீவரை எடுத்து இலேசான நடுக்கத்துடன் ஃபோன் செய்கிறாள். நம்பர் டயல் செய்யப்படும் ஒலி. தொடர்ந்து எங்கேஜ்ட் ஒலி.)

சாந்தா: சிவ சிவா! (ரிஸீவரைத் தொப்பென்று வைத்து கம்ப்ளெய்ண்ட்ஸுக்கு டயல் செய்கிறாள்.)

(காட்சி: மேடையின் இடதுபுறம் இருட்டில் ஒரு ஸ்பாட் லைட் ஒளி பாய்ந்து முதல் ஆபரேட்டரைச் சுட்டிக் காட்டுகிறது. அவள் எதிரே சிறு மேஜை. ஹெட் போன்ஸ் அணிந்திருக்கிறாள்.)

ஆபரேட்டர்: கம்ப்ளெண்ட்ஸ் ஸெக்ஷன்.

சாந்தா: (சண்டை பிடிக்கிற, தன்னை லேயே எண்ணுகிற சுபாவத்தையும் நரம்புத் தளர்ச்சியையும் உணர்த்துகிற குரலில்): ஆபரேட்டர்! முக்கால் மணி நேரமா 21304 டிரை பண்றேன். எப்பவும் என்கேஜ்டாவே இருக்கு. இவ்வளவு நேரம் எப்படி என் கேஜ்டா இருக்க முடியும்? எனக்காக நீங்க டயல் பண்ணிப் பார்க்கறீங்களா?

ஆபரேட்டர்: 21304! ஒன் ஸெகண்ட் ப்ளீஸ். (வயர் ஒன்றைச் சொருகித் தொடர்பு கொள்கிற பாவனை.)

சாந்தா: எப்படி இவ்வளவு நேரம் என் கேஜ்டா இருக்க முடியும்? என் கணவர் ஆபீஸ் அது. இன்னிக்கு ரொம்ப வேலை இருக்கு; வீடு திரும்ப நேரம் ஆகும்னு சொல்லிட்டுப் போனார். நான் வீட்டில் தனியா இருக்கேன். உடம்பு சரியில்லாதவ நான். நான் பூரா ஒரே நர்வஸ்ஸா ஃபீல் பண்ணிக்கிட்டிருக்கேன்.



ஆபரேட்டர்: 21304 ரிங் பண்ணுது. பேசுங்க.

(ஃபோன் மணி அடிக்கும் ஒலி கேட்கிறது. மூன்று முறை அடித்ததும் ஃபோன் எடுக்கப்படுகிறது.)

(காட்சி: ஸ்பாட் லைட் ஒளி ஃபோனுடன் கூடிய மேஜை முன் அமர்ந்திருக்கும் கனமான ஒரு மனிதனை மேடையின் வலப்புறம் இருளுக்கு மத்தியில் காட்டுகிறது. மூன்று முறை ஒலித்ததும் ஃபோனை எடுக்கிறான்.)

மனிதன்: ஹல்லோ!

சாந்தா (சற்றா புதிரான குரலில்): ஹலோ! சிவராம் இருக்கிறாரா?

மனிதன் (காதில் விழாததை உணர்ந்த) ஹல்லோ! ஹல்லோ! (உரக்க) நல்லோ!

(காட்சி: இடது பக்க ஸ்பாட் லைட் இப்போது ஆபரேட்டரை விட்டு நகர்ந்து பைரவன் என்ற மனிதனைச் சுட்டுகிறது. அவனைப் பார்த்தாலே கொலைக்கு அஞ்சாதவன் என்று தெரிகிறது. பப்ளிக் ஃபோன் பூத்திலிருந்து பேசுகிறான். நிதானமான கனமான கேடிக் குரல்.)

பைரவன்: ஹல்லோ!

முதல் மனிதன்: ஹல்லோ, பைரவனா?

பைரவன்: ஆமா, முதலாளி.

சாந்தா (உரக்க, கட்டளை இடும் தோரணையில்): ஹல்லோ! யார் இது? உங்க நம்பர் என்ன?



முதல் மனிதன்: நம்ம கஸ்டமரு என்கிட்டே டெசிட்டாரு. இன்னிக்கு ராவு லைன் கிளியர்.

பைரவன்: சரி முதலாளி.

முதல் மனிதன்: இப்ப எங்கே இருக்கே?

பைரவன்: பப்ளிக் ஃபோன் பெட்டியிலே.

முதல் மனிதன்: சரி, உனக்கு விலாசம் தெரியுமில்லியா? பதினோரு மணிக்கு கூர்க்கா பக்கத்துத் தாண்டவ ராயன் தெருவிலே இருக்கிற மக்கடைக்கு சிங்கிள் அடிக்கப் போவான். வீட்டின் கீழ்ப் பகுதியிலே எல்லா லைட்டுங்களும் அணைஞ்சிருக்கா பார்த்துக்க. தெருவிலேயிருந்து பார்க்கும் போது மாடியிலே ஒரே ஒரு விளக்கு மட்டும்தான் எரிஞ்சுக்கிட்டிருக்கணும். ஒருவேளை நீ காரியத்தை முடிக்கிறப்போ ஜன்னல் திறந்திருந்து அவ கூச்சல் போடலாம். அதனால் ஞாபகம் வைச்சுக்க — பதினொண்ணே காலுக்கு கரெக்டா ரயில் பாலத்தைக் கடக்கும். ஏகமாச் சத்தம் கிளம்பும்.

சாந்தா (அதிர்ச்சியுற்று): ஹல்லோ! இது என்ன நெம்பர்?

பைரவன்: சரி, புரியுது முதலாளி.

முதல் மனிதன்: சட்டுப் புட்டுன்னு காரியத்தை முடி! அவ ரொம்ப நேரம் அவஸ்தைப்படக் கூடாதுன்னு நம்ம கஸ்டமரு விருப்பம். ரொம்ப ரத்தம் சிந்தாம கவனிச்சுக்க.

பைரவன்: கத்தி பயன்படுத்தலாமில்லே?

முதல் மனிதன்: கத்தியா? சரி, சரி. பீரோ டிராயரில் இருக்கிற மோதிரங்கள், வளையல்கள், மற்ற நகைகளை மறக்காம எடுத்துக்கிட்டு வந்துடு. திருட்டுக் கேஸுன்னு போலீஸ் நினைக்கணும்னு கஸ்டமர் பிரியப் படுறாரு.

பைரவன்: சரிங்க முதலாளி!

(காட்சி: ஸ்பாட் லைட் சட்டென்று அணைய, பைரவன் மறைகிறான்.)

(ஒலி: ஃபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டு டயல்

ஜாஸிலி ஃப்ளெட்சர்

தமிழாக்கம்: கி.ராஜேந்திரன்

டோன் மட்டும் கேட்கிறது.)

(காட்சி: ஸ்பாட் லைட் அணைய முதல் மனிதனும் மறைகிறான்.)

சாந்தா (போன் ரெஸ்டைச் கடகடவென்று அழுத்திச் சப்தித்து): ஓ! (டயல் டோன் தொடர்கிறது): ஓ! அநியாயம்! இந்த அக்கிரமத்தை என்ன சொல்ல!



(காட்சி: பின்னால் தலையணை மீது விழுகிறாள். சில கணங்கள் தன் நிலை இழந்தவளாக இருக்கிறாள். பிறகு திடுமென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு ரிஸீவரைக் கையில் எடுக்கிறாள். டயல் செய்கிறாள்.)

(ஒலி: டயல் செய்யும் ஒலி; மணி அடிக்கும் ஓசை.)

(காட்சி: ஸ்விட்ச் போர்ட் முன்பு முதல் போன் ஆபரேட்டர் மீது ஸ்பாட் லைட் ஒளி. இதற்கிடையில் பைரவனும் முதல் மனிதனும் இருட்டில் வெளியேறிவிட்டிருக்கிறார்கள்.)

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

ரத்தம் வாங்கியது!

துரை ஓர் இளம் வயது வாலிபன். கும்பகோணம் மாற்றலாகி அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் மட்டும்தான்! மதியச் சாப்பாட்டுக்குப் பின் வாசல் கதவைத் தாழ் போட்டுவிட்டுச் சிறிது கண்ணயர ஆரம்பித்தான்.

ஏதோ ஒரு விதமான வாசனை அவன் அறையில் பரவுவது போல் ஓர் எண்ணம். ஏதோ ஓர் உருவம் அவனை நோக்கி வருகிறது. 'உன்னைத் தேடி வந்தேன்' எனச் சொல்கிறது. அவன் கண்ணைத் திறக்க முயற்சி செய்தும் அவனால் முடியவில்லை. 'அது' அவனது இடது கையைப் பற்றிக்கொள்கிறது. அதைத் தள்ள முடியவில்லை. அவனை நடக்கச் சொல்கிறது. அவனும் நடக்கிறான். படுக்கை அறையிலிருந்து மெயின் ஹால் வரை வந்து விட்டாற் போல் தோன்றுகிறது. ஏதோ ஒரு பிரகாசம் அந்த உருவத்திடம் தெரிகிறது. வண்ணமாக, வளமாக, ஒரு பெண்ணின் உருவம் தெரிகிறது. இப்பொழுதுதான் அவன் பயப்பட ஆரம்பிக்கிறான். ஓட யத்தனிக்கிறான். முடியவில்லை. சத்தம் போடவும் முடியாத நிலை. இன்னமும் கண்களைத் திறக்க முடியவில்லை. 'உனது ரத்தம் வேண்டும்' என அது சொல்கிறது. அவனுடைய இடது கை கண்டு விரலை 'அது'வுடைய வாயில் வைத்துச் சுவைக்க ஆரம்பிக்கிறது. கடிப்பது தெரிகிறது. வலி ஒன்றுமே தெரியவில்லை. எவ்வளவு நேரம் போராட்டமோ அவனால் நிர்மாணிக்க முடியவில்லை. 'ஓ'வென அவனிடமிருந்து ஓர் அலறல். கண் விழிக்கிறான். சுண்டு விரலில் ஒன்றரை அங்குல நீளத்துக்குச் சிதைந்த சதையோடு கூடிய வெட்டு. அந்த முன் பகுதி தனியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. சதைகள் சிதைந்ததால் (எலும்பும் சேர்த்துத்தான்). கதவைத் திறந்து அருகில் உள்ள நண்பர் வீட்டுக்கு ஓடுகிறான். அவனை நண்பர் அருகே உள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறார். ஐந்து தையல்கள் போடப்படுகின்றன. விஷயமறிந்தவர்கள் அங்கு ஓர் ஆவி வாழ்ந்ததென்றும் இப்பொழுது ரத்தம் வாங்கி விட்டதால் இனி ஒன்றும் செய்யாது எனவும் சொன்னார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு துரை அதே வீட்டில் மூன்றரை வருடங்கள் குடியிருந்தான். இன்றும் அவன் சுண்டு விரலில் உள்ள அந்தத் தழும்பைப் பார்த்துத் துணுக் கொண்டு சிரித்துக் கொள்வதுண்டு!

• டாக்டர் கே. என். சங்கர சுப்பிரமணியன்



ஆபரேட்டர்: கம்ப்ளெய்ண்ட் செக்ஷன்.

சாந்தா (நரம்புத் தளர்ச்சியுடன் மூச்சு வாங்க, பதற்றத்துடன்): ஆபரேட்டர் நான் பேசிக்கிட்டிருந்த லைன் கட் ஆயிடுச்சு.

ஆபரேட்டர்: ஸாரி, என்ன நெம்பரில் பேசிக்கிட்டிருந்தீங்க?

சாந்தா: நான் கேட்டது 21304. ஆனா அந்த லைன் கிடைக்கலே. என்னமோ கோளாறு. எனக்குக் கிடைச்சது ஒரு ராங் நெம்பர். அதிலே இப்பத்தான் ஒரு பயங்கரத்தைக் கேட்டு வைச்சேன்... ஒரு... ஒரு கொலை! (கட்டளையிடும் பாணியில்) ஆபரேட்டர்! அந்த நம்பரை நீ டிரேஸ் பண்ணியே ஆகணும்! யாருடைய நெம்பர்னு கண்டு பிடிச்சே ஆகணும்!

ஆபரேட்டர்: நீங்க என்ன சொல்றீங்க?

சாந்தா (பொறுமை இழந்து): புரியலையா? அந்த ரெண்டு பேரும் ராட்சசங்க. யாரோ ஒரு பெண்ணைக் கொல்லப் போறாங்க. ஒரு பாவமும் அறியாத அவ தனியா இருக்கா. ஒரு ரயில் பாலத்துக்குப் பக்கத்தில் அவ வீடு. அந்தக் கொலைகாரப் பாவிங்களை நாம் தடுத்து நிறுத்தணும்! அது நம் கடமை. சமூகத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமை!

ஆபரேட்டர் (அலுப்புடன்): கொஞ்சம் இருங்க. என் மேலதிகாரிக்குக் கனெக்ஷன் தரேன். அவரிடம் சொல்லுங்க.

சாந்தா: அதையாவது செய்!

(காட்சி: ஆபரேட்டர் ஃபோனை உள்ளங்கையால் மூடிக் கொண்டு இருளை நோக்கி ஜாடை காட்டுகிறாள். மெல்லிய குரலில் பேசுகிறாள்.)

ஆபரேட்டர்: கமலா! பதிலைமைக் கொஞ்சம் எடுத்துக்கிறீங்களா?

(காட்சி: பிரதம ஆபரேட்டர் கமலா வருகிறாள். நடுத்தர வயது. ஆற்றல் விகசிக்கும் தோரணை. இனிய சுபாவம். ஹெட் போன்ஸ் அணிந்திருக்கிறாள்.)

கமலா: என்னம்மா என்ன தகராறு?

ஆபரேட்டர்: யாரோ, ஒரு நெம்பரை டிரேஸ் பண்ணுன்னு சொல்றாங்க. எனக்குத் தலை கால் புரியலே.

(காட்சி: ஆபரேட்டர் எழுந்து இடம் விடப் பிரதம ஆபரேட்டர் அமர்ந்து தனது ஹெட் போனுக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது போல் செய்கிறாள்.)

கமலா: பிரதம ஆபரேட்டர் பேசறேன்.

சாந்தா: பிரதம ஆபரேட்டரா? நீங்க உடனே ஒரு நெம்பரைக் கண்டு பிடிச்சாகணும். எங்கேயிருந்து பேசினாங்கன்னு தெரியாது. யார் பேசினதுன்னும் தெரியாது. ஆனா அந்த நெம்பரை நீங்க கண்டு பிடிச்சே ஆகணும். ஏன்னா அவங்க ஒரு கொலைத் திட்டம் பற்றிப் பேசிக்கிட்டிருந்தாங்க. ஒரு பயங்கரமான கொலை! ஒரு பாவமும் அறியாத ஒரு பெண் கொலை செய்யப்படப் போகிறாள். இன்று இரவு பதினொண்ணே காலுக்கு!

கமலா: அப்படியா?

சாந்தா (உணர்ச்சி மேலிட அடித்துப் பேசுகிற தோரணையில்): என்ன அப்படியா?

அந்த ஃபோன் காலை டிரேஸ் பண்ண முடியுமா? அந்தக் கேடிங்களைக் கண்டு பிடிக்க முடியுமா சொல்லுங்க!

கமலா: முடியும், முடியாது!

சாந்தா: அப்படீன்னு?

கமலா: அவங்க இன்னும் பேசிக்கிட்டிருக்காங்கன்னு கண்டு பிடிக்கலாம். பேசி முடிச்சுட்டாங்கன்னு கண்டுபிடிக்க முடியாது.

சாந்தா: இதுக்குள்ளே பேசி முடிக்காம இருப்பாங்களா? நான் ஓவர் ஹியர் பண்ணினது ஐந்து நிமிஷத்துக்கு முன்னாடி. அவங்க வளவளன்னு பேசிக்கிட்டிருக்கிறவங்களாத் தோணலே.

கமலா: எதுக்கும் காலை டிரேஸ் பண்ண முயற்சி செய்யலாம்... நீங்க போலீஸுக்குத் தகவல் கொடுத்திட்டீங்களா?

சாந்தா: இல்லை. எப்படி முடியும்? அதுக்கு எங்கே நேரம் இருந்தது?

கமலா: ஆக, தனிப்பட்ட நபரின் ஒரு ஃபோன் காலை நீங்க தனிப்பட்ட முறையிலே டிரேஸ் பண்ணிக் கண்டு பிடிக்கணும்கறீங்க?

சாந்தா: ஆமாம். ஆனா இதுக்குள்ளே...

கமலா: இதோ பாருங்க... நீங்க தனிப்பட்ட முறையில் விடுக்கிற இந்தக் கோரிக்கையை எங்களால் நிறைவேற்ற முடியாது. அதிகார பூர்வமான கோரிக்கையா இருக்கணும்.

சாந்தா: அட கடவுளே! ஒரு கொலை நடக்கப் போகுதுன்னு எச்சரிக்கலாம்னு அதுக்கு இத்தனை சிவப்பு நாடாவா? உரிச்ச வைச்ச முட்டாள்தனமா இருக்கே! சரி, நான் போலீஸையே கூப்பிட்டுப் பேசிக்கிறேன்.



(காட்சி: ஃபோனை படோர் என்று வைக்கிறாள். ஸ்பாட் லைட் அணைய இரு ஆபரேட்டர்களும் மறைகிறவர். ஒலி: எண்களை டயல் செய்யும் சத்தம். காட்சி: சாந்தா டயல் செய்கிறாள். இரு ஆபரேட்டர்களும் மேடையிலிருந்து இருளில் ஒன்றிச் சென்றுவிட அந்த இடத்தில் மறுபடி ஸ்பாட் லைட் விழும்போது இன்ஸ்பெக்டர் இனியன் அக்கடா என்று சாய்ந்தபடி அமர்ந்திருப்பதைக்காண்கிறோம். அவரை அப்போதுதான் ஒரு குற்றேவல் சிறுவன் அணுகிக் கொண்டிருக்கிறான். அவன் கையில் நூல் சுற்றிய தையல் இலைப் பொட்டலம். ஃபோன் மணி அடிக்கிறது.)

சிறுவன்: டிபன் கொண்டாந்திருக்கேன், இன்ஸ்பெக்டர் ஸார்! இட்லி தீர்ந்துடுச்சாம்; பூரி மசாலாவும் பொறையும் வாங்கியாந்திருக்கேன்.

இனியன்: பொறையா? பிராக்கிக் குண்டாச்சே! யார் முழுங்கறது? பட்டர் பிஸ்கட் வாங்கியாரப்படாது? (ஃபோனை எடுக்கிறார்.) போலீஸ் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் இனியன் ஹியர்.

பையன்: பட்டர் பிஸ்கட் இல்லை சார்!

சாந்தா: போலீஸா? நான் சாந்தா பேசறேன். மிஸஸ் சாந்தா சிவராமன், 53, துரைசாமி ரோடு, மாம்பலம். ஒரு கொலை பத்திச் சொல்லணும்.



ட்டிப் படைத்த ஆவி வடிவம்

பேயிடம் பாடம் கற்றோம்!

நாங்கள் கோவையில் ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவர்கள். கல்லூரியின் அருகே ஹாஸ்டலில் இருந்து வருகிறோம். விடுதியின் பின்புறம் 150 அடி தூரத்தில் ஒரு பெரிய புளிய மரம். அருகே ஒரு பாழும் கிணறு. போதாதா, ஆவி பயம் கிளம்ப! பகலிலும் அந்தப் பக்கம் செல்ல மாணவர்கள் பயந்தார்கள்.

நாங்கள் மூன்றும் ஆண்டு படித்த நேரம். முதல் வருட மாணவர்கள் சேர்ந்தார்கள். ராகிங் செய்தோம். அவர்கள் சேவகம் செய்தார்கள். அவர்களுள் சற்று முரடன் போலிருந்த ராஜாமணி என்கிற ஒருவனை இரவில் புளிய மரம் வரை சென்று அதில் ஆணி அடித்துவிட்டு வரவேண்டும் என்றோம். அவனும் உடனே ஒப்புக்கொண்டான்.

அவனுக்கு முன் அவனுக்குத் தெரியாமல் நாங்கள் சிலர் சென்று புளிய மரத்தில் ஏறி மறைவாக அமர்ந்து கொண்டோம். ராஜாமணி மப்ளரைப் போட்டுக் கொண்டு ஒரு கையில் ஆணியும் மறு கையில் அதை அடிக்க ஒரு கல்லையும் எடுத்துக் கொண்டு வருவது தெரிந்தது. ஆணியை அடிக்கத் தொடங்கினான். நாங்கள் மெல்லக் கிளையை உலுக்கினோம். அவன் அஞ்சவில்லை.

''முனியாண்டி, கருப்பாண்டி காப்பாற்றுவாய்'' என்று மந்திரம் ஜபித்துக் கொண்டே அடித்தான். காரியம் முடிந்து திரும்பியவன் ஓர் எட்டு எடுத்து வைத்ததும் ''ஐயோ!'' என்று அலறினான். பின்பு தலை தெறிக்கும் வேகத்தில் ஓடினான். எல்லாம் விளையாட்டு என எண்ணிய நாங்கள் வெலவெலத்துப் போனோம். நாங்களும் நான் முந்தி, நீ முந்தி என்று அவனைத் தொடர்ந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினோம். ஒலிம்பிக் கெட்டது. விடுதி வாயிற்படியில் ராஜாமணி விழுந்து கிடந்தான், வாயில் நுரை தள்ள. நாங்கள் பயந்து போனோம். எல்லோருமாக அவனைத் தூக்கிக் கொண்டு சென்று படுக்க வைத்தோம். நல்ல வேளை உயிர் இருந்தது. ராஜோபசாரம் நடந்தது. விடியற்காலை ஒருவாறு ராஜாமணி கண் விழித்தான். அப்போதுதான் எங்களுக்கும் உயிர் வந்தது.

வெளிச்சம் ஏறியதும் எல்லோரும் புளிய மரத்திடம் சென்று பார்த்தபோதுதான் விஷயம் தெரிந்தது. ஆணி அடித்தவன் பதற்றத்தில் மப்ளரையும் சேர்த்து அடித்துவிட்டான். திரும்பி நடக்கும்போது மப்ளர் இழுக்கப்படவே ஏதோ ஆவிதான் இழுக்கிறது என்று பயந்து ஓடி இருக்கிறான். அதைப் பார்த்து நாங்களும் பயந்து ஓடியிருக்கிறோம். ராஜாமணிக்கு விஷயத்தைச் சொல்லி முழு பயத்தையும் போக்குவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. அளவுக்கு மீறி ராகிங் செய்யக் கூடாது என்று எங்களுக்கும் புத்தி வந்தது.

-ஸோலார்



(காட்சி: பொட்டலத்தை ஒரு கரத்தாலேயே உருட்டி நூல் பிரிக்கத் தொடங்கியிருந்த இனியன் கொலை என்றதும் துள்ளி நிமிர்ந்து உட்காருகிறார்.)

இனியன்: என்னது?

சாந்தா: அதாவது கொலை இன்னும் நடக்கலை. ஆனால் அதுக்கான திட்டங்கள் வகுக்கப்படுவதை ஃபோனிலே கேட்டேன். அதாவது ஆபரேட்டர் ஒரு ராங் நெம்பரை எனக்குக் கனெக்ட் பண்ணிவிட அதைக் கேட்டேன். (இனியன் உடல் தளரப் பெருமூச்சு விட்டு மறுபடியும் பின்னுக்குச் சாய்ந்து தையல் இலை மடிப்பைப் பிரித்து டிபனைப் பார்க்கிறார்.) நானே அந்தக் காலை டிரேஸ் பண்ண முயற்சி செய்தேன். ஆனால் டெலிஃபோன் இலாகா சரியா ஒத்துழைக்கலே. எல்லாரும் வெறும் முட்டாள்களா இருக்காங்க. நீங்கதான் ஏதாவது செய்ய முடியும்னு நினைக்கிறேன்.

இனியன் (அசுவாரஸ்யமாக): உம்.... சொல்லுங்க.

(காட்சி: பையன் வெளியேறுகிறான்.)

சாந்தா (திரும்பப் பேசி அவர் கவனத்தைக் கவர எண்ணி): நிச்சயமா அது கொலைதான். அவங்களோட கச்சிதமான திட்டத்தைத் தெளிவாகக் கேட்டேன். (ஃபோனை ஒரு காதில் வைத்துக் கொண்டே, இனியன் பூரி மசாலா சாப்பிட ஆரம்பிக்கிறார்) இரண்டு பேர் பேசிக்கிட்டாங்க. இன்று இரவு பதினொண்ணே காலுக்கு யாரோ ஒரு பெண்ணை அவங்க கொல்லப் போறாங்க. அவ ஒரு பாலத்துக்குப் பக்கத்திலே இருக்கிற வீட்டிலே வசிக்கிறா.

இனியன்: உம்... சொல்லுங்க.

சாந்தா: அந்தத் தெருவுக்கு ஒரு கூர்க்கா இருக்கான். ஆறு பதினொரு மணிக்கு அவன் பக்கத்துத் தாண்டவராயன் தெருவில் டீ குடிக்கப் போறான். அப்புறம் மூணாவதாக ஒரு ஆள். அவன் இந்த இரண்டு கொலைகாரப் பசங்களுக்கும் காரியத்தை முடிக்கப் பணம் கொடுக்கிறான். அவங்க அவளோட வளையல், மோதிரம் முதலானவற்றை எடுத்துக்கப் போறாங்க... கத்தியை உபயோகிக்கப் போறாங்க... எனக்கு ஒரே உதறலாப்போச்சு. ஏற்கனவே உடம்பு சரியில்லாதவ நான்...

இனியன்: அப்படியா? (பூரி மசாலா சாப்பிட்டு முடித்துவிட்டவர் பொட்டலத்தைக் கசக்கிக் குப்பைக் கூடையில் எறிகிறார். விரல்களைச் சப்பிச் சுத்தப்படுத்துகிறார். சீனிவரைத் தோளுக்கும் காதுக்கும் இடையில் இடுக்கிக் கொண்டு ஒரு பாட்டிலை மேஜைக்குக் கீழே இருந்து எடுத்துத் திறந்து குப்பைக் கூடையிலேயே சிறிதளவு நீர் விட்டுக் கை கழுவிக் கொள்கிறார்.) எப்ப நடந்தது இதெல்லாம்?

சாந்தா: சுமார் எட்டு நிமிஷங்களுக்கு முன்னால்.... (நிம்மதியான குரலில்)....ஆக, உங்களால் நடவடிக்கை எடுக்க முடியும்னு சொல்லுங்க. உங்களுக்குப் புரியுது!

இனியன் (ஒரு தாளில் கையைத் துடைத்துக் கசக்கிப் போட்டபடியே): உங்க பேரு என்ன சொன்னீங்க?

(காட்சி: ஒரு தாளை எடுத்து எதிரே வைத்துக் கொண்டு பால்பாயிண்ட் பேனாவில் மூடியை நீளச் செய்கிறார்.)

சாந்தா (பொறுமை இழந்து): சாந்தா... சாந்தா சிவராமன்.

இனியன்: விலாசம்?

சாந்தா: 53, துரைசாமி ரோடு, தி.நகர். இது ஒரு பாலத்துக்குப் பக்கத்திலேதான் இருக்கு. ரயில் மேம்பாலம். எங்க தெருவுக்கும் ஒரு கூர்க்கா இருக்கான். தாண்டவராயன் தெரு கூட....

இனியன்: நீங்க என்ன நெம்பர் கூப்பிட்டீங்க?

சாந்தா: 21304 (இனியன் எழுதிக் கொள்கிறார்) ஆனா நான் ஒவர் ஹியர் பண்ணினது

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

"இரவு முழுதும் அலைந்தேன்"


நெய்வேலிக்கு அருகிலுள்ள அஜீஸ்நகர் எங்கள் ஊர். ஒரு நாள் மேய்ச்சலுக்குப் போன எங்கள் வீட்டு எருமை திரும்பவில்லை. 'மாடு வீட்டுக்கு வராவிட்டால் உனக்குச் சாப்பாடு இல்லை' என்று அம்மா சொல்லி விட்டார்கள். அது பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் பயந்த காலம். மாடு தேடப் புறப்பட்டேன். இரவு எட்டு மணி இருக்கும். நல்ல இருட்டு. ஒரு கையில் அரிக்கன் லைட்டு. ஒரு கையில் சிறு கட்டி.

வழியில் ஓர் ஆள் வந்தான். 'தம்பி நீ யாரடா? எங்கே போறே?' என்றான். 'யோவ் நீ யாரு?' என்றேன். அவ்வளவுதான். ஏதோ ஒரு சக்தியில் கட்டுண்டவனைப் போல் அவனைப் பின்தொடர ஆரம்பித்தேன். எனக்குப் பேசவும் தோன்றவில்லை. 'ஏன் இவனோடு போகிறேன்?' என்று எண்ணவும் முடியவில்லை. நான் அவனோடு போய்க் கொண்டே இருக்கிறேன். அவன் முன்னும் நான் பின்னுமாக ஒரு குறிப்பிட்ட எல்லை சதுரத்தில் குறுக்கில் நெடுக்கில் பல திசைகளில் அலைந்து கொண்டே இருக்கிறேன். கால்கள் வலிக்கவில்லை. மாறாக, புவி ஈர்ப்பு விசையே இல்லாத பூமியின் மேல் மிதந்து நடப்பது போல் இருந்தது. அந்த ஆள் ஒரு குளத்தில் இறங்கி நடக்கலானான். நானும் பின் தொடர்ந்தேன். அக்கரைக்குச் சென்றதும் அவன் மறைந்து விட்டான். அவனுடன் சென்ற நான் மார்பளவு தண்ணீரில் இருப்பதை உணர்ந்து சுய உணர்வு பெற்றேன். கரைக்கு வந்து ஈரத் துணியோடு உட்கார்ந்தேன். தூரத்தில் இருந்த எனது ஊரில் சேவல் கூவுவது என் காதில் விழுந்தது. இரவு எட்டரை மணியிலிருந்து விடியற்காலை வரை பேயின் பின்னால் அலைந்திருக்கிறேன் என்பதை அறிந்தேன். என் கால்களைப் பார்த்தேன். எக்கச்சக்கமாக முட்கள் குத்தியிருந்தன. கால்களில் வலியெடுக்க ஆரம்பித்தது. ஒரு வாரம் ஜுரமாகக் கிடந்தேன். இரண்டரை வாரம் நடக்க முடியாமல் அவதிப்பட்டேன்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எனது பதினொன்றாவது வயதில் நடந்தது இந்தப் பயங்கர நிகழ்ச்சி.

-பவுல் தேவர்





அந்த நெம்பர் இல்லை. 21304 என் கணவரோட ஆபீஸ். (இனியன் அலுப்புப் பெருமூச்சுடன் பால் பாயிண்ட் பேனா அடிவாரத்தால் மேஜையைக் குத்துகிறார்) அவருக்கு இன்று ரொம்ப வேலை. இரவு வீடு திரும்ப நேரமாகுமென்றார். அவரை அழைத்து எனக்காகச் சீக்கிரம் வந்துவிடும்படி கேட்கத்தான் போன் செய்தேன். நான் உடம்பு சரியில்லாதவள். நடக்க முடியாது. படுக்கையை விட்டு இறங்க முடியாது. வேலைக்காரி இன்னைக்கென்று லீவு சொல்லிட்டுப் போயிட்டா. 'பயம் ஒண்ணுமில்லை... போன் பக்கத்தில் இருக்கறச்சே என்ன பயம்'னுதான் என் வீட்டுக்காரர் சொல்லுவார். ஆனா எனக்குத் தனியா இருக்கவே பிடிக்கலை.

இனியன் (சலிப்புடன் மேஜை இழுப்பறையைத் திறந்து காகிதம் பேனாவை இழுத்து உள்ளே தள்ளிச் சாத்துகிறார்): நாங்க கவனிக்கிறோம், அம்மா! டெலிஃபோன் டிபார்ட்மெண்டில் விசாரிக்கிறோம்.

சாந்தா (பொறுமை இழந்து): ஆனா ஃபோன் டிபார்ட்மெண்டிலே போன் பேசிக்கிட்டிருந்தாத்தான் நெம்பரை டிரேஸ் பண்ண முடியும்னு சொல்லிட்டாங்களே. நான் ஏற்கெனவே கேட்டுட்டேன்!

இனியன்: அப்படியா?

(காட்சி: இனியன் கொட்டாவி விடுகிறார்.)

சாந்தா (அதிகார தோரணையில்): சும்மா விசாரிக்கிறேன், கேட்கிறேன்னு போதாது. ஏதாவது உருப்படியா உடனே நீங்க செய்யணும். அவங்க பேசி முடிச்சப்புறம் நீங்க நெம்பரை டிரேஸ் பண்ணிப் பார்த்து என்ன பிரயோசனம்? நீங்க நெம்பரைக் கண்டுபிடிக்கிறதுக்குள்ளே கொலையே நடந்து முடிஞ்சுடும்!

(காட்சி: இனியன் டீ டம்ளர் மீது வைத்துள்ள சிறு தட்டை உயர்த்தி எடுத்து மேஜை மீது கவிழ்த்தாற் போல் வைக்கிறார்.)

இனியன்: நாங்க கவனிக்கிறோம். நீங்க கவலைப்படாதீங்க.

சாந்தா: உடனடியா நீங்க தேடணும். நகரம் பூராவும் தேடணும்னு எனக்குத் தோணுது. நான் ஒரு பாலத்துக்குக் கிட்டத்தான் இருக்கேன். தாண்டவராயன் தெருவும் இங்கிருந்து ரொம்ப தூரம் இல்லை. நீங்க உடனே ஒரு போலீஸ் வானையோ ஜீப்பையோ இந்தப் பக்கம் அனுப்பிச்சா நல்லது. எனக்கு நிம்மதியா இருக்கும்.

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்


ஆவி போர்த்திய கம்பளி!

நாங்கள் ஸ்ரீநகரில் இருந்தபோது, குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டுவிடும் டாக்ஸி டிரைவர் தரம்பஜன்சிங், தான் ஆவியைச் சந்தித்துப் பேசிய சம்பவத்தை ஒரு தினம் கூறினார்:

அன்று இரவு மணி ஒன்பதரை இருக்கும். கம்பளியைப் போர்த்திக்கொண்டு சவாரியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். "தரம்பா காதல் ஆயேகா?" ஒரு சிறு பெண்ணின் குரல் கேட்டது. "தராங் பைட்டோஜி" என்று சொல்லிக்கொண்டே விளக்கை ஏற்றியவன் திடுக்கிட்டுப் பயந்து போய்விட்டேன். பதினைந்து அல்லது பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு இளம் பெண் ஆடையின்றி நின்றிருந்தாள். அவள் குழந்தை முகம் நிஷ்களங்கமாக சிரித்தவாறிருந்தது. ஏதோ கேட்க ஆரம்பிப்பதற்குள், அவள் "இந்தா ரூபாய் சீக்கிரம் என்னை தரப்பாகாதலுக்கு என் வீட்டிற்குக் கொண்டுவிடு" என்றவாறு கதவைத் திறந்தாள். சரி இது ஏதோ நிசர் பைத்தியமாக இருக்கும் எதற்கும் அது சொல்லும் இடத்தில் கொண்டு விட்டுவிடலாமென்று எண்ணி, அவள் கொடுத்த இருபது ரூபாயையும் வாங்கிக் கொண்டேன். 'ஏபைத்தியமே இந்தா இதைப் போர்த்திக் கொள்!' என்று கம்பளியை அதனிடம் கொடுத்தேன். அவள் கலகலவென்று பெரிதாகச் சிரித்துப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்தாள்.

அவள் சொன்ன சந்தில் நிறுத்தினேன். அவள் இறங்கி நடந்து ஐந்தாவது வீட்டினுள் நுழைவதைப் பார்த்துவிட்டுப் பிறகு நானும் சென்றேன். கதவு தாளிடப்பட்டிருந்தது. அந்தப் பெண் இங்கேதானே நுழைந்தாள் என்ற ஆச்சரியத்துடன் கதவைத் தட்டினேன். உள்ளேயிருந்து ஒரு கணவனும் மனைவியும் வந்தனர். ஆனால் அந்தப் பெண் அங்கே இல்லை. நான் நடந்ததைச் சொன்னதும், அவர் சீறி விழுந்தார். பெரிதாகக் கத்தினார். அப்போதுதான் அங்கு மாட்டியிருந்த அந்த போட்டோ என் கண்களில் பட்டது. "அதோ அவளேதான். காசு எனக்கு வேறே ஒன்னும் வேண்டாம். என் கம்பளியை அவளிடம் கொடுத்தேன்; அதைத் திருப்பி வாங்கித் தந்து விடுங்கள்" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் 'ஓ' வென்று அழுது விட்டனர். அவர்களுடைய கடைசிப் பெண்ணின் படமாம் அது. இரண்டு வருடங்களுக்கு முன் இதே டிசம்பரில் ஜீலம் நதியில் மூழ்கி இறந்து விட்டாளாம்! அவளுடைய ஆவிதான் வந்திருக்கிறது! "ஐயோ எங்களால் அதைப் பார்க்க முடியவில்லையே. இங்கு நுழைந்தாள் என்கிறாயே!" என்று அரற்ற ஆரம்பித்து விட்டனர். தாங்கமுடியாத அதிர்ச்சியுடன் வீடு வந்து சேர்ந்தேன். அதைவிட பிரமிப்பூட்டும் சம்பவம் மறுநாள் இரவு நடந்தது. நான் டாக்ஸியோட்டி களைத்துப்போய் வண்டிக்கருகில் நின்றிருந்தபோது என்னையறியாமல் தூக்கத்தில் நடப்பது போல் நடந்து அருகிலிருந்த மயானத்திற்கு வந்தேன். என் கண்கள் ஓரிடத்தில் குத்திட்டு நின்றன. என் கம்பளி! முதல்நாள் நான் கொடுத்த அதே கம்பளி. அங்கே ஒரு கல்லறையின் மேல் கிடந்தது! பயந்து திரும்ப யத்தனிக்கும்போது அந்தக் கம்பளி என் மீது போர்த்தப்பட்டது! அவ்வளவு தான். அப்படியே ஓடிவந்து டாக்ஸியில் விழுந்தேன். ஒரு வாரம் என்னை ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார்கள். அந்த ஆவியைக் கருணையோடு மட்டுந்தானே பார்த்தேன்-தீங்கு செய்யவில்லையல்லவா? அதனாலோ என்னவோ நான் சீக்கிரம் தேறிவிட்டேன். ஆனாலும் அந்தக் கம்பளியைப் பார்க்கும்போதெல்லாம் என் உடல் நடுங்குகிறது.

எஸ். மீனாக்ஷி





இனியன் (டீ உறிஞ்சியபடியே): உங்க வட்டாரத்திலே கொலை நடக்கப் போற துன்னு எதனால் சொல்றீங்க?

சாந்தா: ஊகம்தான். கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா பயங்கரமாகவே இருக்கு. தாண்டவராயன் தெரு, கூர்க்கா, ரயில் பாலம் எல்லாம் பொருத்தமா இருக்கே!

இனியன்: சென்னையிலே எத்தனை தாண்டவராயன் தெருக்கள், எத்தனை ரயில் பாலங்கள் இருக்கின்றன தெரியுமா? (டீ அருந்தியபடியே) அவங்க ஃபோனிலே மாம்பலம்னு சொல்லலியே... பார்க்கப் போனா சென்னைன்னே சொல்லலியே! அந்தக் கொலை சென்னையில்தான் நடக்கப் போவுதுன்னு நாம் எப்படி முடிவு கட்டறது?

சாந்தா: ஆமா. சென்னையில்தானே நான் இருக்கேன்! டவுனில் உள்ள என் கணவர் ஆபீஸுக்குத்தானே ஃபோன் பேசினேன். அப்பத்தானே இந்த ராங் நெம்பர் கிடைச்சது!

இனியன்: நீங்க டைரக்ட் டயலிங் டிரங்கால் ஒன்றை ஓவர் ஹியர் பண்ணலேன்னு என்ன நிச்சயம்? (டீ டம்ளரை வைத்து விட்டு) இதோ பாருங்க, இந்தப் பேச்சை நீங்க ஓவர் ஹியர் பண்ணலேன்னு வைச்சுக்குங்க; டயல் செய்ததும் வழக்கம்போல் உங்கள் கணவர் லைன் கிடைச்சிருந்துதுன்னு வைச்சுக்குங்க. இந்தக் கொலை பற்றி நீங்க கொஞ்சமாவது கவலைப்படப் போறீங்களா?

சாந்தா: இல்லே.... ஆமா.... நடக்கப் போறது ரொம்ப ரொம்ப அக்கிரமம். அசுரத்தனம்.

இனியன்: நாடெங்கும் எத்தனையோ கொலைகள் தினம் தினம் நடக்கின்றன. எல்லாவற்றையும் எப்படியாவது தடுத்துவிட முடியும்னு செய்வோம். ஆமா நீங்க சொல்ற இதுமாதிரி துப்புங்களை வைச்சுக்கிட்டு என்ன செய்யறது? இது துப்பே இல்லே!

சாந்தா: என்ன அப்படிச் சொல்றீங்க!

இனியன்: நீங்க ஒருவேளை உங்களைக் கொல்லவே முயற்சி நடப்பதாக நிச்சயமா நம்பறீங்களா? அதைச் சொல்லாமல், ராங் நம்பர், ஓவர் ஹியர் பண்ணினேன், அது இதுன்னு கதை அளக்கிறீங்களா? அப்படியானா சொல்லுங்க நடவடிக்கை எடுக்கறோம்.

சாந்தா: என்னையா? என்னை யார் எதுக்குக் கொலை பண்ணணும்? நான் ராப் பகலா தனியா இருக்கேன். யாரையுமே பார்ப்பதில்லே, என் வேலைக்காரி முனியம்மா தவிர. அவளும் ஒரு சோம்பேறி. மாடி ஏறி வரதுன்னாலே அலுத்துக்குவா. நான் சந்திக்கிற மற்றும் ஒரே ஒரு மனிதர் என் கணவர்தான். அவருக்கு என் பேரில் ரொம்பப் பிரியம். எனக்கு உபசாரம் பண்ணிக் கொண்டாடுவார். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் நான் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்தவதான். அன்னிலேந்து அவர் என்னை விட்டுப் பிரிஞ்சதே இல்லே. அவ்வளவு அன்பு....

இனியன்: அப்ப நீங்க கவலைப்பட ஒண்ணுமே இல்லையே. என்ன சொல்றீங்க! (பையன் ஒரு பொட்டலத்தோடு வந்து பெருமிதத்தோடு இனியன் முன் மேஜையில் பிரித்து வைக்கிறான்) பாக்கி சமாசாரத்தை எங்களிடம் விட்டுடுங்க. நிம்மதியா இருங்க.

சாந்தா: நீங்க என்ன பண்ணுவீங்க? இரவு ரொம்ப நேரமாயிடுச்சே. கிட்டத்தட்ட பதினொரு மணி ஆயிடுச்சே.

இனியன் (தீர்மானமான குரலில்): நாங்க கவனிச்சுக்கறோம் அம்மா (பட்டர் பிஸ்கட்டையும் பையனையும் மாற்றி மாற்றிப் பார்த்து மகிழ்ச்சிப் புன்னகை புரிந்து தலையசைக்கிறார்.)

சாந்தா: போலீஸ் ரேடியோவில் தகவல் ஒலிபரப்பறீங்களா? வேன், ஜீப் அனுப்பறீங்களா? சந்தேகாஸ்பதமான இடங்களில்

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

ஆவி ஆராய்ச்சி

நானும் அலுவலக நண்பர்கள் சிலரும் பட்டுக்கோட்டை மணிக்கூண்டு அருகிலுள்ள கட்டிடத்தில் அறை எடுத்துத் தங்கி வந்தோம்.

மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் எழுதிய ஆவி உலக ஆராய்ச்சி என்கிற புத்தகத்தில் எழுதியுள்ள விவரப்படி அந்தமந்திர எழுத்துக்களை ஒரு தாளில் எழுதிக் கண்ணாடி பிரேம் போட்டு போர்டு மாதிரி செய்து தரையில் வைத்து ஊதுபத்தி கொளுத்தி வைத்து எதிரே உட்கார்ந்து கண்ணாடி பிரேமின் நடுவில் ஒரு டப்பாவில் ஆள்காட்டி விரலை வைத்து இறந்தவர்களின் ஆவியை அழைக்கும் முறையில் எனக்குப் பழக்கம் உண்டு. இது நன்றாக என்னுடைய மீடியம் பவரில் செயல்பட்டது.

நண்பர் வெங்கட்ராமனுக்கு இதனைச் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

ஒரு நாள் உட்கார்ந்து தமது உறவினரின் ஆவியை அழைத்தார். திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் ஆவி அவர் உடலிலேயே பரவி அதன் சக்தியை அவர் தாங்க முடியாமல் பல் கட்டி, பேச்சு மூச்சில்லாமல் படுத்துவிட்டார். அனைவருக்கும் பயமாகி விட்டது.

நான் தைரியத்தைக் கைவிடவில்லை. நண்பரை அப்படியே படுக்க வைத்துவிட்டு, 'போர்டில்' நான் உட்கார்ந்து, மீடியம் வாயிலாக எனது தந்தையின் ஆவியை அழைத்து நண்பர் மீது வந்துள்ள ஆவி பற்றிக் கேட்டேன். ஒரு கெட்ட ஆவி அவர் மீது வந்துவிட்டதாகத் தெரிவித்தார். எப்படியாவது அதைப் போக்கச் செய்து அவரைக் காப்பாற்றும்படி என் தந்தையிடம் கூற, அவரும் அவ்விதமே செய்ய, நண்பர் பதினைந்து நிமிடம் கழித்துக் கண் விழித்தார். அவர் பயத்தைத் தெளிய வைத்தோம்.. அன்றிலிருந்து இந்த ஆவி உலக ஆராய்ச்சி வேலையை விட்டுவிட்டேன்.

இந்தச் செய்தியைக் கல்கிக்கு எழுதும்போது மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் இறந்துவிட்டதாக ரேடியோவில் அறிவிக்கப்படுகிறது. நாம் ஒரு நல்ல ஆவி உலக ஆராய்ச்சி நிபுணரை இழந்துவிட்டோம். - ப. க. பரமசிவம்



உஷாராக இருக்கும்படி பீட்டிலே இருக்கிறவங்களுக்குச் சொல்லி அனுப்பறீங்களா?

(காட்சி: பையன் இனும் கிடைக்கும் என்று ஆவலுடன் காத்திருக்கிறான்.)

இனியன் (உறுதியாக): இத பாருங்கம்மா, நாங்க கவனிச்சுக்கறோம்னுதான் சொல்லிட்டேனே. (பட்டர் பிஸ்கட்டைப் பார்க்கிறார்.) இப்ப எனக்கு உடனே கவனிக்க வேண்டிய வேறே முக்கியமான வேலை காத்துக் கிடக்கு.

சாந்தா: ஓ! (ரிஸீவரை மடேரென்று வைக்கிறாள்) முட்டாள்!



(காட்சி: இனியன் ஃபோனை வைத்து விட்டுத் தோள்களைக் குலுக்கிக் கொள்கிறார். பையனைப் பார்த்துக் கண்ணடிக்கிறார். சரியான பைத்தியம் என்று ஃபோன் செய்தவளை வர்ணிக்கும் பாவனை அதில் தொக்கியிருக்கிறது. ஒரு பட்டர் பிஸ்கட்டை எடுத்து முழுசாக வாயைப் பெரிதாகத் திறந்து உள்ளே போடுகிறார். ஸ்பாட் லைட் மங்கி அணைகிறது.)

சாந்தா (படுக்கையறையில் இருந்தபடி ஃபோனைப் பதற்றத்துடன் பார்த்து): நான் ஏன் அப்படி இடை வெட்டினாற் போல் போனை வைச்சேன்? இப்ப அவன் என்னைத் தான் முட்டாள்னு நினைச்சுக்கப் போறான்.

(இழுபட்ட ஸ்பிரிங் போல் அவள் உட்கார்ந்திருக்கிறாள். பிறகு தடாலென்று பின்னுக்குத் தலையணையில் விழுகிறாள். ஓரிரு விநாடிகள் அப்படியே படுத்திருந்து சுய அனுதாபத்துடன் முணுமுணுக்கிறாள்): ஐயோ! ஏன் இவர் வீட்டுக்கு வரமாட்டேன் என்கிறார்? ஏன் இன்னும் வரலை? ஏன்?

(காட்சி: ரயில் ஒன்று பாலத்தின் மீது விரையும் ஒலி கேட்கிறது. அவள் எழுந்து உட்காருகிறாள். ரிஸீவரைக் கையில் எடுக்கிறாள். கம்ப்ளெய்ண்ட்ஸுக்கு டயல் செய்யும் ஒலி.

காட்சி: வலதுபுறம் இரண்டாவது ஆபரேட்டர் மீது ஸ்பாட் லைட் ஒளி பாய்ச்சுகிறது..)

ஆபரேட்டர்: கம்ப்ளெய்ண்ட் ஹியர்.

சாந்தா: மறுபடியும் தயவு செய்து 21304 டிரை பண்ணறீங்களா? அவர் வீடு திரும்ப இவ்வளவு நேரம் ஏன் ஆகணும்? புரியவே யில்லையே!

ஆபரேட்டர்: 21304... ஒன் செகண்ட் பிளீஸ் (கனெக்ஷன் தரும் ஜாடை—என்கேஜ்ட் ஒலி) லைன் என்கேஜ்டா இருக்கு. கொஞ்ச நேரம் கழிச்சு....

சாந்தா (ஆத்திரத்துடன்): எனக்குக் காது கேட்குது. என்கேஜ்டா இருக்குன்னு எனக்கே தெரியுது. அதை நீ வேறே சொல்லணுமா? (ரிஸீவரை மடேரென்று வைக்

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்:

கூச்சலும் விளக்கமும்!

ராஜமுந்திரி நகரின் ஓரத்தில் அமைந்திருந்த எனது அண்ணனின் வீட்டை அடுத்த வீட்டிற்கு யாரும் குடியிருக்க இரண்டு வருடங்களாக வரவில்லையாம். நான் அங்கு சென்று ஒரு வாரம் கழித்த பிறகு அந்த வீட்டிற்கு ஓர் இளம் தம்பதிகள் தங்கள் குடும்பத்தினரோடு வந்து சேர்ந்தனர்.

மறுநாள் இரவு நல்ல உறக்கத்தில் நாங்கள் ஆழ்ந்திருந்தபோது பக்கத்து வீட்டிலிருந்து பயங்கரமான கூக்குரல் வந்தது. ஓடிச் சென்று ''என்ன நடந்தது?'' என விசாரித்தபோது ''எங்கள் ஊர் ஹைதராபாத். நான் இங்குள்ள உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றலாகி வந்திருக்கிறேன். கட்டிலில் என் அருகே படுத்திருந்த என் மனைவி பயங்கரமாகக் கூச்சலிட ஆரம்பித்து விட்டாள். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.'' என அப்பெண்ணின் கணவர் கூறினார். ''உங்கள் மனைவிக்கு தமிழ் தெரியுமா?'' என்று விசாரித்ததற்கு ''தமிழ் தெரியவே தெரியாது'' என்று கூறி விட்டார். ஆனால் அவள் ''என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டார்களே'' என்று தமிழில்தான் கதறிக் கொண்டிருந்தாள்.

எனது பெரியப்பா திருக்குர்ஆனிலிருந்து 'சூரா' ஒன்று ஓதினார். இதன் காரணமாக அந்தப் பெண் சற்று அமைதி அடைந்தாள். ''உனக்கு என்னம்மா செய்கிறது?'' என எனது பெரியப்பா கேட்டவுடன் அப்பெண் கேவிக் கேவி அழத் தொடங்கி விட்டாள். பின் சற்று அமைதியடைந்து ''என் பெயர் ஜெரினா. தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் வசித்து வந்த எங்கள் குடும்பம் வியாபாரம் செய்யும் பொருட்டு ராஜமுந்திரிக்கு வந்து சேர்ந்தோம். எங்கள் கடையில் வேலை பார்த்து வந்த நிஜாம் என்பவருக்கும் எனக்கும் இடையே காதல் ஏற்பட்டது. இவ்விஷயம் எனது பெற்றோர்களுக்குத் தெரிய வரவே வேறு இடத்தில் எனது திருமணத்திற்கு உடனடியாக ஏற்பாடு செய்தனர். எவ்வளவோ எடுத்துக் கூறியும் என் தந்தை மிக்க பிடிவாதமாக இருந்த காரணத்தினால் வாழ்க்கை வெறுத்து இந்த வீட்டில் தூக்குப் போட்டுக் கொண்டு விட்டேன். தற்போது இந்த வீட்டில் தங்கியிருப்பவர்களில் இந்தப் பெண்தான் வயதில் மிகவும் இளையவள். எனவே இப்பெண்ணின் மீது ஏறிக் கொண்டு விட்டேன்'' என்று கூறி முடிந்தவுடன் அப்படியே மூர்ச்சையாகி விழுந்து விட்டாள்.

மறுநாள் எனது பெரியப்பா ''தங்கல்'' என்று அழைக்கப்படுபவரை அழைத்து வந்து அவரிடம் அந்தப் பெண்ணைக் காட்டினார். அவர் ஒரு தனியறையில் சுமார் மூன்று மணி நேரம் ஏதோ செய்து அப்பெண்ணிடம் குடி கொண்டிருந்த ஆவி நிலையை மாற்றி விட்டார். மறுநாள் காலையில் இருந்து அப்பெண் வழக்கம் போல நல்ல நிலைமைக்கு வந்து விட்டாள்.

— எஸ். சையது முகம்மது





கிறாள். ஸ்பாட் லைட் மங்கி அணைய இரண்டாவது ஆபரேட்டர் மறைகிறான். சாந்தா தலையணையில் மறுபடி சாய்கிறாள். தனக்குத் தானே பரபரப்புடன் முணுமுணுத்துக் கொள்கிறாள். கடிகாரத்தை ஒரு முறை பார்க்கிறாள். சௌகரியமாக இருக்க முயல்கிறாள். முடியவில்லை. தனக்குத் தானே முணு முணுத்துக் கொண்டு படுக்கையில் அமைதியின்றி நெளிகிறாள்:) இந்தக் கட்டிலை விட்டுச் சற்று நேரம் இறங்க முடிஞ்சாப் போதும். அடைந்து கிடக்காமல் கொஞ்சம் புதுக் காற்றைச் சுவாசிக்க முடிஞ்சாப் போதும். வேறே ஒண்ணும் இல்லேன்னாலும் ஜன்னல் வழியா தெருவைக் கொஞ்சம் எட்டிப் பார்க்க முடிஞ்சாக் கூடப் போதும். (பெருமூச்சு விடுகிறாள். மாத்திரைப் பாட்டிலை எடுத்துக் குலுக்கி ஒரு மாத்திரையைக் கரத்தில் விழச் செய்கிறாள். அதே சமயம் ஃபோன் மணி அடிக்கிறது. அம்பாகத் தாவி உடனே அதை எடுக்கிறது அவள் கரம்:) ஹலோ! என்னங்க, நீங்க தானே? ஹலோ! ஹலோ! இந்த டெலிபோன் சனியனுக்கு என்ன நேர்ந்தது இன்னைக்கு? ஹலோ! ஹலோ! (மடேரென்று ரிஸீவரை வைக்கிறாள். இழுத்து நிறுத்திய ஸ்பிரிங் போல விரைப்பாக இருந்து அதனை முறைத்துப் பார்க்கிறாள். ஃபோன் மறுபடி அடிக்கிறது. உடனே எடுக்கிறாள்:) ஹலோ ஹலோ! அட ஆண்டவனே! யார் இது? ஹலோ! ஹலோ! (ரிஸீவரை மடேரென்று வைக்கிறாள். கம்ப்ளெய்ண்ட்ஸ் டயல் செய்கிறாள்.)

(காட்சி: இடதுபுறம் ஸ்பாட் லைட் ஒளியில் இனியன் காலி செய்த இடத்தில் இப்போது மூன்றாவது ஆபரேட்டர் தெரிகிறான்.)

ஆபரேட்டர்: கம்ப்ளெய்ண்ட் ப்ளீஸ்!

சாந்தா (ரொம்பவும் நச்சுப்பட்டவளாக அதிகார தோரணையில்): ஹலோ! ஆபரேட்டர்! இன்னைக்கு இந்த ஃபோனுக்கு என்ன ஆச்சுன்னே தெரியலே. என்னைப் பைத்தியமா அடிச்சுக்கிட்டிருக்கு. இந்த மாதிரி ஒரு திறமையற்ற டிபார்ட்மெண்டை நாங்க கட்டிக்கிட்டு அழ வேண்டியிருக்கு. இத பாருங்க, நான் நோய்வாய்ப்பட்டவ. எழுந்து நடக்கக் கூட முடியாதவ. எனக்கு ஒரே நர்வஸ்ஸா இருக்கு. படபடன்னு வருது. ஆனா நான் படபடத்துக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லி இருக்கார். ஆனா இந்த ஃபோன் இப்படியே தொல்லை கொடுத்துக்கிட்டிருந்தா....

மூன்றாவது ஆபரேட்டர் (இனிமை சொட்டும் குரலில்): ஃபோனில் என்ன கம்ப்ளெய்ண்ட்? அதைக் கொஞ்சம் சொன்னால் தேவலாம்.

சாந்தா: எல்லாமே கோளாறுதான். உலகில் உள்ள அத்தனை பேரும் கொலை செய்யப்பட்டால் கூட டெலிபோன் டிபார்ட்மெண்ட் கண்டு விரலைக் கூட அசைக்காது. இப்ப என் ஃபோன் மணி விடாம அடிச்சுக்கிட்டே இருக்கு...

மூன்றாவது ஆபரேட்டர்: ஃபோன் மணி அடிக்குது.... அப்புறம்?

சாந்தா: ஐந்து செகண்டுக்கு ஒரு தரம் அடிக்குது. ஃபோனை எடுத்தா யாருமே பேசறதில்லே.

மூன்றாவது ஆபரேட்டர்: அப்படியா? ஃபோனை வைச்சுடுங்க டெஸ்ட் பண்ணிப் பாக்கறேன்.

சாந்தா: நீங்க ஒண்ணுத்தையும் டெஸ்ட் பண்ண வேண்டாம். என்னோட பேச யார்

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

சினிமாத் தியேட்டரில் ஆவி!

ஒரு சினிமாத் தியேட்டரில் வேலை பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தினமும் இரவுக் காட்சிகள் முடிந்து எல்லோரும் படுக்கச் செல்ல இரவு இரண்டு மணி ஆகும். ஒரு நாள் இரவு படுக்கச் சென்ற பின் மூன்று மணி அளவில் என்னுடன் படுத்திருந்த ஒருவர் திடீரென்று எழுந்து எங்களை எழுப்பி, "யாரோ மாடி பால்கனி ஸ்விட்சைப் போட்டுவிட்டு மாடிக்குப் போகிறார்கள்" என்றார். எங்களுக்கு ஒருவரும் தென்படவில்லை. மறுநாள் அதே மணி அளவில் மற்றொரு ஊழியர் கூச்சல் உளறலுடன் எழுந்து, நாங்கள் படுத்திருந்த வராந்தாவின் முன்பு மறைப்புக்காகத் தொங்க விடப்பட்டிருந்த பெரிய "ஸ்கிரீன்" தானாகவே சுருட்டிக்கொண்டது என்றும், அதன் பின்னால் இருந்த ஒரு கரிய உருவம் தன்னை நோக்கி வந்தது என்றும் கூறி அழத் தொடங்கி விட்டார்.

அதற்கு மறுநாள் டிக்கெட் கொடுத்துக் கொண்டிருந்த இன்னொரு நண்பர் திடீரென்று பல்லைக் கடித்துக் கொண்டு டிக்கெட்டுகளையும் காசுகளையும் வீசி எறிந்துவிட்டுப் பக்கத்தில் இருந்த கிணற்றை நோக்கி ஓட ஆரம்பித்தார். மற்ற ஊழியர்கள் அவர் கிணற்றில் குதிப்பதற்குள் பிடித்து இழுத்து வந்து கட்டிப் போட்டு விபூதி மந்திரித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தோம்.



எங்களுடன் வேலை பார்த்து வந்த ஒரு கிறிஸ்துவர், "ஆவியாவது, பிசாசாவது, அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் தனியாகப் படுத்துக் கொள்கிறேன்" என்று தைரியமாகச் சொல்லிவிட்டு மறுநாள் அவ்வாறே செய்தார். இரவு மூன்று மணி அளவில் அவரும் கைகால்களை உதைத்துக் கொண்டு தன் அருகில் இருந்த மரக் கட்டைகளை எடுத்து எதிரில் இருந்த ஜன்னலை நோக்கி எறிந்து கொண்டே, "ஐயோ, என்னைக் கொல்ல வருகிறான், என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கூச்சலிட்டார். நிலைமை மிகவும் மோசமாகப் போகவே எங்களுடன் இருந்த ஒருவர் அந்தத் தெருவில் இருந்த ஒரு மந்திரவாதியை அழைத்து வந்தார். மந்திரவாதி அந்தக் கிறிஸ்துவ நண்பரின் தலை முடியைப் பிடித்துக் கொண்டு சில மந்திரங்களைச் சொல்லி, விசாரித்தார். அவர் உடம்பில் புகுந்திருந்தது எங்கள் தியேட்டருக்கு அருகில் உள்ள ஒரு சிறிய ஆற்றில் சில மாதங்களுக்கு முன் கொலை செய்யப்பட்டவரின் ஆவி எனக் கூறினார். அதை விரட்ட, செய்ய வேண்டிய பரிகாரத்தையும் சொன்னார். அவ்வாறு பரிகாரம் செய்த பின் எவ்விதமான அசம்பாவிதமும் அங்கு நேரவில்லை.

-இரா குமார்

முயற்சி செய்யறீங்க? அவங்களோட எனக்குக் கனெக்ஷன் கொடுங்க.

மூன்றாவது ஆபரேட்டர் (அமைதியாக): அது சாத்தியமில்லையே அம்மா!

சாந்தா (புயலாக சீறி): சாத்தியமில்லையா? ஏன் சாத்தியமில்லேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?

மூன்றாவது ஆபரேட்டர்: டெலிஃபோன்கள் தானியங்கு முறையில் செயல் படுகின்றன. உங்களுக்கு ஃபோன் செய்கிறவர் லைன் கிடைக்கலேன்னு எங்களுக்குப் புகார் கொடுத்தாலொழிய அவரை உங்களுக்காக நாங்கள் எப்படித் தேட முடியும்?

சாந்தா: என்ன முட்டாள்தனம்! எவ்வளவு குழப்பம்! எத்தனை சிக்கல்! இத்தனைக்கிடையில் நான் இங்கே என் கட்டிலில் உட்கார்ந்துக்கிட்டு ஒவ்வொரு தடவை ஃபோன் அடிக்கிறபோதும் என்னென்னவோ கற்பனை பண்ணிக்கிட்டு அவதிப்படணும்.

மூன்றாவது ஆபரேட்டர்: லைனைச் சோதிச்சுப் பார்க்கிறோம் அம்மா.

சாந்தா: செக் பண்ணறோம், சோதிக்கிறோம். இதைத்தான் உங்களால் சொல்ல முடியும். செய்ய முடியும். உருப்படாத டிபார்ட்மெண்ட். முட்டாள்தனம், அசட்டுத்தனம் (ஃபோனை வைக்கிறாள்) ஓ அவன் மேல் எரிந்து விழுந்து என்ன பிரயோசனம்? (ஸ்பாட் லைட் மங்கி அணைய மூன்றாவது ஆபரேட்டர் மறைகிறாள். அதே கணத்தில் சாந்தாவின் ஃபோன் மணி மறுபடி ஒலிக்கிறது. ரிஸீவரைக் கையில் எடுத்து இரைகிறாள்:) ஹலோ! ஹலோ! எனக்கு ஃபோன் பண்ணுவதை நிறுத்தப் போறியா இல்லையா? நான் சொல்றது காதில் விழுதா? பதில் பேச மாட்டே? உனக்கு என்ன வேணும்? எதுக்கு என்னைப் பைத்தியமா அடிக்கப் பார்க்கிறே?

(காட்சி: வலப்புறம் ஸ்பாட் லைட் ஒளி பாய அங்கு ஒரு மனிதன் மேஜை முன் அமர்ந்திருக்கிறார். மேஜை மேல் ஃபோனும் பல தந்திகளும் உள்ளன.)

மனிதன் (இயந்திர கதியில்): ஹலோ 42295?

சாந்தா (மூச்சைப் பிடித்துக்கொண்டு): ஆமா, ஆமா, இது 42295தான்

போனேஜிராம்: இது போனேஜிராம். சாந்தா என்பவருக்கு ஒரு தந்தி வந்திருக்கு. தந்தியை வாசிச்சா கேட்டுக்க அங்கே பொறுப்பானவங்க யாராவது இருக்காங்களா?

சாந்தா (அமைதி அடைய முயன்று): நான்தான் சாந்தா.

போனேஜிராம் (உணர்ச்சியற்ற குரலில்): தந்தி பின்வருமாறு: சாந்தா, 53, துரைசாமி ரோடு, தி. நகர், மெட்ராஸ். ஸாரி. டிரைட் டு கெட் யூ ஃபோர் லாஸ்ட் ஹாஃப் அவர். பட் லைன் என்கேஜ்ட். லீவிங் ஃபோர் பாம்பே நைட் ஃப்ளைட் அர்ஜண்ட் பிஸினஸ். லவ். சிவராமன்.

சாந்தா (மூச்சு முட்டப் பிரமிப்படைந்து தனக்குத் தானே): ஓ! ஐயோ!



ஓட்டம் படைத்த ஆவி வடிவம்

குழந்தை உருவில் ஆவி!

எட்டாவது வரை படித்திருக்கும் நான் ஒரு ரிக்ஷாத் தொழிலாளி. ஒரு நாள் இரவு சவாரி எதுவும் கிடைக்காததால் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். தெருவில் ஈ ஈ சந்தடி இல்லை. ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. குரல் வந்த திசையில் திரும்பினேன். ஒரு பெண் குழந்தை (இரண்டரை வயதிருக்கும்) தெரு ஓரத்தில் தனியாக அழுது கொண்டிருந்தது. 'எம்பாப்பா அழுவுதே. உன் வீடு எங்கே?' என்று கேட்டவுடன் கிழக்குத் திசையை நோக்கிக் கை காண்பித்தது. 'சரி வா போகலாம்' என்று கூறியவாறு குழந்தையைத் தூக்கி ரிக்ஷாவில் உட்கார வைத்தேன்.

சற்று நேரம் சென்றதும் திடீரென்று ரிக்ஷாவின் எடை அதிகமாகியது. ஒன்றும் புரியாமல் திரும்பிப் பார்த்தேன். புகை போன்ற தோற்றத்தில் ஒரு பெரிய பெண் உருவம் அந்தக் குழந்தை இருந்த இடத்தில் இருப்பதைக் கண்டு 'ஆ' என்று அலறிக் கொண்டு ரிக்ஷாவுடன் கீழே சாய்ந்தேன். உருவம் நொடியில் மறைந்தது.

உடம்பில் பயங்கர வலி. பேச முடியாமல் வாய் கட்டிக்கொண்டது. என் உடம்பு பூரண குணமாகப் பல நாட்கள் ஆகியது.

அந்த ஆவி வடிவத்தைப் பற்றி விசாரித்தேன். காதலில் தோல்வி யடைந்த பெண் தற்கொலை செய்து கொண்டாளாம். காதலனால் அவள் வயிற்றில் சிசு ஒன்று உருவாகி யிருந்தது. வயிற்றிலிருந்த அந்தச் சிசுவுடன் தற்கொலை செய்து கொண்ட காரணத்தால் அந்தப் பெண்ணின் ஆவி வடிவம் சிறு குழந்தையாக ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் உலாவுகின்றதாம்!

என். செல்வப் பாண்டியன்

போனேஜிராம்: அவ்வளவுதான் தந்தி. நகலை அனுப்பணுமா?

சாந்தா: வேண்டாம், அவசியமில்லை.

போனேஜிராம்: தாங்க்யூ. குட் நைட்.

(காட்சி: ஃபோனை வைக்கிறான். ஸ்பாட் லைட் உடனே அணைய, போனேஜிராம் மனிதர் மறைகிறார்.)

சாந்தா (போனில் இயந்திர கதியில்): குட் நைட்! (மெதுவாக ஃபோனை வைக்கிறாள்:) இருக்காது, இருக்காது உண்மையாய் இருக்காது. அவரால் எப்படி இந்த மாதிரி நடந்து கொள்ள முடியும்? நான் தன்னந் தனியாய் இருப்பேன் என்று அவருக்குத் தெரியாதா? இது ஏதோ ஏமாற்று வேலைதான்! ஏதோ அக்கிரமமான....

(காட்சி: வெளியே ரயில் ஏகமாகச் சத்தம் போட்டுக் கொண்டு செல்வது கேட்கிறது. அவள் பீதியுடன் குபுக்கென்று கட்டிலில் பாதி எழுந்து அமர்கிறாள். ஜன்னலை வெறித்து நோக்குகிறாள். அவள் நடந்துகொள்ளும் விதத்தில் பதற்றம் தெரிகிறது.





முஷ்டியால் படுக்கையைக் குத்து கிறாள். திடீரென்று நிறுத்துகிறாள். ஃபோனை எடுக்கிறாள்! கம்ப்ளெய் ண்ட்ஸ் டயல் செய்கிறாள்.)

(காட்சி: ஸ்பாட் லைட் ஒளி இடது புறம் அமர்ந்திருக்கும் நாலாவது ஆபரேட்டரைக் காட்டுகிறது.)

ஆபரேட்டர் (நறுங்காது): கம்ப்ளெ ெய்ண்ட் ப்ளீஸ்!

சாந்தா: ஆபரேட்டர் தயவு செய்து 21304 டிரை பண்ணறீங்களா? தயவுசெய்து எனக்காக இந்த ஒரே ஒரு தடவை மட்டும்.

ஆபரேட்டர்: இதோ. (கனெக்ஷன் தரப் படுகிறது. மறுபுறம் ஃபோன் மணி அடிப் பது கேட்கிறது. அடித்துக் கொண்டே இருக்கிறது. சில விநாடிகளுக்குப் பிறகு) லைன் சரியாகத்தானே இருக்கு? ஆனா ஃபோனை யாரும் எடுக்கலியே?

சாந்தா: போயிட்டார் ... என்னங்க ஏன் இப்படிச் செய்தீங்க? எப்படி உங்களால் இந்த மாதிரி நடந்துக்க முடிஞ்சுது? (போனை வைத்துவிட்டு சுய அனுதாபத்துடன் விம்மு கிறாள். அமைதி இழந்து இப்படியும் அப்படி யுமாக நெளிகிறாள். ஸ்பாட் லைட் அணைய நாலாவது ஆபரேட்டர் மறைகிறாள்.) என்னால் இன்னிக்குத் தனியாக இருக்க முடியாது... இன்னும் ஒரே ஒரு கணம் தனியா நான் இருந்தா... (கோசத்தினூடே விரல்களைக் கொடுத்துக் காட்டுத்தனமாகக் கோதிக் கொள்கிறாள்.) அவர் என்ன வேணும் னாலும் பேசிக் கோபிச்சுக்கிட்டுப் போகட்டும்; எவ்வளவு வேணும்னாலும் செலவாகட்டும்... நான் உடம்பு சரியில்லாதவ. எனக்குத் துணை வேணும்.

(காட்சி: நடுங்கும் கரத்தால் ரிஸீ வரை மறுபடி எடுக்கிறாள். என்கொயரி டயல் செய்கிறாள். ஸ்பாட் லைட் வலதுபுறம் அமர்ந்திருக்கும் என் கொயரி ஆபரேட்டரைச் காட்டு கிறது.)

என்கொயரி: என்கொயரி ஹியர்.

சாந்தா: எனக்கு ஸெயிண்ட் ஜோன்ஸ் நர்ஸிங் ஸர்வீஸ் ஃபோன் நெம்பர் வேண்டும்.

என்கொயரி: ஸெயிண்ட் ஜோன்ஸ் நர்ஸிங் சர்வீஸ்ஸா? விலாசம் சொல்ல முடியுங்களா?

சாந்தா: தெரியாது. அது ஒரு சின்ன மிஷனரி அமைப்பு. நோயுற்றவங்களைக் கவ னிக்க, பயிற்சி பெற்ற நர்ஸ்களை அனுப்பு வாங்க. நிறைய சார்ஜ் பண்ணுவாங்க. ஆனா கிடைக்கிற பணத்தைத் தர்ம காரி யங்களுக்குப் பயன்படுத்தறாங்க. இரண்டு வருஷம் முந்தி எனக்கு அப்பெண்டிஸைட்டிஸ் ஆபரேஷன் நடந்தப்போ வீடு திரும்பிய பிறகு ஒரு வாரத்துக்கு அங்கே யிருந்துதான் நர்ஸ்ங்க மாறி மாறி வந்து என்னைக் கவ னிச்சுக்கிட்டாங்க.

என்கொயரி: ஒன் ஸெகண்ட் ப்ளீஸ்.

சாந்தா: சீக்கிரம், சீக்கிரம் ரொம்ப அவசரம். மணி என்ன?

என்கொயரி: மணி தெரியணும்னா 175 ஃபோன் பண்ணுங்க.

சாந்தா (ஆத்திரம் அடைந்து): சிவ சிவா! நேரம் என்னன்னு சொல்லப்படாதா?

என்கொயரி: ஸெயிண்ட் ஜோன்ஸ் நர் ஸிங் சர்விஸஸ் நெம்பர் 426486.

சாந்தா: 426486 (பேசி முடிக்கு முன் னரே ஃபோனை வைத்துவிட்டு மறுபடி ரிஸீவரை எடுத்து உடனடியாக அந்த

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

தடைப்பட்ட திருமணம்!

நான் சுப்பிரமணியர் உபாசனை செய்பவன். மன நோயால் வருந்துபவர்கள் என்னை நாடி வந்து திருநீறு பெற்று இறையருளால் துன்பம் நீங்கப் பெற்றிருக்கின்றனர்.

நான் பழனி வட்டத்தில் பணியாற்றிய காலத் தில் பச்சா நாயக்கன்பட்டியில் தங்கியிருந்தேன். ஒரு நாள் மாலை அங்கூர் பள்ளித் தலைமை ஆசிரி யர் நண்பர் கருப்புச்சாமி என்னிடம் வந்து, தன் உதவி ஆசிரியை ரங்கநாயகி பள்ளியில் 'ஓ'வென்று கூக்குரலிட்டு மயங்கி விழுந்ததாகவும், ஒரு மணி நேரத்துக்குப் பின் தன் நினைவு ஏற்பட்டதாகவும் கூறி, இதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று வினவினர். இப்படி அடிக்கடி நேருவதாகவும் அறிந்தேன். இதனால் ரங்கநாயகியின் திருமண மும் தடைப்பட்டதாம்.

முறைப்படி பூஜைவைத் தொடங்கினேன். என் முன்னால் அமர்ந்திருந்த ரங்கநாயகி முகத்தில் ஒரு மாறுதல். ஒரு பொலிவு தென்பட்டது. என் முன்னால் அமர்ந்திருக்கும் ஆவி இறங்கிய பெண்ணிடம் நேரே பேசத் தொடங்கினேன். ஆவி பெயர் செல்வி என அறிந்தேன்.

"இந்தப் பெண்ணை எங்கே பிடித்தாய்?"

"வைகை அணையில்!"

"வைகை அணைக்கு நீ ஏன் சென்றாய்?"

"நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண் டிருந்தபோது எக்ஸ்கர்ஷனுக்கு வைகை அணை சென்றோம். அப்பொழுது ஆற்றில் தவறி விழுந்து இறந்துவிட்டேன்."

"இந்தப் பெண்ணை எவ்வாறு பிடித்தாய்?"

"இந்தப் பெண்ணும் எக்ஸ்கர்ஷனுக்கு வந்தவள் தான். வயதுக்கு வந்து ஆறு மாதம் இருக்கும். தலையில் மல்லிகைப் பூவோடு பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். எனக்கும் பிடித்திருந்தது. அதனால் தொற்றிவிட்டேன்."

ஆயக்குடி உயர்நிலைப் பள்ளியில் ரங்கநாயகி படித்துக் கொண்டிருந்தபோது வைகை அணை சென்றது உண்மை என்பதை அறிந்தேன்.

இறுதியாகச் செல்வியை இப் பெண்ணிடமிருந்து விலக்க முற்பட்டேன். அவளுக்கு விருப்பமான பொருட்கள் கேட்டு வாங்கிச் செல்லுமாறு வேண்ட, தனக்கு எதன் மேலும் விருப்பம் இல்லை எனவும் தன் நெற்றியில் என் கையாலேயே திருநீறு இடுமாறும் வேண்டியது. நான் ஓட்டிய பேய்களில் செல்வியைப் போல் உன்னதமான பெண்ணை ஆவி வடிவத்தில் கண்டதில்லை.

ரங்கநாயகியை எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆட்டிப் படைத்த ஆவி வெளியேறிய பின் திருமணம் நடந்து நன்றாகவே இருக்கிறாள். —பூ. அரங்கசாமி



நெம்பரை வாய் விட்டுக் கூறியபடியே டயல் செய்கிறாள்.)

(காட்சி: ஸ்பாட் லைட் அணைய என்கொயரிப் பெண்மணி மறைகிறாள். ஃபோன் மணி ஒலிக்கிறது. ஸ்பாட் லைட் ஒளி இடது புறம் மேஜைக்கு முன் நர்ஸ் உடையில் அமர்ந்திருக்கும் ஒரு பெண்மணியைச் சுட்டுகிறது.)

நர்ஸ் (நடுத்தர வயது, கண்டிப்புடன் கூடிய யதார்த்தமான சுபாவம்): செயின்ட் ஜோன்ஸ் நர்ஸிங் ஸர்விஸஸ்.

சாந்தா (அதிகார தொனியில்): எனக்கு உடனே ஒரு நர்ஸை அனுப்பி வைக்கணும் உடனே...

நர்ஸ்: ஓ ரா என்ன உடம்பு?

சாந்தா: நரம்புத் தளர்ச்சி, படபடப்பு, ரொம்ப நர்வஸ்ஸா இருக்கேன். என்னை அமைதிப் படுத்தணும். எனக்குத் துணை இருக்கணும். என் கணவர் ஊரில் இல்லே... நான்....

நர்ஸ்: யாராவது டாக்டர் ஏங்களை உங்களுக்குச் சிபாரிசு செய்தாரா?

சாந்தா: இல்லே. இந்தச் சம்பிரதாயச் சடங்கெல்லாம் எதற்கு? எனக்கு நர்ஸ் வேணும். அவங்களுக்காகப் பணம் தர நான் தயாரா யிருக்கேன்.

நர்ஸ்: எனக்குப் புரியுது அம்மா. ஆனா இந்தக் காலத்திலே டயிற்சி பெற்ற நர்ஸ்கள் கிடைப்பதே ரொம்பக் கஷ்டமா யிருக்கிறது. அதனாலே டாக்டர் ரொம்ப அவசியம்னு சிபாரிசு செய்தா லொழிய நர்ஸ் யாரையும் அனுப்ப வேண்டாம்னு எங்க சூப்பரின்டென்டெண்ட் சொல்லி யிருக்காங்க..

சாந்தா (ஹிஸ்டீரியா பிடிக்கத் தன் வசமிழந்து): இது ரொம்ப அவசியமான கேஸ் தான். நான் நோய்வாய்ப்பட்டவள். ரொம்பக் கலங்கிப் போயிருக்கேன். இந்த வீட்டில் தனியா இருக்கேன். என்னால் கட்டிலே விட்டு இறங்கக் கூட முடியாது. இன்று இரவு ஒரு டெலிஃபோன் பேச்சை ஓவர் ஹியர் பண்ணினேன். ஒரு கொலை பற்றிப் பேசிக்கிட்டாங்க. பாவம், ஒரு பெண்மணியை இன்றிரவு பதினொன்னே காலுக்குக் கொன்னுடப் போறாங்க. யாராவது உடனே வரலேன்னா எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்.

நர்ஸ் (அமைதியாக): பார்க்கலாம் அம்மா! சூப்பரின்டென்டெண்ட் வெளியே போயிருக்காங்க. திரும்பி வந்ததும் அவங்க கிட்டே சொல்றேன். உங்க பேரு?

சாந்தா: சூப்பரின்டென்டெண்ட்... அவங்க எப்போ வருவாங்களோ?

நர்ஸ்: நிச்சயமா தெரியலே. பதினொரு மணிக்கு ஒரு அவசர கேஸ்னு வெளியே போனாங்க...

சாந்தா: பதினொரு மணிக்கா? மணி பதினொன்று ஆகலியே இன்னும் (கூச்சலிடுகிறாள்) ஓ என் கடிகாரம் நின்னு போச்சே! இப்ப மணி என்ன?

(காட்சி: நர்ஸ் தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறாள்.)

நர்ஸ்: பதினொன்னு அடிக்கப் பதினைந்து நிமிஷம்.



ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

பழக்கமான குரல்!

சில காலம் வெளியூரில் இருந்துவிட்டு ஊர் திரும்பினேன். இரவு நேரம். ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். சுமார் ஏழு பர்லாங்கு தான் இருக்கும். என் பெயரைச் சொல்லிப் பின்னாலிருந்து பழக்கமான குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் நண்பன்.

இருவரும் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினோம். அவன் என்னிடம் அதிகமாகப் பேசவில்லை. அவன் சுபாவம் அப்படி. நானும் அதிகமாகப் பேச மாட்டேன்.

வீட்டை அடையச் சில கஜங்கள்தான் இருக்கும். எனக்கு சிகரெட் தேவைப்பட்டது. வழியோரத்தில் கடையில் வாங்கலாம் என்று மூடியிருந்த கதவைத் தட்டினேன். கடைக்காரர் கதவைத் திறந்தார். சற்றுத் தள்ளி நின்றிருந்த என் நண்பனைப் பார்த்துவிட்டு என்னிடம் யார் என்று கேட்டார். நான் சொன்னேன். சட்டென்று என் கையைப் பிடித்துக் கடைக்குள் இழுத்து, கதவை மூடித் தாளிட்டுக் கொண்டார்.

என் நண்பன் இறந்து ஒரு வாரமாகிவிட்டது என்ற செய்தியை அவர் சொன்னதும் எனக்கு வியர்த்துக் கொட்டியது. சில கெஜ தூரத்தில் இருக்கும் வீட்டுக்குச் செல்லத் துணிவில்லாமல் அன்று அங்கேயே தங்கி விட்டேன்.

கோத்தகிரி பிறைமுடியான்

(சாந்தாவின் டெலிஃபோன் நெம்பரிலேயே அதே லைனில் வேறு ஒரு ஃபோன் ரிஸீவர் எடுக்கப்படுவது போன்ற ஒரு கிளிக் ஒலி.)

சாந்தா (உரக்க): என்ன அது?

நர்ஸ்: எது என்ன?

சாந்தா: அந்தக் கிளிக் சத்தம்... என் டெலிஃபோனிலேயே கேட்ட கிளிக் ஒலி... யாரோ கீழே உள்ள எக்ஸ்டென்ஷன் போனில் ரிஸீவரைக் கையில் எடுத்தது போன்ற ஒலி!

நர்ஸ்: எனக்கு ஒன்னும் கேக்கலியே, அம்மா! இப்போ உங்க விஷயமா...

சாந்தா (பயந்து): ஆனா எனக்குக் கேட்டுதே! யாரோ இந்த வீட்டில் இருக்காங்க! யாரோ கீழே வரவேற்பு அறையில் இருக்காங்க. அவங்க இப்ப நான் பேசறதைக் கேட்டுக்கிட்டிருக்காங்க. அவங்க... (தன் வாயைத் தானே பொத்திக் கொள்கிறாள். ரிஸீவரை வைக்கிறாள். அப்படியே பீதியில் சிலையாகச் சமைந்து உற்றுக் கேட்டபடி உட்கார்ந்திருக்கிறாள். அடங்கிய குரலில் தனக்குத் தானே): நான் ரிஸீவரை எடுக்க மாட்டேன். அவங்க நான் பேசறதைக் கேட்க அனுமதிக்க மாட்டேன். பேசாம கம்முனு இருக்கேன். அவங்க என்ன நினைப்பாங்கன்னு.... (பீதி அதிகரிக்க) இல்லே, இல்லே அவங்க கீழே இருக்கும்போதே நான் யாரையாவது போனில் கூப்பிட்





டாகணுமே! இப்ப உடனே கூப்பிடலேன்னு அப்புறம் கூப்பிடவே முடியாமப் போகுமே!

(ஃபோன் ரிஸீவரை எடுக்கிறாள். டயல் டோன் கேட்கிறது. பதற்றத்துடன் போலீஸ் டிபார்ட்மெண்ட் டயல் செய்கிறாள். என்கேஜ்ட் ஒலி. நடுங்கியவாறே அவசரமாக கம்ப்ளெய்ண்ட்ஸ் டயல் செய்கிறாள். இரண்டு தரம் மணி அடிக்கிறது.)

(காட்சி: இரண்டாவது மணி சத்தத்தின்போது வலப்புறம் ஸ்பாட் லைட் ஒளி 5வது ஆபரேட்டரைக் காட்டுகிறது.)

ஆபரேட்டர் (குண்டாக சோம்பேறியாக): கம்ப்ளெய்ண்ட்ஸ் ஹியர்.

சாந்தா (ரகசியக் குரலில், திக்கற்ற கடைசி முயற்சியாக): ஆபரேட்டர்! என்னைப் போராபத்து சூழ்ந்திருக்கிறது. போலீஸ் டிபார்ட்மெண்டைக் கூப்பிட்டா லைன் கிடைக்கலே....

ஆபரேட்டர்: நீங்க சொல்றது ஒண்ணுமே காதில் விழலே. உரக்கப் பேசுங்க.

சாந்தா (தொடர்ந்து ரகசியக் குரலில்): அதுக்குத் தைரியம் வரல்லியே? நான் பேசறதை யாரோ ஒட்டுக்கேட்கிறாங்களே! இப்ப கேட்குதா உனக்கு?

ஆபரேட்டர்: என்ன கம்ப்ளெய்ண்ட்? என்ன நெம்பர் வேணும்?

சாந்தா (கெஞ்சலாக, தீனமாக): நான் சொல்றதைக் கேளேன், ப்ளீஸ்! எனக்கு நீதான் உதவணும். இந்த வீட்டிலே யாரோ இருக்காங்க. யாரோ என்னைக் கொல்லப் போறாங்க. நீ உடனே போலீஸோடன் தொடர்பு.... (சாந்தாவின் எக்ஸ்டென்ஷன் ஃபோனில் ரிஸீவர் வைக்கப்படும் க்ளிக் ஒலி. சாந்தா பயங்கரமாகப் பீதியுடன் அலறுகிறாள்:) கேட்குதா கேட்குதா? அவன் ரிஸீவரை 'வைச்சுட்டான். வந்திண்டிருக்கான். (கூச்சல் போடுகிறாள்) மாடி ஏறி வரான்! (படுக்கையில் பதறித் துடித்துக் கரம் வீசி அலைந்து அடித்து தவிக்க, ஃபோன் ஒயர் டேபிள் லாம்பில் சிக்கி அதைச் சாய்க்க, பல்ப் அதிர்ச்சியில் ஃபியூஸ் ஆகி விளக்கு அணைய, இருள் சூழ்கிறது. கரகரத்த குரலில்:) எனக்கு போலீஸ் டிபார்ட்மெண்ட் வேணும். கனெக்‌ஷன் தரியா? சீக்கிரம்! (இருண்ட மத்திய அரங்கின் ஒரு பக்கம் கதவு நிழலாகத் திறக்கப்படுவது தெரிகிறது. கூச்சலிடுகிறாள்:) போலீஸ்!

(காட்சி: அரங்கில் ஒரு நிழலுருவம் வேகமாகப் பாய்கிறது. படுக்கையை நெருங்குகிறது. சாந்தாவின் தொண்டையிலிருந்து பீதியில் குரல் எழ முடியாமல் தடுமாறி, கம்மி, கரைகிறது. அப்போது....)

ஆபரேட்டர்: போலீஸ் டிபார்ட்மெண்ட் கனெக்ட் பண்ணியிருக்கேன். மணி அடிக்குது. பேசுங்க.

(ஸ்பாட் லைட் அணைய ஆபரேட்டர் மறைகிறாள். ஃபோன் மணி ஒலிக்கிறது. ரயில் வரும் ஒலியும் தூரத்தே கேட்கத் தொடங்குகிறது. இரண்டாவது முறை மணி அடிக்கும்போது சாந்தா 'வீல்' என்று அலறுகிறாள். ஆனால் பாலத்தின் மீது விரையும் ரயிலின் அதிகரித்த ஒலி அவள் கூச்சலை விழுங்கி விடுகிறது. சில விநாடிகளுக்கு ரயில் விரையும் ஒலி மட்டுமே கேட்கிறது. பின்னர் அந்த ஒலி தேய்ந்து மறைகிறது. போலீஸ் டிபார்ட்மெண்டில் ஃபோன் மணி அடித்துக் கொண்டிருக்கிறது. இடதுபுற அரங்கில் ஒளி இனியனைக் காட்டுகிறது.)

இனியன்: போலீஸ் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் இனியன் ஹியர். (அமைதி. மத்திய அரங்கில் இருளைத் தவிர வேறு எதுவுமே தெரியவில்லை) போலீஸ் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் இனியன் பேசறேன்.

(காட்சி: ஒரு டார்ச் லைட் ஒளி சிந்துகிறது. ஒளி சாந்தாவின் கட்டிலுக்குப் பக்கத்தில் உள்ள ரிஸீவர் எடுக்கப்பட்ட டெலிஃபோன் மீது விழுகிறது. அதன் அருகேயே உயிரற்ற அவள் கரம் தொங்குகிறது. பைரவன் கீழே குனிந்து கறுப்பு கிளவ்ஸ் அணிந்திருக்கும் கரத்தால் தரையிலிருந்து ரிஸீவரை எடுக்கிறான். அவனுக்கு மூச்சிரைத்துக் கொண்டிருக்கிறது.)

பைரவன்: ஸாரி, ராங் நெம்பர்.

(காட்சி: அவன் ரிஸீவரை மெல்ல ஃபோன் மீது வைத்துவிட்டு வெளியேறுகிறான். இனியன் தோள்களை ஒருமுறை குலுக்கி விட்டுக்கொண்டு ரிஸீவரை வைக்கிறான். திரை இறங்குகிறது.)





கடல்ராணி

சாண்டில்யன்

முன்கதை

இந்தியாவின் மேலைக் கடலோரத்தில் சிவாஜி மகாராஜா கட்டியிருந்த சிந்து துர்க்கம் என்ற கடற்கோட்டையின் தலைவியும் பெரிய கொள்ளைக்காரியென பிரசித்தி பெற்றவளுமான கடல் ராணியைப் பிடிக்க வந்த இரு வெள்ளையரிடமிருந்து அனந்த் என்ற மகாராஷ்டிர வாலிபன் அவளைக் காப்பாற்றுகிறான். அவனிடம் அவள் காதல் கொள்கிறாள். அவள் காதல் வசப்பட்டுத் தென்னஞ்சோலையில் அனந்தின் பிணைப்பிலிருந்த நேரத்தில் டெய்லர், இங்கலண்ட், ஒற்றைக்கால் வில்வர் ஆகிய மூன்று பிரபல வெள்ளைக்கார கொள்ளையரால் இருவருமே காஸன்ட்ரா என்ற அவர்களுடைய பலமான கப்பலுக்குக் கடத்திச் செல்லப்படுகின்றனர். அவர்களைக் காப்பாற்ற முயன்ற ராணியின் தந்தை சங்கர்பந்தும் அவர்களிடம் அகப்பட்டுக் கொள்கிறார்.

இந்த மூவரையும் காஸன்ட்ரா கப்பலில் ஏற்கனவே கூனன் போல் நடித்த துலாஜி ஆங்கரே சந்திக்கிறான். காப்டன் டெய்லரிடமிருந்து தப்பிய காப்டன் மாக்ரே பெரும் பணத்துடன் பிரிட்டிஷ் கப்பல்களில் வருவதாக அறிவித்ததால்டெய்லரும் இங்கலண்டும் அந்தக்கப்பலை முறியடிக்கவும் பணத்தைப் பங்கு போடவும் உடன்பட்டு, கடல் ராணியின் அழைப்பை ஏற்று காஸன்ட்ராவை சிந்து துர்க்கக் கோட்டையின் அருகில் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அன்று சிவாஜியின் சிலைக்கு அபிஷேகம் நடந்ததும் தனி அறையில் ராணியும் அனந்தும் படுத்திருப்பதாகக் கேள்வியுற்ற சங்கர்பந்த் அவர்கள் அறையைப் பூட்டிவிடுகிறார். நள்ளிரவில் திடீரெனத் துப்பாக்கி சத்தம் கேட்க, அறைப் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதையும், அனந்த் மறைந்து விட்டதையும் அனைவரும் பார்க்கிறார்கள்.

இது நடந்து ஒரு வாரம் கழித்து விஜயதுர்க்கத்தை அண்டியிருந்த ஒரு மலைக்குடிசைக்கு வந்த அனந்த் அங்கு சாரு என்ற பெண்ணையும் பேஷ்வா பாஜிராவையும் சந்திக்கிறான். அங்கு பெரும் கடற்கொள்ளைக்காரரும் மகாராஷ்டிர கடற்படைத் தலைவருமான கனோஜி ஆங்கரே வந்து அவர்களை விஜயதுர்க்கத்தில் விருந்துக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு வந்த காப்டன் மாக்ரேயை மற்ற மூவருக்கும் அறிமுகப்படுத்துகிறார். விருந்தின் போது சாருவைக் கடல்ராணியென்று அறிவித்து மாக்ரேயின் திட்டத்தை அவர் அறிய முயலுகையில் அசல் கடல்ராணி திடீரென விருந்து மண்டபத்தின் முகப்பு அறை வாயிலில் தோன்றுகிறாள்.

அத்தியாயம் 37

விஜயதுர்க்க நாடகம்

சிளவிலும் அச்சமென்பதை அறியாத கடல் தீரனான கனோஜி ஆங்கிரேயே கடல் ராணியின் திடீர் வரவால் திகைப்படைந்து விட்டாரென்றால், அடுத்து ஏதும் பேச இயலாது விழித்தாரென்றால், அனந்தைப் பற்றியோ, சாருவைப் பற்றியோ என் சொல்ல? அனந்தின் கண்களில் அச்சம் விரிந்தது அளவுமீறி. சாருவின் கண்களில் அச்சமில்லையென்றாலும் வெறுப்பும் இகழ்ச்சியும் அத்துமீறிப் பிரதிபலித்தன. அத்தனை திகைப்பிலும் கனோஜி ஆங்கரேக்குச் சில விஷயங்கள் புரியவில்லை. யாரும் உத்தரவின்றிப் புக முடியாத விஜயதுர்க்கத்துக்குள் கடல் ராணி எப்படி வந்தாள்? அப்படியே வந்தாலும் பலமான கட்டுக் காவலுள்ள தனது மாளிகையில் எப்படி நுழைந்தாள்? அப்படியே மாளிகைக்குள் நுழைந்தாலும் விருந்து மண்டபத்து முகப்பு அறைக்குள் காவலர் முன்னறிவிப்பு இல்லாமல் எப்படிப் புகுந்தாள்? என்ற கேள்விகளைத் தாமே கேட்டுக் கொண்டு விடை ஏதும் கிடைக்காததால் டரிமாறும் பணியாளனை ஜாடை காட்டி அழைத்து இன்னொரு மதுக் குப்பியைக் கொண்டு வரச் சொல்லிக் காலி செய்து

விட்டுத் தமது முரட்டு மயிர்களைக் கோதியும் விட்டுக் கொண்டார்.

அனந்த் உட்கார்ந்த நிலையில் தலையைக் குனிந்து கொண்டான், தலைக்கு மேல் போனது சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற நினைப்பில். சாரு சிறிதும் லட்சியமின்றி அனந்தின் இதயத்தில் நுழைந்து விட்ட அந்தக் கடல் ராணியை உற்று நோக்கினாள். கடல் ராணியின் கண்களும் கலந்தன அவனுடைய கண்களுடன். ஆனால் ஏதும் பேசவில்லை, சிந்து துர்க்கத்தின் தலைவி. இந்த மாதிரி ஒரு நிலையில் காப்டன் மாக்ரேயால் சும்மா இருக்க முடியவில்லை. ''ஹூ ஈஸ் திஸ் இன்ட்ருடர்? (இடையில் நுழைந்த இவன் யார்?)'' என்று வினவினான்.

பேஷ்வா பாஜிராவ் மட்டும் எந்தவிதக் கலக்கமோ குழப்பமோ இல்லாமல் தமது மதுவைச் சிறிது சிறிதாக உறிஞ்சினார், கண்ணாடி டம்ளரிலிருந்து. அப்படி உறிஞ்சிக் கொண்டே பாதி டம்ளரிலும் பாதி முகப்பு அறையின் வாசற் படியிலும் கண்களைச் செலுத்தினார். கடல் ராணி அவரைப் பார்க்காததால் அவரே பேசத் தொடங்கி, ''சாரு! இங்கு உன்னை யார் வரச் சொன்னது எஃது அனுமதியின்றி?'' என்று சற்றுக் கண்டிப்புடன் சொற்களை உதிர்த்தார்.

இதைக் கேட்டதும் கடல் ராணி சாருவைப் பார்ப்பதை விட்டு பேஷ்வாவின் கண்களைக் கவனித்தாள். பேஷ்வாவின் கண்களில் என்ன செய்தி இருந்ததோ தெரியாது. கடல் ராணியின் கடை இதழ்களில் புன் சிரிப்பு விரிந்தது முதல் முதலாக. ''விஜய துர்க்கத்துக்கு அழைத்துப் போவதாகப் பலமுறை சொன்னீர்கள், அழைத்துப் போக வில்லை. ஆகையால் நானே வந்தேன்'' என்றாள் கடல் ராணி புன்சிரிப்பின் சாயை முகத்திலும் பரவ.

பாஜிராவின் முகத்தில் துன்பச் சாயை விரிந்தது. ''அதற்காக இப்படித் திடீரென்று வரலாமா? அதுவும் காப்டன் மாக்ரே நமது பழக்க வழக்கங்களுக்குப் புதியவர்....'' என்று மெள்ள வாசகத்தை முடிக்காமல் விட்டார் பேஷ்வா.

இதைக் கேட்டதும் கடல் ராணி முகத்தில் பெரு வியப்பைக் காட்டினாள். ''ஸோ திஸ் ஈஸ் த பேமஸ் காப்டன் ஜேம்ஸ் மாக்ரே. த ஹீரோ ஆப் ஸெவரல் ஸீ பைட்ஸ் (அப்படி



யானால் பல கடற் போர்களில் வெற்றி மன்னனாகப் புகழ் வாய்ந்த ஜேம்ஸ் மாக்ரே இவர் தானா?)'' என்று கேள்வி கேட்டுக் குரலில் பேராவலைக் காட்டினான்.

இதைக் கேட்ட ஜேம்ஸ் மாக்ரே தனது ஆசனத்தை விட்டு எழுந்து கடல் ராணிக்குத் தலை வணங்கி ''காப்டன் மாக்ரே அட் யுவர் ஸர்விஸ் மேடம் (அம்மணி! தாங்கள் சேவகன் மாக்ரே)'' என்று பிரிட்டிஷ் மரியாதையுடன் கூறினார். அவன் அப்படிச் சொன்னதும் வாசற் படியிலிருந்து நடந்து உள்ளே வந்துவிட்ட கடல் ராணியிடம் கைகுலுக்கத் தன் கையையும் நீட்டினான்.

கடல் ராணி கலகலவென்று நகைத்தாள். காப்டனை நோக்கி ''காப்டன்! நான் ஹிந்துப் பெண். பரபுருஷர்களைத் தீண்ட மாட்டேன்'' என்று மராத்தியில் கூறினாள். இப்படி அவள் மராத்தியில் பேசக் கேட்டதிலிருந்தே மாக்ரேயைப் பற்றிய முழு விவரங்களும் அவளுக்குத் தெரியும் என்பதை கனோஜி ஊகித்துக் கொண்டார். அதை ஊர்ஜிதப்படுத்த கடல் ராணி மாக்ரேயை நோக்கி ''காப்டன்! உங்களுக்குப் பல மொழிகள் தெரியும் என்று கேள்வி. மராத்தியும் தெரியுமல்லவா?'' என்றும் வினவினாள்.

''தெரியும். உங்கள் பெயர்....?'' என்று வினவினான் மாக்ரே.

''சாரு. பேஷ்வாவின் மருமகள்'' என்றாள் கடல் ராணி.

அனந்த் திருடன் போல் விழித்தான். அப்பொழுதுதான் கடல் ராணி தனது கை வரிசையைக் காட்டினாள். அனந்தைச் சுட்டிக் காட்டி ''இவருக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. ஆனால் இவர் திருட்டுத்தனமாகக் கடல் ராணியை அழைத்து வந்திருக்கிறார்'' என்று குற்றம் சாட்டி மேஜையைச் சுற்றி வந்து சாருவின் நாற்காலியின் பின்புறத்தில் நின்று கொண்டாள். ''கடல் ராணி! எழுந்திரு இந்த இடத்திலிருந்து'' என்றும் மிரட்டினாள்.

சாரு தலையைத் திருப்பிக் கடல் ராணியை நோக்கினாள் கடு விழிகளால். ''உன் மாமா பக்கத்தில் போய் உட்கார்ந்து கொள்'' என்று கடு சொற்களையும் கொட்டி பாஜிராவ் பக்கத்திலிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினாள்.

''முடியாது. இது என் இடம். என் கணவர் பக்கத்தில் என்னைத் தவிர வேறு யாரும் உட்கார முடியாது'' என்று கூறிச் சாருவை நாற்காலியோடு தூக்க முயன்றாள்.

கனோஜி ஆங்க்ரேயின் பாடு பரம திண்டாட்டத்தில் இருந்தபடியால் அவர் தமது ஆசனத்தை விட்டு எழுந்து, ''சாரு! நீ இங்கு உட்கார்'' என்று தமது ஆசனத்தைக் காட்டினார்.

''முடியாது. நான் அனந்தின் பக்கத்தில் தான் உட்காருவேன்'' என்றாள் கடல் ராணி.

''சரி சரி!'' என்ற கனோஜி தமது நாற்காலியை எடுத்து அனந்துக்கு அப்புறத்தில் போட்டுக் கடல் ராணியை உட்கார வைத்தார். ''இப்பொழுது சரியாகப் போய் விட்



டது'' என்று சொல்லித் தாம் மேஜையின் மற்றொரு முகப்புக்குச் சென்று பாஜிராவுக்கு நேர் எதிரில் உட்கார்ந்து கொண்டார்.

கடல் ராணி கஜேஜியை நோக்கிச் சீறினள், ''எது சரியாகப் போய்விட்டது?'' என்று.

''அனந்துக்கு இரு புறத்திலும் இருவரும் உட்கார்ந்திருக்கிறீர்கள். அனந்த் சாட்சாத் கிருஷ்ண பரமாத்மா மாதிரி இருக்கிறார்'' என்று கூறித் தமது ஹாஸ்யத்தை நினைத்து இடிஇடியென ராட்சதன் போல் நகைத்தார் கஜேஜி.

இத்தனைக்கும் பாஜிராவ் இமையைக் கூட அசைக்கவில்லை. மெள்ள மெள்ளக் கண்ணாடி டம்ளரிலிருந்த மதுவை உறிஞ்சி முடித்தார். பிறகு மல்லாந்து நாற்காலியில் சாய்ந்து மடியிலிருந்த சிறு வெள்ளைத் துணியால் வாயைத் துடைத்துக் கொண்டார். பிறகு கம்பீரமான குரலில் ''இப்பொழுது விருந்து முடிந்து விட்டபடியால் நான் இங்கு வந்த காரணத்தை விவாதிக்கலாம்'' என்று அறிவித்தார் அதிகாரக் குரலில்.

''ஆம், ஆம், அதுதான் முக்கியம்'' என்றார் கஜேஜி ஏதாவது பேச வேண்டுமென்பதற்காக.

''சாரு புதிதாக வந்திருக்கிறாள். அவளுக்கும் விஷயத்தை விளக்கி விடுவது நல்லது'' என்றார் பேஷ்வா.

கடல் ராணி புன்முறுவல் காட்டினள் பேஷ்வாவை நோக்கி. ''கஜேஜி என்னைப் பார்ப்பதற்கு முன்பே நான் இங்கு வந்து விட்டேன். நடந்த உரையாடலை எல்லாம் கேட்டேன்'' என்று கூறினள் புன்முறுவலின் ஊடே.

இங்கு கஜேஜி அசம்பாவிதமாகப் பேச முற்பட்டு ''அப்படியானல் மாக்ரே கேட்ட கேள்விக்கு என்ன பதில்?'' என்று கடல் ராணியைக் கேட்டார்.

இதனல் திகைப்படைந்த அனந்த் அவரை நோக்கித் தீ விழி விழித்து ''அதைப் பற்றிச் சாருவைக் கேட்டு என்ன பயன்? ராணியல்லவா பதில் சொல்ல வேண்டும்?'' என்று எரிந்து விழுந்தான்.

கஜேஜி சில சமயங்களில் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தால் அதை அடக்குவது கஷ்டம். ''சாருவைக் கேட்டாலென்ன, கடல் ராணியைக் கேட்டால் என்ன? இருவரும் உனக்கு வேண்டியவர்கள்தானே?'' என்று ஆரம்பித்தார்.

''இது போரைப் பற்றிய விஷயம்'' என்றான் அனந்த்.

''எந்தப் போரைப்பற்றி?'' கஜேஜி நகைத்தார் ராட்சச சிரிப்பாக.

''நீங்கள் கேட்பது புரியவில்லை'' கண்டிப்பிருந்தது அனந்தின் பேச்சில்.

''கடற் போரா? காதல் போரா?'' என்று விசாரித்த கஜேஜி அங்கரே பெரிதும் உற்சாகத்தைக் காட்டினர்.

அப்பொழுதுதான் கடல் ராணி தனது சாமர்த்தியத்தைக் காட்டினள். ''கடல் ராணிக்குத் தெரிந்ததெல்லாம் எனக்கும் தெரியும். மாமா அனைத்தையும் சொல்லி யிருக்கிறார். என்னையே கேளுங்கள்'' என்ற கடல் ராணி மாக்ரேயை நோக்கி ''காப்டன்! பேருக்கு என்னைக் கடல் ராணியாக வைத்துக்கொள்ளுங்கள். தங்களுக்கு எந்த வித உதவி தேவை?'' என்று வினவினர்.


காப்டன் மாக்ரே சிறிது நேரம் சிந்தித்தான். ''இன்னும் பத்து நாட்களில் நான் ஐந்து போர்க் கப்பல்களுடன் சிந்து துர்க்கம் வர முடியும். அப்படி வரும் பட்சத்தில் சிந்து துர்க்கத்தில் தற்சமயம் இருக்கும் காஸண்ட்ராவை எப்படிக் கைப்பற்ற முடியும்? அதற்கு நீங்கள் எப்படி உதவி செய்ய முடியும்? எனக்கு எப்படியும் அந்தக் கப்பல் தேவை. இங்கிலண்டும் டெய்லரும் கூடத் தேவை'' என்றான் காப்டன் மாக்ரே.

கடல் ராணியும் சிறிது நேரம் சிந்தித்தாள். ''காப்டன் மாக்ரே! கான் யூ ட்ரஸ்ட் மீ? (காப்டன் மாக்ரே! என்னை நீங்கள் நம்புவீர்களா?)'' என்று ஆங்கிலத்தில் வினவினள்.

''தட் டிபெண்ட்ஸ் ஆன் வாட் யூ ப்ரபோஸ் டு டூ (அது நீங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது)'' என்றான் காப்டன் மாக்ரே.

கடல் ராணி ஆசனத்திலிருந்து எழுந்திருந்தாள். கைகளை மேஜையின் மீது ஊன்றிக் கொண்டு தலை குனிந்து சிறிது நேரம் சிந்தனை வசப்பட்டாள். பிறகு சொன்னாள் சிரிய குரலில்: ''காஸண்ட்ராவை உங்க

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்



பிள்ளி ஆனியம்

அன்று இரவு 11 மணி [illegible]. அண்ணன் மனைவி கனகம் வெளியே [illegible] கதவைத் திறந்து சென்றபோது [illegible] என்ற ஓசை கேட்டு அஞ்சிப்போய் [illegible] அதிலிருந்து ஒரே முதுகு வ[illegible] விழுப்பாள். சாப்பிடாமல் [illegible] நாட்கள் [illegible]. மருந்து உட்கொள்ள [illegible] இயலவில்லை. ஒரு மந்திரவாதியை அழை[illegible] பேயை ஒருவாறு ஓட்டிய பின்னர் கனகம் [illegible] ஆட ஆரம்பித்தார். முந்திலும் [illegible] அடிக்கடி யாருக்கும் புரியாதபடி ஏதோ முணுமுணுப்பாள்.

ஒரு நாள் அதிகாலை [illegible] மணிக்கு என் காதுகளுக்கு, வெளியே தெருவில் 'ஓ[illegible]ஹோ.... ஹோ.... ஹோ....' என்று பேய் பிசாசுகளின் சப்தம் போன்ற இரைச்சல் கேட்டது. முன் ஹாலில் படுத்திருந்த என் அத்தானின் கண்களுக்கு வெளியேயிருந்து ஜன்னல் வழியாக ஒரு பறவை போன்ற உருவம் பறந்து வீட்டுக்குள் வந்ததாகத் தெரிந்ததாம்.

சிறிது நேரம் சென்ற பின்னர் சுமார் நாலரை மணி அளவில் 'ஓ.... ஊ....' என்ற குரலைச் சத்தம் கேட்டு என் அண்ணா எழுந்து ஓடிச் சென்று பார்த்தபோது இரத்தத்தை உறைய வைக்கும் காட்சி ஒன்று கண்டார். அண்ணன் மனைவி மயக்க நிலையிலேயே, கத்தியினால் தானே தன் கழுத்தைப் பல தடவைகள் குத்திக் கொண்டிருக்கிறாள். அதனல் ஏற்பட்ட இரத்தப் பெருக்கு படுத்திருந்த பாயிலும் தரையிலும் வழிந்து ஓடியது. அண்ணன் கனகத்தைப் பிடித்துக் கொண்டு அலறினர். எல்லோரும் உதவிக்கு ஓடிவந்தார்கள்.

இப்போது கனகத்துக்கு மூச்சுக் காற்று தொண்டை வழியாகப் போய் வந்துகொண்டிருந்தது.

ளிடம் ஒப்படைக்க என்னால் முடியும். ஆனால் இங்கிலண்ட், டெய்லர் இவர்கள் என் வசத்தில் இருப்பார்கள்.''

''ஏன்?'' என்று கேட்டான் மாக்ரே.

''அவர்கள் சிந்து தூர்க்கத்துக்கு வந்து என்னைச் சிறை செய்தார்கள். காஸண்ட்ராவுக்குக் கொண்டு போனார்கள். அதற்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும்'' என்றாள் கடல் ராணி.

புரிந்ததற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் மாக்ரே. ''நிச்சயமாக அவர்களைத் தண்டிப்பீர்களா?'' என்று கேட்கவும் செய்தான்.

''நிச்சயமாக'' என்றாள் கடல் ராணி.

கனோஜிக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. ''நல்லது! கடல் ராணியே வந்து விட்டது நல்லதாகப் போய்விட்டது'' என்று பெரிதாகச் சத்தம் போட்டுக் கடல் ராணியை நோக்கினார்.

''கனோஜி தவறு செய்கிறீர்கள். கடல் ராணியாக நான் நடித்தேன் ஏற்கனவே சொன்னபடி. எதற்கும் கடல் ராணியையே கேட்டுவிடுவோம்'' என்ற கடல் ராணி சாருவை நோக்கினாள். ''ராணி! நான் சொன்னதெல்லாம் சரிதானே?'' என்று வினவினாள்.

அதுவரை தலையைக் குனிந்து உணர்ச்சி வெள்ளத்தில் உட்கார்ந்திருந்த சாரு தலையை நிமிர்த்திக் கடல் ராணியின் கண்களோடு தனது கண்களைக் கலந்தான். பிறகு சொன்னான்: ''முற்றிலும் சரி'' என்று. அத்துடன் நிற்காமல் ''சாரு! நீ எதைச் சொன்னாலும் நான் மறுக்க மாட்டேன். நமது ஆசை அலைகள் ஒரே துறையில்தான் சென்று மோதுகின்றன'' என்றும் கூறினாள்.

கடல் ராணியின் முகத்தில் ஒரே ஒரு விநாடி சினத்தின் சாயை தோன்றி மறைந்தது. ''ஆம்! ஆம்!'' என்ற கடல் ராணி பேஷ்வாவை நோக்கி, ''இனி கனோஜியும் பிரிட்டிஷ் காப்டனும் ஒப்பந்தத்தை எழுதட்டும். கடல் ராணியிடம் அனுப்பிக் கையெழுத்து வாங்கலாம். இனி நாம் போகலாம்'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட பேஷ்வா புன்முறுவல் செய்தார். கனோஜி விழித்தார். அனந்த் பெரிதும் அலுத்துக் கொண்டான். சாருவின் விழிகளில் சினத்தின் சாயை உதயமாயிற்று. நிலைமை எல்லோருக்குமே உபத்திரவமாக இருந்தது. ஆனால் மாக்ரே இதைக் கேட்டதும் எழுந்திருந்து பேஷ்வாவை நோக்கி, ''என் கடமையை நான் செய்கிறேன். கடல் ராணி கூறிய உறுதியைக் காப்பாற்றட்டும்'' என்றான்.

''இனி நாம் போகலாம்'' என்று கடல் ராணி கூறினாள்.

''எங்கே?'' என்றான் அனந்த் குழப்பத்துடன்.

''மலைக் குடிசைக்கு'' என்றாள் கடல் ராணி.

''மலைக் குடிசைக்கா?'' வியப்பும் சங்கடமும் ஒலித்தது அனந்தின் கேள்வியில்.

''ஏன் சாருவுடன் வரக் கசக்கிறதா? அந்தக் கள்ளி கடல் ராணி மயக்கிவிட்டாளா உங்களை?'' என்று கேட்டுச் சாருவையும் சுட்டிக் காட்டிய கடல் ராணி அனந்தின் கையைப் பிடித்து ''வாருங்கள் போவோம்'' என்று இழுத்தாள்.

''விடு அவரை!'' சாருவின் குரல் கடுங்கோபத்துடன் எழுந்தது.

கடல் ராணி அனந்தின் கையை விடவில்லை. மாக்ரே அந்தக் காட்சியைக் கண்டு நகைத்தான். ''டூ கேர்ல்ஸ் அண்ட் ஒன் மான்! இட் ஸஸ் ஜஸ்ட் ஹெல் '(ஒரு புருஷன் இரண்டு மடந்தையர். அதை விட நரகம் ஏது?)'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

அதைக் கேட்ட கனோஜியும் நகைத்து, ''காப்டன்! நீங்கள் உங்கள் அறைக்குச் சென்று படுத்துக் கொள்ளுங்கள். காலையில் ஒப்பந்தத்தை எழுதுவோம்'' என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

அறையில் விடப்பட்ட மற்றவர் ஒருவரையொருவர் நோக்கினர். பேஷ்வாவின் ஒரு பார்வையால் பணியாளர் வெளியேறினர்.

கடல் ராணி பேஷ்வாவை நோக்கி, சாருவையும் நோக்கினாள். ''இந்த நாடகத்தின் காரணம் என்ன?'' என்று வினவினாள்.

அனந்தும் சாருவும் பதில் சொல்லவில்லை. பேஷ்வாவே விவரிக்கத் தொடங்கினார்.

(தொடரும்)

''என்னை விடடா....விடு....'' என்று கூறிப் பல தடவைகள் குரலை விட்டுக் கொண்டிருந்தார் கனகம். கண்கள் இரண்டும் மேல் சொருகி, நாக்கு வெளியே தள்ளி ஆக்ரோஷத்துடன் அவர் உடல் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

அப்பாவும் அத்தானும் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்று கார் வாடகைக்கும் பிடித்துக் கொண்டு வந்தார்கள். 12 கி. மீ. தூரத்திலிருக்கும் ஒரு தனியார் ஆஸ்பத்திரிக்கு மயங்கிய நிலையில் கனகத்தைக் கொண்டு சென்றார்கள்.

பல தையல்கள் போட்டுக் கழுத்தில் வெட்டுப் பட்டிருந்த இடத்துக்குச் சிகிச்சை அளித்தார்கள். ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் கனகம் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. இதில் அண்ணனுக்கு ரூ. 3000 செலவு.

நினைவு வந்த பிறகு கனகத்திடம் இது பற்றிக் கேட்டபோது, 'தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், வேதனை கூடத் தெரியவில்லை' என்றும் கூறினார். ஆனால் தெளிவு வந்த பின்னர் கழுத்தில் வேதனை இருந்தது. பேய் ஓட்டுபவரை அழைத்து வந்து பூஜைகள் செய்தோம்.

ஜோதிடம் பார்த்தபோது எங்கள் வீட்டுக்கு அருகிலேயே வசிக்கும் ஒரு எதிரிகள் துஷ்ட தேவதைகளை ஏவல் (பில்லி சூனியம்) செய்து விட்டதாகத் தெரிய வந்தது. இறைவன் அருளால் என் அண்ணன் மனைவி கனகம் பிழைத்தார்.

நா. கு. மனோகரன்



காலை சுமார் ஏழு மணி இருக்கும். முகமது அலி போல Still the Greatest என்று கருதத் தக்க கே. பாலசந்தர் வீட்டுக்குச் சென்றேன். மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தார். தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லைதான் ஆனால் காரியம் அவசரம். பத்தே நாள்தான் இருக்கிறது. கல்கிக்கு மேலட்டை வண்ணப் படம் தயாராக வேண்டும். மிஸஸ் பாலசந்தர் பக்குவமாக அவரிடம் பேசி உதவினார். பேட்டி கிடைத்தது. விவரம் கூறினேன்: ''கல்கி இதில் சிறப்பிதழை சுஜாதா தயாரிக்கிறார். 'ஸாரி, ராங் நம்பர்' என்ற நாடகத்தின் தமிழாக்கம் அந்தச் சிறப்பிதழில் இடம் பெற வேண்டும் என அவர் விரும்புகிறார். அத்துடன் அந்த நாடகத்தை கே. பாலசந்தர் டைரக்ட் செய்ய நடிகை லட்சுமி நடித்தும் காட்டினால் அதைப் புகைப்படங்கள் எடுத்துப் பிரசுரித்தால் கல்கி வாசகர்கள் மிகவும் மகிழ்வார்கள் என்பது கல்கி ஆசிரியரின் யோசனை.''



ஒரு மணி படப்பிடிப்பு..!

''எனக்கு டயமே இல்லையே! நாளை இரவு நான் ஹைதராபாத் போகிறேனே நீங்களோ அவசரம் என்கிறீங்க'' என்றார் பாலசந்தர்.

என் உற்சாகம் காற்றுப் போன பலூன் ஆகிவிட்டது.

''எதற்கும் புத்தகத்தை வைத்துவிட்டுப் போங்க. பார்க்கிறேன்'' என்றார். ''சாயந்திரம் ஃபோன் பண்ணுங்க சொல்றேன்.''

வெள்ளத்தோடு போனவனுக்குப் பற்றுக் கோல் கிடைத்த மாதிரி இருந்தது.

மாலையில் ஃபோன் செய்தபோது பாலசந்தருக்கு ஒரே உற்சாகம்! சுஜாதா—தேர்ந்தெடுத்திருந்த அந்த நாடகம் அவ்வளவு தூரம் அவரைக் கவர்ந்துவிட்டது என்பது புரிந்தது.

''சாயந்திரம் ஏழு மணிக்கு நடிகை லக்ஷ்மியுடனும் ஃபோட்டோகிராஃபருடனும் வந்துடுங்க. நம்ம வீட்டிலேயே படம் எடுத்துடலாம். இந்தக் காரியத்தை முடிச்சுக்கிட்டு நான் ஊருக்குப் புறப்படணும்'' என்றார்.

ஓட்டமாய் ஓடினேன் லக்ஷ்மி அவர்கள் இல்லத்துக்கு. ஒரே நிமிடத்தில் ஓ. கே. கிடைத்தது. அடுத்து ஏ. சுந்தரம் சந்திப்பு. மகிழ்ச்சியோடு புறப்பட்டார். மாலை பாலசந்தர் வீட்டுக்குப் போனால் ஒரே பிரமிப்பாக இருந்தது எனக்கு. காரணம், தம் வீட்டில் ஒரு 'ஸ்டூடியோ ஃப்ளோ'ரையே உருவாக்கி விட்டிருந்தார் பாலசந்தர். அறையில் இருந்த மேஜை நாற்காலிகள் எல்லாம் வேறிடத்துக்கு மாற்றியும் கட்டிலைக் கொண்டு வந்து போட்டும் மற்றபடி நாடகத்துக்கு ஏற்பச் சூழ்நிலையைக் கச்சிதப்படுத்தியும் வைத்திருந்தார்.


ஏ. சுந்தரம்



புத்தகத்தை மறுபடியும் ஒரு முறை நோட்டம் விட்டு இன்னும் சில மாற்றங்களைச் செய்தார். கலாகேந்திராவின் படப்பிடிப்பு விளக்குகள் கொண்டுவரப்பட்டுத் தயாராக இருந்தன. தம் வீட்டிலிருந்த எல்லோரிடமும் வேலை வாங்கிக் கொண்டிருந்தார். தமது ஒலிப் பதிவாளர் லோகநாதனையும் வரச் செய்து யோசனைகளை வரவேற்றுக் கொண்டிருந்தார். இதன் பின் ஏ. சுந்தரத்துடன் ஆலோசனைகள். திரும்பவும் சில சில்லறை மாற்றங்கள். மாத்திரைப் பாட்டில்களைக் கொண்டுவரச் சொல்லிக் கட்டிலருகே வைத்தார்.

''நாடகத்தை ஒரு தடவை படிச்சுடுங்க'' என்றார் லக்ஷ்மியிடம். ''22 பக்கம்தான் இருக்கு.'' லக்ஷ்மி படித்தார். படிக்கும்போதே அவர் முக பாவங்கள் மாறுவதைக் கவனித்தார் பாலசந்தர். திருப்திப் புன்னகை நிலவியது அவர் முகத்தில்.

பிறகு இன்ன கட்டம் படம் பிடிக்கப் போகிறோம் என்று கூறி, லக்ஷ்மிக்கு 'ஸிசுவேஷன்' பற்றிய தம் எண்ணங்களை விளக்கினார். 'மூட்' உருவாக்கினார். எல்லாம் தயாராகி, ஏ. சுந்தரமும் கிளிக் பண்ண ரெடியானபோது ''நிறுத்துங்க, நிறுத்துங்க'' என்று கூறிப் புத்தகத்தைப் பரபரப்புடன் மறுபடி வாங்கிப் பார்த்தார் பாலசந்தர். ''கடிகாரம் கதைப்படி சரியான நேரத்தைக் காட்ட வேண்டும்'' என்று சொல்லி முள்ளைத் திருப்பி வைக்கச் சொன்னார். நடிகை லக்ஷ்மி தாம் ஏற்கும் கதாபாத்திரம் பற்றி எழுப்பிய



சந்தேகங்களுக்கும் பதில் கூறினார். ஏ. சுந்தரத்தினிடம் ''கடிகாரம் படத்தில் விழுமில்லையா? மருந்துப் பாட்டில்களும் தெரிகிறதல்லவா?'' என்றெல்லாம் கேட்டு நிச்சயப்படுத்திக் கொண்டார்.

ஒத்திகையாக இரண்டு மூன்று தடவை நடிக்கச் செய்தார். "Scream! Scream!" என்று பாலசந்தர் கத்தும் குரல் என்னை நடுங்க வைத்துவிட்டது! அவர் விருப்பப்படி நடித்து லக்ஷ்மி அலற ஏ. சுந்தரம் கிளிக் செய்ய மினி ஷூட்டிங் சற்று நேரத்தில் நடந்து முடிந்தது!

'திறமையின் மறு பெயர் கே. பாலசந்தர்' —எல்லாருக்கும் தெரியும். பெருந்தன்மையின் மறு பெயர் என்றும் புரிந்து கொண்டேன்.

கல்கி வாசகர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களிடம் பாலசந்தருக்கு எவ்வளவு அன்பும் மதிப்பும் இருந்தால் இரவு சாப்பிடக் கூட இல்லாமல் தாம் ஊருக்குப் புறப்படுகிற அவசரத்திலும் இந்த ''ஷூட்டிங்''கை நடத்திக் கொடுத்துவிட்டுப் பறந்திருப்பார் என்று எண்ணிப் பார்க்கிறேன். அதற்குச் சற்றும் குறைவில்லாத விதத்தில் மனப்பூர்வமாய் ஒத்துழைத்த நடிகை லக்ஷ்மிக்கும் கல்கி நேயர்கள் சார்பில் நன்றி கூறினேன். சுபா ஏ. சுந்தரமோ, ''எனக்கு நன்றி ஒன்றும் வேண்டாம். இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த கல்கிக்கும் சுஜாதாவுக்கும் நான்தான் நன்றி கூற வேண்டும்'' என்று சொல்லி என்னை முந்திக் கொண்டுவிட்டார்.

—சலன்

விஜயனைக் கொல்வது என்று தீர்மானித்து விட்டேன். திடீரென்று இந்த முடிவுக்கு வரவில்லை. எத்தனையோ தினங்கள் யோசித்து யோசித்து, என் மண்டைக்குள் கேட்ட அத்தனை குரல்களையும் கேட்டுக் கேட்டு மனசுக்குள் புழுங்கி பாக்கெட் பாக்கெட்டாக சிகரெட் பிடித்து நசுக்கி அணைத்துத் தீர்மானித்த முடிவு இது.

தீர்மானித்த பின் இப்பொழுது எனக்கு அப்பாடா என்று ஆறுதலாக இருக்கிறது. உடம்பு பூராவும் உருவிவிட்ட மாதிரி ஒரு விடுதலை உணர்ச்சி இருக்கிறது.

அவசரமே இல்லை. மெல்ல யோசித்து நிதானமாகத்தான் கொல்லப் போகிறேன். விஜயனை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று யோசித்துப் பார்க்கிறேன். அவனை எனக்குப் பிடிக்கவில்லை அவ்வளவுதான். உலகத்தில் எனக்குப் பிடிக்காத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. இவனை எனக்குப் பிரத்தியேகமாகப் பிடிக்கவில்லை. காரணம்?

காரணம் என் சரித்திரத்தில் இருக்கிறது. என் சின்ன வயசு எண்ணங்களுக்குச் செல்ல வேண்டும். நான் வளர்ந்த விதம், ஆளான விதம், என் தகுதிகள் எல்லாவற்றையும் உனக்குச் சொல்ல வேண்டும். பொறுமையுடன் கேட்கிறாயா?

என்னைப் பைத்தியம் என்று மட்டும் சொல்லாதே! நான் ஒரு தொட்டால் சுருங்கி. என்னை நீ முறைத்துப் பார்த்தால் போதும். உடனே என் சகலங்களையும் உள்ளே இழுத்துக்கொண்டு என் வழி நடப்பேன். நீ எனக்கு வேண்டாம். உன்னை நான் தொந்தரவு செய்ய மாட்டேன். நான் விஜயனைக் கொல்லப் போகும் இந்தத் திட்டத்தில் உனக்குப் பங்கு வேண்டுமென்றால் என்னைப் பற்றி ஏதும் சொல்லாதே. நான் சொல்வதைக் கேள். குறுக்கே பேசாதே.



சுஜாதா

கேட்டுவிட்டு நான் தீர்மானித்தது சரியா என்று நீயே நிதானித்துக் கொள்.

முதலில் என்னைப் பற்றி. என் பெயர் சாரதி. வயசு இருபத்தி எட்டு. என் ஜாதகப்படி நான் பிறந்த நட்சத்திரம் அஸ்வினி. மேஷ ராசி. பிறந்து மூன்று வயதில் ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

என் அம்மாவும் அப்பாவும் எதிர் எதிரே நிற்கிறார்கள். நான் நடுவே படுக்கையில் நின்று கொண்டு ஒன்றும் புரியாமல் விழிக்கிறேன். அப்பா உரக்கக் கத்துகிறார். அவர் கழுத்தில் நரம்புப் பாம்புகள். முகம் பூரா ரத்தம் பாய்ந்து சிவப்பு. அம்மா எதிரே அழுகிறாள். எனக்குப் புரியவே யில்லை. அது ஒரு ஞாபகத் திட்டு. இது ஏன் இன்றுவரை தெளிவாக நினைவில் நிறுத்தியிருக்கிறேன் என்பது புரிய வில்லை. என் நினைவுக்குள் இந்த மாதிரி ஒன்றுடன் ஒன்று சம்பந்தமில்லாத ஞாபக மிதப்புக்கள் ஏராளம். ஒவ்வொன்றும் சின்னச் சின்னத் தீவுகள். ரத்தத்தை மைக்ராஸ்கோப் மூலம் பார்த்தால் அங்கங்கே சின்னச் சின்ன ஹெமோக்ளோபின் கட்டிகள் மிதக்கும். அது போல.

அம்மா ஏன் அன்று அழுதாள்? அப்பா ஏன் அப்படி நரம்பு புடைக்கக் கத்தினார்? தெரியாது. அப்புறம் என் அப்பாவைப் பற்றிய ஞாபகம் — மூங்கில்! பச்சை மூங்கில். தென்னோலை. வெள்ளை விரிப்பு. கால் கட்டை விரல்களைச் சேர்த்துக் கட்டின துணிக் கயிறு. திறந்த வாய். முன் முன்னாக முகத்தில் மயிர். சில்லென்று என் மேல் கொட்டப்பட்ட குடம் தண்ணீர். ஒற்றை மேளம். பிரிகயிற்றில் சட்டி நெருப்பு. புகை. வீதிவரை பிடித்துக்கொண்டு வரப்பட்ட அம்மா.



அம்மா அழவில்லை!

அது ஏன்? என்பது மற்றொரு கேள்வி.

ஸாரி. என் சொந்த அவஸ்தைகளை அபரிமிதமாக உன்னிடம் சொல்லி, 'ஐயோ பாவம்' கேட்க விருப்பமில்லை எனக்கு.

விஜயனும் நானும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்கிறோம். அங்கே நான் அவனைக் கொல்ல நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அங்கே கொல்வதா அல்லது அவனை வீட்டில் கொல்வதா என்று இன்னும் நான் தீர்மானிக்கவில்லை. யோசிக்க வேண்டும்.

முதலில் விஜயனும் நானும் நண்பர்களாகத்தான் இருந்தோம். ஆத்ம நண்பர்கள் நாம். அவனும் நானும் எப்போது பிரிந்தோம் என்று திட்டமாக என்னால் சொல்ல முடியும். ஆரம்பத்தில் எத்தனை நட்பு! என் மன உளைச்சல்கள் அத்தனையும் அவனிடம் சொல்லித் தீர்த்து எத்தனையோ முறை ஆறுதல் தேடியிருக்கிறேன். என் கனவுகளை அவனிடம் சொல்லி யிருக்கிறேன். என் பயங்களை, என் விநோத சஞ்சலங்களை, உலகில் நடக்கும் எத்தனையோ பொய்யான விஷயங்களைப் பற்றிய என் சலிப்பை. பொய் உதவாது எனக்கு. யாராவது தீர்மானித்துப் பொய் சொன்னால் உடனே அடித்துவிடுவேன். என் மனைவியாயிருந்தாலும் சரி, தெருவில் போகிற அந்நியனாக இருந்தாலும் சரி. பொய்யைப் பார்த்தால் பற்றிக்கொண்டு வருகிறது. இந்தக் கோபத்தை அடக்க நான் எவ்வளவு தவித்திருக்கிறேன் தெரியுமா? நம் தினசரி வாழ்க்கையில் எத்தனை பொய்கள் சொல்கிறோம். அஞ்சு ரூபாய்க்குச் சில்லறை கேட்டால் வைத்துக் கொண்டே கடைக்காரன் இல்லை என்று பொய் சொல்கிறான். செய்தித்தாள்கள் பொய் சொல்கின்றன. ரேடியோ, சினிமா எல்லாமே பொய். ரொம்ப நாள் யோசித்ததில், உண்மை என்று தனிப்பட்ட ஒன்று இருக்க முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது. உலகத்தின் செயல்பாடுகள் அத்தனையும் பொய்யின் விதவித தராதரங்கள் என்றுதான் படுகிறது. கடவுள் என்று சொல்கிறார்கள். அது ஒன்றுதான் நிஜம். மற்றதெல்லாம் பொய் வடிவங்கள் என்று கூட நினைத்திருக்கிறேன். ஒரு நாள் நான் கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். இன்லண்ட் லெட்டர். ஆச்சரியப்படாதீர்கள். எழுதி போஸ்ட் செய்தேன். விலாசம்:

உயர்திரு கடவுள். அவ்வளவுதான். அவர் தான் எங்கும் இருக்கிறாரே, மேல் விலாசம் தேவையா என்ன?

அந்தக் கடிதம் போய்ச் சேர்ந்திருக்கும் என்றே எண்ணுகிறேன். அதில் நான் எழுதியிருந்தது இதுதான்:

அன்புள்ள கடவுளுக்கு,

நமஸ்காரம். நீங்கள் நலமா? நான் இங்கு சௌக்கியமாயிருக்கிறேன். சமீபத்தில் எனக்கு நீங்கள் இருக்கிறீர்களா என்று சந்தேகம் அடிக்கடி எழுகிறது. எனவே இந்த லெட்டர் கண்டவுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு உடனே பதில் போடவும்.

ஜே. வி. சாரதி,
18, 3வது ஸ்டேஜ், 4வது பிளாக்,
வெஸ்ட் ஆஃப் கார்ட் ரோடு
பெங்களூர்-560040.

கடவுளுக்குக் கடிதம் எழுதுவதாவது! என்ன பேதமை என்று யோசிக்கிறாயா? அதற்கு எனக்குப் பதில் வந்ததே! ஆம். இன்னும் வைத்திருக்கிறேன் அந்தப் பதிலை:

இடம்: எல்லாம்
நேரம்: எப்பொழுதும்

அன்புமிக்க திரு ஜே. வி. சாரதி,

உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். வந்தனம். நான் இருக்கிறேனோ இல்லையோ என்கிற உன் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு நீ இந்தப் பதில் கடிதத்தைப் பெறுவதே போதுமல்லவா? கலங்காதே! ஆசிகள்

அன்புடன் கடவுள்


மணியான எழுத்து. குண்டு குண்டாக. இந்தப் பதில் எப்படி வந்தது என்பதை நான் ஆச்சரியத்துடன் யோசித்தேன். தபால் முத்திரையைப் பார்த்தேன். பெங்களூர்-1 தலைமைத் தபால் நிலையம். தலைவர் தலைமைத் தபால் நிலையத்துக்கு வருவது பொருத்தம்தானே?

'தலைவர் அன்னவர்க்கே சரணம் நாங்களே' என்று கம்பர் சொன்னது எத்தனை பொருத்தம்!

இந்தக் கடவுள் கடிதத்தைப்பற்றி மற்றொரு விஷயம் இருக்கிறது. அப்புறம் சொல்கிறேன்.

எனக்கு எப்பொழுது இந்தக் கொல்லும் இச்சை ஏற்பட்டது என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. விஜயலை எப்போது இலக்காக நினைத்தேன் என்பதும் அவ்விதமே. இரண்டு வருஷங்களாகவே எனக்கு உடம்பு ஒரு மாதிரிதான் இருந்து வருகிறது. பிற விஷயங்களில் அக்கறை இல்லாமலிருப்பதிலிருந்து ஆரம்பித்தது. காலை எப்போதும் ஆறரை வரை தூங்குவேன். திடுதிப்பென்று தூக்கமின்மை ஆரம்பித்தது. இரவு மூன்று மணிக்கு எழுந்து விடுவேன். எங்கே இருக்கிறேன் என்று சற்று நேரம் சஞ்சலம். அருகே மனைவி படுத்திருப்பாள். இவள் யார்? இவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? மனித வாழ்க்கை என்னும் அலகிலா பிரயாணத்தில் என்னுடன் ஒண்ட வந்த சக யாத்ரியா?... இம்மென்று எனக்குப் பயமாக இருக்கும். இறந்த பின் நான் என்ன ஆகப் போகிறேன். என் உடலை அவர்கள் அழுது தீர்த்துவிட்டு எரிக்கும்போது எனக்கு நினைவு மட்டும் பாக்கியிருந்து அலற வேண்டும் என்று தோன்றி அலற முடியாத நிலையில் இருந்தால் ஐயோ! எரிகிறதே, பாவிகளா! எரிகிறதே! என்னை இழுத்துப் போடுங்களேன்... இந்த மாதிரி பயம். உடனே அந்த மாதங்கள் பூராவும் சாவைப் பற்றிய புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தேன். ஞாபகம் என்பது மூளைக்குள் செயல்படும் சின்னச் சின்ன ரசாயன, மின்சாரச் சுழற்சிகள். மூளைக்கு ரத்தம் பாய்வது நின்ற பிறகு அந்தச் சுழற்சிகள் நின்றுபோய் விடும். சாவு என்பது ஒரு பரிபூரண முற்றுப் புள்ளி. அதன் பின் ஒரு சாதா இருட்டு ஒரு வெட்டு அவ்வளவுதான். இது ஒரு கட்சி. சாவு என்பது தொடர்ந்தேத்தியான ஒரு செயல்பாட்டில் ஓர் அம்சம். சட்டையை உதறிவிட்டு வெட்ட வெளியில் காற்றாய் மிதந்து மற்றொரு சட்டைக்குள் நுழையும் சாகசம். —இப்படி ஒருத்தர்.

கிறித்துவ கோட்பாட்டின்படி சாவு என்பது ஜட்ஜ்மெண்ட் தினத்துக்குப் பூமிக்கு அடியில் காத்திருக்கும் உறவு... குரானும் அதே சொல்கிறது... இதில் யார் நிஜம் யார் பொய்... புரியவில்லை. கொஞ்ச காலமாக இதைப் பற்றி நினைப்பதை விட்டுவிட்டேன். கண்ணாடி பார்க்க ஆரம்பித்துவிட்டேன். மணிக்கணக்காக! பாத்ரூமில் இருக்கும் கண்ணாடி, தலை வாரிக்கொள்ளும் சதுரக் கண்ணாடி, தியேட்டர், கடைத் தெருவில் அகஸ்மாத்தாகத் தெரியும் கண்ணாடிகள் எல்லாவற்றிலும் தயங்கித் தயங்கி நின்று என்னையே வைத்த கண் வாங்காமல் என்று சொல்வார்களே அப்படிப் பார்த்துக்கொள்வேன். அதில் என்ன வசீகரம் இருந்தது? நான் ஒன்றும் ஆணழகன் இல்லை. சின்ன மனிதன். என் உயரம் அஞ்சு மூன்று. அதுவும் பூட்ஸ் போட்டால்! பல கண்ணாடிகளில் நெற்றி வரைதான் தெரிவேன். முழு முகம் தெரிந்த கண்ணாடிகளில் எதிரே தெரிந்த பிம்பம் என்னிலிருந்து வேறுபட்டிருந்த விந்தையை என்ன சொல்வேன்! வேறு ஏதோ ஓர் அந்நியனைப் பார்ப்பது



போல இருக்கும். தீவிரமாக ஆராய்வேன். கேசம், சின்ன நெற்றி, அடர்ந்த புருவங்கள், முக்கோண வடிவ முகம் திராணியில்லாத கண்கள், மூக்கின் உள்ளே ஹேர்ஸ்பிரிங் போல மயிர், தூக்கலான பற்கள்... பாத்ருமில் என் அத்தனை உடைகளையும் கழற்றிவிட்டு ஸ்டூல் மேல் ஏறிக்கொண்டு ஆராய்வேன். அந்த உடல் என்னுடையதல்ல... வேறு யாருடையதோ. எனக்குத் தாற்காலிகமாக அளிக்கப்பட்ட சட்டையே அது. எதிரே நிற்கும் என்னிடமிருந்து வேறுபட்ட ஓர் இயக்கம் அதற்கு இருக்கலாம் என்று யோசிப்பேன். நான் நகர்ந்து சென்றால் அது அங்கேயே இருக்கும் என்று கூடத் தோன்றியது.

கொஞ்ச நாள் கான்ஸ்டிபேஷனில் தவித்தேன். இரண்டு நாள் மூன்று நாள் கல்க்குடலாக... டாக்டரிடம் பழுப்பு நிறத்தில் தூள் வாங்கி வெந்நீரில் கரைத்துச் சாப்பிட்டால் சரியாகும். நியமமா சாப்பிடுவது... நிறுத்தினால் மறுபடி... அதற்கும் என் மன நிலைக்கும் சம்பந்தம் இருக்குமோ என்று வியந்தேன். அட்டகாச நினைவுகளில் என் மனம் அலையும்போது அந்த உபாதையும் வந்து சேர்ந்து கொள்ளும். சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொண்டு மனைவியுடன் பேசாமல் இருப்பேன். ஒரு வாரம் இரண்டு வாரம் ஒரு வார்த்தை இரண்டு வார்த்தை பதில்கள்தான். என் மனைவியைப் பற்றி நினைக்கையில் ஒரு சமயம் தாபம் என்னுள் பெருகி ஓடும். எனக்கு வேலை கிடைத்தவுடன் கல்யாணம் செய்து வைத்து விட்டாள் அம்மா. என் அம்மாதான் என்னை வளர்த்து ஆளாக்கியவள். அப்பாவின் முகம் நான் முன்பு குறிப்பிட்ட இரண்டே. இரண்டு

பிம்பங்களில் தான் ஞாபகம் இருக்கிறது. சின்ன வயசில் என்னை வளர்த்துப் படிப்புக் கொடுத்து வீடு வீடாகச் சென்று உழைத்து என் வளர்ச்சியே அவள் வாழ்வின் ஆதர்சமாக வைத்துக் கொண்டு தனக்குப் புதுக வேண்டாம். தின்பண்டம் வேண்டாம் எல்லாம் என் பிள்ளைக்கு என்று வளர்த்தவள். அம்மாவைப் பற்றி நினைத்தால் இப்போதும் எந்த இடத்திலுமே எனக்குக் கண்களில் நீர் துளிக்கும்.

அம்மா பார்த்து வைத்த பெண்தான் ஜெயலட்சுமி. இதை அவளிடம் நான் திரும்பத் திரும்பச் சொல்லுவேன். நீ என்னை மணந்ததற்கு அவளுக்கு தாங்ஸ் சொல்லு! என்பேன். கல்யாணம் ஆன புதிதில் என் முதல் இரவின் போதுகூட அவளிடம் என் அம்மாவைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன். மணிக்கணக்காக, தினக்கணக்காகப் பேசியிருக்கிறேன். ஒரு தடவை ''அம்மா பைத்தியம் பிடிச்சு அலையறீங்க'' என்று சொல்லி விட்டாள். ஒரு வாரம் அவளுடன் பேசவில்லை.

என் மனைவி என் உயரம் இருக்கிறாள். நல்ல கட்டையான கருட்டை கருட்டையான முரட்டுத் தலைமயிர், நெற்றியில் குங்குமம் இல்லாது அவளை நான் பார்த்ததில்லை. ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஆறுவது பெண். இடுப்பில் புடவைத் தலைப்பைச் சொருகிக் கொண்டு வீட்டு வேலைகளைச் சடசட என்று முடித்து விடுவாள். எத்தனையோ உப்புமா சாப்பிட்டிருக்கிறோம். இவள் பண்ணுவதுவேறு விதமாக இருக்கும். ஒரு நிரடல் இருக்காது. முந்திரிப்பருப்பு பொன் போல் விழிக்கும். அவள் கைக்கென்றே ஒரு வாசனை இருக்கும். ஆனால் அம்மா போல் வராது. அவள் செய்வது வேறு வித அமுதம். எப்போதும் எது செய்தாலும் 'உங்க அம்மா பண்ற மாதிரி இருக்கா 'என்று கேட்பாள். நான்'' ம்ஹூம் என்று தலையை ஆட்டுவேன். ''அதற்கு மற்றொரு அம்மா பிறந்து வர வேண்டும்'' என்பேன்.

ஜெயலட்சுமியும் என் அம்மாவும் என் மனசில் போட்டி போட்டார்கள். இதில் என் மனைவி வென்றது என் பலவீனத்தின் ஒரு மகத்தான எடுத்துக்காட்டு. கல்யாணம் ஆன புதிதில் அம்மா எங்களுடன் தான் இருந்தாள். அந்த நாட்கள் நான் நிரம்ப அவஸ்தைப்பட்டேன். ஜெயலட்சுமியுடன் இந்த அறையில் படுத்திருக்கையில் கூடத்தில் அம்மா படுத்திருக்கும் போது ஜெயி என் மேல் வந்து படரும் போது அதிகக் குற்ற உணர்ச்சி மேலிட்டு அவளை விலக்குவேன். அம்மா அங்கே படுத்திருக்கும் போது இந்தக் கீழ்த்தரமான செயலில் இறங்குவது எனக்கு மகா பாவமாகப் பட்டது. காந்தியின் சுயசரித்திரம் படித்திருக்கிறாயா? அது போலத்தான் அவஸ்தைப்பட்டேன். அப்புறம் வீட்டு வேலை! அம்மா கூடம் பெருக்குவதைப் பார்த்து எனக்குக் கோபம் வரும் ''அவள் தான் இருக்கிறாளே, நீ ஏன் இதையெல்லாம் செய்கிறாய். ஏய் ஜெயி, எதுக்காக நீ வேடிக்கை பார்க்கிறே'' என்று அதட்டுவேன். ''உங்க அம்மாதான் பெருக்கறேங்கறா?'' ''உங்க அம்மா என்று சொல்லாதே! அவ உனக்கும் அம்மா மாதிரி தான்.''

அப்படி அவளால் நினைக்கவே முடியவில்லை. அதில் ஆரம்பித்தது பிளவு. ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்தால் இரண்டு பேரும் இரண்டு மூலை. நான் நடுவில் நின்று கொண்டு என்ன செய்வேன். மனைவிமேல் பாய்வேன். அழுவாள். இது தினப்படி.... தாங்க முடியாமல் பார்க்கில் போய் உட்காருவேன். இதையெல்லாம் உனக்கு எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால் என் மனம் விகாரமடைந்ததற்கு அஸ்திவா ரங்கள் எப்படி அமைக்கப்பட்டு விட்டன. அதைக் கவனிப்பதற்கு......



கடைசியில் அம்மாவே இதற்கு வழி கண்டு பிடித்தாள். ''சாரதி! எனக்கும் உடம்பு முடிகிறது. இந்த உடம்பு முடிகிற வரை நான் ஊர்ல தனியா நம்ப வீட்டில் போய் இருக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன். என்னால் முடியலைன்னு வரேன். ஜெயலட்சுமி தங்கமான பொண்ணு... ஆனா நான் இருக்கிற வரைக்கும் இங்க என்னாலே ஏதாவது சண்டை வந்துண்டே இருக்கு. உனக்கு என் பிடிவாதம் நிறைய இருக்கு. எல்லோருக்கும் நல்லது நான் போறதுதான். உனக்குக் குழந்தை பிறந்து அதை வெச்சிக்கறதுக்கு நான் திரும்பி வரேன். தற்போதைக்கு விலகித் தான் இருக்கப் பார்க்கறேன். எனக்கு இதில் ஒரு கோபமும் இல்லை. சும்மா அவளைப் போட்டு வெற்று விரட்டு விரட்டாதே!''

''போகாதேம்மா!'' என்று ஏறக்குறைய அழுது கொண்டு கெஞ்சினேன். ம்ஹூம்! பிடிவாதமாக மாட்டேன் என்று விட்டாள்.

அவள் போனதும் எனக்கு இருந்த வெறுமையை என்னவென்று சொல்லுவேன். அம்மா போன்ற ஆதர்சப் பிறவியை எப்படி இவளால் புரிஞ்சுக்க முடியலை? அவ்வளவு முட்டாளா? கிராதகியா என்று மனைவி பேரில் கோபம் வந்து ஒரு மாசம் அவளை ஏறிட்டுப் பார்க்கவில்லை. அப்புறம் இந்தப் பாழாய்ப் போகிற உடம்பு இருக்கிறதே! இருட்டில் அவள் அருகில் மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாளே! தொட்டால் மிருதுவாக இருக்கிறாளே! அத்தனை மனிதத் தன்மைகளையும் மீறிக் கொண்டு வரும் அந்த ஆதி காலத்து மூர்க்கம் இருக்கிறதே! அது என்னை வீழ்த்தியது!

வாராவாரம் லெட்டர் போடுவேன். வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் ஓடிப் போய்ப் பார்த்து விட்டு வருவேன். வந்துடு அம்மா, வந்துடு அம்மா என்று கெஞ்சுவேன். பங்குனி மாசம் என்பாள், சித்திரை என்பாள், வைகாசி என்பாள்... வர மாட்டாள்.

வராமலேயே ஜாண்டிஸ் வந்து போய் விட்டாள். இரு.... சற்று நேரம் இரு! கண்ணீரை அடக்க முடியாமல் அழுகை வருகிறது.

போய் விட்டாள்! எனக்கு யாரும் இல்லை. பெண்டாட்டியால் என் மனத்தின் அருகில் வர முடியாது. நான் இறக்கும் வரை ஆறுதல் இல்லாத துயரம் இது. என்னை வளர்த்து ஆளாக்கி, கணவன் இன்றி ஒண்டியாகச் சமாளித்த என் ரத்தம் அவள்....

அவள் இறப்பு என்னில் பிறப்பித்த வடு மிக ஆழமாகிவிட்டது. அம்மா



என் கனவுகளில் தோன்ற ஆரம்பித்து விட்டாள். ஏறக்குறைய தினம் தினம்! அப்போது தான் அந்த உண்மை தெரிந்தது. அவள் சாகவில்லை. என்னில் இருக்கிறாள் என்று... கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது... திடீர் என்று என் முகத்தில் அவள் முகம் கரைந்து அவளைப் பார்ப்பேன்.

அதன் பின் தான் இந்த விஜயன் விவகாரம். ஓ விஜயனே! உன்னைக் கொல்லத் துடிக்கிறது என் கைகள்! ஏன்? சொல்கிறேன். இப்படிச் சொல்வதால் நான் என்னை நியாயப்படுத்திக் கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்திலிருந்து நான் விலகப் போவதில்லை. இதன் நியாய அநியாயங்கள் என் மனத்துக்குப் புறம்பானவை.

அம்மா இறந்து போன ஆறும் மாதம் நான் விஜயனை முதலில் சந்தித்தேன். அவனைப் பார்த்ததுமே எனக்குப் பிடித்துப் போய் விட்டது. கையில் காப்பிக் கோப்பையுடன் மேஜையில் உட்கார்ந்து ஒரு பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

''என் பேர் சாரதி!'' என்றேன்.

''ஹலோ, நான் விஜயன்.''

''ஆபீஸ் நேரத்தில் பத்திரிகை படிக்கிறீங்களே!''

''படிக்கிறீங்களே என்ன! படிக்கிறாயே என்று சொல். வி. ஆர். ஃப்ரண்ட்ஸ்!



கொடுத்த வேலை முடிஞ்சு போச்சு. எல்லா ரிப்போர்ட்டும் தயாராயிடுச்சு. படிச்சுக் கிட்டிருக்கேன் எட்டு மணி நேரமும் வேலை இருந்தால் எட்டு மணி நேரமும் செய்வேன்!''

''உங்களை, உன்னைப் பார்த்ததுமே எனக்குப் பிடிச்சுப் போச்சு!''

''தாங்க்ஸ்! இதையே உன்கிட்ட நான் சொல்றதுக்கு உன்னை நான் சரியா தெரிஞ்சுக்கணுமே!''

''எங்கே எல்லாரும்.''

''கொஞ்சம் முன்னாலேயே லஞ்சுக்குப் போயிருக்கா.... நான் அப்படி செய்யறதில்லை.''

''நல்ல பழக்கம்!'' என்று உட்கார்ந்தேன். தனியாக இருந்தோம். விஜயனைச் சற்று நேரம் பார்த்தேன்.

''என்ன பார்க்கறே?''

''உன் கிட்ட என்னைப் பத்தி சொல்லிக்கலாமான்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்!''

''அது உன் தீர்மானம்!''

''ரகசியமா வெச்சுப்பியா?''

''அதை நான் எல்லாத்தையும் கேட்டப்புறம் சொல்றேன்.''

''மிஸ்டர் விஜயன்....''

''வெறும் விஜயன் போதும்!''

''விஜயன் சமீபத்தில் என் மனசில் இருக்கிற எண்ணங்கள் என்னை அப்படியே சாப்பிட்டுக்கிட்டு இருக்கு. எதிலேயும் எனக்கு அக்கறை பற்று ஈடுபாடு இல்லாம போயிடுத்து!''

''அஜீரணமா இருக்குமோ'' என்று சிரித்தான்.

''உபாதை மனசிலே, வயித்திலே இல்லை!''

''ஸாரி! கோவிச்சுக்காதே சொல்லு!''

''முதல்லே இருந்து சொல்லவா?''

''அரை மணி லஞ்ச்! அவா வர்றதுக்குள்ள சொல்லு. மத்ததைத் தொடரும்னு போட்டு நாளைக்குச் சொல்லு!''

சொன்னேன். பல நாட்கள் சொன்னேன். ஆதியோடந்தமா சொன்னேன். பிறந்தது வளர்ந்தது. அம்மா என்னை ஆளாக்கியது, கல்யாணம் பண்ணிக்கிட்டது. அம்மா செத்துப் போனது,என் பயங்கள், சாவைப் பற்றி யோசனைகள்... கண்ணாடி பார்த்துக்கற வேடிக்கை. பொறுமையின்மை, எதிலயும் பற்றுதல் இல்லாதது. இன்னி வரைக்கும் எனக்குக் குழந்தை பிறக்காததிலே இருக்கிற சந்தேகம். பயம்! என் மனைவியைப் பற்றி. கடவுளுக்குக் கடிதம் எழுவதைப் பற்றி... ஒரு நாள் விஜயன் ஒரு சிகரெட் பற்ற வைத்து எனக்கும் கொடுத்தான். ஆழமா இழுத்து யோசித்தான்.

''நீ உடனே ஒரு டாக்டரைப் பார்க்கணும்!''

''பார்த்தேனே! பார்த்து கான்ஸ்டிபேஷனுக்கு மருந்து வாங்கிட்டேனே!''

''அந்த டாக்டர் இல்லை. சைக்கியாட்ரிஸ்ட் மனோ வைத்திய நிபுணர்... கொஞ்சம் இரு!'' டெலிபோன் டைரக்டரியை எடுத்தான். ''ம்.... பார்க்கலாம்.... நேஷனல் ஹெல்வெஸ், நேஷனல் இண்டஸ்ட்ரீஸ்... . நேஷனல் இன்ஸ்ட்யூட் ஆஃப் மெண்டல் ஹெல்த் அண்ட் நியூரோ சயன்ஸ்! ஹோஸூர் ரோடு, பெங்களூர்-27 எங்கிருக்கு தெரியுமா? லால்பாக் கேட்டுக்கு டபுள்ரோடு வழியாப் போனா... டிபார்ட்மெண்ட் ஆஃப் சைக்கியாட்ரி. அங்கே போ! முதல்லே!''

''எனக்குப் பைத்தியம்ங்கறியா?''

''இல்லை. அப்படிச் சொல்லலை. ஆனா இந்த மாதிரி எண்ணங்கள்ளாம் உனக்கு வரக் கூடாது... ஸம்திங் அப்நார்மல். எனக்கென்னவோ, நீ ஒரு விளிம்பில் இருக்கேன்னு தோணுது. இந்தப் பக்கம் நாங்க. அந்தப் பக்கம் ஒரு பாதாளம்! குதிக்கறதுக்கு முன்னாடி போய்ப் பார்க்கறது நல்லது. நான் வேணா போன் பண்ணிப் பார்க்கட்டுமா?...''

''இல்லை. நானே போறேன்!''

''உன்னை நம்ப முடியாது. நான் போன் பண்றேன்! ஏன்னா இந்தக் கட்டத்தில் அது தான் நல்லது. பயப்படாதே. இப்ப நீ என் கிட்ட சொன்னதை டாக்டர் கிட்ட சொல்லு. அவங்கள்ளாம் நல்லவங்க. உன் மாதிரி ஆட்களுக்கு ஒத்தாசை செய்யறதுக்குத்தான் இருக்காங்க.''

டெலிபோனை எடுத்துச் சுழற்றின விஜயனை நான் கண் கொட்டாமல் பார்த்தேன். இவனுக்குத்தான் என் பேரிலே எத்தனை அக்கறை! புதுசாக ஒரு உற்சாகம் வந்தது எனக்கு! அவன் சொல்றது சரிதான். எனக்கு மனோ தத்துவ உதவி தேவையா இருக்கு.

அந்த இன்ஸ்டிடியூட் தனியா உயரமா நீண்ட கட்டடம். எதிர்த்தாப்பல பெங்களூர் டெய்ரி பால் பண்ணையைப் பார்த்ததும் எனக்கு அம்மா ஞாபகம் வந்தது. பஸ்ஸில் இருந்து இறங்கி நடந்தேன்.

பெரிய பெரிய மரங்கள். நீளமான காரிடார், க்ளினிகல் சைக்காலஜி, நியூராலஜி.

நியூரோ ஸர்ஜரி; நியூரோ - அனலிஸ்தஸில்: எத்தனை பிரிவுகள், எத்தனை பேர்! இவர்களுக்கெல்லாம் வைத்தியமா? நார்மலாத் தானே நடந்துக்கறாங்க....

அந்த இடத்தின் அமைதியான சூழ்நிலையில் எனக்கு ஓர் ஆறுதல் பிறந்தது. முதலில் ஒரு டிக்கெட் வாங்கிக் கொள்ளும் போது ஒரு இளம் டாக்டர் என்னைப் பார்த்துப் பேசினார்.

''டாக்டர் யாரு?'' என்றார்.

புரியாமல் விழித்தேன். ''முதல்ல இப்பத் தான் வரேன்'' என்றேன். ''விஜயன்னு ஒருத்தர் டாக்டர் சந்திரசேகருக்கு டெலிபோன் பண்ணினார்!''

''டாக்டர் விஜயன்?''

''அவர் டாக்டரல்ல! என் நண்பர்.''

''டாக்டர் சந்திரசேகர்?''

''ஆமாம்!''

''டாக்டர் சந்திரசேகரைப் பார்க்கணுமா! கொஞ்சம் இருங்க. பேர் என்ன?''

''சாரதி.''

''வயசு?''

''முப்பது.....''

சின்னச் சின்னக் கேள்விகள். நான்கு பக்க பாரம். அதை நான் சொல்லிக் கொண்டே வர நிரப்பினார். ''என்ன ட்ரபிள் உங்களுக்கு?''

''எண்ணங்கள்!''

''அப்படியா இன்னும் கொஞ்சம் விவரமா சொல்ல முடியுமா?''

''இதையே மறுபடி நான் டாக்டர் சந்திரசேகர் கிட்ட சொல்லணுமில்லே?'' என்னை அந்த ஆசாமி முறைத்துப் பார்த்து, சரக்கென்று சீட்டுக் கிழித்து, ''இப்படியே நேராப் போனீங்கன்னு முதல் மாடியில் எட்டாம் நம்பர் ரூம்'' என்றார்.

அந்த ரூமில் குறுந் தாடியுடன் ப்ளாய்ட் என்பவரின் படம் இருந்தது. தூய வெண்மையில் கருக்கங்களுடன் திரை இருந்தது. அதன் பின்னும் மேஜை அருகில் பட்டை ப்ரேம் கண்ணாடியும் பெரிய மூக்கும் ஊடுருவும் கண்களுமாக டாக்டர் சந்திரசேகர் உட்கார்ந்திருந்தார். சீட்டைப்பார்த்து, ''உட்காருங்க மிஸ்டர் சாரதி'' என்றார் மெல்லிய குரலில்.

''சொல்லுங்க. என்ன ட்ரபிள் உங்களுக்கு?''

''டிப்ரஷன் டாக்டர்!'' என்றேன்.

''டிப்ரஷன் என்பது பொதுவான வார்த்தை. விவரமாகச் சொல்லுங்க'' என்றார். மறுபடி அந்தச் சீட்டில் எழுதியிருப்பதைப் பார்த்துக் கொண்டே. டெலிபோன் மணி அடிக்க அதில் சிரித்துப் பேசினார். காத்திருந்தேன். இவரிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். எங்கிருந்து ஆரம்பிப்பது. என்று தவித்தேன்.


''எங்க ஆரம்பிக்கிறதுன்னு உங்களுக்குத் தயக்கமா இருக்கில்ல? ஓகே. நான் கேள்வி கேட்கறேன். டிப்ரஷன்னு சொல்றீங்க? அந்த வார்த்தையை எங்கே படிச்சீங்க''

''ஒரு புஸ்தகத்தில''

''என்ன புத்தகம்?''

''சைக்கியாட்ரி பற்றின புஸ்தகம்!''

''ஓ! இன்டரஸ்டிங்! எதுக்கு அந்தப் புஸ்தகத்தைப் படிச்சீங்க?''



''எனக்கு என்ன ஆச்சுன்னு குழப்பத்தில மனத்தைப் பற்றி எல்லாத்தையும் படிச்சுத் தீர்த்துடறதுன்னு ஆர்வத்தில.... டாக்டர் எனக்கு ஒரு மேனிக் டிப்ரஸிவ் ஸ்டேட் இருக்குன்னு நினைக்கிறேன். பாரனாய்ட்!''

அவர் சிரித்து, ''முதல்ல அந்தப் புஸ்தகங்களை எல்லாம் தூக்கி எறிங்க! உங்களுக்கு இருக்கிற கற்பனை போதாதுன்னு இது வேறே! அந்தப் புஸ்தகங்களையெல்லாம் படிக்க வேண்டியது நாங்க. நீங்க படிச்சா அரை குறையாய்ப் புரியும். இந்த மாதிரி பெரிய வார்த்தைகள் எல்லாம் உபயோகிக்கத் தோணும். சொல்லுங்க சைக்கியாட்ரி தவிர வேறு ஏதாவது படிச்சீங்களா?'' என்றார்.

''தியாலஜி கொஞ்சம். கடவுள் தத்துவத்தைப் பத்திக் கொஞ்சம்!''

''தட்ஸ் இன்ட்ரஸ்டிங்....'' குறிப்பெடுத்துக் கொண்டார். ''உங்க மனசில கடவுள்ங்கிறது யாரு?''

''ஒரு பொண்ணு! எங்கம்மா!''

''அப்படியா மிஸ்டர் சாரதி. அது போகட்டும். சமீபத்தில் நீங்க பார்த்த கனவு ஏதாவது தெளிவா ஞாபகமிருக்கா?''

''தூங்கினாத்தானே கனவு!''

''தூங்கறதே இல்லையா?''

''எண்ணங்கள் என்னைத் துரத்துது டாக்டர்.''

''என்ன எண்ணங்கள்?''

''ஒரு பத்து ஆசாமிக்கு உண்டான என்னங்கள்!''

''நீங்க செக்காவ் பத்திப் படிச்சிருக்கிங்களா?''

''இல்லே. ஏன்?''

''I dream the dreams of ten men' னு அவர் சொன்னார். உங்க கனவு ஒண்ணுகூட ஞாபகமில்லையா?''

''ஒண்ணே ஒண்ணு ஞாபகமிருக்கு!''

''சொல்லுங்க...''

''ஒரு பெரிய பாலம், இல்லே. அணைக்கட்டு. இந்தப் பக்கம் தண்ணி தேங்கத் தளும்பறது. அதை எட்டிப் பார்க்கறேன். நூறு அடி நூத்தம்பது அடி ஆழம் தண்ணி இருக்கு. அணைக்கட்டை ஒட்டி ரோடு போறது. பாரப்பெட் சுவர். இடுப்பு உயரத்துக்கு இருக்கு. ரோடில நடக்காம அந்த பாரப்பெட் சுவர் மேல நடக்கறேன். சர்க்கஸ்காரன் மாதிரி பாலன்ஸ் பண்ணிக்கிட்டு....''

''ஐஸீ! இந்தக் கனவு திரும்பத் திரும்ப வர்றதா?''



''சொல்லத் தெரியலே. ஆனா ஞாபகம் இருக்கு.''

''எப்பவாவது விழுந்திங்களா? அந்தத் தண்ணில.''

''இல்லே. நடந்துக்கிட்டே போறேன்.''

''சாரதி உங்க கண் பார்வை எப்படி. உடல் நலம் எப்படி?''

''கண் சரியாத்தான் இருக்கு. தூரப் பார்வை. கிட்டப் பார்வை எல்லாம் ஒருமுறை டெஸ்ட் பண்ணியிருக்கு. கொஞ்சம் கான்ஸ்டிபேஷன் உண்டு. வயிறு மந்தமா இருக்கும் அடிக்கடி.''

அவர் ஒரு புத்தகத்தைப் பிரித்தார். ''இந்தப் படத்தைப் பார்த்ததும் உங்களுக்கு என்ன தோணுது?''

''இதுக்குத்தானே ரோஷார்ஷ் சித்திரம்னு சொல்லுவாங்க?''

''கவலைப்படாதீங்க! நீங்க சைக்கியாட்ரி புஸ்தகத்தில படிச்சதெல்லாம் மறந்துடுங்க. படத்தைப் பார்த்ததும் என்ன தோணுது?''

அவர் காட்டிய சித்திரத்தைப் பார்த்ததும் சொன்னேன். ''மீசை வெச்ச ஆள் மேகத்தைப் பார்த்துக்கிட்டிருக்கான். அவன் மார்ல ரெண்டு கண்ணு மூக்கு....''

''இது?''

விதவிதமாக இங்க் கறை படிந்த சித்திரங்களைக் காட்டினார். எனக்குப் பட்டதைச் சொன்னேன். என் ரிஃப்ளெக்ஸ் பார்த்தார். எழுதச் சொன்னார். கலர் கலரான புள்ளிச் சித்திரங்கள் காட்டினார். ரத்த அழுத்தம் எடுத்தார். இதயத்தைக் கேட்டார். நிறைய பேசினார்.

''கடவுளுக்குக் கடுதாசி எழுதினீங்களா?''

''ஆமாம். பதில் கூட வந்தது. டாக்டர் நான் ரொம்ப ஆழமான பக்தன். எங்கம்மா கூட கோயிலுக்குப் போவேன். ஒம்பது கிரகத்தையும் தொட்டுத் தொட்டுக் கும்பிடுவேன். சைவ வைஷ்ணவக் கோயில் சர்ச் எங்கவேணு போவேன். எனக்குத் திடீர்னு பயம் வரும் டாக்டர். எங்கம்மாவை எரிச்சது தப்புன்னு! மகனே எனக்கு இன்னும் நினைவு மட்டும் இருக்குடா! பொசுக்காதேன்னு கூப்பிடற மாதிரி. அய்யய்யோ! அவள் எழுந்து வரச் சந்தர்ப்பம் கொடுக்காம எரிச்சுட்டமே! என்று.... என்ன காரியம் செஞ்சுட்டம்னு ராத்திரி பூரா அழுவேன்....''

அழுதேன்.

''மிஸ்டர் சாரதி என்ன இது!'' என்று அதட்டினார்.

நான் அழுது முடிக்கும் வரையில் காத்திருந்தார்.

''சிகரெட் குடிப்பீங்களா?''

''எப்பவாவது.''

''கஞ்சா சரஸ் ஏதாவது அடிச்சிருக்கிங்களா?''

''இல்லே.''

''வீட்டில் யார் யார் இருக்காங்க?''

''என் மனைவி. அவ்வளவுதான். குழந்தை இல்லே.''

''நீங்க இப்ப இங்க வந்திருக்கிறது உங்க மனைவிக்குத் தெரியுமா?''

''இல்லே. விஜயனுக்கு மட்டும்தான் தெரியும்.''

''விஜயன் யாரு?''

''உங்களுக்குப் போன் பண்ணவன். என் சிநேகிதன். ஆபீஸ்ல கூட வேலை செய்யறான்.''

''அவரை ஏன் கூட்டிட்டு வரலே?''

''அவன்தான் தைரியம் சொல்லித் தனியாகப் போய்ப் பார்க்கச் சொன்னான்.''

அவர் எழுதினார். ''ராத்திரி இந்த மாத்திரை சாப்பிடுங்க. அப்புறம் நீங்க இங்க வந்து ஒரு வாரம் இருக்க முடியுமா இன் பேஷண்டா? சௌகரியம் எப்படி? உங்க வீடு எங்கே?''

''ராஜாஜி நகர்.''

''உங்க மனைவியை அழைச்சுக்கிட்டு வந்து தங்க முடியுமா?''

''எதுக்கு டாக்டர் எனக்கு என்ன? பைத்தியமா?''

''சேச்சே! ஆனா ஒரு வாரம் இருந்து ஒரு சின்ன ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறது நல்லது. பயப்படாதீங்க. தினம் ஒரு இன்ஜெக்ஷன் அவ்வளவுதான்....''

''இன்ஸுலின் ஷாக்கா?''

''இதபாருங்க. நான் சொன்னேன் இல்லே. படிச்ச புஸ்தகத்தை எல்லாம் மறந்துடுங்கன்னு. ஆனா நீங்க ஒரு வாரம் வந்து இருக்கணும். நாளைக்கே அட்மிட் ஆயிடறது நல்லது.''

''இன்ஜெக்ஷனை எழுதிக் கொடுத்திடுங்களேன். ... அங்கே டாக்டர் கிட்ட குத்திக்கறேன்...''

''அப்படி இல்லே. ரியாக்ஷனை அப்ஸர்வ் பண்ணணும். நீங்க இன் பேஷண்டா இருக்கறதுதான் நல்லது. வரீங்களா?''

''இந்த மாத்திரை?''

''வெறும் தூக்க மாத்திரை... நீங்களே சொந்த வைத்தியமா சாப்பிட்டுப் பார்த்திருப்பீங்களே!''

''ட்ராங்க்விலைஸர்தான் சாப்பிட்டேன், லிப்ரியம்.''

''அதெல்லாம் விடுங்க. நாளைக்கு இதே நேரத்தில் வந்துடுங்க என்ன? ஒண்ணும் இல்லே உங்களுக்கு. யூ ஆர் ஆல் ரைட்.''

''யு ஆர் நார்மல்னு சொல்லுங்களேன் டாக்டர்.''

''ஆல் ரைட். நார்மல்! நாளைக்கு வர போது அந்தக் கடவுள் கிட்ட இருந்து வந்த பதில் கடிதத்தைக் கொண்டு வரீங்களா?''

''கட்டாயம்.''

ஆட்டோரிக்ஷாவில் திரும்பும் போது டாக்டர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பார் என்று தீவிரமாக யோசித்துப் பார்த்தேன். நார்மல் என்றால் எதற்கு ஒரு வாரம் வந்து மெண்டல் ஆஸ்பத்திரியில் படுக்க வேண்டும். எதற்கு இன்ஜெக்ஷன்? நான் அவரிடம் நிறையப் பேசி விட்டேன். அதில் ஏதாவது தப்பா? இல்லை அதிலிருந்து என் மன நிலையை ஊகித்து.... எனக்குச் சிகிச்சை தேவை என்று தீர்மானித்து, சேச்சே! அங்கே போவதே தப்பு. இப்போது என் மனைவியிடம் இதை எப்படிச் சொல்வேன். மெண்டல் ஆஸ்பத்திரியில் நானே அட்மிட் ஆக வேண்டும் என்றால் அவள் இல்லாததை எல்லாம் கற்பனை பண்ணிக் கொண்டு. இந்த ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களே மோசம்! ராஸ்கல்கள்! அந்த இன்ஜெக்ஷனை வீட்டில் ஏற்பாடு செய்து கொண்டால் என்னவாம். அதிலிருந்தே தெரிகிறது! சாதாரண இன்ஜெக்ஷன் இல்லை அது... ஷாக்! மின்சாரம்! இல்லை ஏதோ பெரிய மயக்க மருந்து... வேண்டாம் நான் போக மாட்டேன். எனக்கு என்ன? ஒன்றுமே இல்லை. இந்த ஆட்டோ ரிக்ஷா பெங்களூரில் தான் ஓடுகிறதா.? என் அம்மா உயிருடன் தான் இருக்கிறாள். என் குழந்தையாக மறுபடி பிறக்கப் போகிறாள். அவதாரம் எடுக்கப் போகிறாள். என் மனைவிக்குப் பிறக்கவில்லை என்றால் இருக்கிற பெண்களை எல்லாம் கற்பழித்து ஒருத்தியிடம் பெற்றுக் கொள்வேன். இது தேவலோகத்து ரகசியம். சிதம்பர ரகசியம். பொற்றாமரைக் குளம்.... நிறுத்து!''

மத்யானம் லஞ்சின் போது விஜயன் என்னைப் பார்த்தான். ''என்ன. போயிருந்தாயா?'' என்றான்.

''ம்.''

''என்ன சொன்னார். அவர் ரொம்ப பெரிய டாக்டராம்.''

''ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆக வேண்டுமாம்.''


''குட்! நல்லது. லீவு எடுத்துக் கொள். அங்கே போய் அக்கடா என்று படுத்து விடு!''

''நான் போகப் போவதில்லை!''

''என்ன?''

''எனக்கு ஒன்றும் இல்லை நார்மல் என்று சொல்லி விட்டார்.''

''பின் ஏன் அட்மிட் ஆகும்படி சொன்னாராம்!''



''ஏன்? நீதான் சொல்லேன்.''

''சாரதி! பிடிவாதம் பிடிக்காதே? அவர் விஷயம் தெரிந்தவர்! அவர் சொல்லுகிறபடி கேள்!''

''நான் போக மாட்டேன்!''

''டோண்ட் பீ ஸ்டுபிட்!''

''அவர்தான் ஸ்டுப்பிட். நார்மலாக இருக்கிற ஆசாமியை எதற்கு வரச் சொல்ல வேண்டும்?''

''நார்மல் என்று ஒப்புக்கு, உனக்குத் தைரியம் அளிக்கச் சொல்லியிருப்பார்! யு ஆர். நாட் நார்மல்!''

''பின் ஏன் டாக்டர் பொய் சொல்ல வேண்டும். பொய் எனக்குப் பிடிக்காது!''

விஜயனுக்குக் கோபம் வந்தது. ''ஸம்திங் இஸ் ராங் வித் யு! டெரிபிளி ராங் வித் யு. அதற்கு ஒரே சிகிச்சை அவரிடம்தான் இருக்கிறது. நீ நிச்சயம் அங்கே போக வேண்டும்.''

''ஜெயி பயப்படுவாள்!''

''அவளிடம் நான் சொல்லுகிறேன்! சமாதானப் படுத்துகிறேன்.''

''நீ என்ன என் பெண்டாட்டியுடன் பேசுவது?''

''தேர் யு கோ எகய்ன்'' விஜயனின் கரங்கள் நடுங்கின. கிளாஸில் தண்ணீர் நிரப்பிக் குடித்தான். நான் கிளம்பினேன்.



''சாரதி! போகாதே! உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்!''

''என்ன?''

''எனக்கு உன்னைப்பற்றிக் கவலையாக இருக்கிறது... சாரதி! நீ கடவுளுக்குக் கடிதம் எழுதினாயே ஞாபகம் இருக்கிறதா?''

''ம்! பதில் எடுத்து வரச் சொல்லியிருக்கிறார்!''

''அந்தப் பதில் எழுதினது யார் தெரியுமா? நான்தான்! முட்டாளே! நான்தான். கடவுளாவது பதில் எழுதுவதாவது! அது என் கையெழுத்து...''

நான் அதிர்ந்து போய் ''அடப் பாவி!'' என்றேன்!

''இன்னும் கேள்! நீ உன்னைப் பற்றி என்னிடம் என்னவெல்லாம் சொன்னாய்! தெரியுமா? உனக்கே ஞாபகம் இருக்காது. உன் இளமைக் காலத்து நினைவுகள் பற்றி உன் அம்மா உன்னை வளர்த்தது பற்றி... ஆளாக்கினது பற்றி கற்றுப்பட்ட மனிதர்கள் பற்றி ... அதை டாக்டரிடம் சொன்னாயா?''

''ம்!''

''நீ குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சிகளில் வெட்ட வெளிச்சமாக எனக்கு ஒன்று தெரிகிறதே! அது உனக்குத் தெரிகிறதா?''

''என்ன?''

''சொல்லட்டுமா தாங்கிக் கொள்வாயா?''

''சொல்லு! சொல்லு! நான் நார்மல். எதையும் தாங்குவேன்.''

''உன் அம்மா வாழ்ந்த விதம்! மை டியர் சாரதி! போ! உன் நினைவுகளுக்கு மறுபடியும் போ! ஆழமாகப் பதிந்திருக்கிற அந்த ஞாபகத் துண்டை வெட்டி எடு. ராஜுவைப் பற்றிச் சொன்னாயே! ராஜு யார்? அவர் எதற்காக வாராவாரம் வீட்டுக்கு வந்தார்? சாரதி நன்றாக ஞாபகப் படுத்திப் பார். கீ கொடுத்தால் நடக்கும் அந்தக் குரங்குப் பொம்மை! சிர்ரக் சிர்ரக் என்று தத்தித்தத்தி நடந்ததே அந்தப் பொம்மை! அதை யார் கொடுத்தது? ராஜு மாமா! அதை வைத்துக் கொண்டு நீ விளையாடிக் கொண்டே இருந்தாய். அதை ஒருநாள் காணமல் தேடினாய். சப்தம் போடாமல் படுக்கை அறைக்குள் நுழைந்தாய். என்ன பார்த்தாய்?''

நான் காதைப் பொத்திக் கொண்டேன். ''ஐயோ! சொல்லாதே! சொல்லாதே! நான் ஒன்றும் பார்க்கவில்லை. நிறுத்து விஜயன் நிறுத்து!''

''எப்படிடா உனக்குப் படிப்புக்குப் பணம் வந்தது! எப்படி அந்தப் புது பூட்ஸ் கிடைத்தது? எப்படி ஹாஸ்டலுக்கு மாதம் தவறாமல் பணம் வந்தது. நூறு நூறாக! எப்படி சாரதி?''

''சொல்லாதே நிறுத்து! நிறுத்து! நீ சொல்வது அபத்தம்! ப்ளீஸ் விஜயன் மேலே பேசாதே! நிறுத்து என்னைக் கலக்காதே. வேண்டாம். எனக்குள் இருக்கும் ஒரே ஒரு அற்புதமான சித்திரத்தைப் பாழ் பண்ணாதே! வேண்டாம். நீ ரொம்பக் கெட்டவன். விபரீத புத்திக்காரன் அதனால்தான் இந்த மாதிரி நினைக்கிறாய்!''

''உண்மையைச் சொல்கிறேன்!'' என்று சிரித்தான்.

''அப்புறம் ஸ்ரீராம நவமியின் போது...''

''வேண்டாம் இப்போது நிறுத்தப் போகிறாயா? உன்னைக் கொன்று விடட்டுமா?''

''இதோ பார் சாரதி. என்னைக் கொன்று விடலாம். எண்ணங்களைக் கொல்ல முடியாது! போ! வீட்டுக்குப் போ! நாளைக்கே ஆஸ்பத்திரிக்குப் போ. எல்லா விஷயத்தையும் சலவை செய்து துப்புரவாக்கு. மருந்து தேடு! உன் மனத்தை வெண் திரையாக்கு. ரத்த நிற ரோஷார்ஷ் சித்திரங்களை எல்லாம் அழி! நிம்மதி தேடு. போடா ஓடு! வீவு போட்டு விட்டு ஓடு!''

ஓடினேன்! விஜயனின் எக்காளச் சிரிப்பு என் மண்டை பூரா ஒலித்தது. அவன் சொன்னது அத்தனையும் பொய்! என்ன ஒரு விபரீதப் பிறவி அவன். இந்த மாதிரிக் கட்டுக் கதையை, விஷத்தை என் மனத்தில் ஏற்றி... என்ன ஒரு ஸாடிஸ்ட் அவன்! அவன் சொல்வதில் ஏதாவது நியாயம் உண்டா? தத்துப் பித்தென்று உளறுகிறான். கிராதகன். கொடுமைக்காரன். பர்வெர்ட்! இவனிடம் நான் பேசியே இருக்கக் கூடாது! இந்த விபரீத அர்த்தம் கற்பிக்க எவ்வளவு கெட்டவனாக இருக்க முடியும்! அவன் என்னை அழித்துவிட வேண்டும் என்று கருக்கட்டிக் கொண்டு நாச வேலைகள் செய்கிறான். கடவுள் கடிதத்தைப் பற்றி அவனிடம் சொல்லப் போய் அவன் அதற்குப் பதில் அனுப்பி என்னைக் கேலிக்குள்ளாக்கியதிலிருந்தே தெரிகிறதே. என்ன ஒரு நீச புத்தி ஆசாமி என்று. அந்தக் கடிதத்தைப் பற்றிச் சொன்னதில்தான் டாக்டர் சந்திரசேகர் சந்தேகப்பட்டிருக்கிறார், எனக்கு மூளை சரியில்லை என்று. விஜயன் சகவாசமே வேண்டாம். அவனுடன் இனிப் பேசவே வேண்டாம். சிகரெட் பிடிக்க வேண்டாம். அவனுடன் காப்பி சாப்பிட வேண்டாம்.

அவனை என்ன செய்வது? அம்மாவைப் பற்றி இவ்வளவு அவதூறை பேசினவனை உயிரோடு விடுவதா? ஒழித்துக் கட்ட வேண்டாம்? அவனை அந்த இடத்திலேயே மென்னியை நெறித்துச் சாக அடித்திருக்க வேண்டாம்? இரு இரு! நிதானமாக யோசி! அவசரம் இல்லை. அந்தப் பாதகனைத் திட்டமிட்டுக் கொல்ல வேண்டும்! நிதானம் நிதானம்.

வீட்டுக்கு வந்தேன். ஜெயி மத்தியானத் தூக்கத்திலிருந்து எழுந்து வந்தாள். என்னை பயத்துடன் பார்த்து ''ஏன் சீக்கிரம் வந்துட்டீங்க. உடம்பு சரியில்லையா?'' என்றாள்.

''சரியாத்தான் இருக்கேன்!'' என்றேன். நேராகச் சென்று பாத்ரூமுக்குப் போய் என்னைச் சற்று நேரம் கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். என் முகம் மாறியது. மீசை தாடி வளர்ந்து கண்களின் கீழ் குழிவிழுந்து கருங்கிப் போய் மண்டை ஓடாகி மறுபடி சதைப் பிடிப்பு ஏற்பட்டு, கண்கள் உயிர் பெற்று, பெரிய கண்களாக செம்பட்டைத் தலை மயிருடன் ஒரு குழந்தை முகமாக....

அம்மா! இது என் கடமை! இதை நான் செய்தே தீர வேண்டும். இந்த வதம் அவசியமானது. நான் அறிவுபூர்வமாக நம்பி விடுகிற சில சித்தாந்தங்களை நிலைநிறுத்த உண்மை நிலைக்க, பொய் அழிந்து போக.. ஒரே ஒரு வழி விஜயனை நான் கொல்ல வேண்டும்.

ஜெயி பாத்ரும் கதவைத் தட்டினாள்.

ஜாக்கிரதை என் தீர்மானம் ஒருவருக்கும் தெரியக் கூடாது. வெளியுலகத்திற்கு நான் எப்பொழுதும் போல் நடந்து கொள்ள வேண்டும். முகத்தைக் கழுவிக் கொண்டு துடைத்துக் கொண்டு கதவைத் திறந்து சிரித்தேன். ''என்ன?'' என்றேன்.

''அப்பாடா பயந்தே போய்ட்டேன். என்ன விஷயம்? உங்க முகத்தில் ஒரே வேர்வையா இருந்தது.''

''எனக்கு ஒண்ணுமில்லே ஜெயி'' காப்பி இருக்கா?''

''போட்டுத் தரேன்!''

''வா சினிமாவுக்குப் போகலாம்! சந்தோஷமா இருக்கலாம்!''

அவள் என்னைப் புதுசாகப் பார்த்தாள்.

''ஜெயி! உன்கிட்ட நான் பல தடவை விநோதமா நடந்துக்கிட்டிருக்கேன் இல்லே?''

''எப்படி வேணு நடந்துக்கங்க. என் கூட பேசினு சரி. மணிக்கணக்கா நாள்கணக்கா பேசாம இடிச்ச புளிமாதிரி உக்காந்துண்டு இருக்கிறதுதான் எனக்கு ரொம்ப கொடுமை''

''இனிமே அப்படி நடந்துக்க மாட்டேன் ஜெயி!''

''காப்பி வெளிலே சாப்பிட்டுக்கலாம். பேசாம டிரஸ் பண்ணிண்டு வா!'' அவள் உற்சாகமாக உள்ளே ஓடினாள்.

நான் எப்படி வித்தியாசப்பட்டவன்? எல்லாக் கணவர்களையும் போலத்தான் நடந்து கொண்டேன். அவளை பஸ் ஸ்டாண்டு வரைக்கும் உடன் ஒட்டி நடந்து அழைத்துச் சென்று பஸ்ஸில உட்காரக் கிடைத்த ஒரு ஸீட்டை அவளுக்குக் கொடுத்து டிக்கெட் வாங்கி, சினிமாக் கியூவில் நின்று பால்கனி டிக்கெட் எடுத்து ஒரு பாக்கெட் பாப்கார்ன்

நன்றி

- ஆட்டிப்படைத்த, ஆவி வடிவங்கள்: நேயர்களின் கடிதங்கள் மலையாகக் குவிந்தன. ரொம்பப் படித்தவர்கள், பல டாக்டர்கள் கூட எழுதியிருப்பது கவனத்துக் குரியது. வாசகர்கள் பலருக்கு நம்பிக்கை இல்லாவிடில் ஆட்சேபனை இல்லை. ஆனால் நம்பிக்கை உள்ளவர்களின் உணர்வுகளை மதிப்போம்.
- ஸாரி, ராங் நெம்பர்: 9 Modern Short Plays; Selected by David A. Sohn & Richard H. Tyre; Bantam Books, New York 10019.
- இலை சிரிப்பு I: Wahre Geschichten, Erlogen von Loriot, Diogenes.
- இலை சிரிப்பு II: Incurably Mad; Sergio Aragone; Warner Books.

வாங்கிக் கொடுத்து திரையில் விழுந்த விளம்பரப் படங்களையெல்லாம் ரசித்து. நான் என்ன அப்நார்மல்! அந்த டாக்டர் கிராதகன் பொய் சொல்கிறான். விஜயன்... அந்தப் படுபாவியைப் பற்றி நினைக்காதே!

படத்தில் காதல் நிறைந்து இருந்தது. பாட்டு இரைச்சலாக இருந்தது. ஒரு ஸ்திதியில் படத்தில் என் கவனம் கழன்று போய் திரையில் சற்று நேரம் அந்த ரோஷார்ஷ் சித்திரங்கள் ஓடின. கண்ணை மூடிக் கொண்டேன்.

எழுப்பினாள். ''படம் பிடிக்கலியா? போயிடலாமா?'' என்றாள்.

''வேண்டாம்'' என்றேன். இடைவெளி விட்டிருந்தது. எழுந்து டாய்லெட் சென்றேன். அங்கே நிற்கையில் கண்ணாடியில் திரும்பிப் பார்த்துக் கொண்டேன். திடுக்கிட்டேன். விஜயனும் அந்தக் கியூவில் நிற்பது தெரிந்தது. பார்க்காதவன் போல் திரும்பிக் கொண்டேன்.

அவனாக வந்தான்.

''ஹலோ சாரதி!'' என்றான்.

நான் பதில் சொல்லவில்லை. என்னடா இது அவன் ஒழிய மாட்டானு!

''நான் கேட்டதில் உனக்குக் கோபம் தானே?''

பேசாமல் இருந்தேன்.

''நீ போனப்புறம் நான் யோசித்துப் பார்த்தேன். சாரதி! நான் அந்த வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது தான். அது தப்பு. எனக்கு உரிமைகூட கிடையாது. ரொம்ப வருத்தப்பட்டேன். ஆபிஸ்ல வேலையே ஓடலே. பர்மிஷன் கேட்டுண்டு வந்துட்டேன். இந்தச் சினிமாவைப் பார்த்ததும் நுழைஞ்சுட்டேன். நல்ல வேளை உன்னை மறுபடி சந்திச்சேன். மன்னிப்புக் கேட்டுக்கறதுக்கு.....''

நான் பதிலே சொல்லவில்லை.

''சாரதி நீ என்னோட இனிமே பேச மாட்டியா?''

''ம்ஹூம்.''

என்ன தைரியம் பார் இவனுக்கு! என் மனத்தை அடியோடு சேதம் பண்ணிவிட்டு அதில் ஒரு விஷத்தை விதைத்து விட்டு என் மேல் கோபமா? என்னோடு பேச மாட்டாயா என்று கேட்கிறான். விஜயன்! ஆம். கோபம் தான். நீ செய்த காரியத்துக்குத் தண்டனை

பெறப் போகிறாய்! மரண தண்டனை. பார்த்துக் கொண்டே இரு.

திரும்ப என் ஸீட்டில் உட்கார்ந்த போது படம் ஆரம்பித்து விட்டது. என் மனத்திரை மீதும் படம் ஆரம்பித்து விட்டது. அவன் காலை சொன்ன வார்த்தைகள் கருப்பாக பழுப்பாக அசிங்கக் கலராக ஒரு ஒழுகலாக அங்கே பரவ ஆரம்பித்து விட்டது. ஒரு வேளை அவன் சொன்னதில் உண்மை இருக்குமோ என்று ஒரு சைத்தான் எட்டி எட்டிப் பார்த்தது. சே! அந்த மாதிரி நினைப்பது மகாப் பாவம் என்றது மற்றொன்று! என் மனைவி செலுலாய்டு பிம்பங்களுக்கு ஏற்ப அழுதாள். சிரித்தாள், திடுக்கிட்டாள். நான் என்னுடைய சொந்த சினிமாவில் அழுதேன், சிரித்தேன், திடுக்கிட்டேன்.

ஆனந்த ராவ் சர்க்கிளில் ஒரு ஓட்டலில் காப்பி டிபன் சாப்பிட்டோம். என் மனைவி சந்தோஷமாக இருந்தாள். ''இப்படியே தினம் இருந்துடுங்களேன்'' என்றாள்.

தினம்; இன்னமே எத்தனை தினம் இருக்கிறது விஜயனைக் கொல்ல? அதற்கப்புறம்? என்னைக் கைது செய்வார்கள்.

தூக்குத் தண்டனையா? ஆயுள் தண்டனையா?....



''உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும்'' என்றாள்.

''சொல்லு...''

''உங்க ஆபீஸ்ல இருக்கறவர் ஒருத்தர் ஒண்ணு சொன்னார்.''

திடுக்கிட்டு, ''என்ன? யாரு?'' என்றேன்.

''நடேசன்னு ஒருத்தர்.''

அப்பாடா! நடேசன் தானே! விஜயனில்லையே! பெருமூச்சு விட்டேன்

''என்ன சொன்னார்?''

''வர ஞாயிற்றுக்கிழமை ஆபீஸ்ல எல்லாரும் பிக்னிக் போறதா. நந்தி ஹில்ஸ்!''

''ஆமாம்! அதுக்கு என்ன?''

''நாம்பளும் போகலாமே.''

எனக்குத் திடீர் என்று உற்சாகம் பிறந்தது. பிக்னிக்! நந்தி ஹில்ஸ்! விஜயனும் வருவான்? ஆம் அங்கே அவனைத் தீர்த்துக் கட்ட எத்தனையோ சந்தர்ப்பம் கிடைக்கும்! ஆம்!

''ஜெமி! வெரி குட் ஐடியா! நிச்சயம் போகலாம். நாளைக்கே சொல்லி நம்ப பேரையும் சேர்த்துக் கொள்ளச் சொல்றேன்! நானும் நீயும் இந்த மாதிரி சந்தோஷமா பிக்னிக் போய் எத்தனை நாளாச்சு!...''

அவள் உற்சாகத்தில் என் கையைப் பற்றி அழுத்தினாள்.

வீட்டுக்குத் திரும்பும் போது நந்தி மலையைப் பற்றி யோசித்துக் கொண்டே வந்தேன். ஐந்து வருஷத்துக்கு முன் ஒரு முறை போயிருக்கிறேன். உயரமான மலை. ஒரு பெரிய பங்களா... தனியாக ஒரு ஹோட்டல், டிப்புஸ் டிராப்... அதல பாதாளத்துக்கு சரேல் என்று சரியும் முகடு! எனக்கு உற்சாகம் பிறந்து விட்டது. கடவுளாகப் பார்த்து அமைத்துக் கொடுத்த சந்தர்ப்பம் அது. நான் எழுதிய கடிதத்திற்கு அவர் கைப்பட பதில் எழுதவில்லை என்றாலும் மறைமுகமாகப் பட்டில் சொல்லி விட்டார். நான் இருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தை அமைப்பதன் மூலம் நிரூபித்து விட்டார். பெரிய ஆள்யா நீ கடவுளே!

ராத்திரி அந்த மாத்திரையை முழுங்கிய பின்னும் தூக்கம் வரவில்லை. விஜயனின் ஆணித்தரமான வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

'எப்படிடா உனக்குப் படிப்புக்குப் பணம் வந்தது? எப்படி அந்தப் புது பூட்ஸ் கிடைத்தது? எப்படி ஹாஸ்டலுக்கு மாதம் தவறாமல் பணம் வந்தது? நாறு! நாறு! எப்படி சாரதி!''

''சொல்லாதே நிறுத்து! நிறுத்து!''

சொல்லுவேன்! திருப்பித் திருப்பிச் சொல்வேன். இன்னும் கேட்கட்டுமா? அன்னிக்கு நீ சினிமாவுக்குப் போய்ட்டுடிக்கெட் கிடைக்காம திரும்பி வந்தியே....

வேண்டாம் ப்ளீஸ் சொல்லாதே! உன்னை கெஞ்சிக் கேட்கிறேன்.

என் மனைவி என்னை உலுக்கினாள். ''என்ன ஆச்சு! துர் சொப்பனம் கண்டீங்களா?

''இந்தாங்க தண்ணி சாப்பிடுங்கோ!''

விஜயன் இருக்கிற வரைக்கும் எனக்கு நிம்மதி இல்லை. இனி அவனுடன் நான் வாழ்நாள் முழுவதும் பேசாமல் இருந்தால் கூட அவனைப் பார்த்தாலே போதும், என் நிம்மதி குலைந்து விடும். என்ன தைரியம் அந்தக் கயவாளிப் பயலுக்கு. இப்படிப் பேச ஏது உரிமை அவனுக்கு. இல்லை அவன் இறந்தே ஆக வேண்டும். அவனைக் கொன்று விட்டுத் தான் மறு காரியம். நந்திஹில்ஸ்! நான் வருகிறேன்! என் மீட்சிக்கு உதவப் போகும் மலையே வருகிறேன்! தீர்மானித்து விட்டேன். கொன்றே தீர்த்து விடுவது! எனக்கு ஏதும் உபாதையில்லை. விஜயன் தீர்ந்தால் போதும். என் அத்தனை மன அவஸ்தைகளும் தீர்ந்து விடும். மாட்டிக் கொள்ள வேண்டும் என்று ரூலா என்ன? திறம்படச் செய்தால் தப்பிக்கலாமே. யோசித்துச் செயல்படுத்தலாம். யாருக்கும் என் மேல் சந்தேகமே வராதபடி! ஜாக்கிரதையாக.

விஜயனைக் கொன்ற பின் எனக்கு ஒன்றும் மனச்சாட்சி உறுத்தப் போவதில்லை. குற்ற உணர்ச்சியே இருக்கப் போவதில்லை. என்னைப் பிடித்து என் மனசை உலுக்கிய பிசாசுபோல அவன்! தொலைந்தது சனியன் என்றுதான் சந்தோஷமாகவே இருப்பேன். எனக்கு டாக்டர் வேண்டாம். இன்ஜெக்ஷன் வேண்டாம். மருந்து மாயம் எதுவும் வேண்டாம். விஜயன் ஒழிந்தால் போதும். ஒழிக்கிறேன்!

அதன் பின் நிம்மதியாகத் தூங்கினேன்.

மறுநாள் ஆபீஸ் போன கையோடு பிக்னிக்கிற்கு என் பெயர் கொடுத்தேன். என் மனைவி பெயர் கொடுத்தேன். அப்புறம் ஒன்றுமே அறியாதவன் போல் ''நடேசன்! அந்த லிஸ்ட் எடுக் கொடு'' என்றேன்.

''எதுக்கு?''

''சும்மா யார் யார் வராங்க பார்க்க!''

பார்த்தேன். விஜயனின் பெயரும் இருந்தது. அப்பாடா! என் ஸீட்டுக்கு வந்து விட்டேன். ஒருவேளை நடேசன் இப்படி நான் கேட்டதை ஞாபகம் வைத்துக் கொள்வானோ!

செச்சே! பயப்படாதே. யார் யார் வருகிறார்கள் என்று கேட்பதில் என்ன தப்பு? இயற்கையான கேள்வி. பயப்படாதே சாரதி! பயப்படாதே!

மத்யானம் விஜயன் மறுபடி என்னிடம் வந்தான். என் வேலை மேலே கவனமாகப் பார்க்காதவன் போல இருந்தேன்.

''என்ன.... இன்னுமா கோபம்?''

நான் பேசவில்லை.

''எப்பதான் பேசப் போறே! அதையாவது சொல்லு!''

சுட்டு எரிப்பது போல் பார்த்தேன்!

''அடேயப்பா பொசுக்குவே போலிருக்கே'' என்று சிரித்தான். ''சாரதி! உண்மையைச் சொன்னா எல்லாருக்குமே கோபம் வரும்.''

''கெட் அவுட்!''

''போறேன். ஆனா நான் சொன்னதை நிதானமா யோசிச்சுப் பாரு! இப்ப கூட லேட் இல்லே. நாளைக்கே நீ டாக்டர் கிட்ட போகலாம்! அவர் நல்லதுதான் சொல்வார். எல்லாவற்றையும் அழிச்சுடுவார்!''

''அழிக்கத்தான் போகிறேன் விஜயனே!''

''பிக்னிக்லே பேர் கொடுத்திருக்காப்பலே இருக்கே! சபாஷ்! அப்பவாவது என்னோட பேசுவியா இல்லே, உம்மணா மூஞ்சியா? உன் மனைவியை எனக்கு அறிமுகம் செஞ்சு வைக்கிறியா!'' என்று சிரித்தான்.

மனைவியை இல்லை! வேறு ஒன்றை அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்!!

காலை ஒன்பது மணிக்கு நாங்கள் நந்தி ஹில்ஸ் கிளம்பினோம். ஆபீஸில் உள்ளவர்கள் எல்லோரும் ஏறக்குறைய முப்பத்தைந்து பேர் வந்திருந்தார்கள். உற்சாகம் கரைபுரண்டது. டிரான்ஸிஸ்டர்கள் பேசின. காஸெட்டுகள் ஒலித்தன. சின்னவர்கள் பாட்டுப் பாட அந்தச் சிறு பிள்ளைத்தனமான சந்தோஷங்களில் நானும் மேம்போக்காகப் பங்கு கொண்டேன். என் மனைவி ஏகப்பட்ட தின்பண்டங்கள் கொண்டு வந்திருந்தாள். கலந்த சாதம், சாக்லேட், பிஸ்கெட் பாக்கெட், காப்பி, ஐஸ் என்று அவள். அருகில் நான். என் அருகில் ஜன்னலோரத்தில் விஜயன். வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

கங்கனஹள்ளி தேவனஹள்ளி என்று ஹள்ளிகளாக வந்து போய்க் கொண்டிருக்க நான் செய்தித்தாளை எடுத்துப் புரட்டினேன். சுதந்திரம் என்றொரு கட்டுரையின்பால் என் மனம் சென்றது.

நாம் பிறக்கும்போதே நம் சுதந்திரம் பறி போய் விடுகின்றது. பிறக்கின்ற இடம், தேசம், குடும்பம், தந்தை, தாய், மனைவி எல்லாமே அப்போதே நிச்சயமாகிவிடும் போது எங்கே சுதந்திரம்?

''என்ன படிக்கிறாய்?'' என்றான் விஜயன்.

''பார்த்தால் தெரியவில்லை?''

''அப்பாடா, பேசிவிட்டாய்!''

பேசப் போகிறேன், நிறையப் பேசப் போகிறேன் விஜயா! இரு!

என் மனைவி வலப்பக்கம் இடை விடாமல் பேசிக் கொண்டே வந்தாள். ''யோசிச்சு பார்த்தா நாம இந்த மாதிரிக் கிளம்பி அஞ்சு வருஷமாச்சு! அப்பாடா! உங்களோட சிரிச்சுப் பேசியே ரெண்டு வருஷமாகிறது!''

ஜெயி! என்னோட சிரிச்சுப் பேச இது கடைசி நாள்னு எப்படி நான் உங்கிட்டச் சொல்லுவேன்! அந்தச் செய்தியை எப்படி தாங்கிக்கப் போறே! 'என் புருஷன் ஒரு கொலே செஞ்சுட்டான்'.... சேச்சே! என்னை யார் கண்டு பிடிக்கப் போறா, திட்டமிட்டு என் மேலே துளிக்கூட சந்தேகம் வராதபடி நான் செய்யப் போற காரியம் இது! ''ஜெயி, கவலைப்படாதே! இனிமே நான் உங்கிட்ட நிறையச் சிரிச்சுப் பேசுவேன்'' என்றேன்.

அவள் என் தோள் மேல் சாய்ந்து, முகத்தைத் தேய்த்துக் கொண்டாள்! விஜயன் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரே நந்தி ஹில்லின் இரட்டை முண்டுகள் தெரிந்தன. அந்த இரட்டை மலைகள் எனக்கு நந்தி படுத்திருப்பதை ஞாபகப்படுத்தவில்லை. நானும் விஜயனும் எதிர் எதிர் பார்த்து முறைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. பஸ் முக்கி முக்கி மேலே சென்றது. வளைவுகளின் எண்ணிக்கைகள். ஜெனண்ட் ஹார்ன், நோ ஓவர் டேக்கிங். 3800 அடி, 4000 அடி....

திப்பு சுல்தானின் கோட்டை வாசலில் வந்து நின்றோம். டிக்கெட் வாங்கினார்கள். சிலர் இளநீர் குடித்தார்கள்.



''ஜெயி! இளநீர் வேண்டுமா?''

அவன் செதுக்கிச்செதுக்கி வெட்டும் போது ஒரு கணம் இளநீர் விஜயனின் தலையாகியது.

பள்ளிச் சிறுவர்களின் பஸ் ஒன்று வந்து நின்று சிறுடையில் ஒரு உற்சாக இரைச்சல். நாங்கள் எல்லோரும் பேசிக் கொண்டே படி ஏறினோம். அபரிமிதமான நிழற் சரிவுகள். பெரியவர்களைக் கூட மரம் ஏற அழைக்கும் குட்டை மரங்கள். காந்தி தங்கியிருந்த வீட்டை இடித்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள். சுல்தான் காலத்துக் குதிரை லாயங்கள். பீரங்கித் துளைகள்... நடுவே ஒரு நந்தி. மலை முகட்டில் அபாரக் காட்சி தரும் ஒரு கண்ணாடி ஹோட்டல். கப்பன் ஹவுஸ்... பழங்காலக் கோயில் ஒன்று...

சம்பிரதாயமான பிக்னிக். மர நிழல்களில் ஜமுக்காளம் விரித்துச் சாப்பிட்டு.... சாப்பிட்டு...சீட்டாடி, சிரித்து, ஓடிப்பிடித்து விளையாடி, பாட்டுப் பாட வைத்து நடனமாடி.....

எத்தனை சின்ன ஜனங்கள்! அற்பமான ஜனங்கள். நான்? உயர்ந்தவன்! உயர்ந்த இடத்திலிருந்து உயர்ந்த காரியம் செய்யப் போகிறேன்!

''விஜயன்! உன்னோடு தனியாகப் பேசணுமே!'' என்றேன். அவன் என்னை நேரடியாகப் பார்த்து, ''அப்பாடா! ஐஞ்சு மணிக்கு சாக்க! பேசேன்!'' என்றான்.

''இங்க இல்லே. தனியா! என் கூட நடந்து வரயா?''

''தாராளமாக!''

''ஜெயி! கொஞ்ச நேரம் நீ ரெஸ்ட் எடுத்துக்க. நான் என் ஃப்ரெண்ட் கூடக் கொஞ்ச தூரம் நடந்துட்டு வரேன்!''

''ஏன், அவளும் வரட்டுமே!''

''வேண்டாம். நீ இரு ஜெயி! உன்னால நடக்க முடியாது. இதபார், அவங்கெல்லாம் கிச்சுத் தாம்பாளம் விளையாடறாங்க. நீயும் போ!''

விஜயன் சிரித்தான். ''உன்னோட தனியா வரணும்கிறே! என்னவோ சொல்லப் போறே! ரொம்பக் கோபமா? அப்படித்தானே!''

''இல்லே, இல்லே!''

இருவரும் நடந்தோம். மெல்லச் சரிந்த படிக்கட்டுக்களில். நாங்கள் சற்று நேரம் மௌனமாக இருந்தோம்.

''என்ன இது, பேசாம வரே!''

''விஜயன்! நீ சொன்னதை நான் யோசித்துப் பார்த்தேன்.''

''என்ன சொன்னேன்?''

''நீ குறிப்பிட்ட அந்தச் சந்தேகம்! அது ஒரு விஷ விதை போல என் மனசில் பதிஞ்சுடுத்து. அதை நீக்க உன் உதவி தேவையா இருக்கு. எனக்குத் தூக்கம் போயிடுத்து. அந்த விபரீதம் என்னை அப்படியே ஆக்கிரமிச்சுடுச்சு!''

''அதுக்குத்தான் ஒரு ரெமடி சொன்னேனே, பேசாம ஆஸ்பத்திரியில போய்ப் படுத்துடு. கிளீனா சலவை செஞ்சு அனுப்பிடுவாங்க!''

''இல்லே. அதுக்கு வேறே உபாயம் யோசிச்சிருக்கேன்!''

''வேற உபாயம் கிடையாது சாரதி!''

''இருக்கு! ஒண்ணே ஒண்ணு இருக்கு, விஜயன்!''

''என்ன?''

''அவசரப்படாதே சொல்றேன். என் கூட வா!....''

நாற்பத்தி ஐந்தாவது வளைவு வரை இறங்கிவிட்டோம். ஜாகராண்டா மரங்கள் அபரிமிதமாக இலைகளே இல்லாமல் வயலட் பூக்களாகப் பூத்திருந்தன. அங்கே நடந்து சென்று கொண்டிருந்தவனிடம் கேட்டேன்: ''திப்புஸ் ட்ராப் எங்கே இதே?''

''ஒதா ஹோகி!'' என்று காட்டினான்.

மெல்லச் சரிந்தோம்.

''எங்கே போறே?''

மனசைத் திறந்து பேச ஓர் அருமையான இடம்!

தீர்மானித்து விட்டேன். திப்புஸ் ட்ராப்! சரேல் என்று சரியும் இடம். சுல்தான் குற்றவாளிகளைத் தண்டிக்க அமைத்த இடம். அங்கேதான் அவனைக் கொல்லப் போறேன்!

மெல்ல இறங்கினோம். மலையுடன் ஒட்டிய கோட்டைச் சுவர், அதில் ஒரு அரை வட்ட வளைவு. ப வடிவில் வெட்டுக்கள். இடப்புறத்தில் அங்கே சென்று எட்டிப் பார்த்தேன். கீழே.... பச்சை நாம்பு போலப் பாதை தெரிந்தது. ஆயிரம் அடி அப்படியே செங்குத்தாகச் சரிவு. பாறை! என் கால்கள் குறுகுறுத்தன. அந்த விளிம்பு இடைவெளியில் உட்கார்ந்தேன். காற்று மெலிதாக என்னை முத்தமிட்டது. ''பார், விஜயன் என்ன அழகான இடம்! வா, வந்து உட்கார், என் பக்கத்தில் உட்கார்.'' அவன் தயங்கி உட்கார்ந்தான். ''இயற்கை வர்ணனைக்கா அழைத்து வந்தே?''

காரைச் சுவர்களில் ஆர்.என்.கே. எம். ஆர். 18–3–77 என்று ஏகப்பட்ட கிறுக்

சுஜாதா

சுஜாதா என்ற பெயரைக் கேட்டதுமே திகில் இல்லாவிடினும் திரில் பரவுகிறது பல வாசகர்களுக்கு. ஆனால் அவர் வீட்டுக்குப் போகிற ரசிகர்கள் ஏமாற்றமடைகிறார்களாம்! "என்ன இவ்வளவு சிம்பிளா இருக்கிறீர்களே?" என்று கேட்டு அவர்கள் வியப்பது மிஸஸ் ரங்கராஜனுக்கு அதிசயமாயிருக்கிறது! தம்பதியைப் போலவே அவர்கள் வீடும் சிம்பிள்தான். இரண்டு சினிமா அவார்டு சின்னங்கள் தவிர வரவேற்பறையில் அலங்காரமாக அதிகம் இல்லை.


பாரத் எலக்ட்ரானிக்ஸில் ரிஸர்ச் அண்டு டெவலப்மெண்ட் பிரிவு மானேஜர் ரங்கராஜன் கடினமான கடமைகளினூடே தம் தோற்றத்தையும் ரிஸர்ச் செய்து மீசை வளர்த்துக் கொண்டார். அது அவர் பர்ஸனாலிடியை டெவலப் பண்ணித்தான் இருக்கிறது!

ஞாயிறு மட்டுந்தான் எழுத ஒழியும். சின்னதாக ஒரு மேஜை முன் அமர்ந்து காலையில் ஒரு பத்திரிகைக்கு, பிற்பகலில் ஒரு பத்திரிகைக்கு என்று எழுதுகிறார். "எழுத ஆர்வம் இருந்தாலும் அதிகம் எழுதுவது கஷ்டமாக இருக்கிறது. இப்படி கமை ஏற்றும் பத்திரிகை ஆசிரியர்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்கிறார். பத்திரிகை ஆசிரியர்களோ இவர் கையெழுத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் அவதிப்படுகிறார்கள். "சுஜாதா பாடு கம்பாஸிடர் பாடு" என்று நேரே பிரஸ்ஸுக்கு அனுப்பி விடும் ஆசிரியர்களே அதிகம்!

எப்போதும் துருதுரு என்று இருக்கும் இவர், தமது நீண்ட, மெலிந்த தேகத்தை வளைத்து ஒடித்துத்தான் ஸெகண்ட் ஹாண்ட் அம்பாஸிடர் காரில் ஏறி அமர்கிறார். கார் ஓட்டும்போதும் சும்மா இராமல் சதா ஒரு சினி டியூனை ஹம் பண்ணுகிறார்.

காதல் திருமணம் அல்ல என்றாலும் மனைவியிடம் ரொம்பக் காதல் என்பது தம்பதியைப் பார்த்தாலே புரிகிறது. பள்ளியில் படிக்கும் இரண்டு மணியான பிள்ளைகள்.

திகில் சிறுகதை சம்பந்தமாக நான் பேசப் போயிருந்த அன்று பிற்பகலில் பக்கத்தில் உள்ள ஒரு கல்லூரியில் குவிஸ் நிகழ்ச்சியை நடத்தித் தந்தார். முதலில் சுஜாதா கேள்விக் கணைகளைத் தொடுத்தார். பின்னர் மாணவர்கள் அவருடன் காப்பி அருந்தியபடியே அவரை அவர் எழுத்து சம்பந்தப்பட்ட கேள்விக் கணைகளால் தாக்கினார்கள். இந்தக் குவிஸ்ஸில் சுஜாதா நான்கு ஸ்கோர் செய்தார்.


சுஜாதா
(மீசை வளர்ப்பதற்கு முன்)

சுஜாதா குறைக்க முயன்று வெற்றி கண்டு வருவது உணவு, சிகரெட். அவருக்கு ரொம்பப் பிடித்தது பகல் உணவுக்குப் பிறகு ஒரு மணித் தூக்கம்; நிறையப் புத்தகங்கள் படிப்பது. வீட்டில் இரும்பு அலமாரியில் வைத்துப் பாதுகாப்பது புத்தகங்களை.

சுஜாதா அளப்பரிய ஆனந்தத்துடன் செய்யும் கடமை தினம் சற்று நேரம் தம் தகப்பனாருக்குப் பக்தி நூல்களைப் படித்துக் காண்பிப்பது. லேட்டஸ்ட்: ரா. கணபதி எழுதிய 'ஜெய ஜெய சங்கர'.

சுஜாதாவின் எழுத்து பற்றி... பூக்கடைக்கு விளம்பரமா? ஆனால் அவருக்கே தாம் எழுதியதில் மிகவும் பிடித்தது கல்கியில் வெளியான ஸயன்ஸ் ஃபிக்ஷன் சிறு கதைகளும் வேறு சில சிறு கதைகளும்.

நமக்கோ அவர் கதைகள் எல்லாமே ருசிக்கும். அவர் மனைவியின் சமையலை ருசி பார்க்காத வரை! அதன் பிறகு அந்தச் சமையலின் ருசிக்குத்தான் முதலிடம்.

-வி. ராஜேந்திரன்

கம்கள். எல்லோருக்கும் தம் பெயரை நிலைநிறுத்த ஆசை! சரித்திரத்தில் ஒரு சின்ன இடம்! எனக்கும் ஒரு இடம்!

"விஜயன்! இந்த வெட்ட வெளியைப் பார். கீழே பார்! காற்றைப் பார்! எத்தனை சுத்தம்! கீழே அந்தக் கிராமத்தைப் பார்! எத்தனை சின்னப் பொம்மை வீடுகள், புள்ளி மனிதர்கள்!... புழுக்களைப் போல நெளியும் கார்கள்.... இந்த இடத்திலிருந்து மனித வாழ்க்கை என்பது எத்தனை சின்ன சமாச்சாரம் என்பது தெரிகிறது. இதில் பாவம் புண்ணியம், நல்லது தீமை என்று பாகுபாடுகள்! எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டு, நமக்குள்ளே அரும்புகிற கெட்ட எண்ணங்கள் அத்தனையும் சுத்தப்படுத்த இந்தக் காற்றில், இந்த வெட்ட வெளியில் உன் அழுக்குகளை அலம்பிக் கொள்ள வேண்டும். வா விஜயன்!"

"என்ன சொல்கிறாய், புரியும்படி சொல்!"

"விஜயன்! புரியும்படி சொல்கிறேன்! நீ என் மனசில் குத்திய அந்த முள்ளை எடுக்க எனக்குப் பட்ட ஒரே வழி உன்னைக் கொல்வது. நீ இறந்தால்தான் அந்த எண்ணம் இறக்கும். இல்லையெனில் உன்னை ஒவ்வொரு தடவை பார்க்கும்போதும் எனக்கு மறுபடி மறுபடி நீ சொல்லிக் கொடுத்த அந்தச் சந்தேகம் புறப்படும். என்னால் அந்த நெருப்பை வைத்துக் கொண்டு வாழவே முடியாது. நீ அதற்காகச் சாக வேண்டும்."

"ஏய்சாரதி என்ன இது! என்ன பேசறே!"

"விஜயன்! உனக்கு நான், என் பிரத்தியேக நீதிப்படி என்னுடைய சொந்தக் கோர்ட்டில் அளித்த தண்டனை இது! தொலைந்து போ சைத்தானே!" அவனைக் கெட்டியாகப் பிடித்து விளிம்பில் கொண்டு சென்று ஏற்றி நிற்க வைத்தேன்.

"ஏய்! ஏய் சாரதி ப்ளீஸ்! யோசிச்சுப் பார். நீ செய்யற காரியம் தப்பு! நான் சொன்னது எல்லாம் விளையாட்டுக்குன்னு வெச்சுக்க! வேண்டாம் சாரதி! விடு என்னை விடு ஐயோ, விட்டுரு!"

"இல்லை, விஜயன்! நீ செத்துத்தான் ஆகணும்.... நீ பிறந்தபோதே இந்தக் கணம் நிர்ணயிக்கப்பட்டு விட்டது..."

அவன் என்னை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டான்.

''சாரதி! வேண்டாம்டா! பயமா இருக்கு. ப்ளீஸ்!''

''ஒண்ணும் ஆகாது. நித்திய வெளியில் ஒரு நீச்சல்! அப்புறம் ஒரே ஒரு மடார்! ஒரு செகண்டுக்குள்ள பிராணன் போயிடும். வலின்னு என்னன்னு மூளைக்குச் செய்தி போறதுக்குள்ளே மூளையே சிதறிடப்போறது பயப்படாதே! விஜயன் குட் பை!''

ஒரு மூர்க்கச் சிலிர்ப்பில் அவனைப் பிடித்து உதறித் தள்ளினேன்.

அய்யோ! என்ன இது! படுபாவி! என்னை யும் சேர்த்துப் பிடித்து இழுத்து விட்டானே! ஏய் விஜயன்! விடுடா! விட்டுவிடு! என்னை விடு! பாவி! பழி வாங்கிவிட்டாயே! அந்த அதல பாதாளச் சரிவில் நானும் விஜயனும் ஒட்டிக் கொண்டு விழுந்தோம்! ஹோ என்று என் மேல் காற்றின் இரைச்சல்... கணத்துக்குக் கணம் பூமி எல்லைக்கு அவசரம்! சீக்கிரம் வா! என்று கூப்பிட என் மூளைக்குள் ரத்தம் பாய்ந்து அல்லது பாயாமல் வேக வேக மாக இருவரும் விழுந்....

பின் குறிப்பு:

நந்தி ஹில்ஸ் போலீஸ் அவுட் போஸ்ட் டுக்குத் தகவல் தெரிந்து மலை உச்சியில் கோவி லுக்கு அருகில் ஓர் அறையில் இருந்த வி.எச். எஃப் ரேடியோ மூலம் தேவனஹள்ளி போலீஸ் நிலையத்துக்குச் செய்தி போய் ஜீப் வந்து பிக்னிக் போனவர்கள், லோகல் ஆசாமிகள், போலீஸார் எல்லோரும் கீழே சென்று பாறை யெல்லாம் தேடி ஒரு பாறையில் ரத்தத் திட்டைப் பார்த்து ஒருசிலர் தைரிய மாக இறங்கிச் சிதறியிருந்த உடலைப் பார்த் துத் திடுக்கிட்டு....

இன்ஸ்பெக்டர் ''ஒதுங்குங்கய்யா, ஒதுங் குங்க! இந்த ஆள் உங்க பார்ட்டி கூட வந்தவரா?....'' என்றார்.

''ஆமாங்க!''

''பேர் என்ன?''

''விஜயசாரதிங்க!''

முற்றும்

ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

சாமியார் தந்த சவுக்கடி!

தேவி, எங்கள் வீட்டுக்கும் பக்கத்து வீட்டில் வசித்து வந்த, ரவி என்ற அழகிய வாலிபனைக் காதலித்தாள்.

தன் கற்பையும் இழந்து விட்டாள். விவரம் அவள் வீட்டிற்குத் தெரிந்து விட்டது. அவர் களுக்கு ரவியைப் பிடிக்கவில்லை. டாக்டரிடம் அழைத்துச் சென்று தேவி வயிற்றில் வளர்ந்து வந்த கருவைக் கலைத்தார்கள். அவளை வேறொரு ஊருக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஒரு சில வாரங்களுக்குள் அவளுக்கு அவ்வூரி லேயே ஒரு வரனைப்பார்த்து மணமுடித்து வைக்க நிச்சயித்து விட்டார்கள்.


ஆனால், தேவியின் மனம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தன் காதலனைத்தேடிச் சொந்த ஊருக்கு ஓடி வந்துவிட்டாள்.

காதலனை மாத்தோடு அணுகினாள். ஆனால் ஏமாற்றமடைந்திருந்த ரவி இப்போது அவளை ஏற்றுக் கொள்ள மறுத்தான். அவன் வீட்டாரும் அவளை வெறுத்து விரட்டினார்கள்.

இறுதியில் வாழ்க்கையே வெறுத்துக் கிணற் றுக்குள் விழுந்து உயிரை விட்டாள்.

சில வருடங்களுக்கு பிறகு மறைந்த தேவியின் காதலன் ரவிக்குத் திருமணம் நடந்தது. ஒரு குழந்தையும் பிறந்தது.

ஒரு நாள் இரவு ஒரு மணி இருக்கும். திடீ ரென்று வெளியே நாய்களெல்லாம் ஊளையிட, குழந்தை ஒன்று வீறிட்டு அலற, அய்யோ... அம்மா... ஆண்டவனே என்று பக்கத்து வீட்டில் எல்லோரும் கதற, நானும் என் கணவரும் எழுந்து வெளியே ஓடினோம். அங்கே புடவை யற்ற உள்ளாடையோடு, அலங்கோலமான கருங் கூந்தலோடு தான் பெற்ற மூன்று மாதக் குழந் தையின், தலையை ஒரு கையிலும், காலை ஒரு கையிலுமாகப் பிடித்துக் கொண்டு 'ஆ'... வென்று பற்களை அதன் தொண்டையில் பதித்து.



வெறி புரண்டோடும் விழிகளோடு, நின்று கொண்டிருந்தாள் ரவியின் மனைவி.

என் கணவரும், ரவியும் வேறு சிலரும் பாய்ந்து சென்று குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கி காப்பாற்றினார்கள்.

தன் மழலையின் ரத்தத்தை ருசி பார்க்கத் துடிக்கும் அளவுக்கு, அவளுக்கு என்ன ஆயிற்று?

''டேய்... ஏய்...'' என்று அலறினாள் அவள். தலையின் சுழற்சியில் அவள் கூந்தல் சாட்டியை மாய்ச் சுழன்றது. ''அய்யோ! இது பேய்! பேய் பிடித்து கொண்டிருக்கு அவளை'' என்று சிலர் விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். சிறிது நேரத்திற்கும் பிறகு சிலர் பேய் ஓட்டும் சாமி யாரை அழைத்து வந்தார்கள்.

சாமியார் விபூதியை அள்ளி நாற்புறமும் வீசி னார். மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு, மஞ்சள் கயிற்றுச் சாட்டையை எடுத்து ஓங்கித்தரையிலடித் தார். அவளுக்கு ஆவேசம் இப்பொழுது அதிக மாகியது. ''டேய்! நான் அவனிடம் ஏமாந்து போனவடா... அவன் வம்சத்தை அழிக்க வந் தேன்டா... கிணற்றிலிருந்து வந்திருக்கேன்டா... எனக்கு வழி விடுடா...'' என்று பேயாய்க் கத்தினாள்.

தற்கொலை செய்துகொண்ட தேவியின் ஆவி தான் அது என்று எல்லோருக்கும் புரிந்து விட்டது. சாமியார் சாட்டையால் ஓங்கி ஓங்கிச் சில அடி அடித்தார்.

''டேய்! என்னை அடிக்காதேடா. நான் போய் விடுகிறேன். இனிமேல் வர மாட்டேன். என்னைக் கிணற்றடி மரத்தில் கொண்டு போய் விட்டுடு டா'' என்று ஆவேசமாய் ஆடியது ஆவி.

பொழுது விடியத் தொடங்கிவிட்டது. சாமியார் அவள் கூந்தலை அள்ளிப் பிடித்து, வேப்பிலை கொத்தால் அடித்தபடி ஊருக்கு வெளியே உள்ள கிணற்றடி மரத்தை நோக்கி இழுத்துச் சென்றார். ''ஓடு... ஓடு...'' என்று ஊரே அவளை விரட்டிக் கொண்டு சென்றது.

ஒரு பாவமும் அறியாத ரவியின் மனைவி ஆவி யால் பிடிக்கப்பட்டு சுய நினைவின்றி, எல்லோர் கண்ணுக்கும் பேயாகவே தோன்றிக் கோரமாக சென்று கொண்டிருக்கும் அந்தக் காட்சியை நோக்கும் போது...


ரவி கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு கதறியழும் நிலையை கண்டபோது... என் விழி களைக் கண்ணீர் மறைத்து நின்றது.

—பிரேமா செல்வராஜ்

- கல்கி வாசகப் பெண்மணிகள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.
- சென்ற எட்டு இதழ்களில் எட்டு கேள்விகளையும் ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று பதில்களையும் பிரசுரித்திருந்தோம். பின் பக்கத்தில் உள்ள கூப்பனில் அந்தந்தக் கேள்விக்கு எதிரே நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள மிகப் பொருத்தமான ஒரு விடையை மட்டும் எழுதவும்.
- தனித் தாளில் எழுதினால் நிராகரிக்கப்படும்.
- சாரதா'ஸ் குறித்து ஒரு விளம்பர வாசகமும் கல்கி பற்றிய ஒரு விளம்பர வாசகமும் நன்கு யோசித்து அவற்றுக்குரிய இடங்களில் கூப்பனில் தெளிவாக எழுதவும். வாசகங்கள் கவர்ச்சிகரமாகவும் ஓசை நயத்துடனும், சுருக்கமாகவும், அர்த்த புஷ்டியுடனும் இருக்கட்டும்.
- பெயர், விலாசம் மறவாமல் குறிப்பிட்டுக் கையெழுத்துப் போடவும்.
- இதர விதிமுறைகளை அறிய 17–2–80 கல்கி இதழ் காண்க.
- பரிசுகள்: முதல் பரிசு ரூ. 750 பெறுமானமுள்ள சாரதா'ஸ் பட்டுப் புடவை. இரண்டாவது, மூன்றாவது பட்டுப் புடவைப் பரிசுகளும் உண்டு. தவிர ஆறுதல் பரிசுகளாக இருநூறு பேருக்கு மூன்று மாதக் கல்கி இதழ்கள் இலவசம்.
- முடிவு தேதி: ஏப்ரல் 22.
- கடிதப் போக்குவரத்துக் கிடையாது.
- உறையின் மேல் கல்கி – சாரதா'ஸ் பட்டுப் புடவைப் பரிசுத் திட்டம் என்று கண்டிப்பாய்க் குறிப்பிட வேண்டும்.
- ஆசிரியர், கல்கி, சென்னை–600032.

கல்கி-சாரதா'ஸ்

பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்





எண்	கேள்வி	பதில் (ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு பதில் மட்டுமே எழுதவும்)
1	பெண்ணுக்கு முக்கிய அணிகலன் எது?	
2	சமையலறைக்கு மிகவும் முக்கியமானது எது?	
3	கணவரை நன்றாகச் சாப்பிட வைப்பது எது?	
4	அலங்காரத்துக்கு முக்கிய தேவை எது?	
5	பெண்ணை வெற்றிபெற வைப்பது எது?	
6	பெண் காரியாலயம் போகும்போது மறக்கக் கூடாதது எது?	
7	குடும்ப பட்ஜெட்டைச் சரிக்கட்ட வழி என்ன?	
8	காரிய சாதனைக்குப் பெண்ணின் பலம் என்ன?	

சாரதா'ஸ் குறித்து விளம்பர வாசகம்:

கல்கி பத்திரிகை விளம்பர வாசகம்:


பெயர்:

விலாசம்:


கையெழுத்து:

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

பொறியைத் தட்டியதுமே...




உங்கள் பூஜை அறைக்கு.
உன்னதமானதொரு விளக்கு!



வீட்டினுள்ளே காம்ப்டாலக்ஸ்
ஒளிரட்டும்...ஓ ...அழகைத்
தனித்தொளிரச் செய்யும்
அதன் பாங்கே சிறப்புத் தான்!

PE-I-4087



காம்ப்டாலக்ஸ், எடுத்துப்பொருத்-திடக் கூடிய, எததேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட். ஷேடுகளோ, விசேஷ இணைப்புகளோ தேவையில்லை. பொறியைத் தட்டுங்கள். வேண்டிய வெளிச்சம் உடனே பரவட்டும்.

PHILIPS

PHILIPS 50 YEARS IN INDIA

காம்ப்டாலக்ஸ்

எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்

பிலிப்ஸ்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)



சுஜாதா தயாரிப்பில்
மலரும் சிறப்பிதழ்

பக்கத்துக்குப் பக்கம்
திரில்! திகில்!

புதிய தொடர்கதை :
இரக்கமற்ற இரவுகள்

சுஜாதா எழுதும்
முழுநீள நாவல்

மலை ஏறும் போட்டி !

ஸாரி ராங் நெம்பர்!
-முழுநீள நாடகம்

